
# திருக்குறளில்
# கேள்வியால் ஒரு வேள்வி



தமிழரசி

# திருக்குறளில்
# கேள்வியால் ஒரு வேள்வி

திருமதி. தமிழரசி சிவபாதசுந்தரம்

| |
|---|
| வள்ளுவன் தந்த தமிழ்மறையை<br>வையகம் வாழ்த்திட வைத்திடுவோம் |

**நூல் விவர அட்டவணை**

நூலின் பெயர் : **திருக்குறளில் கேள்வியால் ஒரு வேள்வி** ★ ஆசிரியர்: திருமதி.தமிழரசி சிவாபாதசுந்தரம் ★ முதல் பதிப்பு : தை 2007 ★ உரிமை : © நூலாசிரியருக்கு ★ மொழி : தமிழ் ★ நூலின் அளவு : 8.5" x 5.5" ★ தாள் :18.6 KG Maplitho ★ அச்செழுத்து : பாமினி ★ மொத்தப்பக்கம் : 436 பக்கம் ★ அட்டை வடிவமைப்பு மற்றும் அச்சாக்கம்: இம்பிரசன் டிசைனர்ஸ், 6வது வீதி தொடர்ச்சி, காந்திபுரம், கோயமுத்தூர்

# உள்ளுறை

திருக்குறளின் பெருமை ........ V

வாழ்த்துரை ........ VI

தோரண வாசல் ........ VII

அறத்துப்பால்

பாயிரம் ........ 3

இல்லறவியல் ........ 15

துறவறவியல் ........ 75

ஊழ் இயல் ........ 114

பொருட்பால்

அரசியல் ........ 119

அங்கவியல் ........ 194

ஒழிபு இயல் ........ 290

இன்பத்துப்பால்

களவு இயல் ........ 331

கற்பியல் ........ 352

திருக்குறள் முதற்குறிப்பு அகராதி ........ 407

# திருக்குறளின் பெருமை

ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப்பொருளாய் மிகவிளங்கி - தீதுஅற்றோர்
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

- மாங்குடி மருதனார்

# வாழ்த்துரை

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி
குறுகத் தரித்த குறள். - ஔவையார்

அணுவொத்த சூத்திரத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற கடலொத்த தத்வார்த்தங்களை கொண்டுள்ளது திருக்குறள். மேலும் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றும், தெய்வநூல், பொய்யா மொழி, தமிழ்மறை, பொதுமறை என்றும் பலவாறாக ஆன்றோர்களால் போற்றி புகழப்படுவது திருக்குறள்.

ஆழ்கடல் மூழ்கி அரிய முத்தெடுப்பது போல் வேதாந்த தத்துவத்தின் அரிய பொருளைப் புரிந்து கொள்ள நம் முன்னோர்கள் கருத்துப் பரிமாற்றம் என்ற யுக்தியைப் பின்பற்றினார்கள். உதாரணமாக மகாபாரதத்தில் தர்மத்தின் கோட்பாடுகள் 'யஷப்ரஸ்னம்' வாயிலாக வெளிப்படுகிறது. அருச்சுனனின் மனக்குழப்பம் நீங்கி கீதை என்னும் அரிய பொக்கிஷம் கிடைத்ததும் கேள்வி - பதில் மூலமாகத்தான். அஜகரனின் கடினமான கேள்விகளுக்கு வீமன் தர்மயுக்தமான பதில்களைத் தருவதும் இவ்வாறே என அறிகிறோம்.

திருமதி. தமிழரசியின் '**திருக்குறளில் கேள்வியால் ஒரு வேள்வியும்**' இவ்வாறே அமைந்துள்ளது பாராட்டுக்குரியது. இவரின் இந்த சீரிய முயற்சியால் படிப்பவர் வாழ்க்கையில் வள்ளுவர் கூறும் அறநெறி, அன்புடைமை, ஒழுக்கம், வாய்மை ஆகிய அனைத்து நலன்களும் அமையப் பெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்த்துக்கள்.

Dr. மத்தூர் கிருஷ்ணமூர்த்தி

Dr. மத்தூர் கிருஷ்ணமூர்த்தி

Director
Bharatiya Vidya Bhavan
M.P. Birla Foundation
Bangalore.
27.11.2006.

# தோரண வாசல்

இன்பத்தமிழ் அன்னைக்கு ஈடில்லாப் பெரும்புகழ் ஈட்டிவைத்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர். அவரது திருக்குறளில் கேள்வியால் நான் செய்த வேள்விக்கு உலகெல்லாம் பரந்து வாழும் இனிய தமிழ்நெஞ்சங்களை இந்தத் தோரணவாசல் ஊடாக அழைத்துச் செல்வதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்'**

என்ற திருவள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க நானும் அவரது தமிழமுதமான திருக்குறளை என் கைகளால் அளாவி வைத்திருக்கிறேன்.

வள்ளுவப்பெருந்தகையும் அமிழ்தினும் ஆற்ற இனிதாக இதனை ஏற்பார் என்பது எனது திடமான நம்பிக்கை.

கொழும்பில் 1952 இல் '*தமிழ்மறைக் கழகம்*' நிறுவியவர்களுள் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்களும், எனது தந்தை பண்டிதர் மு.ஆறுமுகன் அவர்களும் முக்கியமானவர்கள். அன்று தொடக்கம் ஆண்டு தோறும் '*திருக்குறள் மகாநாடும்*' நடாத்தி வந்தார்கள். 1969 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடந்த ***திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலரில்*** என் தந்தை எழுதிய மூன்று வாக்கியங்கள் இங்கு நினைவு கூறத்தக்கன. 'வாழ்வில் துன்பந் தொடும் போதெல்லாம் அறிஞர்கள் வள்ளுவதேவரைச் சரணடைகின்றனர். அவர் திருவாய் மலர்ந்த ஆயிரத்து முன்னூற்று முப்பது அருந்தேன் குறள் மலரிலும் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கின்றது. எமது குழந்தைகளும் சீரிய வாழ்வு வாழ வேண்டுமானால் வள்ளுவர் தந்த வான்மறையைப் போற்றி அதன்படி ஒழுகி எல்லா உயர்வுகளையும் அடைவார்களாக.'

என் தந்தை குறிப்பிட்டதற்கு இணங்க உலகெங்கும் வாழும் எமது தமிழ் குழந்தைகளுக்காகவே இந்த வேள்வியை நான் செய்தேன். எனது பேராசையால் நானும் திருவள்ளுவரின் மாணவியானேன். ஆயிரத்து முன்னூற்று முப்பது கேள்விகளை நான் அவரிடம் கேட்க, அவர் அவற்றிற்கு விடையாகத் திருக்குறளைச் சொல்வது போல் இவ்வேள்வி அமைந்துள்ளது.

மாணவியாக, தோழனாக, தோழியாக, காதலனாக, காதலியாக, நெஞ்சமாக இப்படிப் பல நிலைகளில் நின்று நான் அந்தப் பெருந்தகையிடம் கேள்வி தொடுத்திருக்கின்றேன். அந்தக் கேள்விகளுக்கு திருக்குறளை விடையாகவும் தந்திருக்கின்றேன். சில சில இடங்களில் பரிமேலழகர் உரையிலிருந்து நான் வேறுபடுகின்றேன். ஒரு சொல்லுக்குப் பல கருத்து இருப்பதால் இன்றைய இளம் தலைமுறையினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் குறளின் கருத்தை எழுதியுள்ளேன்.

பிங்கல நிகண்டு ‘வேள்வி’ என்பதற்கு ‘பூசனை’ என்றும் பொருள் கூறுகின்றது. நான் செய்திருக்கும் பூசனையைப் பற்றி நானே சொல்வது அழகல்ல. இந்த வேள்வியை நீங்களே கண்டு மகிழுங்கள். அது உங்களது உரிமை.

இந்த வேள்வி செய்வதற்குத் தேவையான தமிழறிவை மிகச்சிறுவயதிலே எனக்கு அளித்த என் தந்தை பண்டிதர். மு. ஆறுமுகன் அவர்களுக்கும், இதனை உலகத்தமிழர் அறிய வெளியிடுமாறு கூறிய என் மகன் வாகீசனுக்கும், இவ்வேள்விக்கு வாழ்த்துக் கூறிய Dr. மத்தூர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், வேள்வி சிறப்புடன் அமைய தமது மணித்துளிகளைச் செலவு செய்த திரு. செ. மோகனசுந்தரம், திரு. சு. முருகானந்தா ஆகியோருக்கும் எழுத்தெண்ணி அச்சுப்பிழைகளைத் திருத்திய திருமதி. கனகேஸ்வரி முருகானந்தா அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

தனது இறுதி ஆண்டுப் பரீட்சை இடையேயும் கணணிவாயிலாக யாவற்றையும் ஒழுங்கு பெற அமைத்து எடுத்த என் தம்பி ராஜரிஷிக்கு எனது நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக.

நான் நேரில் பார்த்திராத போதிலும் இந்நூல் பூரணமாக வெளிவர பேருதவி புரிந்த கோவை திரு. வின்செண்ட் சுந்தரராஜ் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி!

இந்நூல் தரமான பதிப்பாக வெளிவர அச்சிட்டு உதவிய கோயமுத்தூர் இம்ப்ரசன் அச்சக உரிமையாளர் பாலா, விக்டருக்கும், அவரது உதவியாளர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

'சொல்லச் சொல்ல நா இனிக்கும் - அந்த
செந்நாப்புலவன் தமிழ்மறையை
அள்ளி அள்ளிப் பருகுவமே - இந்த
அவனியெங்கும் வாழ்த்திடவே

மெல்லப் பரவுது தமிழ்மணமே - இந்த
மேற்குத் திசை எங்கணுமே
சொல்லில் தமிழ்ச்சொல் தேர்ந்துரைப்போம் - இன்ப
தெய்வமறையைப் போற்றிநின்றே.'

"தமிழரண்"
இலண்டன்
22.12.2006

இனிதே அன்புடன்
**தமிழரசி சிவா**

# அறத்துப்பால்

# பாயிரம்

## 1. கடவுள் வாழ்த்து

(கடவுளைப் புகழ்ந்து போற்றுதல்)

1. உலக இயக்கம் எதனைத் தொடக்கமாகக் கொண்டு இயங்குகின்றது?

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.** 1

எழுத்துகளுக்குத் தொடக்கமாகவும், அவற்றுடன் கலந்தும் அகரம் இயங்குவது போல உலகம் ஆதி பகவனைத் தொடக்கமாகக் கொண்டு இயங்குகின்றது.

*அகரம் - "அ" என்னும் முதல் எழுத்து, முதற்று - தொடக்கம்.*

2. படித்தவர்களும் கடவுளை வணங்க வேண்டுமா?

**கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** 2

மெய்யறிவுடைய கடவுளின் நல்ல திருவடிகளை வணங்கா விட்டால் படித்ததால் என்ன பயன் கிடைக்கும்?

*கற்றதனால் - படித்ததால், வாலறிவு - மெய்யறிவு.*

3. கடவுளின் திருவடிகளை நினைப்பதால் என்ன நன்மை கிடைக்கும்?

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்.** 3

மனமாகிய மலரில் இருப்பவனின் பெருமைமிக்க அடிகளைப் பொருந்த நினைப்பவரின் புகழ், நீண்டகாலம் இவ்வுலகில் நிலைத்து நிற்கும்.

*ஏகினான் - சென்றவன் (அன்பர்களிடம் செல்பவன்),*
*மாணடி - பெருமைமிக்க அடி.*

4. புகழ் மட்டும் தானா கிடைக்கும்?

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.** 4

விருப்பு வெறுப்பு அற்றவனின் திருவடிகளை அடைந்தவர்க்கு எக்காலத்திலும் துன்பம் உண்டாகாது.

*வேண்டுதல் - விருப்புதல், வேண்டாமை - வெறுப்பு,*
*இலான் - இல்லாதவன், யாண்டும் - எக்காலத்தும்,*
*இடும்பை - துன்பம்.*

5. கடவுள் என்ற உண்மைப் பொருளைப்புரிந்து கொண்டவர்க்கு எவை சேராது?

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.** 5

கடவுள் என்ற உண்மைப் பொருளின் புகழை விரும்பியவர்க்கு நல்வினை, தீவினை ஆகிய இருவினையும் சேர்வதில்லை.

*இருள் - துன்பம், இறைவன் - கடவுள்.*

6. கடவுள் நெறியில் நிற்பவர் எப்படி வாழ்வர்?

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்** 6

ஐம்புலன்களால் வரும் ஆசைகளை அவித்த கடவுளின் உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர், புகழால் நீண்ட காலம் வாழ்வர்.

*ஐம்பொறி - மெய், வாய், கண் மூக்கு, செவி என்பன,*
*பொய்தீர்ந்த - உண்மையான.*

7. யாருக்கு மனக்கவலைகளை மாற்றுதல் அரிதாகும்?

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.** 7

தனக்கு உவமை கூறமுடியாதவனின் திருவடிகளைப் பொருந்த நினைப்பவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலைகளை மாற்றுதல் அரிதாகும்.

8. யாருக்குப் பிறவிக்கடலை நீந்துதல் எளிதாகும்?

**அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறஆழி நீந்தல் அரிது. 8**

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளை நினைப்பவர்க்கு, வாழ்க்கைக் கடலை நீந்திக் கடப்பது மிக எளிதாகும். மற்றவர்களால் கடக்க முடியாது.

*அறஆழி - அறக்கடல், தாள்- திருவடி,*
*பிறஆழி - வாழ்க்கைக்கடல், நீந்தல் - நீந்துதல்.*

9. கடவுளின் திருவடிகளை வணங்காத தலை எப்படிப்பட்டது?

**கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை. 9**

வலிமையற்ற ஐம்பொறிகளும் தம் தொழில்களை இழந்து பயனற்றுப் போதல் போல, எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காத தலை இருந்தும் பயனற்றதேயாகும்.

*கோள் - வலிமை, கோளில் - வலிமையற்ற: குணம் - தன்மை.*

10. பிறப்பாகிய பெருங்கடலை யாரால் நீந்த முடியும்?

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார். 10**

இறைவனின் திருவடிகளைப் பொருந்த நினைந்து உருகும் மனம் உடையவர்கள் பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடப்பார்கள். மற்றவர்களால் அதனை கடக்க முடியாது.

*நீந்துவர் - நீந்திக்கடப்பார், சேருதல் - பொருந்துதல்.*

## 2. வான் சிறப்பு

*(மழையின் சிறப்பு)*

1. உலக இயக்கத்திற்கு காரணமான அமிழ்தம் எது?

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.** 11

மழை தவறாது பெய்வதால் உலகம் இயங்குகின்றது. ஆதலால் மழையே உலகத்தை வாழ்விக்கும் அமிழ்தம் என்று உணர்க.

*வான் - மழை, வழங்கல் - இயங்குதல்,*
*வழங்கிவருதலால் - இயங்கி வருதலால்.*

2. உயிர்களின் பசியைப் போக்கி நீர்வேட்கையைத் தணிவிப்பது எது?

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை.** 12

பசியைப் போக்கி, உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கித் தருவதும், அவற்றை உண்பவர்க்குத் தானே அருந்தும் நீராய் உணவாவதும் மழையே.

*துப்பார் - உண்பவர், துப்பு - உணவு,*
*துப்பாக்கி - உணவுகளை உண்டாக்கி, துப்பாயதூஉம் - உணவாவதும்.*

3. மழை பெய்யாது போனால் இவ்வுலகம் என்னவாகும்?

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி.** 13

பரந்த கடல் நீரால் சூழப்பட்டு இருந்தாலும் இந்த அதிசயமான உலகம், மழைபெய்யாது போனால் பசியால் வருந்தும். அதனால் உயிர்கள் வருந்தி மடியும்.

*விண்இன்று - மழை இல்லாது, பொய்ப்பின் - பெய்யாது போனால்,*
*வியன் - அதியசம்.*

4. மழை என்னும் வருவாயின் வளம் குறைந்தால் என்ன நடக்கும்?

**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளம்குன்றிக் கால். 14**

மழை என்னும் வருவாயின் வளம் குறைந்தால் உழவர்கள் உழுது பயிர் செய்யமாட்டார்கள். உணவுப் பொருட்களின் உற்பத்தி நின்றுவிடும்.

ஏரின் - ஏரால், உழார் - உழமாட்டார்கள், ஏர் - கலப்பை, புயல் - மழை, *வாரி - வருவாய்.*

5. மழை கெடுக்குமா? கொடுக்குமா?

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15**

பெய்யாது போவதால் உயிர்களை அழித்துக் கெடுப்பதும், அப்படிக் கெட்டு அழிந்த உயிர்களுக்கு மீண்டும் பெய்து வளம் சேர்ப்பதும் மழையே. ஆதலால் கெடுப்பதும், கொடுப்பதும் எல்லாம் மழையேயாகும்.

*கெட்டார்க்கு - இழந்தவர்க்கு, சார்வாய் - துணையாய்.*

6. மழைத் துளி வீழாவிடின் நிலம் எப்படி இருக்கும்?

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது. 16**

வானத்தில் இருந்து மழைத்துளி விழுந்தாலன்றி நிலத்தில் பசுமையைக் (பச்சைப்புற்களை) காண முடியாது.

*விசும்பு - வானம், பசும்புல் - பச்சைப்புற்கள், தலை - நுனி.*

7. மழை பெய்யா விட்டால் கடலின் நிலை என்னவாகும்?

**நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி**
**தான் நல்காது ஆகிவிடின். 17**

மழை மேகம் குறைந்து மழை பெய்வது நின்று போனால், ஆழ்கடல் கூடத் தன் தன்மையில் இருந்து குறையும் (கடல்நீரின் உப்புச் செறிவு கூடும். கடல் வாழ் உயிர் இனங்கள் இறக்கும்) கடல் வளம் குன்றும்.

*நெடுங்கடல் - ஆழ்கடல், நீர்மை - தன்மை,*
*குன்றும் - குறையும், தடிந்து - குறைந்து, எழிலி - மேகம்.8.*
*சிறப்பாக வானவர்க்காகச் செய்யப்படும் பூசைகள் நடக்குமா?*

8. சிறப்பாக வானவர்க்காகச் செய்யப்படும் பூசைகள் நடக்குமா?

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.** 18

வானம் வறண்டு போனால் தேவர்களுக்காகச் செய்யபடும் சிறப்பான பூசைகளும் இவ்வுலகில் நடக்காது.

*பூசனை - பூசை, செல்லாது - நடக்காது,*
*வானம் வறக்கும் - மழை பெய்யாது போதல்.*

9. மழை இல்லாவிட்டாலும், தானம், தவம் இரண்டுமாவது தங்கி இருக்குமா?

**தானம்தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்காது எனின்.** 19

இந்த வியப்பு மிக்க உலகத்தில் மழை இல்லாவிட்டால் மக்கள் பிறருக்குக் கொடுக்கும் தானமும், தமக்காகச் செய்யும் தவமும் நிலைத்து நிற்க்காது.

*தங்காது - நிலைக்காது, வியன் - வியப்பு, வானம் - மழை.*

10. உலக உயிர்களுக்கு மழைநீர் இன்றியமையாததாக இருக்கின்றது. அதுபோல மழை பெய்வதற்கு எது இன்றி அமையாதது?

**நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு.** 20

உலக உயிரினங்களின் வாழ்வு மழைநீர் இல்லாது உண்டாகாதது போல, மழை மேகம் இல்லாது மழை பொழியாது.

*நீர்இன்று - மழைநீர் இல்லாது, வான் - மழை மேகம்,*
*ஒழுக்கு - பொழிதல்.*

# 3. நீத்தார் பெருமை

*(துறவை மேற்கொண்டவர்களின் பெருமை)*

1. பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையைக் கூறுவது எது?

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு.** 21

ஒழுக்கத்திலிருந்து தவறாது உலகப்பற்றுக்களை நீக்கியவர்களின் பெருமையை, நூல்கள் உயர்வாகவும், தெளிவாகவும் எடுத்துக்கூறுகின்றன.

*விழுப்பம் - உயர்வு, துணிவு - தெளிவு.*

2. பற்றுக்களை விட்டவர்களின் பெருமை எவ்வளவு இருக்கும்?

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக் கொண்டற்று.** 22

உலகில் இறந்தவர்கள் எத்தனை பேர் என்று எண்ணுவது போன்றதே பற்றை விட்டவர்களின் பெருமையை எவ்வளவு என்று அளவிடுவதும்.

*துணை - அளவு, வையம் - உலகம், அற்று - போல.*

3. உலகத்தில் உயர்ந்த பெருமை எது?

**இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு.** 23

இன்ப துன்பங்களின் வேறுபாட்டை அறிந்து, விரைவாக அறத்தை மேற்கொண்டவர்களின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

*வகை - வேறுபாடு, தெரிந்து - அறிந்து, ஈண்டு - விரைவு, பிறங்கல் - உயர்ச்சி*

4. ஐம்பொறிகளையும் அடக்கி துறவறத்தை மேற்கொள்பவன் என்னாவான்?

**உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து.** 24

மனஉறுதி என்ற அங்குசத்தால், ஐம்பொறிகளால் வரும் ஆசைகளை அடக்கிக் காப்பவன், முத்தி என்ற நிலத்துக்கு ஒரு விதை ஆவான்.

*உரன் - மனவுறுதி, தோட்டி - அங்குசம், வரன் - முத்தி, வைப்பு - நிலம்.*

5. ஐம்புலன்களையும் அடக்கியவர்களின் ஆற்றலுக்கு உதாரணம் கூறமுடியுமா?

**ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலும் கரி.**
25

புலன்களை அடக்கிய கௌதமமுனிவனின் ஆற்றலால் புலன்களை அடக்காத தேவர்களின் அரசனான இந்திரனே சாபம் அடைந்தான். அதனால் ஐம்புல ஆசைகளைத் துறந்தவர்களின் வலிமைக்கு உதாரணமாக இந்திரனே விளங்குகின்றான்.

*அவித்தான் - அடக்கினான், விசும்பு - வானம், கோமான்-அரசன், ஆற்றல் - வலிமை: சாலும் - அமையும். கரி - சாட்சி.*

6. பெரியோர் யார்? சிறியோர் யார்?

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.** 26

எல்லோராலும் செய்வதற்கு முடியாத அருமையான செயல்களைச் செய்பவர் பெரியோர். அப்படிப்பட்ட அரிய செயல்களைச் செய்ய முடியாதவர் சிறியோர்.

*அரிய -அருமையான, செய்கலாதார் - செய்ய முடியாதார்.*

7. உலகம் எதில் தங்கி இருக்கின்றது?

**சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு.** 27

சுவைத்தல், பார்த்தல், தொடுதல், கேட்டல், மணத்தல், ஆகிய ஐந்து கூறுகளின் வேறுபாட்டை ஆராய்பவனின் அறிவில் இவ்உலகம் தங்கி இருக்கின்றது.

*ஒளி - பார்வை, ஊறு - தொடுதல், நாற்றம் - மணம், வகை - வேறுபாடு, தெரிவான் - ஆராய்வான்.*

8. சான்றோர்களின் பெருமையை எது எடுத்துக் காட்டும்?

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்** **28**

சான்றோர்களின் பெருமைக்கு அவர்கள் கூறிய மொழிகளே இவ்வுலகில் எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

*நிறைமொழி மாந்தர் - சான்றோர், நிலம் - உலகம்.*

9. சான்றோர்களின் கோபம் எப்படிப்பட்டது?

**குணமென்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது** **29**

நற்குணமென்னும் குன்றின் உச்சியில் நிற்கும் சான்றோர்களின் கோபத்தை, ஒரு வினாடி நேரம் கூட காத்து வைத்திருக்க அவர்களால் முடியாது.

*வெகுளி - கோபம், கணம் - வினாடி.*

10. அந்தணர் யார்?

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்** **30**

எல்லா உயிர்களிடத்தும் சமமாகக் கருணையைப் பொழிந்து அறவழியில் நடப்பவர்களே அந்தணர் என்று அழைக்கப்படுவார்.

*அறவோர் - அறவழியில் நடப்பவர்கள், ஒழுகல் - நடத்தல், செந்தண்மை - சமமாகக் கருணை செய்யும் தன்மை.*

## 4. அறன் வலியுறுத்தல்

*(அறத்தின் மேன்மையை வலியுறுத்திக்கூறல்)*

1. அறத்தை விடச் சிறந்தது எது?

**சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு. 31**

வாழ்வுக்கு வேண்டிய சிறப்பையும், செல்வத்தையும் அறம் தரும். ஆகையால் உயிர்களுக்கு அறத்தை விடச் சிறந்த ஆக்கம் வேறு என்ன இருக்கின்றது?

*ஈனும் - தரும், ஊஉங்கு - சிறந்தது.*

2. அறத்தை மறந்தால் என்ன?

**அறத்தின்ஊஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறுத்தலின் ஊங்குஇல்லை கேடு. 32**

வாழ்க்கைக்கு வளம் சேர்க்க, அறத்தை விட மேலான ஆக்கம் தரக்கூடியது ஏதும் இல்லை. அதனை மறந்து விடுவதுபோல் மிகத் தீமையானதும் வேறு ஒன்றும் இல்லை.

*ஊங்கு - மேலான, கேடு - தீமை.*

3. அறத்தை எப்படிச் செய்ய வேண்டும்?

**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம் செயல். 33**

அறச்செயல்களை முடிந்தவகையில் இடைவிடாது செய்யத்தக்க வழிகளில் எல்லாம் செய்ய வேண்டும்.

*ஒல்லும் - முடியும், அறவினை - அறச்செயல்களை,*
*ஓவாது - இடைவிடாது., செல்லும்வாய் - செய்யத்தக்கவழியில்.*

4. அறம் செய்பவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற.** 34

அறம் செய்பவன் எண்ணத்தில் தூய்மை உடையவனாக இருக்க வேண்டும். மற்றவை யாவும் வெறும் ஆரவார ஆடம்பரங்களே.

*மனம் - எண்ணம், மனத்துக்கண் - எண்ணத்தில், மாசு - குற்றம், மாசிலன் - தூய்மையானவன், ஆகுலம் - ஆரவாரம்.*

5. எந்தக் குற்றங்கள் அற்றது அறமாகும்?

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.** 35

பிறர் மேன்மை கண்டு பொறாமைப்படுதலும், பேராசையும், பெருங்கோபமும், கடுஞ்சொல்லும் ஆகிய இந்த நான்கு குற்றங்களையும் நீக்கி செய்யப்படுவதே அறமாகும்.

*அழுக்காறு - பொறாமை, அவா - பேராசை,*
*வெகுளி - பெருங்கோபம், இன்னாச்சொல் - கடுஞ்சொல்,*
*இழுக்கம் - குற்றம்.*

6. எப்போது அறம் செய்யத் தொடங்க வேண்டும்?

**அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றுஅது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை.** 36

இப்போது இளமையாக இருக்கின்றோம், முதுமையில் அறத்தைச் செய்யலாம் எனப்பிற்போடாது, இப்போதே அறத்தைச் செய்க. அத்தருமம் அழிவுவரும் காலத்தில் அழியாத துணையாக நிற்கும்.

*பொன்றுங்கால் - அழிவுவரும்போது, பொன்றா - அழியாத.*

7. அறத்தின் தன்மை என்ன?

**அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை.** 37

அறத்தின் தன்மை இது என்று அளவையால் அறிய முடியாது. இது பல்லக்கில் அமர்ந்து செல்பவனுக்கும், அதனைத் தூக்கிச் செல்பவனுக்கும் இடையே இருக்கும் தன்மையைப் போன்றது.

*அறத்தாறு - அறத்தின் தன்மை, பொறுத்தான் - தூக்குபவன்,*
*சிவிகை - பல்லக்கு, ஊர்ந்தான் - அமர்ந்து செல்பவன்.*

8. அறம் செய்பவன் வீணாக நாட்களைக் கழிக்கலாமா?

**வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அ∴தொருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல். 38**

ஒரு நாள் கூட வீணாகாது நல்ல அறங்களை ஒருவன் செய்தால், அது அவன் வாழும் நாளை வழிப்படுத்தும் கல்லாக அமையும்.

*வீழ்நாள் - வீணாகக்கழிந்தநாள், வழியடைக்கும் - வழிப்படுத்தும்*

9. அறத்தால் இன்பம் கிடைக்குமா?

**அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்**
**புறத்த புகழும் இல. 39**

அறவழியில் வாழ்வதால் வருவதே உண்மையான இன்பமாகும். மற்றவை எல்லாம் இன்பத்திற்கு புறம்பானவையே, புகழும் ஆகாது.

*அறத்தான் - அறத்தால், புறத்த - புறம்பான.*

10. ஒருவன் வாழ்நாளில் செய்யத்தக்கது என்ன?

**செயற்பாலது ஓரும் அறனே ஒருவருக்கு**
**உயற்பாலது ஓரும் பழி. 40**

ஒருவன் வாழ்நாளில் செய்யத்தக்கது அறமாகும். செய்யாமல் நீக்கத் தக்கது பழியே ஆகும்.

*அறன் - அறம், உயற்பாலது - நீக்கத்தக்கது, பழி - பழிக்கப்படுபவை.*

# இல்லறவியல்

## 5. இல் வாழ்க்கை

*(மனைவியுடன் கூடிவாழ்தல்)*

1. இல்வாழ்வான் அறவழியில் யாருக்குத் துணையாக இருப்பான்?

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை.** 41

இல்வாழ்வில் ஈடுபட்டவனே, பிரமச்சரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய அறப்பண்பு கொண்ட மூவர்க்கும் அறவழியில் துணையாக நிற்பான்.

*இயல்பு - பண்பு, நல்ஆறு - நல்ல அறவழி.*

2. இவர்களைத் தவிர வேறு யாருக்கு இல்வாழ்வான் துணையான்?

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.** 42

பற்றை விட்டவர்க்கும், ஏழைகட்கும், அநாதையாக இறந்து போனவர்க்கும் இல்வாழ்வான் துணையாவான்.

*துறந்தார் - பற்றைவிட்டவர், துவ்வாதவர் - ஏழைகள்.*

3. இல்லறத்தான் செய்ய வேண்டிய சிறந்த அறம் எது?

**தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.** 43

தன்னை வளப்படுத்திக் கொண்டு, சுற்றத்தாரைக் காத்து, விருந்து ஓம்பி, தெய்வத்தை வணங்கி, வாழ்ந்து மறைந்த தன் மூதாதையரை நினைவு கூர்தல் ஆகிய ஐந்து அறநெறிகளையும் போற்றுதலே இல்வாழ்வான் செய்ய வேண்டிய சிறந்த அறமாகும்.

*தென்புலத்தார் - பிதிரர், ஒக்கல் - சுற்றம்,
ஓம்பல் - போற்றுதல், தலை - சிறந்தது.*

4. இல்வாழ்க்கையில் கேடு வருமா?

**பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44**

பழிக்குப் பயந்து தேடிய பொருளை, தேவையானவர்க்கு பகுத்துக் கொடுத்து உண்பவன் வாழ்க்கைப் பாதையில் கேடு என்பது எப்பொழுதும் வராது.

*பழிஅஞ்சி - பழிக்குப்பயந்து, வழி - பாதை, எஞ்சல் - கேடு, எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.*

5. இல்வாழ்க்கையின் பண்பும், பயனும் என்ன?

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. 45**

அன்புடன் வாழ்தலே இல்வாழ்க்கையின் பண்பு. பிறர்க்கு செய்யும் அறமே இல்வாழ்க்கையின் பயன். இல்வாழ்க்கை பண்புடையதாகவும், பயனுடையதாகவும் இருக்க அன்பான தர்ம நெஞ்சம் தேவை.

*அறன் - அறம்.*

6. அறவழியில் இல்வாழ்க்கை வாழ்பவன் வேறுவழியிலும் பயன் பெறலாமா?

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஓய்ப் பெறுவது எவன். 46**

அறவழியில் இல்வாழ்க்கை வாழ்பவன், வேறு வழியில் சென்று பெறும் பயன் என்ன இருக்கின்றது?

*அறத்தாறு - அறவழி, ஆற்றுதல் - வாழ்தல், புறத்தாறு - வேறுவழி.*

7. இயல்பாக இல்வாழ்க்கை வாழ்பவனுக்கு என்ன தகுதி கிடைக்கும்?

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை. 47**

இயல்பாக இல்வாழ்க்கை வாழ்பவன், புலன்களை அடக்க முயற்சி செய்கின்ற அறவோர் எல்லோருக்கும் தலைவன் ஆவான்.

*முயல்வார் - தவம் செய்ய முயற்சி செய்வார்.*

8. தவம் செய்பவர் வாழ்க்கையை விட இல்வாழ்க்கை எப்படிப் பெருமை உடையதாகும்?

**ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.** 48

தவம் செய்வோரை அவர்களின் வழியில் வாழவைத்து, தாமும் அறவழியிலிருந்து மாறாது வாழ்வது இல்வாழ்க்கை. ஆகையால் தமக்காக வாழும் அறவோரை விட பிறர்க்காக வாழும் இல்வாழ்க்கை பெருமையுடையதாகும்.

*ஒழுக்கி - வாழவைத்து, இழுக்கா - மாறாது,*
*நோற்பார் - தவம்செய்வார், நோன்மை - பெருமை.*

9. இல்வாழ்க்கை அறமாகுமா?

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.** 49

அறம் என்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்வாழ்க்கையே ஆகும். அந்த இல்லறமும் பிறரால் பழிக்கப்படாமல் இருந்தால் நன்றாகும்.

பிறன் - பிறர், இல்லாயின் - இல்லையானால்.

10. இல்லறத்தில் வாழ வேண்டிய முறையில் வாழ்ந்தால் என்ன நடக்கும்?

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** 50

உலகத்தில் வாழ வேண்டிய அறவழியில் வாழ்பவன் வானத்தில் வாழ்கின்ற தெய்வத்துள் ஒருவனாக மதிக்கப்படுவான்.

*வையம் - உலகம், உறையும் - வாழும்*

# 6. வாழ்க்கைத் துணைநலம்

*(இல்லற வாழ்வில் துணையாக வரும் மனைவியின் சிறப்பு)*

1. வாழ்க்கைத் துணை எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும்?

**மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.** 51

குடும்பவாழ்வுக்கு ஏற்ற நல்ல பண்பு உள்ளவளாக, தனது கணவனது செல்வத்திற்கு தகுந்தவாறு வாழ்பவளே, வாழ்க்கைக்கு ஏற்ற துணையாக இருப்பாள்.

*மனைத்தக்க - மனைக்குத் தகுந்த, மாண்பு - பண்பு,*
*தற்கொண்டான் - கணவன், வளம் - செல்வம்.*

2. வாழ்க்கைக்கு வேண்டிய வேறு பெருமைகள் மனைவி இடம் இருந்தாலும் நற்பண்புகள் அவசியம் தானா?

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்.** 52

நற்பண்புகள் இல்லாத மனைவியுடன் வாழும் வாழ்க்கையில் வேறு எந்த சிறந்த பெருமைகள் இருந்தாலும் அவை இல்லாமல் போய்விடும்.

*மனைமாட்சி - இல்வாழ்வுக்கு வேண்டிய நற்பண்புகள்,*
*எனைமாட்சி - எத்தனை சிறந்த பெருமைகள்.*

3. நல்ல மனைவியால் வருவது என்ன? பண்பு குறைந்த மனைவியால் வருவது என்ன?

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை.** 53

மனைவி நற்பண்புகள் உள்ளவளாக இருக்கும் போது இல்லாதது என்ன இருக்க முடியும்? பண்பு குறைந்த மனைவியாக இருந்தால் அவனிடம் இருப்பது தான் என்ன?

*மாண்பு - நற்பண்பு, மாணா - பண்பற்ற.*

4. உலகில் பெருமைக்குரியது என்ன?

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்புஎன்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்.** 54

பெண்ணை விடப் பெருமைக்குரியது வேறு என்னதான் இருக்கின்றது? அதுவும் கற்பு என்று சொல்லப்படுகின்ற மன உறுதியும் சேர்ந்து இருக்குமானால் வாழ்வுக்கு பெருமை அளிப்பவள் பெண்ணே.

*பெருந்தக்கது - பெருமையுடையது, திண்மை - உறுதி.*

5. இவ்வளவு பெருமைமிக்க பெண்ணால் மழையை பெய்ய வைக்க முடியுமா?

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்எனப் பெய்யும் மழை.** 55

தெய்வத்தை வணங்காது கணவனைத் தொழுது வாழ்பவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும்.

*தொழாள் - வணங்காள், கொழுநன் - கணவன்.*

6. யாரை பெண் என்று கூறலாம்?

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண்.** 56

தன்னையும் காத்து, தன்னை மணந்தவனையும் உபசரித்து, குடும்பப்புகழையும் காப்பாற்றி, வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களால் சோர்ந்து போகாது வாழ்பவளே பெண்.

*தற்காத்து - தன்னைக்காத்து, தற்கொண்டான் - மணந்தான், தகைசான்றசொல் - புகழ், சோர்விலாள் - சோர்வடையாதவள்.*

7. ஒரு பெண் தன்னைக் காத்துக் கொள்வது எப்படி?

**சிறைக்காக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை.** 57

பெரிய அரண் உள்ள வீட்டில் முடங்கிச் சிறை இருப்பதால் பெண் தன்னைக் காத்துக் கொள்ள முடியுமா? பெண்கள் தமது ஒழுக்கம் என்னும் மன உறுதியால் தம்மைக் காத்துக் கொள்வதே சிறந்தது.

*மகளிர் - பெண்கள், நிறை - ஒழுக்கம், காப்பு - காத்தல்.*

8. நல்ல கணவனைப் பெற்ற பெண்கள் எத்தகைய சிறப்புப் பெறுவர்?

**பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு.** 58

நல்ல கணவனை அடைந்த பெண்கள், தேவ உலக வாழ்க்கை போல மிகச்சிறந்த வாழ்வு வாழ்வார்கள். அவர்களுக்கு இன்பவாழ்வு கிடைக்கும்.

*பெறின் - அடைந்தால், பெற்றான் - கணவன், புத்தேளிர் - தேவர்கள்.*

9. யாருக்கு தம்மை இகழ்வார் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியாது?

**புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை.** 59

புகழை விரும்பி இல்வாழ்க்கை வாழாதவர்களுக்கு, தம்மை இகழ்ந்து பேசுபவர் முன் தலை நிமிர்ந்து ஆண் சிங்கம் போல பெருமித நடை நடக்க முடியாது.

*புகழ்புரிந்த - புகழைவிரும்பி, இல் - இல்வாழ்க்கை,*
*ஏறு - ஆண்சிங்கம், பீடு - பெருமிதம்.*

10. இல்வாழ்க்கையால் பெறும் பெருமையும், பயனும் என்ன?

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு.** 60

இல்வாழ்க்கையால் பெறும் பெருமை இன்பப்பொலிவு. அதனால் பெறுகின்ற பெரும்பயன் நல்ல அறிவுள்ள பிள்ளைகளைப் பெறுதல்.

*மங்கலம் - இன்பப்பொலிவு, மனையாட்சி - இல்வாழ்வின் பெருமை.*

# 7. புதல்வரைப் பெறுதல்

*(மக்களைப் பெறுதல்)*

1. இல்வாழ்க்கையில் கிடைக்கும் பேறுகளில் சிறந்தது என்ன?

**பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற.** 61

நாம் அறிந்தவகையில் அறிய வேண்டியவற்றை அறியும் ஆற்றல் உள்ள மக்களைப் பெறுதலே இல்வாழ்க்கையில் கிடைக்கும் பேறுகளில் சிறந்ததாகும். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

*பெறுமவற்றுள் - கிடைப்பவற்றுள்*

2. அறிவுள்ள மக்களைப் பெற்றால் என்ன பயன் கிடைக்கும்?

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.** 62

பழிச்சொற் கேட்காத நல்ல பண்புள்ள மக்களைப் பெற்றவர்களுக்கு ஏழு பிறப்பிலும் தீமைகள் உண்டாகாது.

*எழு - ஏழு, பிறங்குதல் - உண்டாதல், பிறங்கா - கேட்காத.*

3. தமது பொருள் என்று எதைச் சொல்வது?

**தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தம்தம் வினையான் வரும்.** 63

தம் பிள்ளைகளையே தமது பொருள் என்று கூறுவர். பிள்ளைகளுடைய பொருள் அவர்கள் செய்யும் செயல்களைப் பொறுத்து அவர்களுக்குக் கிடைக்கும்.

*தம் - தமது, மக்கள் - பிள்ளைகள், வினை - செயல்.*

4. எது அமிழ்தத்தை விட மிக இனிமையானது?

**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்.** 64

குழந்தைகள் தம் பிஞ்சுக் கைகளால் பிசைந்த உணவு, பெற்றோருக்கு அமிழ்தத்தைவிட மிக இனிமையாக இருக்கும்.

*ஆற்ற - மிக, அளாவிய - பிசைந்த, கூழ் - உணவு.*

5. பிள்ளைகளால் கிடைக்கும் இன்பம் என்ன?

**மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம் மற்றுஅவர்**
**சொல்கேட்டல் இன்பம் செவிக்கு.** 65

பிள்ளைகளின் உடலைத் தொடும்போது (கொஞ்சி மகிழ்தல்) உடலுக்கு இன்பம் கிடைக்கின்றது. அவர்கள் சொல்லும் மழலையைக் கேட்பதால் செவிக்கு இன்பம் கிடைக்கின்றது.

*மெய் - உடல், தீண்டல் - தொடுதல்*

6. புல்லாங்குழலை விட குழந்தைகள் மழலை இனிமையானதா?

**குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்.** 66

தாங்கள் பெற்ற குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாதவரே குழலிசையும், யாழிசையும் இனிமை என்று கூறுவார்கள்.

7. தந்தை பிள்ளைக்குச் செய்யும் நன்றி எது?

**தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.** 67

தன் பிள்ளையை நன்றாகப் படிக்கவைத்து, அறிஞனாக்கி கற்றோர் சபையில் தலைவனாக விளங்கச் செய்வதே, தந்தை பிள்ளைக்குச் செய்யும் நன்றியாகும்.

*ஆற்றும் - செய்யும், அவை - சபை.*

8. பிள்ளையைத் தன்னை விடச் சிறந்த அறிஞனாக ஆக்குவதால் என்ன பயன் கிடைக்கும்?

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.** 68

பெற்றவர்களை விட பிள்ளைகள் அறிவுள்ளவராக இருந்தால் இந்த உலகத்தில் வாழும் உயிரினங்கள் யாவும் இன்பம் அடையும். (பிள்ளையின் அறிவு உலக வளர்ச்சிக்கு உதவுவதால் உலக உயிர்கள் யாவும் சுகம் பெறும்)

மாநிலம் - உலகம், இனிது - இன்பம்.

9. பிள்ளையைப் பெற்றெடுத்த நேரத்திலும் பார்க்கத் தாய் எப்போது மிக மகிழ்ச்சி அடைவாள்?

**ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.** 69

பிள்ளை படித்து பேரறிஞனானாலும் அவனைப்பார்த்து மற்றவர்கள், "இவள்பிள்ளை நல்ல பண்புகளின் உறைவிடமான சான்றோனாக இருக்கிறான்," என்று சொல்வதைக் கேட்கும் போதே, ஒரு தாய் பெற்றெடுத்த நேரத்திலும பார்க்க மிக்க மகிழ்ச்சி அடைவாள்.

ஈன்ற - பெற்ற, பொழுது - நேரம், உவத்தல் - மகிழ்தல்.

10. படிக்கவைத்து பேரறிஞனாக்கிய தந்தைக்கு மகன் என்ன உதவி செய்ய வேண்டும்?

**மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்.** 70

இப்படிப்பட்ட ஒரு நல்ல பிள்ளையைப் பெற்று வளர்க்க இவன் தந்தை என்ன தவம் செய்தானோ? என்று மற்றவர்கள் புகழும்படி வாழுவதே ஒரு மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாகும்.

*ஆற்றும் - செய்யும், என்நோற்றான் - என்ன தவம் செய்தான்.*

# 8. அன்புடைமை

*(அன்புடையவராக வாழ்தல்)*

1. அன்பைப் பூட்டிவைக்க முடியுமா?

> **அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
> **புன்கண்நீர் பூசல் தரும்.** 71

அன்பை அடைத்து வைக்கக்கூடிய தாழ்ப்பாள் இருக்கின்றதா? தாம் அன்பு செலுத்துபவரது துன்பத்தைப் பார்த்தவுடன் தம்மை அறியாமல் வரும் கண்ணீரே, அவர்களது அன்பை மற்றவர்க்கு காட்டிக் கொடுக்கும்.

*ஆர்வலர் - அன்புடையவர், பூசல்தரும் - வெளிப்படும்.*

2. அன்பு இல்லாதவர்க்கும், அன்பு உள்ளவர்க்கும் என்ன வேறுபாடு இருக்கின்றது?

> **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு.** 72

அன்பில்லாதவர் தமது நன்மைக்காக வாழும் தன்னலக்காரர். அன்பு உள்ளம் கொண்டவர் தமது உடலைத் தாங்கும் எலும்பையும் பிறருக்குக் கொடுப்பர். அதாவது பிறருக்காக வாழ்வர்.

*அன்பிலார் - அன்பு இல்லாதவர், என்பு - எலும்பு.*

3. அன்பால் உண்டாகும் செய்கைகள் எது போன்றது?

> **அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
> **என்பொடு இயைந்த தொடர்பு.** 73

உயிருக்கும், உடலுக்கும் உள்ள தொடர்பு போன்றதே. அன்போடு சேர்ந்த செய்கையும் என்பர். அதாவது நெஞ்சம் நெகிழ்தல், இரக்கம், கருணை போன்ற அன்பால் உண்டாகும் செய்கைகள் இருக்கும்.

*இயைந்த - சேர்ந்த, என்பு - உடம்பு, வழக்கு - செய்கை.*

4. அன்பு எமக்கு எவற்றைத் தரும்?

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.** **74**

அன்பு எமக்குப் பிறர்மேல் விருப்பத்தை உண்டாக்கும். அந்த விருப்பம் அவர்களுடன் நட்பு என்ற மிகச்சிறந்த தகுதியை எமக்கு ஏற்படுத்தித் தரும்.

*ஈனும் - தரும், ஆர்வம் - விருப்பம், நண்பு - நட்பு, நாடாச்சிறப்பு - அளவிட முடியாத சிறப்பு.*

5. அன்பு கொண்டு வாழ்வதால் என்ன பயன்?

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு.** **75**

அன்பு கொண்டு மற்றவர்களோடு சேர்ந்து வாழ்தலே, உலகத்தில் இன்பமுற்று வாழ்பவர் அடையும் சிறப்பாகும்.

*அன்புற்று - அன்புகொண்டு, அமர்ந்த - சேர்ந்த, வையகம் - உலகம், எய்தும் - அடையும்.*

6. அறத்திற்கு மட்டுமா அன்பு தேவை?

**அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.** **76**

அறியாமையால் சிலர் அறத்திற்கு மட்டும் அன்பு துணை செய்யும் என்பர். ஆனால் மறத்திற்கும் அதுதான் துணை செய்கின்றது.

*சார்பு - துணை, அறியார் - அறியாமையுள்ளவர், மறம் - வீரம்.*

7. அன்பு இல்லாவிட்டால் என்ன?

**என்பு இலதனை வெயில்போலக் காயுமே**
**அன்பு இலதனை அறம்.** **77**

எலும்பு இல்லாத உடலை வெயில் சுடுவது போல, அன்பு இல்லாதவரை (மனசாட்சியாக) அறம் நின்று சுடும்.

*என்பு - எலும்பு, காயும் - சுடும்.*

8. அன்பு இல்லாத வாழ்க்கை எப்படி இருக்கும்?

**அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம் தளிர்த்தற்று. 78**

மனத்தில் அன்பில்லாதவர் வாழ்க்கை, பாலைவனத்தில் பட்டமரம் தளிர்விட்டு வளர்வது போல இருக்கும்.

*அகம் - மனம், அன்பகத்தில்லா-மனதில் அன்பில்லா, வன்பால் - பாலைநிலம், வற்றல்மரம் - பட்டமரம்.*

9. நல்ல அழகாக இருப்பவர்களுக்கும் அன்பு தேவையா?

**புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. 79**

உடலின் அகத்துறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்கு, புற உறுப்புக்கள் அழகாக இருந்து என்ன பயன் செய்யும்?

புறத்துறுப்பு - வெளி உறுப்பு, எவன் - என்ன, யாக்கை - உடம்பு,

10. அன்பில்லாத உடல் எப்படிப்பட்டது?

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு. 80**

உயிரே அன்பில் தான் தங்கி நிற்கின்றது. அது இல்லாத உடல் வெறும் எலும்பை தோலால் போர்த்தி இருக்கும் பிணமே.

# 9. விருந்து ஓம்பல்

*(உணவளித்துப் போற்றுதல்)*

1. விருந்தினரைப் பேண வேண்டுமா?

**இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு.** 81

பொருளைத் தேடி பாதுகாத்து இல்வாழ்வு வாழ்வதே, விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவுவதற்கேயாகும்.

ஓம்பி - பேணி, வேளாண்மை - உபகாரம் (உதவி).

2. விருந்தினரைக் காக்கவைத்து தான் மட்டும் உண்ணலாமா?

**விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
**மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று.** 82

சாகாமல் உயிர்வாழ வைக்கும் அமிர்தமாக இருந்தாலும், விருந்தினர் வீட்டின் புறத்தே காத்திருக்க நான் மட்டும் உண்பது விரும்பத்தக்கது அல்ல.

*புறம் - வெளியே, சாவாமருந்து - அமிர்தம்,*
*வேண்டல் - விரும்பல், பாற்றன்று - தக்கதல்ல.*

3. விருந்தினரைப் பேணுபவர்கள் கெட்டழியமாட்டார்களா?

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று.** 83

நாள்தோறும் வருகின்ற விருந்தினரை பேணுபவன் வாழ்க்கை, வருந்திக் கெட்டு அழிவதில்லை.

*வைகல் - நாள்தோறும், ஓம்புவான் - பேணுபவன்,*
*பருவந்து - வருந்தி, பாழ்படுதல் - கெட்டழிதல்.*

4. விருந்தினரைப் பேணுபவர் வீடு எப்படி இருக்கும்?

**அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல். 84**

நல்ல விருந்தினரை முகமலர்ச்சியுடன் உபசரிப்பவன் வீட்டில், மனம் மகிழ்ந்து இலட்சுமி வாழ்வாள். (செல்வம் இருக்கும்).

*செய்யாள் - இலட்சுமி, முகன்அமர்ந்து - முகம்மலர்ந்து, அகன்அமர்ந்து - மனமகிழ்ந்து, ஓம்பல் - உபசரித்தல்.*

5. விருந்தினரை உபசரிப்பவன் தன் நிலத்தில் எப்போது விதைகளைப் போட வேண்டும்?

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம். 85**

விருந்தினர்க்குக் கொடுத்து எஞ்சியதை சாப்பிடுபவன் தன் நிலத்தில் வித்துக்களைப் போடவா வேண்டும்?

*இடல் - போடுதல், மிச்சில் - மிச்சம், மிசைவான் - உண்ணுவான்.*

6. வந்தவிருந்தினரை வரவேற்று, வருகின்ற விருந்தினரை பார்த்திருப்பதால் பலன் என்ன?

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு. 86**

தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து, வர இருக்கும் விருந்தினரை எதிர்பார்த்து இருப்பவன் தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான்.

7. விருந்து கொடுப்பதால் எவ்வளவு பயன் கிடைக்கும்?

**இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன். 87**

விருந்தினரை வரவேற்றல் ஒரு வேள்வியே ஆதலால், அதன் பயன் இன்ன அளவு என்று கூறமுடியாது. விருந்தினரின் தகுதியின் அளவே அளவாகும்.

*இணைத்துணை - இந்த அளவு, துணைத்துணை - தகுதியளவு.*

8. விருந்தினரைப் போற்றாதவர்கள் என்ன ஆவார்கள்?

**பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**
**வேள்வி தலைப்படா தார். 88**

விருந்தினரைப் போற்றும் வேள்வியைச் செய்யாதவர், வருந்தித் தேடிச் சேர்த்து வைத்த பொருளை இழந்து நமக்கு ஒரு ஆதரவும் இல்லையே என வருந்துவர்.

*பரிந்து - வருந்தி, ஓம்பி - பாதுகாத்து, பற்று - பற்றுக்கோடு(ஆதரவு).*

9. எப்படிப்பட்டவர் செல்வம் இருக்கும் போது விருந்தோம்பலை இகழ்வர்?

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு. 89**

செல்வம் இருந்தும் விருந்தோம்பலைச் செய்யாது இருக்கும் மடத்தனமே வறுமையாகும். இது பேதைகள் இடமே இருக்கும்.

*உடைமை - செல்வம், இன்மை - வறுமை,*
*மடமை - பேதைமை(மடத்தனம்), மடவார் - பேதைகள்.*

10. விருந்தினர் நெஞ்சம் எப்படிப்பட்டது?

**மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து. 90**

அனிச்சம் பூவை முகர்ந்தால் வாடும். ஆனால் கொஞ்சம் முகம் சலித்துப் பார்த்தாலே விருந்தினர் நெஞ்சம்வாடும்.

*மோப்ப - மணக்க(முகர), குழையும் - வாடும்,*
*முகம் திரிந்து - முகம் சலித்து, நோக்க - பார்க்க.*

# 10. இனியவை கூறல்

*(இனிய சொற்களைக் கூறுதல்)*

1. இன்சொல் என்றால் என்ன?

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.** 91

அன்பு கலந்ததாய், வஞ்சனை இல்லாததாய், உண்மைப் பொருளை அறிந்தவர்களது வாயிலிருந்து வரும் சொல்லே இன்சொல் ஆகும்.

*ஈரம் - அன்பு, ஈரம்அளைஇ - அன்பு கலந்ததாய், படிறு - வஞ்சனை,* செம்பொருள் - உண்மைப் பொருள்.

2. ஒருவருக்கு ஒன்றைக் கொடுப்பதா அல்லது அவருடன் இனிமையாகப் பேசுவதா நல்லது?

**அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்.** 92

மனநிறைவோடு ஒருவர்க்குப் பொருளைக் கொடுப்பதை விட, அவரைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் இனிமையாகப் பேசுவதே நல்லது.

*அகன்அமர்ந்து - மனநிறைவோடு, முகன்அமர்ந்து - முகம் மலர்ந்து. ஈதல் - கொடுதல்.*

3. ஒருவர்க்கு ஒன்றைக் கொடுப்பதா இனிமையாகப் பேசுவதா அறமாகும்?

**முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்**
**இன்சொல் லினதே அறம்.** 93

ஒருவரைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் அன்புடன் பார்த்து, மனம்கனிய இனிய சொற்களைச் சொல்வதே அறமாகும்.

*முகத்தான் - முகத்தால், அகத்தான் - மனத்தால்.*

4. இனிமையாகப் பேசுவதால் என்ன இலாபம்?

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.** **94**

எல்லோரிடத்திலும் மகிழ்ச்சி தரும் இனிய வார்த்தைகளைப் பேசுபவருக்கு, துன்பத்தைத் தரக்கூடிய வறுமை இல்லாமல் போகும்.

*துன்புறூஉம் - துன்பந்தரும், துவ்வாமை - வறுமை, இன்புறூஉம் - மகிழ்ச்சிதரும்.*

5. ஒரு மனிதன் அணியவேண்டிய நகைகள் எவை?

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு**
**அணிஅல்ல மற்றுப் பிற.** **95**

பணிவுள்ளவானாகவும், இனிமையாகப் பேசுகின்றவனாகவும் இருப்பதே ஒருவருக்கு உடம்பில் அணியப்படும் அணிகலன் களாகும். ஏனைய ஆபரணங்கள் அணிகலன்கள் அல்ல.

*அணி - அணிகலன்.*

6. இனிமையான நல்ல வார்த்தைகளைப் பேசுவதால் எது சிறந்து வளரும்?

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.** **96**

நல்ல சொற்களைத் தெரிந்தெடுத்து இனிமையாகப் பேசினால், கெட்டவை தேய அறம் சிறப்பாக வளரும்.

*அல்லவை - கெட்டவை, பெருகும் - வளரும், நாடி - தெரிந்து, சொலின் - பேசினால்.*

7. நல்ல பண்பான இனிய சொல்லைப் பேசுவதால் என்ன பயன் கிடைக்கும்?

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்.** **97**

இனிய பண்பிலிருந்து மாறாத கருத்துள்ள, பயன்தரும் சொற்களைப் பேசுவதால் மகிழ்ச்சிதரக் கூடிய நன்மைகள் உண்டாகும்.

*நயன்ஈன்று - மகிழ்ச்சிதரும், நன்றி - நன்மை, பயக்கும் - உண்டாகும், பயன்ஈன்று - பயன்தரும், தலைப்பிரியா - மாறாத.*

8. கருத்துள்ள இனிய சொல் எதனை எமக்குத் தரும்?

**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும். 98**

பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்காத இனிய சொல் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் இன்பத்தைத் தரும்.

*சிறுமை - துன்பம், இன்சொல் - இனிய சொல்,*
*மறுமை - மறு உலகம், இம்மை - இவ்வுலகம்.*

9. கடுஞ்சொல் கூறினால் என்ன?

**இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது. 99**

இன்சொல் இன்பம் தருவதைக் கண்ட எவனாவது கடுஞ்சொல் கூறுவானா?

*இனிது - இன்பம், இனிதுஈன்றல் - இன்பம்தருவது,*
*வன்சொல் - கடுஞ்சொல், வழங்குவது - சொல்வது.*

10. கடுஞ்சொல் கூறுவது எதைப் போன்றது?

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100**

இனிய சொற்கள் இருக்கும் போது கடுஞ்சொற்களைக் கூறுவது, பழுத்த கனி இருக்கக் காயைப் பறித்து உண்பது போன்றதாகும்.

*இன்னாதுகூறல் - கடுஞ்சொற்கூறல், கவர்தல் - உண்டல்*

# 11. செய்ந்நன்றி அறிதல்

*(ஒருவன் செய்த நன்மையை மறவாதிருத்தல்)*

1. ஒருவன் ஒரு நன்மையும் செய்யாமல் இருக்க, மற்றவன் செய்த உதவிக்கு என்ன கைமாறு செய்ய வேண்டும்?

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.** 101

தான் ஒரு நன்மையும் (நன்றியும்) செய்யாதிருக்க தனக்கு மற்றவன் செய்த உதவிக்கு நிலவுலகத்தையும் வானுலகத்தையும் கொடுத்தாலும் கூட, அந்த உதவிக்கு அது சமமாகாது.

*வையம் - நிலவுலகம், வானகம் - வானுலகம்,*
*ஆற்றல் - கொடுத்தல்.*

2. சிறிய நன்றி செய்தாலும் நாம் அதனை நினைக்க வேண்டுமா?

**காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.** 102

எமக்கு வேண்டிய முக்கியமான நேரத்தில் ஒருவர் செய்த நன்மை (நன்றி) சிறிதாக இருந்தாலும் அதனை இந்த உலகைவிடப் பெரிதாகக் கொள்ள வேண்டும்.

*காலம் - நேரம், நன்றி - நன்மை, ஞாலம் - உலகம்.*

3. தனக்கு ஒரு பயனையும் எதிர்பார்க்காது செய்யும் உதவியின் தன்மை எப்படிப்பட்டது?

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது.** 103

நாம் இவருக்கு உதவினால் எனக்கு இவர் பின்னர் உதவுவார் என எதிர்பாராமல், ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்தால் அது கடலை விடப் பெரிய நன்மை உடையதாக இருக்கும். (கடல் எதுவித பயனையும் எதிர்பாராது எமக்கு முத்து, பவளம், உணவுகள் என்று தருவதால் அதனை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார்).

தூக்கார் - ஆராயாதவர், தூக்கின் - ஆராய்ந்தால்.

4. தினையளவு நன்றி செய்தாலும் நாம் உதவ வேண்டுமா?

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார். 104**

ஒருவன் தினையளவு நன்மை செய்திருந்தாலும் அதனால் கிடைத்த பயனை நினைப்பவர்கள், அவ்வுதவியை பனையளவு பெரிதாக எடுத்துக் கொள்வர்.

*துணை - அளவு, தெரிவார் - நினைப்பார்.*

5. ஒருவர் நமக்குச் செய்த நன்மைக்கு நாம் செய்ய வேண்டிய உதவியின் அளவை அறிவது எப்படி?

**உதவி வரைத்தன்று உதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து. 105**

உதவியை அளவிட முடியாது. உதவியானது உதவியைப் பெறுபவர்களின் மனதின் தன்மைக்கு ஏற்ற அவளாகும்.

*வரைத்து - அளவு, சால்பு - மனத்தன்மை.*

6. எவர் நட்பை நாம் மறவாதிருக்க வேண்டும்?

**மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு. 106**

நெஞ்சில் வஞ்சனை அற்றவர் நட்பை மறக்கக்கூடாது. துன்பமான காலத்தில் துணை நின்றவர் நட்பைக் கைவிடவும் கூடாது.

*மறவற்க - மறக்கவேண்டாம், மாசு - வஞ்சனை,*
*கேண்மை - நட்பு, துறவற்க - கைவிடவேண்டாம்,*
*துப்பாயர் - துணையானவர்.*

7. நம் துன்பத்தை நீக்கியவர் நட்பை எவ்வளவு காலம் நினைவில் வைத்திருக்க வேண்டும்?

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு. 107**

தமது துன்பத்தை நீக்கியவர் நட்பை ஏழேழு தலை முறையினரும், நினைவில் வைத்திருப்பார்கள்.

எழுமை எழுபிறப்பு - ஏழெழு பிறப்பு, விழுமம் - துன்பம், துடைத்தவர் - நீக்கியவர்.

8. நன்மையை நினைவில் வைத்திருப்பது போல் தீமையையும் நினைக்க வேண்டுமா?

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.** **108**

ஒருவர் செய்த நன்றியை மறப்பது நல்ல செயலில்லை. செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

*நன்றன்று - நல்லது இல்லை, நன்றல்லது - தீமை.*

9. கொலை போன்ற தீமை செய்தவரை என்ன செய்வது?

**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன்று உள்ளக் கெடும்.** **109**

கொலை போன்ற தீமை செய்தாலும் அவர் செய்த ஒரு நன்மையை நினைத்துப் பார்த்தால், அத்தீமை பெரிதாகத் தோன்றாது அழிந்து போகும்.

*இன்னா - தீமை, செயினும் - செய்தாலும், உள்ள - நினைக்க.*

10. ஒருவர் செய்த நன்றியை மறந்தால் என்ன?

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.** **110**

எத்தகைய நன்மையை அழித்தவர்க்கும் தப்ப வழி உண்டு. ஒருவன் தனக்குச் செய்த நன்றியை மறந்தவனுக்கு உய்வே கிடையாது.

*எந்நன்றி - எந்த நன்மை, கொன்றார் - அழித்தார்,*
*உய்வு - தப்புதல்.*

# 12. நடுவு நிலைமை

*(பாகுபாடு பாராது இருத்தல்)*

1. ஒருவன் நடுவுநிலைமையுடன் நடக்க அவனுக்கு என்ன தகுதி வேண்டும்?

**தகுதி எனஒன்று நன்றே பகுதியான்**
**பாற்பட்டு ஒழுகப் பெறின்.** 111

ஒருவன் எவரிடத்தும் பாகுபாடு இன்றி நடப்பானானால், அதுவே சிறந்த தகுதியாகும்.

*நன்று - சிறந்தது, பகுதி - பாகு, பாற்பட்டு - பாடு, ஒழுகுதல் - நடத்தல்.*

2. ஏன் ஒருவன் நடுவுநிலைமை உடையவனாக வாழ்ந்து பொருள் தேட வேண்டும்?

**செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.** 112

நடுவுநிலைமை உடையவன் தேடிய சொத்து அழிவு இல்லாது அவனது சந்நிதியினருக்கு அரணாக நின்று உதவும்.

*செப்பம் - அழிவு, ஏச்சம் - சந்ததியினர், ஏமாப்பு - அரண்.*

3. நடுவுநிலைமை தவறுவதால் நன்மைதரக்கூடிய பெரும் சொத்துக் கிடைக்குமானால் அதனை என்ன செய்வது?

**நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்.** 113

நடுவுநிலைமையின் நின்று நீங்கி வரும் சொத்து, நன்மையே தருவதாக இருந்தாலும், அதனை அப்போதே கைவிட்டு விட வேண்டும்.

*இகந்து - நீங்கி, ஒழியவிடல் - விட்டுவிடல்.*

4. ஒருவர் நடுவுநிலைமை உடையவரா? இல்லையா? என்பதை எப்படி அறியலாம்?

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும்.** 114

இவர் நடுவுநிலைமை உடையவர், இவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பதை அவரவர் இறந்த பின் நிலைத்து நிற்கும் புகழால் கண்டு கொள்ளலாம்.

*தக்கார் - தகுதியுள்ளவர், தகவு - நடுவுநிலைமை,*
*எச்சம் - புகழ், தகவிலர் - நடுவநிலைமை இல்லாதவர்.*

5. எது சான்றோர்க்குச் சிறப்பைக் கொடுக்கும்?

**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.** 115

வாழ்வும், தாழ்வும், என்றும் இல்லாது அல்ல என்பதை உணர்ந்து நெஞ்சத்து நடுவுநிலைமையில் தவறாது இருப்பதே சான்றோர்க்குச் சிறப்பாகும்.

*கேடு - தாழ்வு, பெருக்கம் - வாழ்வு, அணி - சிறப்பு,*
*கோடாமை - நடுவுநிலைமை தவறாமை.*

6. நடுவுநிலைமை தவறுகிறேன் என்பதை எப்படி அறிவது?

**கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**
**நடுஓரீஇ அல்ல செயின்.** 116

நெஞ்சம் நடுவுநிலைமை தவறி தவறான காரியங்களை செய்யத் தொடங்குமானால், "நான் கெட்டு அழியப் போகிறேன்" என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

*கெடுவல் - கெடுவன், நடுஓரீஇ - நடுவுநிலையை நீக்கி.*

7. நடுவுநிலைமை தவறாது வாழ்ந்து அதனால் வறுமை வந்தால் அது கேவலம் இல்லையா?

**கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.** 117

நடுவுநிலைமையோடு நன்மைகள் செய்து வாழந்தவர், வறுமை அடைந்தாலும் உலகம் அதனைத் தாழ்வாகக் கருதாது.

கெடு - தாழ்வு, வையாது - கருதாது, நன்றி - நன்மை,
தாழ்வு - வறுமை.

8. சான்றோர்க்கு எது அழகைக் கொடுக்கும்?

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.** 118

எடை காட்டும் தராசின் முள் போல இருந்து ஒரு பக்கம் சாராது நடப்பதே, நடுவுநிலைமை உடைய சான்றோர்க்கு அழகாகும்.

*சமன் - சமம், சீர்தூக்கும் - அளக்கும், கோடாமை - சாராமை.*

9. எது சிறந்த நடுவுநிலைமையாகும்?

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உள்கோட்டம் இன்மை பெறின்.** 119

உள்ளத்தில் நேர்மையும், வார்த்தையில் நீதியும் இருத்தலே சிறந்த நடுவுநிலைமை ஆகும்.

*கோட்டம் - நடுநிலை திறம்புகை,*
*சொற்கோட்டம் இல்லது - வார்த்தையில் நீதி,*
*உள்கோட்டம் இன்மை - உள்ளத்தில் நேர்மை,*
*செப்பம் - நடுவுநிலைமை.*

10. வியாபாரிகள் நடுவுநிலைமையை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும்?

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்.** 120

வியாபாரிகள் தாம் கொடுப்பதைக் குறையக் கொடுத்தும், வாங்குவதை நிறைய வாங்கியும், இலாபம் ஈட்டப் பார்ப்பதால், பிறர் பொருளையும் தம் பொருள் போலக் கருதி வியாபாரிகள் நடுநிலையோடு வியாபாரம் செய்ய வேண்டும்.

*வாணிகம் - வியாபாரம், பேணி - கருதி, தமபோல் - தமதுபோல்.*

# 13. அடக்கம் உடைமை

*(ஐம்புல ஆசைகளை அடக்கி இருத்தல்)*

1. ஏன் ஒருவர் அடங்கி இருக்க வேண்டும்? அடங்காமல் இருந்தால் என்ன?

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.** 121

அடங்கி நடப்பதால் தேவர்கள் போல நல்வாழ்வு வாழலாம். அடங்காமை வாழ்வை மிகப் பெரிய இருள் அடையச் செய்யும்.

*அடக்கம் - அடங்கி இருத்தல், அமரர் - தேவர், உய்க்கும் - வாழ வைக்கும், ஆரிருள் - மிகப்பெரிய இருள், உய்த்து - சேர்க்கும்.*

2. உயிர்க்கு மிக மிக முக்கியமான சொத்து எது?

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு.** 122

அடக்கத்தையே பொருள் போலக் காக்க வேண்டும். உயிருக்கு அதைவிடப் மிகப் பெரிய சொத்து எதுவுமே இல்லை.

*ஆக்கம் - சொத்து, ஊங்கு - மிகப்பெரிய.*

3. அடங்கி வாழ்வதால் என்ன பயன்?

**செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்.** 123

அறிய வேண்டியவற்றை அறிந்து அவ்வழியில் அடங்கி வாழ்பவனின் திறமையைத் தெரிந்து உயர்வுகள் வந்து சேரும்.

*செறிவுஅறிந்து - திறமையைக்கண்டு, ஆற்றின் - வழியில், சீர்மை - உயர்வு, அறிவுஅறிந்து - அறிய வேண்டியவற்றை அறிந்து.*

4. அடக்கம் உடையவனது உயர்வு எப்படிப்பட்டது?

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.** 124

தன் பண்பில் இருந்து மாறாது அடங்கி இருப்பவனின் உயர்வு மலையை விட மிகப் பெரியது.

*நிலை - பண்பு, திரியாது - மாறாது, தோற்றம் - உயர்வு.*

5. பணக்காரரும் பணிந்து நடக்க வேண்டுமா?

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.** 125

எல்லோருக்கும் பணிவு நன்மையைக் கொடுக்கும். அவர்களுக்குள் பணக்காரருக்கே மேலும் செல்வம் வந்து சேர்ந்தது போல மிகுந்த நன்மையைக் கொடுக்கம்.

*செல்வர் - பணக்காரர்.*

6. புலன்களை அடக்குவது எப்படி?

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.** 126

ஆமை தனது ஐந்து உறுப்புக்களையும் (தலை, நான்கு கால்கள்) தனக்கு தேவை அற்ற போது அடக்கி வைத்திருப்பது போல, தனிமையாக இருக்கும் போது ஐம்பொறிகளையும், அடக்க முடியுமாயின் அது வரும் தீமைகளைக் காக்கும் அரணாக நிற்கும்.

*ஒருமை - தனிமை, ஐந்துஅடக்கல் - ஐம்புலன்களை அடக்கல், ஆற்றின் - முடியுமாயின், எழுமை - வரும் தீமை, ஏமாப்பு-அரண்.*

7. ஐம்பொறிகளில் எதனை முக்கியமாக அடக்கிக் காக்க வேண்டும்?

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு.** 127

எதனைக் காக்காவிட்டாலும் நாவை அடக்கிக் காக்கவும். காக்காவிட்டால் வசையால் துன்பப்படுவர்.

*யாகாவார் - எதனையும் காக்கார், காவாக்கால் - காக்காவிடின், சோகப்பர் - துன்பப்படுவர், சொல்லிழுக்கு - வசை.*

8. பேசும் சொற்களிலே ஒரேஒரு சொல் மட்டும் கெட்டதாக இருந்தால் என்ன?

**ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றுஆகாது ஆகி விடும்.** 128

ஒரு சொல் என்றாலும் கெட்ட சொல்லாய் இருந்து, அச்சொல்லின் பொருள் மற்றவர்களைப் புண்படுத்துமானால் அது தீமையாக முடிந்து விடும்.

*தீச்சொல் - கெட்ட சொல்; நன்றுஆகாதது - தீமை.*

9. நாவின் வலிமை எப்படிப்பட்டது?

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.** 129

நெருப்பால் சுட்ட புண்ணின் வடுக்கூட உள்ளுக்குள் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்டவடு, என்றும் ஆறாது நிலைத்திருக்கும்.

10. கோபத்தை அடக்கிக் காப்பதால் என்ன பயன் உண்டு?

**கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.** 130

கோபம் வராமல் தன்னைக் காத்து, கற்பனவற்றைக் கற்று அடங்கி நடப்பவன் வழியில் அறம் நுழைந்து, அவனை அடைய ஏற்றம் நேரம் பார்த்துக் காத்திருக்கும்.

*கதம் - கோபம், செவ்வி - எற்றநேரம், ஆறு - வழி*

# 14. ஒழுக்கம் உடைமை

*(ஒழுக்கமுடன் வாழ்தல்)*

1. ஏன் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும்?

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** 131

ஒழுக்கம் சிறப்புத் தருவதால் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக பாதுகாக்க வேண்டும்.

*விழுப்பம் - சிறப்பு, ஓம்புதல் - பாதுகாத்தல்.*

2. ஒழுக்கத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டும்?

**பரிந்து ஓம்பிக் காக்கஒழுக்கம் தெரிந்துஓம்பித்**
**தேரினும் அ∴தே துணை.** 132

ஒழுக்கத்தை வருந்திப் பேணிப் பாதுகாக்க வேண்டும். எம்மால் பாதுகாக்கப்பட வேண்டியவற்றைப் பேணி ஆராய்ந்து தேர்ந்தெடுத்தாலும், ஒழுக்கமே எமக்குத் துணையாகும்.

*பரிந்து - வருந்தி, ஓம்பி - பேணி, தெரிந்து - ஆராய்ந்து, தேரினும் - தேர்ந்தெடுத்தாலும்.*

3. ஒழுக்கம் தவறினால் என்ன?

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.** 133

ஒழுக்கம் உடையவராக வாழ்தலே மனிதத்தன்மை ஆகும். ஒழுக்கம் தவறினால் மிருகப்பிறப்பாய்க் கருதப்படுவர்.

*குடி - மனித உடம்பு, குடிமை - மனிதத்தன்மை, இழுக்கம் - ஒழுக்கம் தவறுதல், இழிந்த பிறப்பு - மிருகப் பிறப்பு.*

4. பார்ப்பான் பிறப்பும் ஒழுக்கம் குறைந்தால் மாறுமா?

**மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.** 134

பார்ப்பான் கற்றதை மறந்தாலும் மீண்டும் படித்துக்கொள்ள முடியும். ஒழுக்கம் குறைந்தால் அவன் பிறப்பும் கெடும்.

*ஒத்துக்கொளல் - மீண்டும் படித்துக் கொளல்.*

5. ஒழுக்கம் இல்லாதவன் உயர்வு எத்தகையது?

**அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.** 135

பொறாமை உடையவன் செல்வம் போல ஒழுக்கம் இல்லாதவன் உயர்வும் அழிந்து போகும் தன்மையதே.

*அழுக்காறு - பொறாமை, ஆக்கம் - செல்வம்.*

6. மனவலிமை உடையவர்கள் ஒழுக்கத்திலிருந்து தளர மாட்டார்களா?

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக்கு அறிந்து.** 136

மனவலிமையுடையவர்கள் ஒழுக்கம் குறைவதால் உண்டாகும் துன்பத்தை அறிந்து ஒழுக்கத்திலிருந்து தளரமாட்டார்கள்.

*இழுக்கம் - ஒழுக்கக் குறைவு, ஏதம் - துன்பம்,*
*படுபாக்கு - உண்டாகும்.*

7. ஒழுக்கமும், ஒழுக்கம் தவறுதலும் மனிதர்க்கு எவற்றைத் தரும்?

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி.** 137

மனிதர் ஒழுக்கமுடன் வாழ்வதால் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறுவதால் பெறக்கூடாத பழியைப் பெறுவர்.

*எய்தல் - பெறுதல், எய்தா - பெறக்கூடாத,*
*இழுக்கம் - ஒழுக்கக்குறைவு.*

8. ஒழுக்கத்தால் வரும் மேன்மை எதனைத் தரும்?
ஒழுக்கமின்மையால் வரும் பழி எதனைத் தரும்?

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.** 138

எல்லா நன்மைகளுக்கும் விதையாக நல்லொழுக்கம் அமையும். தீய ஒழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே தரும்.

*நன்றி - நன்மை, வித்து - விதை,*
*தீயொழுக்கம் - தீய ஒழுக்கம்.*

9. ஒழுக்கமுடையவர்கள் தீயவற்றைச் சொல்வார்களா?

**ஓழக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயால் சொலல்.** 139

ஒழுக்கம் உடையார் வாயால் தவறியும், தீய சொற்கள் வரமாட்டாதே.

*ஒல்லாவே - மாட்டாதே, வழுக்கியும் - தவறியும்.*

10. கல்வி கற்றவர்களும் உலக ஒழுக்கத்திலிருந்து தவறுவது ஏன்?

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.** 140

பல நூல்களைக் கற்றவர்களும், உலகத்தோடு சேர்ந்து ஒழுகும் ஒழுக்கத்தை கல்லாதவராய் இருந்தால், அவர்களும் அறிவில்லாதவர்களேயாவர்.

*ஒட்ட - சேர்ந்து, பலகற்றும் - பலநூல்களைப்படித்தும்,*
*கல்லார் - படியாதவர், ஒட்ட ஒழுகல் - சேர்ந்து நடத்தல்.*

# 15. பிறன் இல் விழையாமை

*(பிறருடைய மனைவியை விரும்பாமை)*

1. பிறர் மனைவியை விரும்பும் தன்மை யாரிடம் இல்லை?

**பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல்.** 141

பிறருக்கு உரிமையுடையவளை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்திலுள்ள அறத்தின் இயல்பையும், பொருளின் இயல்பையும் ஆராய்ந்து அறிந்தவர்களிடம் இல்லை.

*பெட்டு - விரும்பி, ஒழுகும் - நடக்கும், ஞாலம் - உலகம், கண் - இடம்.*

2. பிறர் மனைவியை விரும்புபவர் எப்படிப்பட்டவர்?

**அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
**நின்றாரின் பேதையார் இல்.** 142

அதர்ம வழியில் வாழ்பவர் எல்லோருக்குள்ளும், பிறரின் வீட்டுவாசலில் அவன் மனைவியை விரும்பி நிற்பவரைப் போல பேதையர் (பேடி) யாரும் இல்லை.

*அறன்கடை - அதர்மம், பிறன்கடை - பிறர்வாசல், பேதையார் - பேடிகள்.*

3. தன்னை நம்பியவரின் மனைவியை விரும்புபவர் எப்படிப்பட்டவர்?

**விளிந்தாரின் வேறுஅல்லர் மன்ற தெளிந்தாரில்**
**தீமைபுரிந்து ஒழுகு வார்.** 143

தன்னை முழுமையாக நம்பியவர் வீட்டில் அவனுடைய மனைவிக்குத் தீமை செய்பவர், இறந்த பிணமேயல்லாமல் வேறு யாருமல்லர்.

*விளிந்தார் - இறந்தார், மன்ற - முழுமையாக, தெளிந்தார் - நம்பியவர்.*

4. பெருமை மிக்கவர் பிறன்மனைவியை விரும்பலாமா?

**எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறன்இல் புகல். 144**

தினையளவாவது சிந்தித்துப் பாராமல் பிறன் மனைவியை விரும்பினால் எவ்வளவு பெருமையுடையவராக இருந்தாலும் என்னவாகும்?

*எனைத்துணை - எவ்வளவு, தினைத்துணை - தினையளவு, தேரான் - சிந்திக்காமல், பிறன்இல் - பிறருடைய மனைவி.*

5. மற்றவன் மனைவியுடன் சேர்வது மிக எளிதாக இருக்கின்றதே என நினைத்து நடப்பவனுக்கு என்ன கிடைக்கும்?

**எளிதுஎன இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி. 145**

பிறன் மனைவியை அடைவது மிக எளிதாக இருக்கின்றதே என எண்ணி, நெறி தவறி நடப்பவன் என்றும் அழியாது நிற்கும் பழியை அடைவான்.

*இல் - மனைவி, இறப்பான் - நெறிதவறி நடப்பவன், எய்தும் - அடைவர், விளியாது - அழியாது.*

6. பழி மட்டுமா இவர்களிடம் நிற்கும்?

**பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்**
**இகவாவாம் இல்இறப்பான் கண். 146**

பிறன் மனைவியை விரும்பி நெறி தவறி நடப்பவர் இடத்து பகை, பாவம், அச்சம், பழி என நான்கும் நீங்காது நிலைத்து நிற்கும்.

இகவாவாம் - நீங்காது நிற்கும், இறப்பான் - நெறிதவறி நடப்பான்.

7. அறநெறிப்படி இல்வாழ்க்கை வாழ்பவன் யார்?

**அறன்இயாலன் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்**
**பெண்மை நயவா தவன். 147**

பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாதவனே, அறநெறிப்படி இல்வாழ்க்கை வாழ்பவன்.

*அறன்இயல் - அறஇயல்பு (அறநெறி), நயவான் - விரும்பான்.*

8. எதனை பெரிய ஆண்மை என்று கூறலாம்?

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. 148**

வேறு ஒருவன் மனைவியைக் காமத்தோடு பார்க்காமல் வாழ்தலே பெரிய ஆண்மை ஆகும். இதுவே சான்றோர்க்கு மதிப்பைக் கொடுக்கும் அறமாகவும், நிறைந்த ஒழுக்கம் ஆகவும் விளங்குகின்றது.

*பிறன் மனை - பிறர் மனைவி, நோக்காத - பார்க்காத,*
*ஆன்ற - நிறைந்த, பேராண்மை - பெரிய ஆண்மை,*
*ஒன்றோ - மதிப்புக்குரிய.*

9. இந்த உலகத்தில் புகழுக்கு உரிமையுடையவர் யார்?

**நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பின்**
**பிறற்குஉரியாள் தோள்தோய தார். 149**

அச்சம் தரும் கடலால் சூழப்பட்ட உலகில் புகழுக்கு உரிமை உடையவர் யார் என்றால் வேறு ஒருவன் மனைவியின் தோளைச் சேராதவரே.

*நலம் - புகழ், நாமநீர்வைப்பு - அச்சம் தரும் கடலால்*
*சூழப்பட்ட உலகம், தோய்தல் - சேர்தல்.*

10. பாவங்களைச் செய்பவன் பிறன் மனைவியை விரும்பலாமா?

**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று. 150**

தர்ம வழியில் நடவாதவனாய்ப் பாவங்களைச் செய்பவனானாலும், பிறனுடைய மனைவியின் பெண்மையை விரும்பாது இருத்தல் நன்று.

*அறன்வரையான் - அறவழியில் நடவாதவன்,*
*நயவாமை - விரும்பாது,* அல்லசெயினும் - பாவங்களைச் செய்தாலும்.

# 16. பொறை உடைமை

*(எதனையும் பொறுத்துக் கொள்ளல்)*

1. எம்மை இகழ்பவரை பொறுக்க முடியுமா?

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.** 151

தன்னைத் தோண்டிக் குழி பறிப்பாரை விழாமல் தாங்குகின்ற நிலம் போல, தம்மை இகழ்வாரை பொறுத்துக் கொள்வதே தலை சிறந்ததாகும்.

*அகழ்தல் - தோண்டுதல், அகழ்வார் - தோண்டுவார்.*

2. ஒருவர் செய்த தீமையைப் பொறுத்தல் எமக்கு மன வருத்தத்தைத் தராதா?

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.** 152

பொறுத்தல் எப்பொழுதும் மனவருத்தத்தைத் தரும் என்றால், அதனை மறந்துபோதல் அதைவிட நல்லது.

*இறப்பினை - மனவருத்தம்.*

3. பொறுப்பதால் மனவலிமை வருமா?

**இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.** 153

விருந்தினரை உபசரியாது, நீக்கி வாழ்தல் ஒருவர்க்கு வறுமையிலும் கொடிய வறுமையாகும். அதுபோல ஒருவர் அறியாமையால் செய்வதைப் பொறுப்பது வலிமையிலும் பெரிய வலிமையாகும்.

*ஓரால் - நீக்குதல், இன்மை - வறுமை, வன்மை - வலிமை, மடவார் - அறியாமையுடையவர், பொறை - பொறுமை.*

4. ஏன் நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்?

**நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை**
**போற்றி ஒழுகப் படும்.** 154

எல்லா நற்குணங்களும் நீங்காது நிற்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

*நிறை - நற்குணங்கள், ஒழுகுதல் - பாதுகாத்தல்.*

5. தீமை செய்தவர்க்குத் தீமை செய்தால் என்ன?

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரை பொன்போல் பொதிந்து.** 155

உலகோர் தீமைக்குத் தீமை செய்து தண்டித்தவரை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்களே. பொறுத்தவரை பொன்போல் மதித்து என்றும் நினைப்பர்.

*ஒறுத்தார் - தண்டித்தவர், பொதிந்து - மதித்து,*
*ஒன்றாக வையார் - ஒரு பொருளாக மதியார்.*

6. ஒறுத்தார்க்கும், பொறுத்தார்க்கும் என்ன கிடைக்கும்?

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு**
**பொன்றும் துணையும் புகழ்.** 156

தனக்கு தீங்கு செய்தவனை தண்டித்தவனுக்கு, அவன் தண்டித்த ஒரு நாள் மட்டுமே இன்பம் கிடைக்கும். அதனைப் பொறுத்தவனுக்கு அந்தப் பொறுமையால் வந்த புகழ் உலகம் அழியும் வரையும் நிற்கும்.

ஒறுத்தார் - தண்டித்தவர், பொன்றும் துணையும் - அழியும் வரையும்.

7. செய்யத் தகாது செயலைச் செய்தாலும் பொறுக்க வேண்டுமா?

**திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறன்அல்ல செய்யாமை நன்று.** 157

செய்யத்தகாத கொடிய செயலைப் பிறர் செய்தாலும், அத்துன்பத்திற்காக மனம்வருந்தி தர்மம் இல்லாதவற்றைச் செய்யாமல் இருப்பது நன்றாகும்.

*திறன்அல்ல - செய்யத்தகாதவை, நோ - துன்பம்,*
*நொந்து - மனம்வருந்தி.*

8. செருக்கால் நியாயம் இல்லாதவற்றை செய்பவரை என்ன செய்வது?

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்.** 158

மனச்செருக்கால் அநீதி செய்தவரை நீங்கள், உங்கள் பொறுமை என்னும் தகுதியால் வென்றுவிட வேண்டும்.

*மிகுதியான் - செருக்கால், தாம் - நீங்கள், தம் - உங்கள், மிக்கவை - அநீதி.*

9. கொடிய சொற்களைப் பொறுப்பவர் எப்படிப்பட்டவர்?

**துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோக்கிற் பவர்.** 159

கோபம் மிகுந்தவர் பேசும் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், பற்றுக்களைத் துறந்தவரை விடத்தூய்மை உடையவர்.

*இறந்தார் - கோபம்மிகுந்தவர், நோக்கிற்பவர் - பொறுப்பவர்.*

10. பசியைப் பொறுப்பதைவிட கடுஞ்சொற்களைப் பொறுப்பது சிறந்ததா?

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.** 160

உண்ணாது தவம் செய்பவர்கள் பெரியவர் என்ற பெருமைக்குரியவர் என்றாலும், பிறர் சொல்கின்ற கடும் சொற்களைப் பொறுப்பவர்களுக்கு பின் வைத்தே மதிக்கப்படுவார்கள்.

*நோற்பார் - தவம் செய்வார், இன்னாச்சொல் - கடுஞ்சொல்.*

# 17. அழுக்காறாமை

*(பிறர் மேன்மை கண்டு பொறாமை கொள்ளாதிருத்தல்)*

1. பொறாமைப்படாது வாழ்வது எப்படி?

**ஒழுக்காறாகக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு.** 161

தன் நெஞ்சத்தில் பொறாமை இல்லாமல் வாழும் தன்மையை, ஒருவன் தனது ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும்.

*ஒழுக்காறு - ஒழுக்க நெறி, அழுக்காறு - பொறாமை.*

2. ஒருவர் பொறாமைப்படாமல் வாழ்வதால் பெறக்கூடியது என்ன?

**விழுப்பேற்றின் அஃதுஒப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.** 162

யாரிடமும் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பினை ஒருவர் பெற்றால், அதற்கு சமமான சிறந்த பேறு வேறு இல்லை.

*விழுப்பேறு - சிறந்தபேறு, அழுக்காறு - பொறாமை,*
*அஃதொப்பது - அதற்கு சமமானது, அன்மை - இல்லாமல்.*

3. பொறாமையை வளர்ப்பவன் யார்?

**அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்**
**போணாது அழுக்கறுப் பான்.** 163

நல்லனவற்றின் வளர்ச்சியை விரும்பாதவனே பிறருடைய உயர்வு கண்டு போற்றாது பொறாமையை வளர்ப்பான்.

*அறன் ஆக்கம் - நல்லனவற்றின் வளர்ச்சி,*
*பிறன்ஆக்கம் - பிறருடையஉயர்வு,*
*அழுக்கறுப்பான் - பொறாமையை வளர்ப்பான்.*

4. அறிவுடையோர்கள் பொறாமைப்பட்டு தீங்கு செய்வார்களா?

**அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**ஏதம் படுபாக்கு அறிந்து.** 164

அறிவுடையோர்கள் தீயவழியால் துன்பம் உண்டாவதை அறிந்து பொறாமைப்பட்டு தீங்கு செய்யமாட்டார்கள்.

*அழுக்காறு - பொறாமை, அல்லவை - தீங்கு, ஏதம் - துன்பம், படுபாக்கு - உண்டாவது, இழுக்காறு - தீயவழி.*

5. யார் பொறாமை உடையவர்களுக்குத் தீங்கு செய்வார்?

**அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியும் கேடுஈன் பது.** 165

பகைவர் தீங்கு செய்யத் தவறினாலும், பொறாமை தவறாமல் தீங்கு செய்துவிடும். ஆதலால் பொறாமை உடையவர்க்குத் தீங்கு செய்ய அவரது பொறாமையே போதுமானது.

*ஒன்னார் - பகைவர், வழுக்கி - தவறி, கேடு - தீங்கு*

6. ஒருவர் மற்றவர்க்குக் கொடுப்பதைப் பார்த்து பொறாமைப் படலாமா?

**கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்.** 166

ஒருவர் மற்றவர்க்குக் கொடுப்பதைப் பார்த்து பொறாமைப் படுபவன் மட்டுமல்லாது அவனைச் சார்ந்தவரும் உண்பதும், உடுப்பதும் இல்லாமல் கெட்டு அழிவர்.

*அழுக்கறுப்பான் - பொறாமைப்படுவான், சுற்றம் - சார்ந்தவர்.*

7. பொறாமை உள்ளவர்களிடம் செல்வம் நிலைக்குமா?

**அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.** 167

மற்றவர் மேன்மை கண்டு பொறுக்காது பொறாமைப்படுபவனுக்கு இலக்குமி தன் தமக்கையாகிய மூதேவியைக் காட்டி விடுவாள்.

*செய்பவள் - இலக்குமி(செல்வம்), அவ்வித்து - பெறாது, தவ்வை - தமக்கை (மூதேவி).*

8. பொறாமையால் கிடைப்பது என்ன?

**அழுக்காறு எனஒரு பாவி திருசெற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்.** **168**

பொறாமை என்ற பாவி ஒருவரின் செல்வத்தை அழித்து தீய வழியில் அவரைச் செலுத்திவிடும்.

*திரு - செல்வம், செற்று - அழித்து, தீயுழி - தீயவழி,*
*உய்க்கும் - செலுத்தும்.*

9. பொறாமை உடையவர்கள் நன்கு வாழ்கிறார்களே ஏன்?

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.** 169

பொறாமைக் குணம் கொண்டவரின் வளமான வாழ்வும், நற்குணமுடையவனின் அழிவும் ஆராயப்பட வேண்டியவையே.

*அவ்விய நெஞ்சு - பொறாமை, செவ்வியான் - நல்லவன்.*

10. பொறாமை உள்ளவருக்கும், பொறாமை இல்லாதவர்க்கும் என்ன வேறுபாடு?

**அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅ∴து இல்லார்**
**பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.** 170

பொறாமைப்பட்டு பெரியோர்களானவரும் இல்லை. பொறாமை இல்லாததால் செல்வத்தில் குறைந்து போனவர்களும் இல்லை.

*அகன்றார் - பெரியோர், பெருக்கம் - செல்வம்,*
*தீர்ந்தார் - குறைந்தார்.*

# 18. வெஃகாமை

*(பிறருடைய பொருளை விரும்பி எடுத்துக் கொள்ள நினையாதிருத்தல்)*

1. பிறர் பொருளை விரும்பினால் என்ன?

**நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்.** 171

நடுவுநிலைமை இல்லாமல் பிறருடைய நல்ல பொருளை, எடுத்துக் கொள்ள விரும்புபவரின் குடி அழிவதுடன் குற்றமும் அப்போதே வந்து சேரும்.

*நடுவுஇன்றி - நடுவுநிலைமை இல்லாது, வெஃகின் - எடுக்க விரும்பின் பொன்றுதல் - அழிதல், ஆங்கே - அப்போதே.*

2. எவர் பழிவரும் செயல்களைச் செய்யமாட்டார்?

**படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவுஅன்மை நாணு பவர்.** 172

நடுவு நிலைமையில் இருந்து தவறுவதற்கு வெட்கப்படுபவர், வரும் பயனுக்கு ஆசைப்பட்டு பழிவரும் செயல்களைச் செய்யமாட்டார்.

*படுபயன் - வரும்பயன், வெஃகி - ஆசைப்பட்டு, பழிபடுவ - பழிவரும், நடுவன்மை - நடுவு நிலைமை இல்லாமை,*
*நாணுபவர் - வெட்கப்படுபவர்.*

3. அப்படிச் செய்யாததற்குக் காரணம் என்ன?

**சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.** 173

நிலையான இன்பத்தை விரும்புபவர், பொருளால் வரும் சிறிய இன்பத்திற்கு ஆசைப்பட்டு, அறம் இல்லாதனவற்றைச் செய்யார்.

*வெஃகி - ஆசைப்பட்டு.*

4. எம்மிடம் பொருள் இல்லாவிட்டால் பிறர்பொருளை எடுக்க விரும்பலாமா?

**இலம்என்று வெ.ஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மைஇல் காட்சி யவர்.** 174

ஐம்புலன்களையும் வென்ற தெளிந்த அறிவுடையவர் நம்மிடம் பொருள் இல்லையே என்று பிறர் பொருளை விரும்பார்.

*இலம் - இல்லை, வெ.ஃகுதல் - விரும்தல்,*
*புலம்வென்ற - ஐம்புலன்களையும் வென்ற,*
*புன்மையில் - தெளிந்த, காட்சியவர் - அறிவுடையவர்.*

5. அறிவுடையவரும் பிறர் பொருளை விரும்பலாமா?

**அ.ஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்**
**வெ.ஃகி வெறிய செயின்.** 175

நுட்பமாக ஆராய்ந்து கற்று விரிந்த அறிவுடையவர், யாரிடத்திலும் பொருளுக்கு ஆசைப்பட்டு, வெறிச்செயல்களைச் செய்தால் அவரது அறிவால் என்ன பயன்?

*அ.ஃகி - நுட்பமான, அகன்ற - விரிந்த, வெ.ஃகி - விரும்பி.*

6. அருளாளன் பிறர் பொருளை விரும்பினால் என்ன நடக்கும்?

**அருள்வெ.ஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெ.ஃகிப்**
**பொல்லாத சூழக் கெடும்.** 176

அருளை விரும்பி அந்த வழியில் நின்றவன், பிறர் பொருளை விரும்பி தீமை செய்வானானால் கெட்டழிவான்.

*அருள்வெ.ஃகி - அருளை விரும்பி, ஆறு - வழி,*
*பொல்லதாதது - தீமை.*

7. பிறருடைய பொருளைக் கவர்ந்து வரும் செல்வம் என்ன பயனைக் கொடுக்கும்?

**வேண்டற்க வெ.ஃகிஆம் ஆக்கம் விளைவயின்**
**மாண்டற்கு அரிதுஆம் பயன்.** 177

பிறர் பொருளைக் கவர்ந்து வரும் செல்வத்தை விரும்ப வேண்டாம். அதனை அனுபவிக்கும் போது நல்ல பயனை அது கொடுக்காது.

*வேண்டற்க - விரும்பாதே, விளைவயின் - அனுபவிக்கும் போது,*
*மாண்டல் - நல்லபயனைக் கொடுத்தல்.*

8. எதற்க்காகப் பிறருடைய் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது?

**அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.** 178

தனது செல்வம் குறையாமல் இருக்க வேண்டுமானால், பிறர் கையிலுள்ள பொருளை அடைய விரும்பாது இருக்க வேண்டும்.

*அஃகாமை - குறையாமல், வெஃகாமை - விரும்பாமை.*

9. எவரிடத்தில் செல்வம் சேரும்?

**அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்**
**திறன்அறிந்து ஆங்கே திரு.** 179

அறத்தை உணர்ந்து பிறர்பொருளைக் கவரவிருப்பாத அறிவுடையாரின் திறமைக்கு ஏற்ப செல்வம் சேரும்.

*திரு - செல்வம், திறன் - திறமை.*

10. பிறர் பொருளை விரும்புவதால் வருவது என்ன? விரும்பாததால் வருவது என்ன?

**இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்**
**வேண்டாமை என்னும் செருக்கு.** 180

கேடுவரும் என எண்ணாது பிறர்பொருளை அடைய விரும்பினால், அது அவனுக்கு அழிவைக் கொடுக்கும். பொருளை விரும்பாது இருக்கும் பெருமிதம் வெற்றியைக் கொடுக்கும்.

*இறல் - கேடு, இறல்ஈனும் - கேடுவரும், விறல் - வெற்றி, விறல்ஈனும் - வெற்றிதரும், செருக்கு - பெருமிதம்.*

## 19. புறங்கூறாமை

*(ஒருவர் இல்லாத இடத்தில் அவரை இகழ்ந்து கூறாத தன்மை)*

1. பாவங்களையே செய்பவன் புறங்கூறலாமா?

**அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறம்கூறான் என்றல் இனிது.** 181

ஒருவன் அறத்தை போற்றாது பாவம் செய்வான் ஆனாலும் மற்றவரைப்பற்றி புறங்கூறாது இருப்பான் என்றால் அது மிகவும் நல்லது.

*அறம்கூறல் - அறத்தைப்போற்றுதல், இனிது - நல்லது.*

2. ஒருவர் இல்லாத இடத்து அவரை இழித்துக் கூறி அவரைக் கண்டபோது சிரித்துப்பழகுவது நல்லதா?

**அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**புறன்அழீஇ பொய்த்து நகை.** 182

ஒருவர் இல்லாத இடத்தில் அவரை இகழ்ந்து பேசி அவரைக் கண்ட போது பொய்யாகச் சிரித்துப்பழகுவது, அறத்தைக் கைவிட்டு, அறம் இல்லாதவற்றைச் செய்வதை விடத் தீமையானதாகும்.

*அறன்அழீஇ - அறத்தைக் கைவிட்டு, அழீஇ - அழித்து,*
*புறன்அழீஇ - புறத்தே இகழ்ந்து, பொய்த்து - பொய்யாக.*

3. இவ்வாறு பொய்யாக நடித்து உயிர்வாழ்வது நல்லதா?

**புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்**
**அறம்கூறும் ஆக்கம் தரும்.** 183

புறங்கூறிப் பொய்யாக நடித்து உயிர்வாழ்வதை விட சாவது அறங்கள் கூறுகின்ற நன்மையைத் தரும்.

*பொய்த்து - பொய்யாக, ஆக்கம் - நன்மை.*

4. பழிச்சொற்களை ஒருவர் முன்னிலையில் சொல்வதா அன்றேல், அவர் இல்லாத இடத்தில் சொல்வதா தகாதசெயலாகும்?

**கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்இன்று பின்நோக்காச் சொல்.** 184

ஒருவர் எதிரே நின்று சிறிதும் இரக்கமில்லாது பழிச்சொற்களைச் சொன்னாலும், அவர் இல்லாத போது பின்வரக் கூடிய தீமையை எண்ணிப்பாராத சொற்களைச் சொல்லக் கூடாது.

*கண்நின்று - எதிரேநின்று, கண்அற - இரக்கமில்லாது, சொல்லற்க - சொல்லக்கூடாது, முன்இன்று - முன்னுக்கு இல்லாது., பின்நோக்கா - பின்வரக்கூடியதை பாராத.*

5. ஒருவர் நெஞ்சில் அறம் இல்லை என்பதை எப்படி அறிவது?

**அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்**
**புன்மையால் காணப் படும்.** 185

ஒருவர் அறநெஞ்சம் கொண்டவர் இல்லை என்பதை, அவர் பிறரைப்பற்றிக் கூறும் இழிச்சொற்களைக் கொண்டே கண்டு கொள்ளலாம்.

*அன்மை - இல்லாததன்மை, புன்மை - இழிவு*

6. பிறரைப் பழிகூறுபவனுக்கு என்ன நடக்கும்?

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்**
**திறன்தெரிந்து கூறப் படும்.** 186

பிறரைப் பழி கூறுவான் செய்த தீமைகளில் மிகக் கொடியவற்றைத் தெரிந்து எடுத்து, இவன் மீது மற்றவர் பழி கூறுவர்.

*திறன்தெரிந்து - கொடியவற்றை தெரிந்து, பழி - தீமை.*

7 உறவினர் நண்பர்களிடையே புறம்கூறி அவர்களைப் பிரிப்பவர்கள் யார்?

**பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்புஆடல் தேற்றா தார்.** 187

எல்லோருடனும் கூடி இனிமையாகச் சிரித்துப் பேசி, நட்புச் செய்ய அறியாதவர்களே காதால் கேட்க முடியாத வார்த்தைகளால் புறங்கூறி, சுற்றத்தாரைப் பிரித்து வைப்பர்.

*பகச்சொல்லி - புறங்கூறி, கேளிர் - சுற்றம், ஆடல் - செய்தல், தேற்றாதவர் - அறியாதவர்.*

8. தங்களுடன் சேர்ந்து பழகுபவர் பற்றியே புறங்கூறுபவர் மற்றவர்களிடம் எப்படி நடப்பர்?

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு.** 188

தம்மோடு சேர்ந்து பழகுபவரது குற்றத்தையும் தூற்றித் திரியும் குணமுள்ளவர், அயலாரிடம் எப்படி நடந்து கொள்ளவார்களோ?

*துன்னியர்கள் - தம்மேடு சேர்ந்தார், ஏதிலார் - அயலார்.*

9. இப்படி ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் புறங்கூறுபவனை ஏன் உலகம் பொறுக்கின்றது?

**அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்**
**புன்சொல் உரைப்பான் பொறை.** 189

ஒருவர் இல்லாத போது பழிச்சொல் கூறுகின்றவனை உலகம் பொறுத்துக் கொண்டுதான் இருக்கின்றது. அப்படிச் செய்வதே அறம் என எண்ணிச் செய்கின்றது போலும்.

*நோக்கி - எண்ணி, ஆற்றும் - செய்யும், வையம் - உலகம், பொறை - பொறுமை, புறம்நோக்கி - பிறர் இல்லாத நேரம் பார்த்து, புன்சொல் - பழிச்சொல்.*

10. புறங்கூறுபவர்கள் தமது குற்றங்களை அறிய மாட்டார்களா?

**ஏதிலார் குற்றம்போல தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு.** 190

புறங்கூறுவோர் மற்றவர் குற்றத்தை அறிவது போல தமது குற்றத்தையும் பார்ப்பார்களேயானால் இந்த உலக உயிர்களுக்கு துன்பம் உண்டாகுமா?.

# 20. பயன் இல சொல்லாமை

*(பயன் இல்லாதவற்றைச் சொல்லாது இருத்தல்)*

1. பயன் இல்லாதனவற்றைச் சொல்லலாமா?

**பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்**
**எல்லோரும் எள்ளப் படும்.** 191

பலரும் கேட்டு வெறுப்புக் கொள்ள பயன்இல்லாத சொற்களைச் சொல்பவன் எல்லோராலும் இகழப்படுவான்.

*பல்லார் - பலரும், முனிய - வெறுக்க, எள்ளல் - இகழ்தல்*

2. பலர்முன்பு பயன் இல்லாதனவற்றைச் சொல்வதால் என்ன விளையும்?

**பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல**
**நட்டார்கண் செய்தலின் தீது.** 192

பலர் முன்னிலையில் பயன் இல்லாதவற்றைச் சொல்வது, தன் நண்பர்களிடம் விருப்பத் தகாதவற்றைச் செய்வதை விடத் தீமையை உண்டாக்கும்.

*பல்லார்முன் - பலர்முன், நட்டார்கண் - நண்பர்களிடத்தில்.*

3. ஒருவன் நீதி இல்லாதவன் என்பதை எப்படிச் சொல்லலாம்?

**நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல**
**பாரித்து உரைக்கும் உரை.** 193

ஒருவன் பயன் இல்லதாவற்றை விரிவாக பேசுவதைக் கொண்டு, அவன் நீதி இல்லாதவன் என்பதைச் சொல்லலாம்.

*நயன்இலன் - நீதி இல்லாதவன், பாரித்து - விரித்து.*

4. பயனில சொல்பவர்க்கு என்ன நடக்கும்.?

**நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்**
**பண்புஇல்சொல் பல்லார் அகத்து.** 194

பயன்படாத பண்பு இல்லாத சொற்களை பலர்முன் சொல்வதால், அது அவனிடம் இன்பங்களைச் சேரவிடாது நன்மைகளைக் கெடுக்கும்.

*நயன்சாரா - இன்பம் சேராத, நீக்கும் - கெடுக்கும், பல்லாரகம் - பலர்முன்.*

5. நல்ல பண்புடையவர் பயனில்லாதவற்றை சொல்வதால் அவருக்கு என்ன நடக்கும்?

**சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல**
**நீர்மை உடையார் சொலின்.** 195

நற்பண்புடையவர் பயன் இல்லாத சொற்களைச் சொல்வாரானால், அவரது மதிப்போடு உயர்வும் நீங்கிப் போகும்.

*சீர்மை - உயர்வு, நீர்மை - நற்பண்பு, சிறப்பு - மதிப்பு.*

6. பயனில்லாத சொற்களைப் பாரட்டுபவரை எப்படி அழைக்கலாம்?

**பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்**
**மக்கட் பதடி எனல்.** 196

பயன் இல்லாத சொற்களை பாரட்டுபவனை மனிதன் என்று அழைக்கக் கூடாது. மனிதரில் பதர் என்று அவனை அழைக்க வேண்டும.

*மகன் - மனிதன், பதடி - பதர் (உள்ளீடு இல்லாதது).*

7. சான்றோர் பயன் இல்லாதன சொல்லலாமா?

**நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்**
**பயன்இல சொல்லாமை நன்று.** 197

சான்றோர் நீதி இல்லாதனவற்றைச் சொன்னாலும் சொல்லட்டும், ஆனால் பயன் இல்லாதவற்றைச் சொல்லாது இருப்பதே நல்லது.

*நயன் - நீதி, நயன்இல - நீதி இல்லாத.*

8. அறிவுடையோர் பயன் இல்லாதனவற்றைச் சொல்வார்களா?

**அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்**
**பெரும்பயன் இல்லாத சொல். 198**

உலகின் அரிய பயனை ஆராயும் அறிவுடையோர் பெரும் பயனைத் தராத சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

*அரும்பயன் - அரியபயன், ஆயும் - ஆராயும்.*

9. யார் பயன் இல்லாத சொற்களைச் சொல்லமாட்டார்கள்?

**பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த**
**மாசறு காட்சி யவர் 199**

மயக்கமில்லாத தூய அறிவுடையவர் பொருளில்லாத சொற்களை மறந்தும் சொல்லமாட்டாாகள்.

*பொருள்தீர்ந்த - பொருள்இல்லாத, பொச்சாந்தும் - மறதி,*
*மருள் தீர்ந்த - மயக்கமில்லாத, மாசறுகாட்சி - தூய அறிவு.*

10. எதனைச் சொல்ல வேண்டும்? எதனைச் சொல்லக் கூடாது?

**சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க**
**சொல்லில் பயன்இலாச் சொல். 200**

பிறர் பயன்பெறக் கூடிய சொற்களையே சொல்லுங்கள். பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருங்கள்.

## 21. தீவினை அச்சம்

*(தீமை செய்வதற்கு அஞ்சுதல்)*

1. யார் தீமை செய்யப் பயப்படுவார்கள்?

**தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை என்னும் செருக்கு.** 201

தீவினை என்னும் ஆணவச் செயலைச் செய்ய தீமை செய்பவர்கள் அஞ்சமாட்டார்கள். சான்றோர்கள் தீமை செய்யப் பயப்படுவார்கள்.

*தீவினையார்- தீமை செய்வோர், அஞ்சுதல் - பயப்படுதல்,*
அஞ்சார் - பயப்படார், அஞ்சுவர்- பயப்படுவர்,
செருக்கு - ஆணவம்.

2. தீயவைகளுக்கு ஏன் அஞ்சவேண்டும்?

**தீயவை தீய பயத்தலான் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.** 202

தீய செயல்கள் கெடுதிகளைச் செய்வதால் நெருப்பைவிட அதிகமாக தீய செயல்களுக்குப் பயப்பட வேண்டும்.

*தீயவை - தீயசெயல்கள், தீயபயத்தலான்- கெடுதி செய்வதால்,*
*தீயினும் - நெருப்பிலும்.*

3. பகைவர்களுக்குத் தீமை செய்யலாமா?

**அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய**
**செறுவார்க்கும் செய்யா விடல்.** 203

பகைவர்களுக்கும் தீமை செய்யாது இருப்பதே பெறக்கூடிய அறிவுகளிலே தலை சிறந்த அறிவாகும்.

தீய - தீமை, செறுவார் - பகைவர்.

4. பிறருக்கு கேடு செய்ய நினைக்கலாமா?

**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.** 204

மறந்தும் கூட மற்றவனுக்குக் கேடு செய்ய எண்ணக் கூடாது. அப்படி எண்ணியவனுக்குக் கேடு உண்டாகுமாறு அறம் அவனைச் சூழ்ந்து கொள்ளும்.

*சூழற்க - எண்ணக் கூடாது, சூழின் - எண்ணினால், சூழும் - சுற்றி வளைத்து நிற்கும்*

5. வறுமை காரணமாக தீமை செய்யலாமா?

**இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.** 205

இல்லையே என நினைத்து அதனைப் போக்க தீமைகள் செய்ய வேண்டாம். செய்தால் இருப்பதும் இல்லாமல் போகும்.

*இலன் - இல்லை, தீயவை - தீமைகள்*

6. எவர் தீமை செய்யாது இருக்க வேண்டும்?

**தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால**
**தன்னை அடல்வேண்டா தான்.** 206

வருத்தம் தரும் துன்பங்கள் தன்னை தாக்கக்கூடாது என நினைப்பவர், தீமைகளை பிறருக்குச் செய்யாது இருக்க வேண்டும்.

*தீப்பால - தீவினைகள், நோய்ப்பால - வருத்தும் துன்பங்கள்.*

7. தீவினை செய்பவர்களுக்கு என்ன நடக்கும்?

**எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென்று அடும்.** 207

எவ்வளவு பெரிய பகை உடையவரும் ஒருவாறு அந்தப் பகையில் இருந்து தப்பிக் கொள்ளலாம். ஆனால் தீவினையானது செய்தவரை விட்டு நீங்காது அவர் பின்னே சென்று அவரை வருத்தும்.

*எனைப்பகை - எந்தப்பகை, உய்வர் - தப்பலாம்; வினைப்பகை - தீவினை, வீயாது - நீங்காது; அடும் - வருத்தும்.*

8. தீமை செய்பவர் கெடுவர் என்று எப்படிச் சொல்ல முடியும்?

**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயாது அடிஉறைந் தற்று.** 208

பிறருக்குத் தீமை செய்தவர் கெடுதல் என்பது, ஒருவருடைய நிழல் அவர் எங்கு சென்றாலும் நீங்காது அடியின் கீழ் தங்கி இருப்பது போன்றதாகும்.

*வீயாது - நீங்காது(விட்டு நீங்காது);*
*அடிஉறைதல் - அடியின்கீழ்தங்குதல்.*

9. ஏன் தீமை செய்யாது இருக்க வேண்டும்?

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்.** 209

உங்களை நீங்கள் விரும்புவீர்களானால் எந்தவொரு சிறிய தீய செயல்களையும் செய்யாது இருக்க வேண்டும்.

*காதலன்- விரும்புபவன்; எனைத்தொன்றும் - எந்தவொருசிறிய.*

10. தீமைகள் செய்யாதவனை எப்படி அறிவது?

**அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்**
**தீவினை செய்யான் எனின்.** 210

இரக்கம் காரணமாக ஒருவன் தீமை செய்யமாட்டான் என்றால் அவன் கேடில்லாதவன் என்பதை அறிந்து கொள்க.

*அருங்கேடன் - கேடு இல்லாதவன், மருங்கு - இரங்குதல்*

# 22. ஒப்புரவு அறிதல்

*(உலகத்திற்காக வாழும் தன்மையை அறிதல்)*

1. ஒப்புரவாளர்கள் எப்படிப்பட்டவர்கள்?

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றும் கொல்லோ உலகு.** 211

மழைக்கு இந்த உலக உயிர்கள் என்ன கைம்மாறு செய்யப் போகின்றன? ஒப்புரவாளர்களும் கைம்மாறு வேண்டாதவர்களே (மழை போன்றவர்கள்).

*கைம்மாறு - பதில் உதவி; மாரி - மழை; கடப்பாடு - ஒப்புரவு.*

2. ஒப்புரவாளர்கள் ஏன் பொருள் தேடுகிறார்கள்?

**தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தல் பொருட்டு.** 212

ஒப்புரவாளர்கள் முயற்சி செய்து தேடிய பொருள் எல்லாம் தகுதி உடையவர்களுக்கு ஒப்புரவு செய்வதற்கே ஆகும்.

*தாளாற்றி - முயற்சித்து; தக்கார் - தகுதியுடையவர்;*
*வேளாண்மை - ஒப்புரவு (உதவி).*

3. ஒப்புரவை விட செய்வதற்கு நல்ல செயல்கள் இருக்கின்றதா?

**புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற.** 213

இனி வரக்கூடிய புதிய உலகிலும், இப்போது இருக்கும் உலகிலும் ஒப்புரவை விட நல்லதைக் காண்பது அரிதாகும்.

*புத்தேள் - புதிய (புதுமை), ஈண்டு - இந்த உலகம்.*

4. ஒப்புரவு செய்யாதவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும். 214**

ஒப்புரவாளன் தன்னை ஒத்த உலக உயிர்களின் தன்மையை அறிந்து, உலகத்திற்காக வாழ்வதால் அவன் உயிரோடு வாழ்கின்றான். ஒப்புரவு செய்யாதவன் உயிரோடு இருந்தாலும் செத்தவருள் ஒருவனாக வைக்கப்படுவான்.

5. ஒப்புரவாளரிடம் இருக்கும் செல்வம் எத்தகையது?

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு. 215**

உலகம் எல்லாம் வாழ வேண்டும் என ஆசைப்படும் பேரறிவு உள்ள ஒப்புரவாளனின் செல்வம், ஊரில் உள்ள குடிநீர்க்குளம் நீர் நிறைந்து இருப்பது போல எல்லோர்க்கும் பயன் தரும்.

*ஊருணி - ஊர்உண்ணும் நீர் உள்ள தடாகம்; திரு - செல்வம்.*

6. ஒப்புரவாளரிடம் மேலும் செல்வம் சேர்ந்தால் அச்செல்வத்திற்கு என்ன நடக்கும்?

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயன்உடை யான்கண் படின். 216**

நல்லபயன் தரும் மரமானது உள் ஊரின் நடுவே பழுத்தது போல ஒப்பரவாளனிடம் மேலும் சேரும் செல்வமும் உலகிற்கு பயன்படும்.

*நயன்உடையன் - ஒப்புரவாளன்;*

7. ஒப்புரவாளன் எல்லோர்க்கும் உதவுவான் என்று எப்படிச் சொல்ல முடியும்?

**மருந்துஆகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகையான் கண் படின். 217**

மரம் மருந்தாகி, உடலுறுப்பினுள் சென்று தப்பாது நோயை நீக்குவது போல, ஒப்புரவாளனிடம் சேர்ந்த செல்வமும் உலகில் உள்ளோரைச் சென்று சேரும்.

*அற்று - போல; பெருந்தகையான் - ஒப்புரவாளன்.*

8. செல்வம் குறைந்தால் ஒப்புரவாளர்கள் என்ன செய்வார்கள்?

**இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்**
**கடன்அறி காட்சி யவர். 218**

ஒப்புரவாளர்கள் உலகிற்குத் தாம் செய்ய வேண்டிய கடமையை அறிந்தவர்கள் ஆகையால், செல்வம் குறைந்த காலத்திலும் ஒப்புரவு செய்வதற்குத் தளரமாட்டர்கள்.

*இடன்இல் - செல்வம் குறைந்த; ஒல்கார் - தளரார்; கடன் - கடமை; பருவம் - காலம்.*

9. ஒப்புரவாளனுக்கு வறுமை வந்தால் என்ன செய்வான்?

**நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர**
**செய்யாது அமைகலா ஆறு. 219**

செல்வம் நீங்கிய இடத்து, பிறருக்குச் செய்ய வேண்டியவற்றை செய்ய முடியவில்லையே என்று வருந்துவதே ஒப்புரவாளனின் வறுமையாக இருக்கும்.

*நயன்உடையான் - ஒப்புரவாளன்; நல்கூர்தல் - வறுமை; நல்கூர்ந்தான் - வறியவனானான்.*

10. ஒப்புரவால் கேடு வராதா?

**ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃ.ஒருவன்**
**விற்றுக்கோள் தக்கது உடைத்து. 220**

ஒப்புரவினால் கேடு வருமானால் உங்களை விற்றாவது அக்கேட்டினை வாங்குங்கள். அவ்வளவு மதிப்புடையது அந்தக் கேடு.

*அஃது - அந்த; விற்றுக்கோள் - விற்றாயினும் கொள்ளுதல்.*

# 23. ஈகை

*(வறுமை உடையவர்க்குக் கொடுத்தல்)*

1. ஈகை என்றால் என்ன?

**வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து.** **221**

வறியவர்க்கு ஒன்றைக் கொடுப்பதே ஈகையாகும். வறுமை இல்லாத மற்றவர்க்குக் கொடுப்பது எல்லாம் கொடுத்து வாங்கும் தன்மை உடையதாகும்.

*ஈவதே - கொடுப்பதே;*
*குறியெதிர்ப்பை - அளந்து கொடுத்து அளந்து வாங்கல்.*

2. பிறரிடம் வாங்குவது நல்லதா? பிறருக்குக் கொடுப்பது நல்லதா?

**நல்ஆறு எனினும் கொளல்தீது மேல்உலகம்**
**இல்எனினும் ஈதலே நன்று.** **222**

பிறரிடம் கேட்டுவாங்குவது நல்லவழி என்றாலும், அப்படி ஏற்றுக்கொள்வது தீதாகும். தேவ வாழ்வு இல்லை என்றாலும் கொடுப்பதே நல்லது.

3. பிறருக்கு இல்லை என்று கூறாது கொடுப்பவர் யார்?

**இலன்என்னும் எவ்வும் உரையாமை ஈதல்**
**குலன்உடையான் கண்ணே உள.** **223**

தான் வறியவன் என்ற தன் துன்பத்தைக் கூறாது, பிறருக்குக் கொடுக்கும் தன்மை விழுப்பம் உடையவர்களிடமே இருக்கும்.

*இலன் - வறியவன், எவ்வம் - துன்பம், ஈதல் - கொடுத்தல், குலன் - விழுப்பம், விழுப்பம் - பிறருக்கு இல்லாத சிறப்புடைமை.*

4. மற்றவர்க்காக நாம் இரக்கப்படுவது எமக்குத் துன்பத்தைத் தராதா?

**இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு.** 224

இரந்து கேட்டவர் அப்பொருளைப் பெற்று, அவர் முகத்தில் மகிழ்ச்சியைக் காணும் வரை அவர்க்காக இரக்கப்படுவதும் துன்பந்தான்.

*இன்னாது - துன்பம், அளவு - வரை.*

5. ஈகையாளரின் ஆற்றல் எத்தகையது?

**ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.** 225

தவம் செய்பவர் ஆற்றல் தம் பசியைப் பொறுத்து ஆற்றுவதேயாகும். ஈகையாளரின் ஆற்றலோ பிறருக்கு வரும் அதே பசியை தீர்ப்பது. ஆதலால் ஈகையாளரின் ஆற்றலுக்குப் பின்னே தவம் செய்வோர் ஆற்றல் இருக்கும்.

*ஆற்றுவார் - தவம் செய்வார், பசிஆற்றல் - பசிபெறுத்தல்.*

6. பொருளுள்ளவன் தன் பொருளை எங்கு சேமித்து வைக்க வேண்டும்?

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.** 226

வறியவரின் கொடிய பசியைத் தீர்த்தலே பொருளுள்ள ஒருவன் பொருளைச் சேமித்து வைக்கும் கருவூலமாகும்.

*அற்றார் - வறியவர், அழிபசி - கொடியபசி, பெற்றான் - பொருளுள்ளவன், வைப்புழி - கருவூலம்*

7. யாரைப் பசி தீண்டாது?

**பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது.** 227

தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்னும் கொடிய நோய் அணுகமுடியாது.

*பாத்தூண் - பகுத்து உண்டு, மரீஇயவன் - பழகியவன், தீப்பிணி - கொடிய நோய்.*

8. கொடுப்பதால் வரும் இன்பத்தை யார் அறிய மாட்டார்கள்?

**ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை**
**வைத்துஇழக்கும் வன்க ணவர். 228**

தம் பொருளை பிறருக்கு ஈயாது வைத்திருந்து, அதனை இழந்து வருந்தும் இரக்கமற்றவர்கள், கொடுத்து மகிழும் இன்பத்தை அறியமாட்டார்கள்.

*ஈத்துஉவத்தல் - கொடுத்து மகிழ்தல்,*
*வன்கணவர் - இரக்கமில்லாதவர்*

9. யாருக்கும் கொடுக்காது தாமே தனியே உண்ணலாமா?

**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல். 229**

தம்மிடம் உள்ள பொருள் நிரம்ப வேண்டும் என்று தாமே தனித்து உண்ணுதல், வறுமையால் கெஞ்சுவதிலும் பார்க்கக் கொடியதாகும்.

*நிரப்பிய - நிரம்புவதற்காக, தமியார் - தனித்து.*

10. ஈதலைவிட இனிமையானது என்ன?

**சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்**
**ஈதல் இயையாக் கடை. 230**

சதால் போல் துன்பமானது வேறு இல்லை. தன்னிடம் இரப்பார்க்குக் கொடுக்க முடியாத இடத்தில் சாதலும் இனிமையானதாக இருக்கும்.

*ஈதல் - கொடுத்தல், இயையாக்கடை - முடியாத இடத்து.*

# 24 - புகழ்

*(புகழின் சிறப்பு)*

1. உயிர்க்கு பயன் தருவது என்ன?

**ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.** 231

ஈதலும், அதனால் வரும் புகழுடன் வாழ்தலும் அல்லாமல் வேறு பயன் உயிர்க்கு இல்லை.

*ஈதல் - கொடுத்தல், இசைபடவாழ்தல் - புகழுடன்வாழ்தல், ஊதியம் - பயன்.*

2. ஏன் ஈதலால் வரும் புகழ் சிறந்தது?

**உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று**
**ஈவார்மேல் நிற்கும் புகழ்.** 232

இல்லை என்று இரப்பவர்க்கு ஒன்றைக் கொடுப்பவர் மேல் நிற்கும் புகழ் பற்றியே, புகழ்வார் எல்லோரும் புகழ்கிறார்கள்.

*உரைப்பார் - புகழ்வார், உரைப்பவை - புகழ்பவை,*

3. எது அழியாது நிற்கும்?

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்**
**பொன்றாது நிற்பதுஒன்று இல்.** 233

இணையற்ற உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்திலே அழியாது நிற்பது வேறு ஒன்றும் இல்லை.

*ஒன்றா - இணையற்ற, பொன்றாது - அழியாது.*

4. இப்போது புகழோடு வாழ்பவனை வரும் உலகம் என்ன செய்யும்?

**நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு.** 234

இந்தப் பூமியின் எல்லை எங்கும் நிறைந்த புகழை உண்டாக்குபவனை அல்லாமல், வரும் புது உலகம் தமது அறிஞர்களைப் போற்றாது.

*நிலவரை - பூமியின்எல்லை, நீள்புகழ் - நிறைந்த புகழ், புலவர் - அறிஞர், புத்தேள் - புதிய.*

5. இறந்த பின்னும் எப்படி புகழுடன் வாழ முடிகிறது?

**நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க்கு அல்லால் அரிது.** 235

ஒருவரின் புகழ் உயர்வடைந்து புகழுடம்பாக அழியாது என்றும் நிலைத்து நிற்க, அவரின் உடல் கேடுற்று இறக்கின்றது. இச்செயல் புகழுடைய வித்தகர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு அரிதாகும்.

*நத்தம் - இருள், சாக்காடு - இறப்பு, வித்தகர் - வல்லவர்.*

6. ஒருவர் எதனைச் செய்து புகழ் சேர்க்கலாம்?

**தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.** 236

ஒருவர் எதனைச் செய்தாலும் புகழ் சேரச் செய்ய வேண்டும். அது முடியாதவர் அதனைச் செய்தலின் செய்யாது இருத்தல் நன்று.

*தோன்றல் - படைத்தல் (உருவாக்குதல், செய்தல்), தோன்றாமை - செய்யாதிருத்தல்.*

7. புகழ் இல்லாதவர்கள் தம்மை இகழ்வாரைக் குறை கூறலாமா?

**புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவது எவன்.** 237

புகழோடு வாழமுடியாதவர்கள் எம்மால் புகழ்விளங்க எதனையும் செய்ய முடியவில்லையே எனத் தம்மை நினைத்து தாமே வருந்துவதை விட்டு, தம்மை இகழ்ந்து பேசுகின்றவரைக் குறைகூறுவது ஏன்?

*தம்நோவார் - தாமே வருந்துதல், நோவது - குறை கூறுவது:*

8. ஒருவர் புகழ் பெறவா வேண்டும்?

**வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்**
**எச்சம் பெறாஅ விடின்.** 238

இறவாது நிலைத்து நிற்கும் புகழை ஒருவர் பெறாவிடில் உலகில் உள்ளோர்க்கு எல்லாம் அதுவே வசை ஆகும்.

*வையம் - உலகம், இசை - புகழ், எச்சம் - இறவாது நிற்பது.*

9. இது எப்படி வையத்தோர்க்கு வசையாகும்?

**வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா**
**யாக்கை பொறுத்த நிலம்.** 239

புகழ் அற்ற உடலைச் சுமந்த நிலம், குறைவற்ற நல்ல விளைச்சல் இல்லாது குன்றிப் போகும்.

*வசைஇலா - குறைவற்ற, வண்பயன் - நல்ல விளைச்சல், குன்றும் - குறையும், யாக்கை - உடல், பொறுத்த - சுமந்த.*

10. உலகத்தில் வாழ்பவர் யார்? வாழாதவர் யார்?

**வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய**
**வாழ்வாரே வாழா தவர்.** 240

தனக்கு வசைவராமல் வாழ்பவரே உயிருடன் வாழ்பவர். புகழ் இல்லாமல் வாழ்பவரே உயிர் வாழாதவர்.

*வசைஒழிய - வசைவராமல், இசைஒழிய - புகழ் இல்லாமல்,*

# துறவறவியல்

## 25 - அருள் உடைமை

*(எல்லா உயிர்களிடத்திலும் கருணையுடைய தன்மை)*

1. செல்வங்களிலே சிறந்த செல்வம் எது?

**அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.** 241

செல்வங்களிலே சிறந்த செல்வம் அருட்செல்வம் ஆகும். பொருட்செல்வம் கொடியவர் இடத்திலும் இருக்கின்றது.

*பூரியார் - கொடியவர்*

2. எப்படி அருட்செல்வத்தைப் பெறுவது?

**நல்ஆற்றான் நாடி அருள்ஆள்க பல்ஆற்றான்**
**தேரினும் அ∴தே துணை.** 242

நல்லவழிகளில் ஆராய்ந்து அருளாளர் ஆகுங்கள். பலவழிகளில் ஆராய்ந்தாலும் அதுவே (அருளே) வாழ்க்கைக்குத் துணையாகும்.

*நல்லாறு - நல்லவழி: நாடி - ஆராய்ந்து, பல்வாறு - பலவழி, தேரினும் - ஆராய்ந்தாலும்.*

3. உலக ஆசைகள் அருள் நிறைந்த நெஞ்சினார்க்கு இருக்குமா?

**அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த**
**இன்னா உலகம் புகல்.** 243

இருள் உள்ள துன்பமான இவ்வுலக ஆசைகள் அருளுடைய நெஞ்சினார்க்கு இல்லை.

*இன்னா - துன்பம், புகல் - விருப்பம் (ஆசை).*

4. அருளாளர் தம் உயிர்க்காக அஞ்சுவார்களா?

**மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப**
**தன்உயிர் அஞ்சும் வினை.** 244

எல்லா உயிர்களையும் பேணிக்காக்கும் அருளாளர்க்கு தம் உயிர்க்கு அஞ்சும்படியான தீயசெயல்கள் உண்டாகாது என்று கூறுவர்.

*மன்னுயிர் - நிலைபெற்ற உயிர், ஓம்பி - பேணி, அருள்ஆள்வார் - அருளாளர், வினை - தீய செயல்.*

5. அருளாளர்க்குத் துன்பம் இல்லை என்பதற்கு எது சாட்சியாகும்?

**அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
**மல்லல்மா ஞாலம் கரி.** 245

அருளாளர்க்குத் துன்பம் இல்லை என்பதற்கு காற்று வீசுகின்ற வளம்மிக்க பெரிய உலகே சாட்சியாகும்.

*அல்லல் - துன்பம், வளிவழங்கும் - காற்றுவீசும்,*
*மல்லல் - வளம்மிக்க, மாஞாலம் - பெரிய உலகம், கரி - சாட்சி.*

6. அருளாளர்களும் இரக்கம் இல்லாது துன்பம் செய்கிறார்களே அது ஏன்?

**பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி**
**அல்லவை செய்துஒழுகு வார்.** 246

அருளற்று மற்றவர்களை துன்புறுத்தி வாழ்கின்றவர்கள், உண்மைக் குணத்திலிருந்து நீங்கிய வேடதாரிகளே என்பர்.

பொருள் - குணம்; பொச்சாந்தார் - வேடதாரிகள்;
அருள்நீங்கி - அருளற்று, அல்லவை - துன்பம்,
ஒழுகுவார் - வாழ்வார்.

7. இரக்கம் இல்லாத அருளற்றவர்களுக்கு என்ன நடக்கும்?

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.** 247

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்ப வாழ்க்கை இல்லாதது போல, அருள் இல்லாதவர்க்கு அவ்வுலக பேரின்ப வாழ்க்கை இல்லையாகிப் போகும்.

8. அருளற்றவர் மீண்டும் அருளாளர் ஆக முடியுமா?

**பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்**
**அற்றார்மற்று ஆதல் அரிது.** 248

வறியவர் ஒருகாலத்தில் வறுமை நீங்கிச் செல்வத்தில் பொலிவர். அருளற்றவர் ஏதும் இல்லாதவரே. அவர்கள் மீண்டும் அருளாளர் ஆதல் அரிதாகும்.

*பூப்பர் - பொலிவர், அற்றார் - ஏதும் இல்லாதவர், மற்றது - மீண்டும்.*

9. அருளில்லாதவன் செய்யும் அறம் எத்தகையது?

**தெருளாதன் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.** 249

இரக்கமற்றவன் செய்யும் அறத்தை ஆராயின், அது அறிவில்லாதவன் நூலின் உண்மைப் பொருளைக் கண்டது போலாகும்.

*தெருளாதான் - அறிவில்லாதான், மெய் - உண்மை, தேரின் - ஆராயின், அருளாதான் - இரக்கமற்றவன்.*

10. இரக்கமற்றவர் திருந்த என்னவழி இருக்கின்றது?

**வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து.** 250

தன்னை விட வலிமை குறைந்தவர்களைத் துன்புறுத்தச் செல்லும்போது, தன்னிலும் வலிமை மிக்கவர் தன்னை அப்படிச் செய்தால் தன் நிலை என்ன என்பதை நினைக்க வேண்டும்.

*வலியார் - வலிமை மிக்கவர், மெலியார் - வலிமை குறைந்தார்.*

# 26. புலால் மறுத்தல்

*(ஊன் உண்பதை நீக்குதல்)*

1. அருளாளர் ஊன் உண்ணலாமா?

**தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்.** 251

தன் உடம்பை வளர்ப்பதற்காக மற்றொரு உடம்பை உண்பவன், எப்படி அருளைப் பாதுகாக்க முடியும்?

*ஊன் - உடம்பு, ஆளும் - பாதுகாக்கும்.*

2. இப்படிப்பட்டவர்களை அருளாளர் என்று அழைக்கலாமா?

**பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி**
**ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு.** 252

பொருளைப் பேணிக் காக்காதவர்க்கு பொருளை ஆட்சி செய்து பொருளாளராக (செல்வராக) இருக்க முடியாது. அதுபோல ஊன் தின்பவர் அருளை ஆட்சி செய்து அருளாளர் ஆக இருக்க முடியாது.

*போற்றாதார் - பேணாதார், ஆங்கு - அதுபோல.*

3. ஊன் உண்பவர் மனதில் இரக்கம் இருக்குமா?

**படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்**
**உடல்சுவை உண்டார் மனம்.** 253

ஆயுதம் தரித்தவன் மனம்போல, வேறு ஒரு உடலைச் சுவைத்து உண்பவர் மனமும் நல்லது எதுஎன நினையாது.

*படை - ஆயதம், படைகொண்டார் - ஆயுதம்தரித்தவர், நுன்றூக்காது - நன்மையைநினையாது.*

4. ஊன் உண்பது நல்லகுணமா?

**அருள்அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்**
**பொருள்அல்லது அவ்வூன் தினல்.** 254

இரக்கம் இல்லாத குணம் எது என்றால் கொல்லாமையைக் கொல்லுதலே. ஆதலால் உயிரைக் கொன்று அவ்வூனைத் தின்பது நல்லகுணம் அல்ல.

*அருளல்லது - இரக்கமில்லாதது,*
*கொல்லாமை - உயிர்களைக் கொல்லாதிருத்தல்,*
*கோறல் - கொல்லுதல், பொருளல்லது - நல்லகுணமில்லாதது.*

5. ஊன் உண்போர் இருந்தும் உயிர்கள் அழியாது இருப்பதற்குக் காரணம் என்ன?

**உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண**
**அண்ணாத்தல் செய்யாது அளறு.** 255

சேறு கூட ஊன் உண்ண வாய் திறக்காதே, பல உயிர்கள் ஊனை உண்ணாதிருப்பதால் உயிர்கள் நிலைத்து வாழ்கின்றன.

*உண்ணாமை - உண்ணாதிருத்தல், அளறு - சேறு,*
*அண்ணாத்தல் - வாய்திறத்தல்.*

6. ஊனை விற்பவர் இருப்பதால் தானே மற்றவர் வாங்கி உண்கிறார்கள்.

**தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.** 256

சாப்பிடுவதற்காக உலகம் உயிர்களைக் கொல்லாது என்றால் விலைக்காக ஊனை விற்பவர்கள் இருக்க மாட்டார்கள்.

7. எப்போது ஊன் உண்பவர்கள் ஊன் உண்பதை விடுவார்கள்?

**உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதுஒன்றன்**
**புண்அது உணர்வார்ப் பெறின்.** 257

இறைச்சி என்பது வேறு உடலின் புண் என்பதை ஊன் உண்பவர் உணர்ந்தால், ஊனை உண்ணமாட்டார்கள்.

*ஊண்ணாமை - உண்ணாதிருத்தல், புலாஅல் - இறைச்சி.*

8. யார் ஊன் உண்ணமாட்டார்கள்?

**செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்**
**உயிரின் தலைப்பிரிந்த ஊன். 258**

குற்றமற்ற அறிவுடையவர் ஊயிரை நீக்கி, தலையைப் பிரித்த ஊனை உண்ணமாட்டார்கள்.

*செயிர் - குற்றம், செயிரின்தலைப்பிரிந்த - குற்றமற்ற.*

9. ஊன் உண்ணாதிருப்பது எதைவிட மேலானது?

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று. 259**

இன்பங்களுக்காக வேள்விப் பொருட்களை நெருப்பில் இட்டு ஆயிரம் வேள்வி செய்வதைவிட, ஓர் உயிரைக் கொன்று உண்ணாதிருப்பது மேலானதாகும்.

*அவி - வேள்விப் பொருள்கள், வேட்டல் - வேள்வி,*
*செகு - கொன்று, உயிர்செகுத்து - உயிரைக்கொன்று.*

10. யார் ஊன் ஊண்ணாதிருப்பவனை வணங்குவர்?

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும். 260**

உயிரைக் கொல்லாதவனாகவும், இறைச்சியை உண்ணாதவனாகவும் இருப்பனை உலக உயிர்கள் எல்லாம் கைகூப்பி வணங்கும்.

*புலால் - இறைச்சி, தொழும் - வணங்கும்.*

## 27. தவம்

*(மனதை அடக்கித் தவம் செய்தல்)*

1. தவத்தின் உருவம் எப்படி இருக்கும்?

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு.** 261

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாது இருப்பதுமே தவத்திற்கு உருவமாகும்.

*உற்றநோய் - உற்றதுன்பம், நோன்றல் - பொறுத்தல், உறுகண் - துன்பம்.*

2. யாரால் தவம்செய்ய முடியும்?

**தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை**
**அஃதிலார் மேற்கொள்வது.** 262

தவம் செய்வதும் தவம் செய்யும் தகுதி உடையவர்க்கே முடியும். அத்தகுதி இல்லாதார் அதனைச் செய்வது வீண் முயற்சியே ஆகும்.

*அவம் - வீண், அஃதிலார் - அது இல்லாதார், மேற்கொள்வது - முயல்வது.*

3. இல்லறத்தை மேற்கொண்டவர்கள் ஏன் தவம் செய்வதில்லை?

**துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம்.** 263

துறவிகளுக்கு உணவு போன்ற நுகர்ச்சிப் பொருட்களைக் கொடுப்பதற்காக, இல்லறத்தார்கள் தவம் செய்வதை மறந்தார்களோ?

*துப்புரவு - நுகர்ச்சிப் பொருட்கள்.*

4. தவம் செய்பவரால் பகைவரை அடக்கவும், நண்பரை வாழ்விக்கவும் முடியுமா?

**ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்.** 264

தவம் செய்வோர் நினைத்தால் பகைவரை அடக்கவும், நண்பரை வாழ்விக்கவும் முடியும்.

*ஒன்னார் - பகைவர், தெறல்- அடக்கல், உவந்தார் - நண்பர், ஆக்கல் - வாழ்வித்தல்.*

5. தவத்தை எப்போது செய்யத் தொடங்க வேண்டும்?

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்.** 265

தவம் செய்பவர்க்கு விரும்பியவை விரும்பியபடி கிடைப்பதால், தவத்தை விரைவாக முயன்று செய்ய வேண்டும்.

*வேண்டிய - விரும்பியவை, எய்தல் - கிடைப்பதால், ஈண்டு - விரைவாக.*

6. தவம் செய்பவர் என்ன செய்வார்?

**தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்**
**அவம்செய்வார் ஆசையுட் பட்டு.** 266

தவம் செய்பவர்களே தமது காரியத்தைச் செய்பவர்கள். மற்றவர்கள் ஆசைப்பட்டு காலத்தை வீணாக்குவார்.

*கருமம் - காரியம், அவம்செய்வார் - வீணாக்குவார்.*

7. தவம் செய்பவர்களால் துன்பத்தை எப்படிப் பொறுக்க முடிகிறது?

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.** 267

நெருப்பில் இட்டு சுடச்சுட பொன் ஒளி பெறுவது போல, துன்பம் வருத்த வருத்த தவம் செய்பவர்க்கு தவம் சிறக்கும்.

*துன்பம்சுடச்சுட - துன்பம் வருத்த வருத்த, நோக்கிற்பவர்க்கு - தவம் செய்பவர்க்கு.*

8. தவம் செய்பவரில் யாரை உலகம் வணங்கும்?

**தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய**
**மன்உயிர் எல்லாம் தொழும். 268**

தனக்கு உயிர் இருக்கின்றது என்ற எண்ணம் இல்லாது, பிற உயிர்களின் நன்மைக்காக வாழ்பவனை, ஏனைய உயிர்கள் எல்லாம் வணங்கும்.

*தான் அறப்பெறுதல் - தான் என்ற எண்ணம் இல்லாது போதல்.*

9. தவம் செய்பவர்களால் இயமனை வெல்ல முடியுமா?

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 269**

தவத்தால் ஆற்றல் பெற்றவர்களுக்கு இயமனை வெல்லவும் முடியும்.

*கூற்றம் - இயமன், குதித்தல் - வெல்லுதல்,*
*தலைப்படுதல் - பெறுதல்.*

10. இவ்வளவு ஆற்றல் தவத்திற்கு இருக்க, ஏன் தவம் இல்லாதவர்கள் பலராக இருக்கிறார்கள்?

**இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர். 270**

தவம் இல்லாதவர் பலராக இருக்கக் காரணம், தவம் செய்பவர் சிலராகவும், தவம் செய்யாதவர் பலராகவும் இருப்பதேயாகும்.

*நோற்பவர் - தவம்செய்பவர், நோலாதவர் - தவம் செய்யாதவர்.*

# 28. கூடா ஒழுக்கம்

*(தவம் செய்பவர்க்கு பொருந்தாத ஒழுக்கம்)*

1. தவவேடத்துடன் ஒழுக்கக் கேடாக நடப்பவனைப் பார்த்து முதலில் சிரிப்பவை எவை?

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.** 271

வஞ்சகமனம் உடையவனின் மறைந்த ஒழுக்கம் உலகத்தாருக்குத் தெரியா விட்டாலும், அவனோடு கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் அவனைப் பார்த்து தமது மனதுக்குள் சிரித்துக் கொள்ளும்.

*படிற்று - மறைந்த, ஐம்பூதங்கள் - நிலம், நீர், காற்று, வாயு, ஆகாயம், அகத்தே - மனத்தே, நகும் - சிரிக்கும்.*

2. பெருமை மிக்க தவவேடமே அவர்களின் ஒழுக்கக் கேடு மறையக் காரணமல்லவா?

**வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்**
**தான்அறி குற்றப் படின்.** 272

தான் அறிந்து செய்த குற்றத்திற்கு தன் மனச்சாட்சியே பகைத்தால், பெருமை மிக்க தவவேடம் என்ன செய்ய முடியும்?

*வான்உயர் - பெருமைமிக்க, தோற்றம் - வேடம்.*

3. தவவேடத்துடன் இவர்கள் செய்யும் இழிசெயல்கள் எதைப் போன்றது?

**வலிஇல் நிலைமையான் வல்உருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.** 273

மனதை அடக்க வலிமை இல்லாத குணத்தை உடையவனின் வலிய தவக்கோலம், பசு புலியின் தோல் போர்த்துக் கொண்டு புல் மேய்ந்தது போலாகும்.

*வலிஇல் - வலிமை இல்லாத, நிலைமை - குணம், பெற்றம் - பசு, வல்லுருவம் - தவவேடம்.*

4. தவவேடத்தில் மறைந்திருந்து இவர்கள் பெண்களை தம் வசப்படுத்துவது எதைப்போன்றது?

**தவம் மறைந்து அல்லவைசெய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.** 274

தவவேடத்தில் மறைந்து நின்று பெண்களைக் காமவயப்படுத்தல், புதரில் மறைந்து நின்று வேடன் பறவைகளைப் பொறிவைத்துப் பிடிப்பதைப் போன்றது.

*அல்லவை செய்தல் - காமவயப்படுத்தல், புதல் - புதர், புள் - பறவை, சிமிழ்த்தல் - பொறிவைத்தல்.*

5. இந்த தவவேடதாரிகளுக்குத் துன்பம் வராதா?

**பற்றுஅற்றோம் என்பார் படிற்றுஒழுக்கம் எற்றுஎற்றுஎன்று**
**ஏதம் பலவும் தரும்.** 275

மற்றவர் மதிக்கவேண்டும் என்பதற்காக "பற்றுகளை விட்டு விட்டோம்" என்று கூறுவாரின் மறைந்த ஒழுக்கம் "என்ன செய்தோம், என்ன செய்தோம்" என்று சொல்லி பரிதவிக்க கூடிய துன்பங்கள் பலவும் தரும்.

*படிற்றுஒழுக்கம் - மறைந்த ஒழுக்கம், எற்று - என்ன செய்தோம், ஏதம் - துன்பம்.*

6. தவவேடதாரிகள் எப்படிப்பட்டவர்கள்?

**நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.** 276

மனதாரப் பற்றுக்களை நீக்காது, துறந்தவர் போன்ற வேடத்தில் வஞ்சனை செய்து வாழ்வாரைப் போல் மிகக் கொடியவர் வேறு எவரும் இல்லை.

*வன்கணார் - கொடியவர்.*

7. இவர்கள் உள்ளம் எப்படிப்பட்டது?

**புறம்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியார் உடைத்து.** 277

குன்றுமணியின் வெளிப்புறம் போல் அவர்கள் தவவேடம் பார்ப்பதற்கு செம்மையாக இருந்தாலும், உள்ளம் குன்று மணியின் மூக்குப்போல் கருமை உடையது.

*புறம் - வெளியே, குன்றி - குன்றுமணி, கண்டு - பார்க்க, அகம் - உள்ளம், கரியார் - கருமை.*

8. இப்படி மனத்தில் மாசுடன் இருப்பவர்கள் சிலரா? பலரா?

**மனத்தது மாசுஆக மாண்டார் நீராடி**
**மறைந்துஒழுகும் மாந்தர் பலர். 278**

மனதிலுள்ள குற்றங்கள் நீங்காது அப்படியே இருக்க, தவப்பெருமையைக் காட்ட நீராடி தூய்மையானவராக நடித்து மறைந்து வாழும் மனிதர்கள் பலர்.

*மாசு - குற்றம், மாண்டார் - பெருமையுடையார், மாந்தர் - மனிதர்கள்.*

9. அப்படிப்பட்ட தவவேடதாரிகளை எப்படி அறிந்துகொள்வது?

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன**
**வினைபடு பாலால் கொளல். 279**

அம்பு நேரானதாயினும் உயிரைக் கொல்வதால் தீமை செய்வது. யாழ் வளைந்தது ஆயினும் இசையைத் தருவதால் நன்மை செய்வது. அதுபோல அவர்கள் செய்யும் செயல்களின் நன்மை, தீமைகளைக் கொண்டு அவர்களது குணங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

*கணை - அம்பு, கோடு - வளைந்தது, செவ்விது - நல்லது, வினை - செயல்.*

10. பெரிய சடாமுடி வைத்துக்கொண்டால் தவவலிமை வந்து விடுமா?

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின். 280**

தவம் செய்வதற்கு தலைமயிரை மழித்தலும், வளர்த்து சடாமுடியாக வைத்துக் கொள்வதும் தேவையில்லை. உலகம் பழிக்கும் செயல்களை விட்டு விட்டால் அதுவே போதுமானதாகும்.

# 29. கள்ளாமை

*(பிறருடைய பொருளை வஞ்சித்துத் திருடாதிருத்தல்)*

1. பிறரால் இகழப்படாமல் வாழவேண்டும் என்றால் என்ன செய்ய வெண்டும்?

**எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.** **281**

பிறரால் இகழப்படாமல் வாழவேண்டும் என்று நினைப்பவன், மற்றவர்களுடைய எந்தப்பொருளையும் வஞ்சனையால் எடுக்க நினக்காது, தன் நெஞ்சைக் காக்க வேண்டும்.

*எள்ளாமை - இகழப்படாமை, கள்ளாமை - வஞ்சித்து எடுக்க நினையாமை, எனைத்து - எதனையும்.*

2. பிறருடைய பொருளை எடுக்க நினனப்பது நல்லதா?

**ஊள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்.** **282**

பிறர் பொருளை வஞ்சனையால் களவெடுப்போம் என மனதால் நினைத்தலும் தீமையானதாகும்.

*உள்ளத்தால் - மனதால், கள்ளத்தால் - வஞ்சனையால், கள்வேம் - களவெடுப்போம்.*

3. பிறரை வஞ்சித்து எடுக்கும் பொருளுக்கு என்ன நடக்கும்?

**களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து**
**ஆவது போலக் கெடும்.** **283**

களவால் சேரும் பொருள், அளவில்லாமல் வருவது போல் தோன்றி, அளவுக்கு மேல் கெட்டு அழியும்.

*ஆக்கம் - பொருள், அளவுஇறந்து - அளவில்லாமல்.*

4. களவுவெடுக்க ஆசைப்பட்டால் என்ன நடக்கும்?

**களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமம் தரும்.** 284

பிறர்பொருளைக் களவெடுக்க மிகுந்த ஆசைப்படுவதால் வரும் விளைவு, தீராத துன்பத்தைத் தரும்.

*கன்றிய - மிகுந்த, காதல் - ஆசை, வீயா - தீராத,*
*விழுமம் - துன்பம்.*

5. வஞ்சனையால் பொருள் சேர்ப்பவர்களிடம் அன்பு இருக்குமா?

**அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்**
**பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.** 285

அருளை நினைந்து அன்பு செலத்தும் இயல்பு, பிறர் பொருளை நினைந்து, அவர் சோர்ந்த நேரம் பாாத்து இருப்பவரிடத்தில் இருக்காது.

*கருதி - நினைத்து, பொச்சாப்பு - சோர்வு.*

6. களவெடுக்க மிகுந்த ஆசைப்படுவர் யார்?

**அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்**
**கன்றிய காத லவர்.** 286

துறவிகளில் உண்மையை அறியும் முயற்சியில் நின்று, அதன்படி நடக்க முடியாதவர்களே, களவில் மிக்க ஆசை உடையவராக இருப்பர்.

*அளவு - உண்மையை அறியும் முயற்சி(பிரமாணம்),*
*கன்றிய - மிக்க, காதலவர் - ஆசையுடையவர்.*

7. யார் களவெடுக்க மாட்டார்கள்?

**களவுஎன்னும் கார்அறிவு ஆண்மை அளவுஎன்னும்**
**ஆற்றல் புரிந்தார்கண் இல்.** 287

களவு என்னும் கெட்டபுத்தி, உண்மையை அறியும் முயற்சியில் ஈடுபட்டு அறிவுத் தெளிவுபெற்ற துறவிகளிடம் இல்லை.

*கார்அறிவு - (இருண்டஅறிவு) கெட்டபுத்தி,*
*அளவு - உண்மையை அறியும் முயற்சி, ஆற்றல் - அறிவு,*
*புரிந்தார் - தெளிந்தார்.*

8. களவு எடுப்பவர் நெஞ்சம் எப்படிப்பட்டது?

**அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்**
**களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.** 288

உண்மையை அறிந்த ஞானியர் நெஞ்சில் அறம் நிற்பது போல, களவு எடுப்பதை தெரிந்து கொண்டவர் நெஞ்சில் வஞ்சனை இருக்கும்.

*கரவு - வஞ்சனை.*

9. களவு எடுப்பவர்க்கு என்ன நடக்கும்?

**அளவுஅல்ல செய்தாங்கே வீவர் களவுஅல்ல**
**மற்றைய தேற்றா தவர்.** 289

களவைத் தவர வேறுவழிகளை அறியாதவர் அளவில்லா தீய செயல்களைச் செய்து அவ்வாறே அழிவர்.

*அளவுஅல்ல - அளவில்லாத, ஆங்கே - அவ்வாறே,*
*வீவர் -அழிவர், தேற்றதாவர் - அறியாதவர்.*

10. உலகம் களவெடுப்பவரையும், களவெடாதவரையும் என்ன செய்யும்?

**கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்**
**தள்ளாது புத்தேள் உலகு.** 290

வரும் புதிய உலகம், தவம் செய்பவர்களில் கள்வரின் புகழைத் தள்ளிவிடும், களவு எடுக்காதவர் புகழை தள்ளாது வைத்துக்கொள்ளும்.

*கள்வார் - கள்ளர்(திருடர்); கள்ளார் - களவு செய்யார்,*
*உயிர்நிலை - புகழ்.*

(குறிப்பு :- புகழ் அதிகாரத்தில் முதலாவது குறளில் உயிர்களுக்குப் பயன் தருவது புகழ் என்றும், நான்காவது குறளில் புத்தேள் உலகு புகழை உண்டாக்குபவரை போற்றும் என்றும் வள்ளுவர் கூறுவதைப் பார்க்க. உடல் அழியினும் அவ்வுடலில் வாழ்ந்தவர் பெயரால் புகழ் நிலைத்து உயிரை நிலை நிறுத்துகிறது.)

# 30. வாய்மை

*(உண்மை பேசுதல்)*

1. எது வாய்மை என்று சொல்லப்படும்?

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல். 291**

மற்றவர்களுக்கு எதுவித தீமையும் செய்யாத சொற்களை சொல்வதே வாய்மை என்று சொல்லப்படும்.

*வாய்மை - உண்மை.*

2. பொய் சொல்லலாமா?

**பொய்யையும் வாய்மை இடத்த புரைந்தீர்த்த**
**நன்மை பயக்கும் எனின். 292**

எதுவித குற்றமும் அற்ற நன்மை உண்டாகுமானால் வாய்மைக்காக பொய்யும் சொல்லலாம்.

*பொய்மை - பொய், புரைதீர்த்த - குற்றமற்ற.*

3. மனச்சாட்சி பொய் என்று கூறவும் பொய்சொல்லலாமா?

**தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும். 293**

மனச்சாட்சி அறிய பொய் சொல்லாதீர். பொய் சொன்னால் அவரது மனச்சாட்சியே அவரைச் சுடும்.

*தன்நெஞ்சு - மனச்சாட்சி, பொய்யற்க - பொய்சொல்லாதீர்.*

4. மனதால் கூட பொய்யை நினையாது வாழ்பவரை உலகம் என்ன செய்யும்?

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.** 294

மனதால் கூட பொய்யை நினையாது வாழ்பவன் உலகத்தவர் மனங்களில் எல்லாம் இருப்பான்.

*உள்ளத்தால் - மனதால், உளன் - இருப்பான்.*

5. உளமார வாய்மை சொல்பவர் எப்படிப்பட்டவர்?

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம் செய்வாரின் தலை.** 295

மனம்பொருந்தி வாய்மை சொல்பவர் தவம்செய்வதோடு தானமும் செய்பவரை விடச் சிறந்தவர்.

*மனத்தொடு - மனம் பொருந்தி (உளமார), மொழியின் - சொன்னால்.*

6. பொய் கூறாமல் வாழ்ந்தால் என்ன கிடைக்கும்?

**பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்.** 296

பொய் கூறாமல் இருப்பது போல புகழ் வேறு எதுவும் இல்லை. ஒருவன் வருந்தாமலே அவனுக்கு எல்லாவித அறங்களையும் அது கொடுக்கும்.

*பொய்யாமை - பொய் கூறாமல் இருத்தல், எய்யாமை - வருந்தாமை,*

7. தர்மங்கள் செய்பதைவிட பொய் கூறாது இருத்தல் நல்லதா?

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.** 297

பொய் கூறாமல் இருப்பதை பொய்யாக்கி விடாமல் வாழ்ந்தால், பிற அறங்கள் செய்யாதிருப்பதை செய்யாதிருப்பது நன்றே.

*பொய்யாமை - பொய் கூறாமை (பொய்யாகிப் போகாமை), செய்யாமை - செய்யாதிருப்பது.*

8. மனச்சுத்தம் எப்படி உண்டாகும்?

**புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை**
**வாய்மையான் காணப் படும்.** 298

வெளி உடலின் சுத்தம் நீரில் குளிப்பதால் உண்டாகும். மனச்சுத்தம் வாய்மை பேசுவதால் உண்டாகும்.

*தூய்மை - சுத்தம், புறம் - வெளி, அகம் - மனம், வாய்மை - உண்மை.*

9. சான்றோரின் மன இருளை அகற்றும் விளக்கு எது?

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.** 299

வெளியே உள்ள இருளை அகற்றும் எல்லா விளக்குகளும் விளக்காக மாட்டாது. சான்றோர்க்குப் பொய் பேசாமை என்னும் விளக்கே மன இருளை அகற்றும் விளக்காகும்.

*பொய்யா - பொய் பேசாமை.*

10. வாய்மையை விடச் சிறந்தது என்ன இருக்கின்றது?

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.** 300

யாம் உண்மையாக அறிந்தவற்றுள் வாய்மையை விடச்சிறந்தவை வேறு ஒன்றும் இல்லை.

*மெய்யாக - உண்மையாக, கண்டவற்றுள் - அறிந்தவற்றுள்.*

## 31. வெகுளாமை

*(கோபம் கொள்ளாதிருத்தல்)*

1. கோபத்தை அடக்கிக் காப்பது எப்படி?

**செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கின்என் காவாக்கால் என். 301**

தன் கோபத்தை யார்மேல் காட்டமுடியுமோ அவரிடத்தில் கோபத்தைக் காட்டாது அடக்குபவனே, கோபத்தைக் காப்பவன். அக் கோபம் செல்ல முடியாத இடத்தில் காத்தால் என்ன? காக்கா விட்டால் என்ன?

*சினம் - கோபம்*

2. யாரிடத்தில் கோபப்படலாம்?

**செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்**
**இல்அதனின் தீய பிற. 302**

தம்மிலும் வலியவரிடத்தில் கோபப்பட்டால் அவர்களால் தீமை உண்டாகும். கோபம் செல்லக்கூடிய இடத்தில் கோபம் கொண்டாலும், அனைப்போல் தீமை தருவது வேறு இல்லை. (ஆதலால் யாரிடமும் கோபம் கொள்ளாது இருக்க வேண்டும்)

*சினம் - கோபம், அதனின் - அதைப்போல.*

3. ஏன் கோபப்படக் கூடாது?

**மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
**பிறத்தல் அதனான் வரும். 303**

தீமைகள் உண்டாகக் கோபம் காரணமாக இருப்பதால், எவரிடத்திலும் கோபம் கொள்ளாது மறந்து விடுங்கள்.

*வெகுளி - கோபம், தீய - தீமைகள், பிறத்தல் - உண்டாதல்.*

4. எதற்காக கோபத்தை மறக்க வேண்டும்?

**நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
**பகையும் உளவோ பிற.** 304

முகத்தில் மலரும் சிரிப்பையும், மன மகிழ்ச்சியையும் கொல்லும் கோபத்தை விட பகை வேறு ஏதும் இருக்கின்றதா?

*நகை - சிரிப்பு, உவகை - மனமகிழ்ச்சி, சினம் - கோபம்.*

5. பிறர் மேல் வரும் கோபம் எம்மை என்ன செய்யும்?

**தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.** 305

ஒருவன் தன்னைத்தான் துன்பமில்லாது காத்துக்கொள்ள விரும்பினால் கோபம் வராமல் காக்க வேண்டும். அப்படிக் காக்கவில்லையானால் அக்கோபம் அவனையே கொல்லும்.

*காக்கின் - காப்பதானால், காவாக்கால் - காக்காவிட்டால்.*

6. எம்மை மட்டும் தானா கோபம் அழிக்கும்?

**சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.** 306

கோபப்படுவரையே அழிக்கும் அந்தக் கோபத்தீ, மனித இனம் என்னும் பாதுகாப்பான தெப்பத்தை எரித்து விடும்.

*சினம்சேர்ந்தார் - கோபப்படுபவர், கொல்லி - நெருப்பு,*
*இனம் - மனித இனம், ஏமப் புணை - பாதுகாப்பான தெப்பம்.*

7. ஆற்றலைக் காட்ட கோபத்தைப் பயன்படுத்துபவருக்கு என்ன நடக்கும்?

**சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு**
**நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று.** 307

நிலத்தில் தன் கையால் அறைந்தவனுக்கு கைவலிப்பது போல, தன் ஆற்றலைக் காட்ட கோபத்தைப் பயன்படுத்துபவனுக்கு கேடு கட்டாயம் வரும்.

*சினம் - கோபம், பிழையாதது - தப்பாதது.*

8. எமக்கு தீமை செய்தவர் மேல் கோபப்படலாமா?

**இணர்ஏரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று.** **308**

கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் இடுவது போன்ற துன்பம் செய்தாலும், மீண்டும் வந்து சேர்ந்தால் கோபம் கொள்ளாது இருப்பதே நல்லது.

*இணர்எரி - கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு, புணரின் - சேர்ந்தால்*

9. கோபம் இல்லாதவர்க்கு என்ன கிடைக்கும்?

**உள்ளிய எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்.** **309**

ஒருவன் மனத்தால் கோபத்தை நினைக்க மாட்டான் என்றால் அவன் நினைத்தவை யாவும் உடனே கிடைக்கும்.

*உள்ளியது - நினைத்தது, உடன்எய்தும் - உடனே கிடைக்கும்.*

10. கோபப்படுபவனுக்கும், கோபப்படாதவனுக்கும் என்ன வித்தியாசம்?

**இறந்தார் இறந்தார் அனையர் சினத்தை**
**துறந்தார் துறந்தார் துணை.** **310**

கோபம் மிகுந்தவர் இறந்தவர்களுக்குச் சமமானவர். கோபத்தை நீக்கியவர் துறவிகளுக்கு ஒப்பானவர்.

*சினம் - கோபம், துறந்தவர் - நீக்கியவர் (துறவிகள்),*
*இறந்தார் - கோபம் மிகுந்தவர்.*

# 32. இன்னா செய்யாமை

*(துன்பம் செய்யாது இருத்தல்)*

1. பிறருக்கு துன்பம் செய்யாது வாழ்பவர் யார்?

**சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா**
**செய்யாமை மாசுஅற்றார் கோள்.** 311

சிறப்பைக் கொடுக்கின்ற செல்வத்தை பெறுவதாக இருந்தாலும், மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாது வாழ்தலே மனச்சுத்தம் உள்ளவர்களின் குணமாகும்.

*இன்னா - துன்பம்; மாசுஅற்றார் - மனச்சுத்தம் உடையவர்;*
*கோள் - குணம்.*

2. எமது பகைவர்க்குத் துன்பம் செய்யலாமா?

**கறுத்துஇன்னா செய்தஅக் கண்ணும் மறுத்துஇன்னா**
**செய்யாமை மாசுஅற்றார் கோள்.** 312

தம்மைப் பகைத்து துன்பம் செய்தவர் இடத்தும், திரும்பவும் அவர்கட்குத் துன்பம் செய்யாமல் இருத்தலே மனச்சுத்தம் உடைய சான்றோர்களின் குணமாகும்.

*கறுத்து - பகைத்து; இன்னா - துன்பம்; கண்ணும் - இடத்தும்;*
*மறுத்து - திரும்ப, மாசற்றார் - மனச்சுத்தம் உடையவர்;*
*கோள் - குணம்.*

3. நாம் தீமை ஒன்றும் செய்யாதிருக்க, எமக்குத் துன்பம் செய்தவரைத் தடுக்க நாம் தீமை செய்யலாமா?

**செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமம் தரும்.** 313

முன்பு ஒரு துன்பமும் செய்யாதிருக்க, தனக்குத் துன்பம் செய்தவர்க்குத் துன்பம் செய்தால், பின்னர் அச்செய்கை நீங்காத துன்பத்தையே தரும்.

*செற்றார் - துன்பம் செய்தார், இன்னா - துன்பம்;*
*உய்யா - நீங்காத; விழுமம் - துன்பம்.*

4. தீமை செய்பவர்க்கு என்ன செய்ய வேண்டும்?

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல். 314**

துன்பம் செய்தவரை தண்டிக்க வேண்டுமானால், அவர்கள் வெட்கப்படும்படியாக நல்ல நன்மைகளைச் செய்துவிடுக.

*இன்னா - துன்பம்; ஒறுத்தல் - தண்டித்தல்; நாண - வெட்கப்பட; நன்னயம் - நல்ல நன்மை.*

5. அறிஞர்கள் பிற உயிர்கள்படும் துன்பத்தைக் காக்க வேண்டுமா?

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தம்நோய்போல் போற்றாக் கடை. 315**

பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தன் துன்பம்போல நினைத்துக் காக்கா விட்டால், அவனது அறிவால் உண்டாகும் பயன் என்ன?

*அறிவினான் - அறிவினால்; நோய் - துன்பம்; போற்றல் - காத்தல்.*

6. எத்தகைய துன்பங்களை நாம் பிறருக்குச் செய்யக்கூடாது?

**இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கண் செயல். 316**

துன்பம் என்று தான் உணர்ந்தவற்றை, மற்றவர்களுக்குச் செய்யாமல் இருக்க வேண்டும்.

*இன்னா - துன்பம்; துன்னாமை - செய்யாதிருத்தல்; துன்னல் - செய்தல்.*

7. மனத்தால் தீமை செய்ய நினைக்கலாமா?

**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்**
**மாணாசெய் யாமை தலை. 317**

எவ்வளவானாலும், எப்பொழுதும் யார்க்கும் மனத்தாலும் தீமை செய்ய நினையாது இருப்பதே சிறந்தது.

*எனைத்தான் - எவ்வளவு; எஞ்ஞான்று - எப்பொழுதும்; மாணா - தீமை.*

8. பிற உயிர்களுக்கு நாம் துன்பம் செய்யலாமா?

**தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ**
**மன்உயிர்க்கு இன்னா செயல்.** 318

தன் உயிர்க்கு துன்பம் தருபவை எவை எனத் தானே அறிந்தவன், மற்ற உயிர்களுக்கு துன்பம் செய்வது எதனாலோ?

*இன்னா - துன்பம்; தானறிவான் - தானே அறிந்தவன்;*

9. பிறர்க்கு துன்பம் செய்தால் என்ன நடக்கும்?

**பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா**
**பிற்பகல் தாமே வரும்.** 319

முற்பகலில் பிறருக்கு துன்பம் செய்தால், அப்படிச் செய்தவர்களுக்குப் பிற்பகலில் அவர்களைத் தேடி துன்பம் தாமாகவே வந்து சேரும்.

10. பிறருக்குத் துன்பம் செய்தவரும், செய்யாதவரும் என்னாவர்?

**நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோய்இன்மை வேண்டு பவர்.** 310

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவர்களையே சேரும். துன்பம் இல்லாமல் வாழ விரும்புபவர்கள் யாருக்கும் துன்பம் செய்யமாட்டார்கள்.

*நோய் - துன்பம்; மேலவாம் - மேலேயாகும் (சேரும்);*
*நோயின்மை - துன்பம் இன்மை; வேண்டுபவர் - விரும்புபவர்.*

# 33. கொல்லாமை

*(எந்த ஓர் உயிரையும் கொலை செய்யாது இருத்தல்)*

1. உயிர்க்கொலை செய்தால் என்ன கிடைக்கும்?

**அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும். 321**

அறச்செயல் எது என்றால் உயிர்க்கொலை செய்யாது இருத்தல். கொலை செய்தல் பிறதீமைகள் எல்லாவற்றையும் தரும்.

*அறவினை - அறச்செயல்; கோறல் - கொல்லுதல்; பிறவினை - பிறதீமை.*

2. அறநூல்களில் சொல்லப்பட்டிருக்கும் அறங்களில் சிறந்தது எது?

**பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. 322**

தம்மிடம் உள்ள உணவைப் பிரித்துக் கொடுத்து தானும் உண்டு, பல உயிர்களையும் காப்பதே அறிஞர்கள் தொகுத்துத் தந்த அறங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்ததாகும்.

*பகுத்து - பிரித்து; பல்லுயிர் - பலஉயிர்; ஓம்புதல் - காத்தல்; நூலோர் - அறிஞர்.*

3. வாய்மையா? கொல்லாமையா? எது சிறந்தது?

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று. 323**

உறுதியாகச் சொல்லப் போனால் உயிர்களை கொலை செய்யாமல் இருப்பதே நல்லது. அதன் பின் வைக்கக்கூடிய சிறப்புடையது பொய்கூறாமல் இருத்தலேயாகும்.

*கொல்லாமை - உயிர்களைக் கொலை செய்யாது இருத்தல், ஒன்றாக - உறுதியாக; பொய்யாமை - (வாய்மை) பொய்கூறாமை.*

4. வாழ்க்கைக்கு சிறந்த நல்வழி எது?

**நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**கொல்லாமை சூழும் நெறி** 324

நல்ல வழி என்று சொல்லப்படுவது எது என்றால், எந்த ஓர் உயிரையும் கொலை செய்யாது இருக்க நினைக்கும் வழியே ஆகும்.

*நல்லாறு - நல்லவழி; சூழும் - நினைக்கும்; நெறி - வழி.*

5. துறவிகளில் யார் சிறந்தவர்?

**நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை.** 325

உலக வாழ்க்கை நிலைக்குப் பயந்து துறவறம் மேற்கொண்ட எல்லோர் உள்ளும், கொலை செய்ய பயந்து கொலை செய்யாது இருக்க நினைப்பவனே தலைசிறந்தவனாவான்.

*நீத்தார் - துறந்தார்; கொலைஅஞ்சி - கொலைக்குப் பயந்து;*

6. கொலை செய்யாது இருப்பதால் என்ன பயன்?

**கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லாது உயிர்உண்ணும் கூற்று.** 326

கொலை செய்யாமையைக் கடைப்பிடித்து வாழ்பவனின் வாழ்நாளை எடுக்க, உயிரை உண்கின்ற கூற்றுவன் கூடச் செல்லமாட்டான்.

*கூற்று - கூற்றுவன் (எமன்).*

7. எமது உயிருக்கு ஆபத்து வந்த போது அதனைக் காக்க பிற உயிரைக் கொல்லலாமா?

**தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்உயிர் நீக்கும் வினை.** 327

தன்உயிர் நீங்கிப் போனாலும், அதனைத் தடுக்க வேறொரு நல்ல உயிரைக் கொல்லும் செயலைச் செய்ய வேண்டாம்.

*இன்னுயிர் - இனிய உயிர் (நல்ல உயிர்)*

8. பெரும் செல்வம் கிடைப்பதற்காக சான்றோர் கொலை செய்யலாமா?

**நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்**
**கொன்றுஆகும் ஆக்கம் கடை. 328**

நல்ல பெருஞ்செல்வம் கிடைக்கும் எனினும், சான்றோர்க்கு கொலையால் வரும் செல்வம் இழிவானதேயாகும்.

*ஆக்கம் - பொருள்; கொன்றாகும் - கொலையால் வரும்; கடை - இழிவு.*

9. கொலையே தொழிலாக உடையவர்கள் இருக்கிறார்களே அவர்களைப் பற்றி என்ன நினைப்பது?

**கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவார் அகத்து. 329**

கொலையைத் தொழிலாகச் செய்யும் மனிதரை இழிதொழிலாளர் என்றே அதன் சிறுமை தெரிந்தவர் நினைப்பர்.

*புன்மை - சிறுமை; கொலை வினையர் - கொலைத் தொழில் செய்பவர்; மாக்கள் - மனிதர்; புலைவினையர் - இழிதொழிலாளர்;*

10. கொலைகாரரை எப்படி அறிவது?

**உயிர்உடம்பின் நீக்கியார்என்ப செயிர்உடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர். 330**

வறுமை வாட்ட, ஊனமுற்ற உடம்போடு இழிதொழில் செய்து வாழ்பவரை கொலைகாரர் என்று கூறுவர்.

*உயிர்உடம்பின் நீக்கியார் - கொலைகாரர்; செயிர் - ஊனம்; செல்லாத்தீ - வறுமை வாட்டல்.*

## 34. நிலையாமை

*(வாழ்வின் நிலை இல்லாத தன்மை)*

1. ஏன் நிலையாமையை அறியவேண்டும்?

**நில்லா தவற்றை நிலையின என்றுஉணரும்**
**புல்லறிவு ஆண்மை கடை.** 331

உடல், பொருள் போன்ற நிலையில்லாதவற்றை அழியாதவை என நினைக்கும் சிற்றறிவு உடையவராக இருத்தல் இழிவானதாகும்.

*நில்லாதவை - நிலையில்லாதவை; நிலையின - அழியாதவை; புல்லறிவு-சிற்றறிவு;*

2. செல்வம் ஒருவனிடம் வருவதும், அழிவதும் எதுபோன்றது?

**கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று. 332**

பெரும் செல்வம் வந்து சேர்வது, நாடகம் நடக்கும் அரங்கிற்கு மெல்ல மெல்ல மக்கள் கூட்டம் வந்து சேர்வது போன்றது. செல்வம் அழிவது, நாடகம் முடிந்ததும் கூட்டம் ஒரு சேரக் கலைந்து போவது போன்றது.

*கூத்தாடு அவை - நாடக அரங்கு; குழாம் - கூட்டம்; போக்கும் - போவதும்; விளித்தற்று - அழிவது போன்றது.*

3. செல்வம் சேரும் போது என்ன செய்ய வேண்டும்?

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்.** 333

நிலைத்து நில்லாத இயல்புடைய செல்வம் கிடைத்தால், நிலைத்து நிற்கும் நற்செயல்களை அப்போதே செய்ய வேண்டும்.

*அற்கா - நிலையாத; இயல்பிற்று - இயல்புடைய; அற்குப - நிலைத்து;*

4. எப்படி வாழும் நாள் சுருங்குவதை அறிவது?

**நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாள்அது உணர்வார்ப் பெறின்.** 334

ஒரு நாள் போவது போல எமக்குக் காட்டிக் கொண்டாலும், அதுவே(நாள்) எமது வாழ்நாளை அறுத்து உயிரை எடுக்கும் வாள் என்பதை நாம் உணர வேண்டும்.

*ஈரும் - அறுக்கும்.*

5. நல்ல செயல்களை எப்போது செய்ய வேண்டும்?

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.** 335

நாக்கு அடங்கி விக்கல் எழுவதற்கு(சாவதற்கு) முன், நல்ல செயல்களை விரைவாகச் செய்ய வேண்டும்.

*நாச்செற்று - நாவடங்கி; விக்குள் - விக்கல்;*
*மேற்சென்று - விரைவாக.*

6. இந்த உலகம் எதனைப் பெருமையாகவுடையது?

**நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு** 336

நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இறந்து இல்லாமல் போய்விட்டான் என்று சொல்லும் பெருமை உடையது இந்த உலகம்.

*நெருகல் - நேற்று; உளன் - இருந்தவன்;*

7. எவ்வளவு காலம் நாம் வாழலாம்?

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.** 337

ஒரு கணம் வாழ்வோமா என்பதை அறியமுடியாதார், நினைப்பதோ கோடியை விடப்பலமடங்காகும்.

*பொழுது - கணம்; கருதுப - நினைப்பது*

8. உடலுக்கும் உயிருக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது?

**குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு. 338**

உடலுக்கும் உயிருக்கும் இடையிலான தொடர்பு, முட்டையோடு தனித்து நீங்க அதனுள் இருந்து பறவை பறந்து செல்வதைப் போன்றது.

*குடம்பை - முட்டையோடு; ஒழிய - கிடக்க(நீங்க); புள் - பறவை; நட்பு - தொடர்பு.*

9. இறப்பும், பிறப்பும் எப்படிப்பட்டது?

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு. 339**

நித்திரை கொள்வது போன்றது இறப்பு, நித்திரையில் இருந்து விழிப்பது போன்றது பிறப்பு.

*சாக்காடு - இறப்பு; உறக்கம் - நித்திரை.*

10. ஏன் எந்தவோர் உயிரும் நிலையாக உடம்பினுள் இருப்பதில்லை?

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு. 340**

உடம்பினுள் ஒண்டிக் குடியிருந்த உயிர்க்கு, நிலையான வீடு அமையவில்லையோ?

*புக்கில் - நிலையானவீடு; துச்சில் - ஒண்டி;*

# 35. துறவு

*(பற்றுக்களைத் துறத்தல்)*

1. எதற்காக துறவு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும்?

**யாதனின் யாதனின் நீங்கினான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.** 341

எதெதிலிருந்து விலகி வாழ்கிறோமோ, அததிலிருந்து துன்பம் வருவதில்லை.

*நீங்கி - விலகி, நோதல் - துன்பம், இலன் - இல்லை.*

2. எப்போது துறவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்?

**வேண்டிண் உண்டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டு இயற்பால பல.** 342

துறவு வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பினால் எல்லாம் இருக்கும் போதே துறக்கவும். துறந்தபின்னர் விரைந்து வரும் இன்பங்கள் பல ஆகும்.

*வேண்டின் - விரும்பினால், ஈண்டு - விரைந்து.*

3. எவ்வாறு ஆசைகளைத் துறப்பது?

**அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு.** 343

ஐம்புலன்களையும் அடக்கி வெல்ல வேண்டும். விரும்பிய எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து விடவேண்டும்.

*ஆடல் - வெல்லல், ஐந்தன்புலம் - ஐம்புல இன்பம்,*
*ஒருங்கு - ஒன்று சேர.*

4. ஏன் எல்லாவற்றையும் முழுமையாகத் துறக்க வேண்டும்?

**இயல்புஆகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை**
**மயல்ஆகும் மற்றும் பெயர்த்து.** **344**

ஒன்றும் இல்லாது இருப்பதே துறவறத்தின் ஒழுக்கமாகும். ஏதேனும் உரிமையாக இருந்தால் அதுவே மீண்டும் உலகவாழ்வில் மயங்கக் காரணமாகும்.

*இயல்பு - ஒழுக்கம், நோன்பிற்கு - துறவறத்திற்கு, மயல் - மயக்கம்.*

5. உலகோடு வேறு தொடர்புகள் வைத்துக் கொள்ளலாமா?

**மற்றும் தொடர்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை.** **345**

பிறப்பை போக்க முற்படுவோர்க்கு இந்த உடம்பும் அதிகமாகும். வேறு தொடர்புகள் எதற்கு?

*அறுக்கல் - அறுத்தல் (போக்கல்), மிகை - அதிகமாகும்.*

6. யாவற்றையும் துறந்தவர்க்கு என்ன கிடைக்கும்?

**யான்எனது என்னுஞ் செருக்குஅறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்.** **346**

நான் எனது என்று கூறும் அகந்தையை நீக்கியவன், வானவர்க்கும் மேலான உயர்ந்த உலகத்தைச் சென்று அடைவான்.

*செருக்கு - அகந்தை, அறுப்பான் - நீக்குவான், புகும் - சேரும்.*

7. யான் எனது என்ற இருவகைப் பற்றினையும் விடாதவர்க்கு என்ன நடக்கும்?

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347

இருவகைப் பற்றினையும் இறுகப்பற்றி விடாமல் இருப்பவரை, துன்பங்களும் பற்றிப்பிடித்து விடாமல் இருக்கும்.

*பற்றினை - ஆசையினை, இடும்பைகள் - துன்பங்கள்.*

8. பற்றுக்களை விட்டவர்களில் யார் மேன்மை அடைவார்?

**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர். 348**

பற்றுக்களை முற்றாகத் துறந்தவர்களே மேன்மை அடைந்தார். மற்றவர்கள் பற்றுக்களின் வலையில் மயங்கி அகப்பட்டவர்களே ஆவார்.

*தீரத்துறந்தார் - முற்றாகத் துறந்தார்.*

9. எப்பொழுது நிலையாமை போகும்?

**பற்றுஅற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும். 349**

பற்றற்ற நிலையிலே தான் பிறப்பு இல்லாமல் போகும். அவை நீங்காத போது நிலையாமை இருக்கும்.

*பற்றற்றகண்ணே - பற்றற்ற நிலை.*

10. நிலையாமையைப் போக்க வழி என்ன?

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு. 350**

பற்றே இல்லாத இறைவனின் பற்றினைப் பிடித்துக் கொள்க. அப்பற்றைப் பிடித்துக் கொண்டு மற்றய ஆசைகளைப் போக்குக.

*பற்றற்றான் - பற்றே இல்லாத இறைவன், பற்றுக - பிடித்துக் கொள்க, பற்றுவிடற்கு - ஆசைகளைப் போக்க.*

## 36. மெய் உணர்தல்

*(நிலையான பொருளின் உண்மையை அறிதல்)*

1. மெய் உணர்வு இல்லாததால் என்ன நடக்கின்றது?

**பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்**
**மருளான்ஆம் மாணப் பிறப்பு.** 351

மெய்ப்பொருள் இல்லாத மற்ற எல்லாவற்றையும், மெய்ப்பொருள் என்று உணரும் மயக்கத்தால் துன்பம் தான் பிறக்கின்றது.

*மருள் - மயக்கம்; மாணா - துன்பம்.*

2. இந்த மயக்கம் நீங்குவதால் கிடைக்கும் பயன் என்ன?

**இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசுஅறு காட்சி யவர்க்கு.** 352

மயக்கம் நீங்கி மெய்உணர்வு பெற்றவர்க்கு, அம்மெய்உணர்வு துன்ப இருளை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்.

*இருள் - துன்பம்(பிறப்பு); மருள் - மயக்கம்;*
*மாசறுகாட்சியவர் - மெய்யுணர்வு பெற்றவர்.*

3. மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு எது அருகில் இருக்கும்?

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணியது உடைத்து.** 353

ஐயத்திலிருந்து விடுபட்டு மெய்யுணர்வு பெற்றவர்க்கு இந்த உலகத்தை விட முத்தி உலகம் அருகில் இருக்கும்.

*தெளிந்தார் - மெய்யுணர்வு பெற்றவர்; வையம் - உலகம்;*
*நணியது - அருகில்; ஞானம் - முத்தி உலகம் (வீட்டு உலகம்).*

4. ஐம்புலன்களின் உணர்வாலும் மெய்யுணர்வு பெறமுடியாதா?

**ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே**
**மெய்உணர்வு இல்லா தவர்க்கு. 354**

மெய்யுணர்வு இல்லாதவர்க்கு, ஐம்புல உணர்வும் சேர்ந்து இருந்த போதிலும் அவற்றால் பயன் இல்லை.

*ஐயுணர்வு - ஐம்புலஉணர்வு; எய்திய - சேர்ந்த;*
*பயம்இன்றே - பயன்இல்லை.*

5. எப்படி மெய்ப்பொருளை உணரமுடியும்?

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355**

எந்தப்பொருளும் எந்தத் தன்மை உடையதாக இருந்தாலும், அந்தப் பொருளின் உண்மையான தன்மையைக் காண்பதே அறிவு.(அந்த அறிவே மெய்ப்பொருளை உணர்த்தும்)

*மெய்ப்பொருள் - உண்மை (கடவுள்).*

6. மெய்ப்பொருளை அறிந்தவர் எப்படி வாழ்வார்?

**கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றுஈண்டு வாரா நெறி. 356**

கற்று இங்கு மெய்ப்பொருளை அறிந்தவர், மீண்டும் இவ்வுலக வாழ்வில் வராத நெறியில் புகுவர்(பிறப்பற்ற வழி).

*ஈண்டு - இங்கு(இவ்வுலகம்); தலைப்படுவர் - புகுவர்;*

7. இவர்கள் மீண்டும் பிறப்பார்களா?

**ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாய்**
**பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு. 357**

உலகப் பொருளை ஆராய்ந்து உண்மையை உள்ளம் உறுதியாக உணருமாயின், மீண்டும் பிறப்பு வரும் என நினைக்க வேண்டாம்.

*ஓர்த்து - ஆராய்ந்து; ஒருதலை - உறுதியாக;*
*பேர்த்து - மீண்டும்.*

8. அறியாமை நீங்க என்ன செய்ய வேண்டும்?

**பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு.** 358

பிறப்புக்குக் காரணமாகும் அறியாமை நீங்க, சிறந்தது என்று சொல்லப்படும் உண்மைப் பொருளைக் கண்டு மெய் உணர்தல் வேண்டும்.

*பேதைமை - அறியாமை; செம்பொருள் - உண்மைப் பொருள்.*

9. துன்பம் விலக வழி என்ன?

**சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்.** 359

எது உதவும் என்பதை உணர்ந்து பற்றை நீக்கி வாழ்ந்தால், அவனைச் சேர்ந்து நின்ற துன்பங்கள் சேராது விலகும்.

*சார்புகெட - பற்றை நீக்கி; சார்தரு - சேர்ந்து;*
*சார்தரா - சேரா; சார்தரும்நோய் - சேர்ந்து நின்ற துன்பங்கள்;*

10. துன்பம் எப்போது அழியும்?

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்.** 360

உலக வாழ்வில் காமம், கோபம், அறியாமை என்ற மூன்றின் பெயர்களும் அழிய வாழ்ந்தால் துன்பங்கள் அழியும்.

*வெகுளி - கோபம்; மயக்கம் - அறியாமை; நாமம் - பெயர்.*

# 37. அவா அறுத்தல்

*(ஆசையை நீக்குதல்)*

1. அவா என்றால் என்ன?

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**
**தவாஅப் பிறப்புஈனும் வித்து.** 361

எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் தவறாது பிறப்பை உண்டாக்கும் விதையை அவா என்று கூறுவர்.

*அவா - ஆசை; எஞ்ஞான்று - எப்பொழுதும்; தவா - தவறாது.*

2. எதை விரும்ப வேண்டும்?

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது**
**வேண்டாமை வேண்ட வரும்.** 362

விரும்பினால் பிறவாதிருக்க விரும்பவும். ஒரு பொருளையும் ஆசைப்படாத தன்மையை விரும்பினால் அந்தப் பிறவாநிலை கிடைக்கும்.

*வேண்டுங்கால் - விரும்பினால்; வேண்ட - விரும்ப;*
*வேண்டாமை - ஆசைப்படாமை.*

3. ஆசைப்படாமல் இருப்பதற்கு ஒப்பானது என்ன?

**வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை**
**யாண்டும் அ:துஒப்பது இல்.** 363

ஒரு பொருளையும் விரும்பாமல் வாழ்தல் போல சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை. அதற்கு ஒப்பானது எங்கும் இல்லை.

*வேண்டாமை - விரும்பாமை(அவா அற்றநிலை);*
*விழுச்செல்வம் - சிறந்த செல்வம்; ஈண்டு - இவ்வுலகம்;*
*யாண்டும் - எங்கும்; அ:து - அதற்கு.*

4. எதனால் அவா இன்மையைப் பெறலாம்?

**தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றுஅது**
**வாஅய்மை வேண்ட வரும். 364**

மனத்தூய்மை என்பது அவா இல்லாது இருத்தலே. அந்த மனத்தூய்மை, உண்மையை விரும்புவதால் வரும்.

*தூய்மை - மனச்சுத்தம்; வாய்மை - உண்மை.*

5. அவா அற்றவர் யார்?

**அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்**
**அற்றாக அற்றது இலர். 365**

பற்றற்றவர் என்று அழைக்கப்படுபவர் அவா இல்லாதவரே. மற்றவர்கள் முற்றாக ஆசைகளை நீங்கியவர்கள் அல்லர்.

*அற்றவர் - பற்றற்றவர்; அவாஅற்றார் - ஆசை இல்லாதவர்; அற்றாக - முற்றாக; அற்றது இலர் - நீங்கியவர் அல்லர்*

6. அவா என்ன செய்யும்?

**அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை**
**வஞ்சிப்பது ஓரும் அவா. 366**

அவாவே ஒருவனை வஞ்சித்துத் துன்பப்படவைப்பது. அதற்குப் பயப்படுவதே அறமாகும்.

*அஞ்சுவது - பயப்படுவது; அவா - ஆசை;*

7. ஆசையை முழுமையாக விட்டால் என்ன வரும்?

**அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டும் ஆற்றான் வரும். 367**

ஆசையை முழுமையாக விட்டால், ஒருவன் செய்வதற்கு உரிய செயல் அவன் விரும்பும் வழியால் தவறாது வரும்.

*வினை - செயல்; ஆற்றஅறுப்பின் - முழுமையாகவிட்டால்; தவா - தவறாது; ஆற்றான் - வழியால்; அவா - ஆசை.*

8. அவா இருந்தால் என்ன?

**அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுஉண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்.** 368

அவா இல்லாதவர்க்குத் துன்பம் இல்லை. ஆசை இருந்தால் தவறாது துன்பம் மேலும் மேலும் வரும்.

*தவா - தவறாது; அவா - ஆசை.*

9. இன்பம் எப்போது வரும்?

**இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.** 369

துன்பங்களிலே மிகக்கொடிய துன்பமான அவா அழிந்தால், இன்பம் தொடர்ந்து பெருகும்.

*இடையறாது - தொடர்ந்து; ஈண்டும் - பெருகும்;*
*துன்பத்துள்துன்பம் - கொடிய துன்பம்; கெடின் - அழிந்தால்.*

10. பேராசையை நீக்கினால் என்ன கிடைக்கும்?

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.** 370

பேராசையை நீக்கினால் அப்பொழுதே நிலைத்த பெரும்பேறு (வீடு பேறு) கிடைக்கும்.

*ஆராஇயற்கை - அடங்காத தன்மை; நீப்பின் - நீக்கினால்;*
*ஆராஇயற்கைஅவா - பேராசை; அந்நிலையே - அப்பொழுதே;*
*பேரா - நிலைத்த (அசையாத); இயற்கை - பாக்கியம் (பேறு).*

# ஊழ் இயல்

## 38. ஊழ்

*(விதியின் தன்மை)*

1. ஊழின் தன்மை என்ன?

**ஆகுஊழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள்**
**போகுஊழால் தோன்றும் மடி.** 371

எல்லாச் செல்வமும் வருவதற்குக் காரணமான ஊழால் (ஆகு ஊழ்) முயற்சி உண்டாகும். அது கைப்பொருளைத் தரும். அப்பொருள் அழிந்து போவதற்கு காரணமான ஊழால் (போகுஊழ்) சோம்பல் உண்டாகும்.

*ஆகூழ் - ஆவதற்குக் காரணமான ஊழ்; அசைவின்மை - முயற்சி; போகூழ் - போவதற்குக் காரணமான ஊழ்; மடி - சோம்பல்.*

2. கற்ற அறிஞரையும் ஊழ் மாற்றுமா?

**பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவுஅகற்றும்**
**ஆகல்ஊழ் உற்றக் கடை.** 372

பொருளை இழத்தற்கான ஊழ் அறிவைக் கெடுத்து அறிவிலி ஆக்கும். பொருள் உண்டாவதற்கான ஊழ் அறிவை மேலும் கூட்டும்.

*பேதை - அறிவிலி; இழவு ஊழ் - இழத்தற்கான ஊழ்; ஆகல்ஊழ் - உண்டாவதற்கான ஊழ்*

3. கூர்ந்த அறிவுள்ள நூல்களைக் கற்றவர் என்னாவர்?

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்**
**உண்மை அறிவே மிகும்.** 373

கூர்ந்த அறிவு தரும் நூல்கள் பலவற்றைக் கற்றாலும் அவருக்கும் தன் இயல்பான அறிவே மிகுந்து நிற்கும்.

*நுண்ணிய - கூர்ந்த.*

4. இயற்கையாக ஊழ் எத்தனை விதம்?

**இருவேறு உலகத்து இயற்கை திருவேறு**
**தெள்ளியர் ஆதலும் வேறு.** 374

ஊழ் உலகத்து இயல்பை இருவிதமாகப் பிரிக்கின்றது. செல்வம் உடையவர் ஆவதற்கான இயல்பு வேறு, அறிவு உடையவர் ஆவதற்கான இயல்பு வேறு.

*திரு - செல்வம்; தெள்ளியர் - அறிவுடையார்.*

5. செல்வத்தை உண்டாக்கும் முயற்சியில் இருப்போருக்கு ஊழ் என்ன செய்யும்?

**நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு.** 375

செல்வத்தைப் பெருக்கும் போதும் நல்லனவற்றை தீயன ஆக்கியும், தீயனவற்றை நல்லன ஆக்கியும் விடக்கூடும்.

*செயல் - பொருள் தேடுகை; செயற்கு - பெருக்குதற்கு.*

6. நாம் சேர்த்த செல்வத்தில் எது எம்மோடு நிற்கும்?

**பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம.** 376

எமக்கு ஊழ் இல்லாத பொருட்கள் வருந்திக் காத்தாலும் நில்லாமல் போய்விடும். கொண்டு போய்க் கொட்டினாலும் எமக்கு உரிய பொருட்கள் எம்மைவிட்டுப் போகாது நிற்கும்.

*பரிந்து - வருந்தி; பால் - ஊழ்; பால்அல்ல - ஊழ்இல்லாத; உய்த்துச் சொரிதல் - கொண்டு போய்க் கொட்டல்.*

7. செல்வத்தை தேடிக்குவிப்பவர் அதனை அனுபவிக்கமுடியுமா?

**வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.** 377

யார் யார்க்கு எவ்வளவு என்று வகுத்தவன் பகிர்ந்து கொடுத்த வகைப் படியல்லாமல், கோடிக்கணக்காகச் சேர்த்து வைத்திருப்பவர்க்கும் அனுபவிக்க முடியாது.

*வகுத்த - பகிர்ந்த; வகுத்தான் - தெய்வம்;*
*தொகுத்தார் - சேர்த்தார்; துய்த்தல் - அனுபவித்தல்.*

8. யார் செல்வத்தைத் துறப்பர்?

**துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால**
**ஊட்டா கழியும் எனின். 378**

ஊழால் வந்து சேரும் துன்பங்கள் எம்மை வருத்தாது நீங்குமெனில், அனுபவிக்க முடியாதவர் துறப்பர்.

*துப்புரவு - நுகர்ச்சி (அனுபவித்தல்); உறற்பால - வந்து சேரும்; ஊட்டா - வருத்தாது; கழியும் - நீங்கும்;*

9. இன்பமும் துன்பமும் ஊழால் வருகின்றன என்று எப்படிச் சொல்ல முடியும்?

**நன்றுஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆங்கால்**
**அல்லற் படுவது எவன். 379**

நன்மை வரும் பொழுது நல்லவையாகக் கண்டு மகிழ்பவர் அதற்கு மாறாக, தீமை வரும் போது துன்பப்படுவது ஏனோ? (இன்ப துன்பங்களை ஒன்றாகக் கருதலாமே)

*அல்லல் - துன்பம்; அல்லற்படுவது - துன்பப்படுவது.*

10. ஊழை விட வலிமை உடையது உண்டா?

**ஊழின் பெருவலி யாவுள மற்றுஒன்று**
**சூழினும் தான்முந் துறும். 380**

ஊழை மாற்ற இன்னொரு வழியைத் தேடினாலும், அவ்வழிக்கு முன்னே அது வந்து நிற்கும். ஆதலால் ஊழை விட வலிமை மிக்கவை எவை இருக்கின்றன?

*சூழிலும் - தேடினாலும்; முந்துறும்- முன்னே வந்து நிற்கும்;*

# பொருட்பால்

# அரசியல்

## 39. இறைமாட்சி

*(ஆள்பவனின் சிறப்பு)*

1. நாட்டை ஆள்பவரில் சிறந்தவன் யார்?

**படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.** 381

படையினரும், மக்களும், உணவும், அமைச்சர்களும், நண்பரும், நாட்டுக்குப் பாதுகாப்பான காவல் அரணும் ஆகிய ஆறும் இருப்பவனே ஆட்சிபுரிபவர்களில் ஆண் சிங்கம் போன்றவன்.

*குடி - மக்கள்; கூழ் - உணவு; நட்பு - நண்பர்கள்;*
*ஏறு - ஆண்சிங்கம்;*

2. ஆள்பவர்க்கு எந்தக்குணம் குறைவில்லாது இருக்கவேண்டும்?

**அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.** 382

ஆள்பவர்க்கு துணிவு, கொடை, அறிவு, முயற்சி என்ற நான்கு குணமும் குறைவுபடாது இருக்க வேண்டும்.

*அஞ்சாமை - துணிவு; ஈகை - கொடை; ஊக்கம் - முயற்சி;*
*வேந்தன் - ஆள்பவன்; எஞ்சாமை - குறைவுபடாமை;*
*இயல்பு - குணம்.*

3. ஆள்பவனுடன் நீங்காது நிலைத்து இருக்க வேண்டியவை எவை?

**தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன்ஆள் பவற்கு.** 383

நிலத்தை ஆள்பவனுக்கு சோர்வில்லாது எக்காரியத்தையும் விரைந்து செய்யும் ஆற்றல், கல்வி, காரியத்தில் உறுதி ஆகிய மூன்றும் நீங்காது இருக்க வேண்டும்.

*தூங்காமை - சோர்வடையாமை; துணிவு - உறுதி.*

4. ஆள்பவர்களிடம் எத்தகைய மானம் இருக்க வேண்டும்?

**அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா**
**மானம் உடையது அரசு.** **384**

அரசாள்பவர் அறவழியில் தவறாதவனாகவும், குடிகளிடம் உள்ள குற்றங்களை நீக்கி, வீரத்திற்கு இழிவுவராத மானம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

*இழுக்காது - தவறாது, மறன்இழுக்கா - வீரத்திற்கு இழிவு வராத, அல்லவை - குற்றங்கள்.*

5. ஆள்பவர் எதில் வல்லவராக இருக்க வேண்டும்?

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு.** **385**

பொருள் வரும்வழிகளை புதிதாக உருவாக்குவதிலும், அவ்வழிகளால் பொருளைப் பெருக்குவதிலும், அப்பொருளை பாதுகாப்பதிலும், காத்த பொருளை தேவைக்கு ஏற்ப பகிர்தலிலும் வல்லவராக ஆள்பவர் இருக்க வேண்டும். (அதாவது பொருளாதாரத்தில் வல்லவராக இருக்க வேண்டும்).

*இயற்றல் - புதிதாக உருவாக்குதல், ஈட்டல் - பெருக்குதல், வகுத்தல் - பகிர்தல்.*

6. எப்படிப்பட்டவர் ஆளும் நாட்டை உலகம் புகழ்ந்து கூறும்?

**காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.** **386**

நாட்டுமக்கள் எந்நேரத்திலும் பார்த்து பேசக்கூடியவராகவும், கொடிய சொற்களைப் பேசாதவராகவும் இருப்பவர் ஆளும் நாட்டை உலகம் புகழ்ந்து கூறும்.

*காட்சிக்கு எளியன் - எளிதில் பார்த்துக் கூடியவன், கடுஞ்சொல் - கொடியசொல், மீக்கூறும் - புகழ்ந்து கூறும்.*

7. இவ்வுலகம் யாருக்கு வசப்படும்?

**இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லாற்க்குத் தன்சொலால்**
**தான்கண் டனைத்துஇவ் வுலகு.** **387**

எல்லோரிடமும் இனியையாகப் பேசி அவர் விரும்பியதைக் கொடுத்துப் பாதுகாப்பதில் வல்லவர்க்கு, இவ்வுலகம் அவர் சொற்கேட்டு நினைப்பது போல நடக்கும்.

*ஈதல் - கொடுத்தல், அளித்தல் - பாதுகாத்தல், கண்டனைத்து - நினைப்பதுபோல.*

8. மக்கள் ஆள்பவரில் யாரைத் தலைவனாகக் கருதுவார்?

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும். 388**

நீதி தவறாது பாதுகாக்கும் ஆட்சியாளன், மக்களுக்குத் தலைவன் என்று கருதப்படுவான்.

*முறைசெய்து - நீதிதவறாது, இறை - தலைவன்.*

9. எத்தகைய குணமுடையவர் விருப்பப்படி இவ்வுலகம் இருக்கும்?

**செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ் தங்கும் உலகு. 389**

காதால் கேட்கமுடியாத வெறுப்பூட்டும் சொற்களையும் பொறுக்கும் குணமுடையவரின் விருப்பத்தின் கீழ் இவ்வுலகம் இருக்கும்.

*கவிகை - கவிதல் (விருப்பமாய் இருத்தல்)*

10. எத்தகைய ஆட்சியாளர் புகழுடன் இருப்பர்?

**கொடைஅளி செங்கோல் குடிஓப்பல் நான்கும்**
**உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி. 390**

கொடை, இரக்கம், நீதிதவறாமை, குடிமக்களைப் பேணுதல் ஆகிய நான்கும் உடைய ஆட்சியாளர் புகழுடன் விளங்குவர்.

*அளி - இரக்கம், செங்கோல் - நீதி தவறாமை,*
*குடிஓப்பல் - குடிமக்களைப் பேணுதல், ஒளி - புகழ்.*

## 40. கல்வி

*(கல்வியின் சிறப்பு)*

1. எத்தகைய நூல்களை எப்படிக் கற்று நடக்க வேண்டும்?

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** 391

கற்க வேண்டிய நூல்களை, சந்தேகம் நீங்கக் கற்க வேண்டும். கற்ற பின்னர் கற்ற கல்விக்குத் தகுந்தபடி நடக்க வேண்டும்.

*கசடற - குற்றம் நீங்க (சந்தேகம் நீங்க).*

2. ஏன் எண்ணும், எழுத்தும் முக்கியம்?

**எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்இரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு.** 392

எண் என்றும், எழுத்து என்றும் கூறப்படும் இவ்விரண்டினையும் மனிதரின் கண் என்று கூறுவர்.

*வாழும்உயிர் - மனிதர்*

3. கற்றவர்கள் யார்?

**கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு**
**புண்உடையர் கல்லா தவர்.** 393

கற்றோரே கண்ணுடையவர் என்று அழைக்கப்படுவர். படிக்காதவர் முகத்தில் இருப்பவை இரண்டு புண்களே.

4. கற்றவர் எப்படிப் பழகுவர்?

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.** 394

மகிழ்வுடன் சேர்ந்து பழகி பிரியும் போது மனம் வருந்துவதே அறிஞர் செயலாகும்.

*உவப்ப - மகிழ; தலைக்கூடி - சேர்ந்து;*
*உள்ளப்பிரிதல் - மனம் வருந்துதல்; தொழில் - செயல்.*

5. கற்பதை எந்த நிலையில் இருந்து கற்க வேண்டும்,

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.** 395

செல்வர்களின் முன் இல்லாதவர் பொருளுக்காக ஏங்கி நிற்றல் போல, கல்வியை ஏங்கி விரும்பிக் கற்றவரே கற்றவர். அப்படிக் கல்லாதவர் தாழ்ந்தவர் ஆவார்.

*உடையார் - செல்வர்; இல்லார் - வறியவர்; ஏக்கற்று - விரும்பி தாழ்ந்து நின்று.*

6. எப்படி அறிவை வளர்ப்பது?

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு.** 396

கேணியில் உள்ள மணலைத் தோண்டத் தோண்ட ஊறும் நீரின் அளவு கூடிக் கொண்டே போவது போல, மனிதர்க்கும் கற்கக் கற்க அறிவும் வளரும்.

*தொட்ட - தோண்ட; மாந்தர் - மனிதர்.*

7. ஒருவர் எதனையும் கற்காமல் இருக்கலாமா?

**யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.** 397

கற்றவர்க்கு எந்த நாடும் சொந்த நாடாகவும், எந்த ஊரும் சொந்த ஊராகவும் இருக்கும் போது ஒருவர் சாகும் வரையும் கல்வி கற்காமல் இருப்பது ஏன்?

*யாதானும் - எதுஎன்றாலும்; சாந்துணை - சாகும் வரை*

8. கல்வியால் வரும் நன்மை என்ன?

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து. 398**

ஒருவர் ஒருமனதாகக் கற்ற கல்வி, அவருக்கு வரும் தீமைகளைக் காக்கும் அரணாக நிற்கும்.

*ஒருமை - ஒருமனதாக; எழுமை - வரும் தீமை; ஏமாப்பு - அரண்.*

9. கற்றவர்கள் ஏன் மேலும் மேலும் கற்கிறார்கள்?

**தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார். 399**

தமக்கு இன்பம் தரும் கல்வி உலகத்தில் உள்ள யாவர்க்கும் இன்பம் தருவதைக் கண்டு, கற்றவர்கள் மேலும் மேலும் கற்க ஆசைப்படுகிறார்கள்.

*காமுறுவர் - விரும்புவர் (ஆசைப்படுவர்).*

10. கல்வி ஒரு செல்வம் ஆகுமா?

**கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடுஅல்ல மற்றை யவை. 400**

ஒருவருக்கு கல்வியே அழிவில்லாத சிறந்த செல்வம் ஆகும். ஏனையவை யாவும் செல்வங்கள் ஆகாது.

*கேடுஇல் - அழிவில்லாத; விழுச்செல்வம் - சிறந்த செல்வம்; மாடு - செல்வம்.*

# 41. கல்லாமை

*(கல்வி கற்காது இருத்தல்)*

1. கற்றவரது சபையில் கல்லாதவர் பேசுவது எது போலிருக்கும்?

**அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய**
**நூல்இன்றி கோட்டி கொளல்.** 401

அறிவுதரும் நூல்களைப் படியாது கற்றவரது சபையில் பேசுவது, விளையாடுவதற்கான தளத்தை அமையாது சூதாட்டக் காயை உருட்டினாற் போல இருக்கும்.

*அரங்கு - தளம்; வட்டு - சூதாட்டக்காய்; நிரம்பியநூல் - அறிவு நூல்; கோட்டிகொளல் - சபையில் பேசுவது.*

2. கல்லாதவர் ஒன்றைச் சபையில் கூறவிரும்பலாமா?

**கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று.** 402

கல்லதாவர் ஒன்றைச் சபையில் கூறவிரும்புதல் இரண்டு முலைகளும் இல்லாத ஒருத்தி பெண்மையை விரும்பியது போன்றதாகும்.

*காமுறுதல் - விரும்புதல்.*

3. கல்லாதவரும் மிக நல்லவர் ஆவது எப்போது?

**கல்லா தவரும் நனிநல்லார் கற்றார்முன்**
**சொல்லாது இருக்கப் பெறின்.** 403

கற்றவர் முன் தமக்குத் தெரியாதவற்றைத் தெரிந்ததாகச் சொல்லாதிருப்பாராயின் கல்லாதவரும் மிக நல்லவர் ஆவர்.

4. இயல்பாகவே அறிவுடைய கல்லாதவரை கற்றோர் ஏற்றுக் கொள்வரா?

**கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.** 404

கல்லதாவனின் அறிவு மிகவும் நன்றாக இருந்தாலும், அவனை அறிவுடையவன் என்று கற்றோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

*ஒட்பம் - அறிவு; கழிய - மிக.*

5. கல்லாதவனின் போலிகௌரவம் கற்றவர் முன் என்னாகும்?

**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்.** 405

கல்லாத ஒருவன் தன்னை பெருமைப்படுத்தும் தன்மை கற்ற அறிஞர்களுடன் சேர்ந்து உரையாடும் போது சோர்ந்து போகும்.

*தகைமை -பெருமை; தலைப்பெய்து - சேர்ந்து;*
*சொல்லாட - உரையாட.*

6. கல்லாதவர் எதற்குச் சமமானவர்?

**உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களர்அனையர் கல்லா தவர்.** 406

கல்லதாவர் (ஏதோ) இருக்கிறார் என்று சொல்லும் அளவினரெயன்றி பயன்படாத உவர் நிலத்திற்குச் சமமானவர்.

*உளர் - இருக்கிறார்; மாத்திரையர் - அளவினர்;*
*பயவா - பயன்தராத; களர் - உவர்நிலம்; அனையர் - சமமானவர்.*

7. கல்லதாவனுடைய அழகு எத்தகையது?

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று.** 407

நுண்ணியநல்ல நூல்களை நுட்பமாக ஆராய்ந்து அறியும் அறிவில்லதாவனின் அழகின் சிறப்பு, மண்ணால் செய்த பாவை அழகாகத் தோன்றுவது போன்றது.

*நுண்மாண் - நுண்ணியநல்ல; நுழைபுலம் - நுணுகி ஆராய்ந்த அறிவு; புனைபாவை - செய்தபாவை.*

8. கல்லதாவரிடம் இருக்கும் செல்வம் எதைக் கொடுக்கும்?

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு.** 408

நல்லவரிடம் வந்த வறுமையை விட, கல்லாதவரிடம் இருக்கும் செல்வம் மிக மிகத் துன்பத்தைக் கொடுக்கும்.

*இன்னாது - துன்பமானது; திரு - செல்வம்.*

9. மேன்மையுள்ள குடியில் பிறந்த கல்லாதவர்க்கு பெருமை உண்டா?

**மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்துஇலர் பாடு.** 409

சிறுமை மிக்க குடும்பத்தில் பிறந்து கற்றவர் அடையும் பெருமையை, மேன்மைமிக்க குடும்பத்தில் பிறந்த கல்லதாவர் அடையமாட்டார்.

*மேற்பிறந்தார் - மேன்மைமிக்க குடும்பத்தில் பிறந்தார்;*
*பாடு - பெருமை; கீழ்ப்பிறந்தார் - சிறுமைமிக்க குடும்பத்தில் பிறந்தார்.*

10. கல்லாதவர்க்கும் கற்றவர்க்கும் என்ன வேறுபாடு?

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.** 410

மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வேறுபாடே அறிவொளியைத் தருகின்ற நூல்களைக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இருக்கும்.

*விலங்கு - மிருகம்; இலங்கு - ஒளி;*

# 42. கேள்வி

*(காதால் கேட்டு அறிதல்)*

1. “கேள்வி” அது என்ன?

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை. 411**

செல்வங்களுள் எல்லாம் சிறந்த செல்வம் காதால் கேட்டறியும் கேள்விச் செல்வம். அச் செல்வமே மற்றைய செல்வங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது.

*செவிச்செல்வம் - கேள்விச் செல்வம்.*

2. எப்போது பசிக்காக வயிற்றுக்கு உணவு கொடுக்கலாம்?

**செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும். 412**

காதுக்கு உணவாக இருக்கின்ற கேள்வி ஞானம் கிடைக்காத போது, வயிற்றுக்கும் கொஞ்சம் உணவு கொடுக்கலாம்.

*செவிக்குஉணவு - கேள்விஞானம்; போழ்து - போது.*

3. கேள்விஞானம் உடையவர் யாருக்குச் சமமாக மதிக்கப்படுவர்?

**செவியுணவிற் கேள்வி உடையார் அவிஉணவின்**
**ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து. 413**

செவிஉணவாகிய கேள்வி ஞானம் உடையவர் நிலத்தில் காற்றை உணவாகக் கொள்ளும் துறவிகளுக்குச் சமமாவர்.

*அவி - காற்று; அவியுணவு - காற்று உணவு;*
*ஆன்றார் - அறிஞர்; அவிஉணவின் ஆன்றார் - காற்றை உணவாக் கொள்ளும் அறிஞர்.*

4. கல்லாதவனும் கேட்கலாமா?

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.** 414

கற்காதவன் ஆனாலும் கற்றவர் சொல்வதைக் கேட்டு அறிக. அது ஒருவர் வாழ்வில் தளர்வடையும் போது ஆதாரமாகத் தாங்கித் துணைபுரியும்.

*ஒற்கம் - தளர்வு; ஊற்றாம் - ஆதாரம்.*

5. எப்படிப்பட்டவரின் சொற்கள் வாழ்க்கைக்கு உதவும்?

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றெ**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.** 415

வழுக்கல் இருக்கும் இடத்தில் நடக்க ஊன்றுகோல் உதவுவது போல ஒழுக்கம் உடையவரது வாயிலிருந்து வரும் சொற்கள் வாழ்க்கைக்கு உதவும்.

*இழுக்கல் - வழுக்கல்; உழி - இடம்.*

6. கேட்பதை எந்த அளவுக்குக் கேட்க வேண்டும்?

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.** 416

எவ்வளவேனும் நல்ல அறிவுள்ளவற்றைக் கேட்டால் அந்த அளவுக்கு அது நிறைந்த பெருமையைத் தரும்.

*எனைத்தாலும் - எவ்வளவேனும்; அனைத்தானும் - அந்த அளவிற்கு; ஆன்ற - நிறைந்த.*

7. கேள்வி ஞானம் தவறான கருத்துரை வழிவகுக்காதா?

**பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துஉணர்ந்து**
**ஈண்டிய கேள்வி யவர்.** 417

நிறைந்த கேள்வி ஞானம் உடையவர் கருத்துக்களை தாமும் ஆராய்ந்து அறிந்ததுடன், பிழையாக உணர்ந்தாலும் அறிவற்ற சொற்களைச் சொல்லார்.

8. கேள்வி ஞானத்தைப் பெறாத காது எப்படிப்பட்டது?

**கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.** 418

கேட்கக் கூடியகாதாக இருந்தாலும் கேள்வியால் துளைக்கப் படாத காது செவிட்டுக் காதேயாகும்.

*தோட்கப் படாத - துளைக்கப்படாத.*

9. கேள்வி ஞானம் இல்லாதவர் எப்படிப்பட்டவர்?

**நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.** 419

நுட்பமான கேள்வி ஞானம் இல்லாதவர், பணிவான சொற்களைப் பேசுபவராக இருத்தலரிதாகும்.

*நுணங்கிய - நுண்ணிய; வணங்கிய - பணிவான;*
*வாயினர் - பேசுபவர்.*

10. வாய்ச்சுவையை விட செவிச்சுவை சிறந்ததா?

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.** 420

செவிச்சுவை உணராது, வாய்ச் சுவையை உணரும் மனிதர் இறந்தாலும், வாழ்ந்தாலும் என்ன?

*வாயுணர்வு - வாய்ச்சுவை; மாக்கள் - மனிதர்;*
*அவியினும் - இறந்தாலும்.*

# 43. அறிவுடைமை

*(அறிவு உடையவராக இருத்தல்)*

1. அறிவு என்றால் என்ன?

**அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்.** 421

அறிவு என்பது அழிவு வராது எம்மைக் காக்கும் கருவியாகும். அதுமட்டுமன்றி பகைவர்க்கும் எம் உள்ளே புகுந்து அழிக்க முடியாத அரண் ஆகும்.

*அற்றம் - அழிவு; செறுவார் - பகைவர்.*

2. அறிவு என்ன செய்யும்?

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.** 422

மனத்தை அது போன போக்கில் செல்ல விடாது தீமைகளை நீக்கி நல்ல வழியில் செல்லவைப்பது அறிவாகும்.

*செலவிடா - செல்லவிடாது; தீதுஒரீஇ - தீமைகளை நீக்கி; நன்றின்பால் - நல்லவழியில்; உய்ப்பது - செலுத்துவது.*

3. யார் எதைச் சொன்னாலும் கேட்டறிய வேண்டுமா?

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** 423

எந்தப் பொருள் பற்றியும் யார் எதைச் சொன்னாலும் கேட்டு, அவர்கள் சொல்வது சரியா பிழையா என்ற உண்மையைக் காண்பதே அறிவாகும்.

*மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்.*

4. அறிவை எப்படி உபயோகிப்பது?

**எண்பொருள் ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு.** 424

தான் சொல்பவற்றைப் பிறர் எளிதாகப் புரிந்து கொள்ளுமாறு சொல்லி, மற்றவர் சொல்வதிலுள்ள நுட்பமான கருத்துக்களைக் காண்பதே அறிவு.

*எண்பொருளவாக - எளிதான பொருளுடையனவாக;*
*நுண்பொருள் - நுட்பமான கருத்துக்கள்*

5. அறிவு எப்பொழுதாவது சுருங்குமா?

**உலகம் தழிஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு.** 425

உலகம் யாவையையும் பரந்து சூழ்ந்து கொண்டதே நுண்ணறிவாகும். அறிவிற்கு விரிந்து குவியும் தன்மை இல்லை (அது வளர்வது).

*தழீயது - சூழ்ந்தது; கூம்புதல் - குவிதல்; ஒட்பம் - நுண்ணறிவு; மலர்தல் - விரிதல்.*

6. உலகத்தோடு அறிவை எப்படிச் செயல்படுத்தலாம்?

**எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.** 426

உலகம் எவ்வாறு செயல்படுகின்றதோ அவ்வாறு உலகத்தோடு சேர்ந்து செயல்படுவதே அறிவாகும்.

*எவ்வது - எவ்வாறு; உறைவது - செல்வது;*
*அவ்வது - அவ்வாறு.*

7. அறிவுடையார்க்கும் அறிவிலார்க்கும் என்ன வித்தியாசம்?

**அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அ∴துஅறி கல்லா தவர்.** 427

அறிவுடையார் என்ன நடக்கப்போகின்றது என்பதை முன்னரே அறிந்து கொள்வர். அறிவில்லாதார் அதனை முன்னரே அறிய மாட்டார்கள்.

*ஆவது - நடக்கப் போவது.*

8. அறிவுடையவர் எதற்குப் பயப்படுவர்?

**அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்.** 428

பயப்பட வேண்டியவற்றுக்குப் பயப்படாது இருத்தல் அறியாமையாகும். பயப்பட வேண்டியவற்றுக்குப் பயப்படுவதே அறிவுடையவர் செயலாகும்.

*அஞ்சுசுவது - பயப்படுவது; அஞ்சாமை - பயப்படாமை; பேதைமை - அறியாமை; அஞ்சல் - பயப்படல்; தொழில் - செயல்.*

9. அறிவுடையவர்க்குத் துன்பம் வருமா?

**எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.** 429

வருமுன் காக்கும் அறிவுடையவர்க்கு, அதிர்ச்சி தரும் துன்பம் இருப்பதில்லை.

*எதிரதாக - வரக்கூடிய; அதிர - அதிர்ச்சி (நடுங்க); நோய் - துன்பம்.*

10. அறிவுடையவர் எத்தகைய செல்வர்?

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.** 430

அறிவுடையவரே எல்லாம் உடைய செல்வர். அறிவு இல்லாதவர் வேறுஎன்ன செல்வம் உடையவராக இருந்தாலும் ஒன்றும் இல்லாதவரே.

*உடையார்- செல்வர்; இலர் - இல்லாதவர்.*

## 44. குற்றம் கடிதல்

*(குற்றங்களை நீக்குதல்)*

1. யாருக்கு கல்வி செல்வங்களின் நிறைவு பெருமிதம் தரும்?

**செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து.** 431

அகங்காரம், ஆத்திரம், தீய நடத்தை இல்லாதவர் கல்வி, செல்வங்களின் நிறைவால் பெருமிதமடைவர்.

*செருக்கு - அகங்காரம்; சினம் - ஆத்திரம்; சிறுமை - தீயநடத்தை; பெருக்கம் - கல்வி, செல்வங்களின் நிறைவு.*

2. ஒரு தலைவன் செய்யக் கூடாத குற்றங்கள் எவை?

**இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு.** 432

பேராசையால் பொருள் கொடாமையும், பெருமையை அழிக்கும் மானமும், தேவை அற்ற ஆர்ப்பரிப்பும் ஒரு தலைவனுக்குக் குற்றங்களாகும்.

*இவறல் - பேராசையால் பொருள் கொடாதிருத்தல் (உலோபம்) மாணா உவகை - தேவையற்ற ஆர்ப்பரிப்பு; ஏதம் - குற்றம்.*

3. தம்மிடம் சிறிய குற்றம்வரினும் அதனைப் பெரிதாக் கருதுபவர் யார்?

**தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்.** 433

பழிக்கு நாணுபவர் தினையளவு சிறிய குற்றம்வரினும் அதனைப் பனையளவு பெரிதாக எடுத்துக் கொள்வர்.

*நாணுதல் - வெட்கப்படுதல்.*

4. எது ஒருவர்க்கு அழிவைத் தரும் பகையாகும்?

**குற்றமே காக்க பொருளாக குற்றமே**
**அற்றம் தருஉம் பகை** 434

தாம் செய்த குற்றமே ஒருவர்க்கு அழிவைத் தரும் பகையாகும். ஆதலால் குற்றம் வராமல் மதித்துக் காத்துக் கொள்ள வேண்டும்.

*பொருள் - மதிக்கப்படுவது; அற்றம் - அழிவு.*

5. குற்றம் செய்யாது எம்மைக் காத்துக் கொள்ள விட்டால் என்ன நடக்கும்?

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.** 435

குற்றம் வருவதற்கு முன்பே காத்துக் கொள்ளாதவன் வாழ்க்கை, நெருப்புக்கு முன்னர் வைக்கோல் போர் போல அழிந்து விடும்.

*எரி - நெருப்பு; வைத்தூறு - வைக்கோல் போர்.*

6. ஒரு தலைவன் குற்றமற்றவனாக இருக்க என்ன செய்ய வேண்டும்?

**தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
**என்குற்றம் ஆகும் இறைக்கு.** 436

முதலில் தன் குற்றத்ததைக் கண்டு அதனை நீக்கிய பின்னர் பிறர் குற்றத்தைக் காண்பானானால், அத்தகைய தலைவனுக்கு என்ன குற்றம் வரும்?

*இறை - தலைவன்.*

7. பேராசைக்காரனின் செல்வத்திற்கு என்ன நடக்கும்?

**செயற்பால செய்யாது இவறியான் செல்வம்**
**உயற்பாலது அன்றிக் கெடும்.** 437

செய்ய வேண்டியவற்றைச் செய்யாத பேராசைக்காரனின் செல்வம் எவருக்கும் பயன்படாது பாழாகும்.

*இவறியான் - பேராசைக்காரன்; கெடும் - பாழாகும்;*
*உயற்பாலது - பயன்படாதது.*

8. பேராசைப்படுவது நல்ல குணமா?

**பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன்று அன்று.** **438**

எந்தவொரு நல்லகுணங்களுடனும் சேர்த்து, ஒரு நல்லகுணமாக பொருள் மேல் பற்றுவைத்தல் ஆகிய பேராசைக்குணம் மதிக்கப்படுவதில்லை.

*இவறன்மை - பேராசைக்குணம்; அன்று - அல்ல;*
*எண்ணப்படுவது - மதிக்கப்படுவது.*

9. எந்தக் குற்றங்ககளைச் செய்யக் கூடாது?

**வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை.** **439**

எக்காலத்திலும் தன்னை உயர்வாக மதிக்கக் கூடாது. நன்மை தராத செயல்களை செய்ய விரும்பவும் கூடாது.

*வியத்தல் - மதித்தல்; எஞ்ஞான்றும் - எக்காலத்திலும்;*
*நயவதற்க - விரும்பவேண்டாம்; நன்றி - நன்மை;*
*வினை - செயல்.*

10. பகைவர் எண்ணம் பலியாதிருக்க தான் விரும்புவதை எப்படி அனுபவிக்க வேண்டும்?

**காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
**எதில எதிலார் நூல்.** **440**

தான் விரும்பியதை விரும்பியபடியே பகைவர் அறியாது அனுபவிப்பானானால், பகைவரின் எண்ணம் பலியாது போகும்.

*காதல் - விருப்பம்; உய்த்தல் - அனுபவித்தல்; ஏதில - பழுது;*
*ஏதிலார் - பகைவர்; நூல் - எண்ணம்.*

# 45. பெரியாரைத் துணைக் கோடல்

*(அறிவுள்ள பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல்)*

1. யாரைத் துணையாகக் கொள்வது நல்லது?

**அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறன்அறிந்து தேர்ந்து கொளல்.** 441

அறத்தை அறிந்த மூதறிஞர்களின் துணையை, கொள்ளும் வழியை அறிந்து தெரிந்தெடுத்துக் கொள்க.

*கேண்மை - நட்பு(துணை) திறன் - வழி.*

2. எத்தகைய பெரியாரைத் துணையகாக் கொள்ள வேண்டும்?

**உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.** 442

வந்த துன்பங்களை நீக்கி, இனியும் துன்பம் வராமல் காக்கும் தன்மையுடையாரைப் போற்றித் துணையாகக் கொள்ள வேண்டும்.

*உற்ற துன்பம் - வந்ததுன்பம்; உறாஅமை - வராது;*
*பெற்றியார் - தன்மையுடையவர்; பேணி - போற்றி.*

3. பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல் எளிதா?

**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.** 443

பெரியோரைப் போற்றி தமக்கு வேண்டியவர் ஆக்குதல், கிடைத்தற்கு அரியவற்றுள் எல்லாம் அரிதாகும்.

*பேணி - போற்றி, தமர் - தமக்கு வேண்டியவர்.*

4. பெரியாரை உறவாகக் கொள்வதால் என்ன நன்மை உண்டு?

**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.** 444

தம்மை விட அறிவாற்றல் உள்ள பெரியோரை உறவாக்கிக் கொள்ளுதலே தலைசிறந்த வலிமையாகும்.

*தமர் - உறவினர்; வன்மை - வலிமை.*

5. எப்படிப்பட்ட பெரியோரை துணையாக்கிக் கொள்ள வேண்டும்?

**சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளஎல்.** 445

செய்யத் தகுந்தவற்றை ஆராய்ந்து கூறும் பெரியோரை உலகம் கண்ணாக் கொண்டு ஒழுகுவதால், தலைவனும் தகுந்த பெரியோரை ஆராய்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

*சூழ்வார் - ஆராய்ந்து கூறுவார்; சூழ்ந்து - ஆராய்ந்து.*

6. தகுத்த பெரியோர்களுடன் சேர்ந்து நடப்பவனுக்கு பகைவர் செய்யக் கூடியது என்ன?

**தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்**
**செற்றார் செய்க்கிடந்தது இல்.** 446

தகுந்த பெரியோருடன் சோந்து நடக்க வல்லவனுக்கு, பகைவர் செய்யக்கூடியது ஏதுமில்லை.

*தக்கார் - தகுந்த; ஒழுகல் - நடத்தல்; செற்றார் - பகைவர்; செயக்கிடந்ததில் - செய்யக் கூடியது இல்லை.*

7. எத்தகைய பெரியோரைத் துணையாகக் கொண்டவரை யாரும் கெடுக்க முடியாது?

**இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்கும் தகைமை யவர்.** 447

தலைவன் விடும் பிழைகளை கண்டித்துக் கூறக்கூடிய பெரியோர்களைத் துணையாகக் கொண்ட தலைவனை, கெடுக்கும் ஆற்றல் உடையவர் யாவர்?

*இடித்தல் - கண்டித்தல்; ஆள்வான் - தலைவன்;*
*தகைமை - ஆற்றலுடையவர்.*

8. பெரியோர்கள் தலைவனுக்கு கண்டித்துக் கூறாது இருந்தால் என்ன நடக்கும்?

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும். 448**

பிழைகளைச் சுட்டிக்காட்டி இடித்துச் சொல்லும் பெரியோர்களின் பாதுகாவல் இல்லாத தலைவன், கெடுக்கும் பகைவர் இல்லாவிட்டாலும் தானே கெடுவான்.

*இடிப்பாரை - கண்டித்து சொல்வாரை; ஏமரா - பாதுகாப்பு இல்லாத.*

9. எதற்காக பெரியோர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும்?

**முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**
**சார்புஇலார்க்கு இல்லை நிலை. 449**

தொழிலில் முதல் போடாதவர்க்கு வருவாய் இல்லாதது போல, தம்மைத் தாங்கி நிற்கும் பெரியோரின் துணை இல்லாதவர் தலைவனாக நிலைத்து நிற்க முடியாது.

*முதல் - முதலீடு; ஊதியம் - வருவாய்; மதலை - தாங்கி நிற்றல்; சார்பு - துணை.*

10. பெரியோர்களின் தொடர்பைக் கைவிட்டால் என்ன?

**பல்லார் பகைகொள்லின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல். 450**

நல்ல பெரியோர்களின் தொடர்பைக் கைவிடல், பலரின் பகையைத் தேடிக்கொள்வதைப் போல பத்து மடங்கு தீமையைத் தரும்.

*பல்லார் - பலரின்; பத்தடுத்த - பத்து மடங்கு.*

# 46. சிற்றினம் சேராமை

*(சிறுமைக்குணமுடைய கீழோருடன் சேர்ந்து பழகாமை)*

1. சிற்றினத்தாருடன் சேரலாமா?

**சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாச் சூழ்ந்து விடும்.** 451

சிற்றினத்தாருடன் சேர பெரியோர் பயப்படுபர். சிறியோர் சிற்றினத்தாருடன் உறவினர் போலச் சூழ்ந்து கொள்வர்.

*அஞ்சும் - பயப்படும்; பெருமை - பெரியோர்.*

2. ஏன் அற்பகுணமுள்ளவர்களுடன் சேரக் கூடாது?

**நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்பது ஆகும் அறிவு.** 452

நிலத்தின் தன்மையால் நீரின் தன்மை மாறுதல் போல, தாம் சேர்ந்து பழகுபவரின் இயல்புக்குத் தக மனிதரின் அறிவு மாறும்.

*இயல்பு - தன்மை; திரிதல் - மாறுதல்; மாந்தர் - மனிதர்.*

3. ஒருவரின் குணம் அவரின் மனதைப் பொறுத்ததா, அல்லது அவர் சேரும் இனத்ததைப் பொறுத்ததா?

**மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்**
**இன்னான் எனப்படும் சொல்.** 453

ஒருவரின் மனநிலைக்கு தக்கவாறு உணர்ச்சி செயல்படும். ஆனால் அவர் இன்னார் என மற்றவர் சொல்லும் சொல் அவர் சேர்ந்திருக்கும் கூட்டத்ததைப் பொறுத்தே சொல்லப்படும்.

*மனத்தானாம் - மனநிலை; இன்னான் - இப்படிப்பட்டவன்.*

4. ஒருவரின் மன எண்ணங்களின் வெளிப்பாடு தானே அறிவு, அது எப்படி மாறும்?

**மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு**
**இனத்து உளதாகும் அறிவு.** 454

அறிவானது மனதில் இருந்து எண்ணங்களாக வெளிப்படுவது போலத் தோன்றினாலும், ஒருவர் சேர்ந்திருக்கும் கூட்டம் எப்படிச் செயல்படுகின்றதோ, அதுபோல் அவர் செயல்படுவதால் சேர்ந்திருக்கும் இனத்திற்குத் தக்கதாக அறிவு இருக்கும்.

5. ஒருவர் சேர்ந்திருக்கும் இனத்தால் என்ன கிடைக்கும்?

**மனம்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்**
**இனம்தூய்மை தூவா வரும்.** 455

மனத்தூய்மை செய்தொழில் தூய்மை ஆகிய இரண்டும், ஒருவர் சேர்ந்திருக்கும் இனத்தூய்மையால் தான் வரும்.

*செய்வினை - செய்தொழில்; தூவா - அதனாலே.*

6. நல்லவருடன் சேர்வதால் என்ன நன்மை உண்டு?

**மனம்தூயார்க்கு எச்சம் நன்றாகும் இனம்தூயார்க்கு**
**இல்லைநன்று ஆகா வினை.** 456

மனத்தூய்மை உள்ளவர்க்கு புகழ் நன்றாக அமையும். இனம் தூய்மை உள்ளவர்க்கு எல்லாச் செயல்களும் நன்மையாக முடியும்.

*எச்சம் - புகழ்; நன்று ஆகாதது இல்லை - நன்மையாகும்; வினை - செயல்.*

7. மனமும் சேரும் இனமும் நல்லதாக இருந்தால் வேறு என்ன நன்மைகள் உண்டு?

**மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.** 457

மனம் நல்லதானால் உயிர்கட்கு உயர்வும், சேரும் இனம் நல்லதானால் எல்லாவித புகழும் கிடைக்கும்.

*ஆக்கம் - உயர்வு.*

8. மனத்தூய்மை உள்ள சான்றோக்கு இனத்தூய்மை தேவையா?

**மனநலம் நன்குஉடையார் ஆயினும் சான்றோர்க்கு**
**இனநலம் எமாப்பு உடைத்து. 458**

நல்ல மனத்தூய்மை உடைய சான்றோர் ஆக இருந்தாலும் அவர் சேர்ந்திருக்கும் இனத்தின் நற்குணங்கள் மேலும் வலிமையைக் கொடுக்கும்.

*ஏமாப்பு - வலிமை; மனநலம் - மனத்தூய்மை; இனநலம் - இனத்தின் நற்குணங்கள்.*

9. மனத்தூய்மை எப்படி சிறப்படையும்?

**மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்**
**இனநலத்தின் ஏமாப்பு உடைத்து. 459**

மனத்தூய்மையைப் பொறுத்து மறுபிறப்பு அமையும். அந்த மனத்தூய்மை இனநலத்தால் மேலும் வலிமையுற்று சிறப்படையும்.

*மறுமை - மறுபிறப்பு; ஏமாப்பு - வலிமை.*

10. நல்லவரோடு சேர்வதாலும் தீயவரோடு சேர்வதாலும் கிடைப்பது என்ன?

**நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉம் இல். 460**

நல்லவரோடு சேர்வது போல் மிக உயர்ந்த துணையும் இல்லை, தீயவரோடு சேர்வது போல் துன்பம் தருவதும் வேறு இல்லை.

## 47. தெரிந்து செயல்வகை

*(ஒன்றைச் செய்கத் தொடங்குமுன் ஆராய்து செய்தல்)*

1. செய்யும் செயல்களை ஆராய்ந்து செய்வது எப்படி?

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமும் சூழ்ந்து செயல்.** 461

எதையும் செய்யத் தொடங்கு முன், அதனால் வரக்கூடிய செலவையும், செலவுக்குப் பின் வரும் நன்மையையும், அந்த நன்மையால் கிடைக்கும் வருவாயையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

*அழிவது - செலவு; ஆவது - நன்மை; ஊதியம் - வருவாய்.*

2. செய்யப்போகும் தொழிலில் அழிவுவருமா நன்மை வருமா என்பதை எப்படி அறிவது?

**தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்.** 462

அந்தத் தொழிலைத் தெரிந்தவரோடு ஆராய்ந்து தாமும் அதனைச் சிந்தித்து செய்தால் கிடைக்க முடியாத பொருளொன்றும் இல்லை.

*தெரிந்த இனம் - தொழில் தெரிந்தவர்; தேர்ந்து - ஆராய்ந்து.*

3. யார் அதிக இலாபம் வரும் என்றெண்ணி போட்ட முதலையும் இழக்கமாட்டார்?

**ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்.** 463

அதிக இலாபம் பெற எண்ணி போட்ட முதலையும் இழக்கும் தொழிலைச் செய்ய அறிவுடையார் முயலமாட்டார்.

*ஆக்கம் - இலாபம்; கருதி -எண்ணி; செய்வினை - செய்யும் தொழில்; ஊக்கார் - முயலமாட்டார்.*

4. யார் எது வித விளக்கமும் இன்றி ஒரு செயலைச் செய்யத் தொடங்க மாட்டார்கள்?

**தெளிவுஇ லதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்**
**ஏதப்பாடு அஞ்சு பவர்.** 464

இகழ்ச்சியால் வரும் வேதனைக்குப் பயப்படுபவர்கள் ஆராய்ந்து அறியாது தெளிவு இல்லாதவற்றைக் செய்யத் தொடங்க மாட்டார்கள்.

*இளிவு - இகழ்ச்சி; ஏதப்பாடு - துன்பம் (வேதனை).*

5. ஒரு செயலை ஆராயாது தொடங்கினால் அது யாருக்கு வலிமையைக்கொடுக்கும்?

**வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுப்பதோர் ஆறு.** 465

பலவகையாலும் ஆராய்ந்து பாராது ஒரு செயலைச் செய்யத் தொடங்குதல் பகைவரின் வலிமையை வளர்க்கும் ஒரு வழியாகும்.

*வகையற - பலவகையாலும்; சூழ்ந்து - ஆராய்து பாராது; எழுதல் - தொடங்குதல்; பாத்திப்படுப்பது - வலிமையை வளர்ப்பது.*

6. ஒன்றைச் செய்யும் போது எவற்றால் கெடுதி வரும்?

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.** 466

செய்யக் கூடாதவற்றை செய்வதாலும் கெடுதி வரும். செய்ய வேண்டியவற்றை செய்யாது விடுவதாலும் கெடுதி வரும்.

*செய்யத்தக்க அல்ல - செய்யக்கூடாது; செய்யத்தக்க - செய்ய வேண்டியது.*

7. ஒன்றைச் செய்ய தொடங்கிய பின் அதனைச் செய்யும் வழியைச் சிந்திக்கலாமா?

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.** 467

செயலைச் செய்யத் தொடங்கமுன் அதனைப்பற்றி முழுமையாகச் சிந்தித்து முடிவெடுங்கள். முடிவெடுத்துத் தொடங்கிய பின் சிந்தித்துப் பார்ப்போம் என்பது தவறாகும்.

*எண்ணி - சிந்தித்து; துணிக - முடிவெடுக்க; கருமம் - செயல்; இழுக்கு - தவறு.*

8. ஒரு செயலைச் செய்ய முயற்சிமட்டும் போதுமா அல்லது அது செயல்படும் வழியும் தெரிந்திருக்க வேண்டுமா?

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும். 468**

பலர் நின்று பாதுகாத்தாலும் இவ்வாறு செய்தால் இதனைச் செய்யலாம் என்ற செயல்த்திட்டத்தோடு செய்யப்படாத முயற்சி கெட்டுப் போகும்.

*ஆற்றின் - செயல்திட்டத்தோடு; வருத்தம் - முயற்சி; பொத்து - கெடுதி; போற்றினும் - பாதுகாப்பினும்.*

9. நாம் ஒருவருக்கு நன்மை செய்யும் போதும் அதனை ஆராய்ந்து பார்த்தா செய்ய வேண்டும்?

**நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்**
**பண்புஅறிந்து ஆற்றாக் கடை. 469**

அவரவர் குணத்தை ஆராய்ந்து செய்யாவிட்டால் நன்மை செய்வதிலும் தவறு வரும்.

*நன்று - நன்மை; ஆற்றல் - செய்தல்; பண்பறிந்து - குணத்தை அறிந்து; ஆற்றாக்கடை - செய்யாவிடின்.*

10. எப்படிப்பட்ட செயல்களைச் செய்ய வேண்டும்?

**எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு. 470**

தமக்குப் பொருந்தாததை உலகம் ஏற்றுக் கொள்ளாது. ஆதலால் உலகம் பழிக்காத செயல்களைச் சிந்தித்துச் செய்யவேண்டும்.

*எள்ளாத - பழிக்காத; எண்ணி - சிந்தித்து; கொள்ளாத - பொருந்தாத, கொள்ளாது - ஏற்றுக்கொள்ளாது.*

# 48. வலி அறிதல்

*(தன்வலிமையை தான் அறிந்து கொள்ளல்)*

1. ஒன்றைச் செய்வதற்கு முன்னர் என்ன செய்ய வேண்டும்?

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.** 471

செய்யப் போகும் செயலின் வலிமையையும் தனது வலிமையையும் பகைவரின் வலிமையையும் தனக்கு துணையாக இருப்பவர்களின் வலிமையையும் ஆராய்ந்து ஒன்றைச் செய்ய வேண்டும்.

*வினை - செயல்; மாற்றான் - பகைவன்;*
*தூக்கி - ஆராய்ந்து (சீர்தூக்கி).*

2. செய்யும் செயலின் வலிமையை அறிவதால் என்ன நன்மை?

**ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்.** 472

தன்னால் இயலும் செயலின் ஆற்றலை அறிந்து அச்செயலே கண்ணாக இருந்து செய்பவர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை.

*ஒல்வது - இயலும்; செல்லாதது - முடியதாது;*
*செல்வார்க்கு - செய்பவர்க்கு; அதன்கண்தங்கி - அதுவே கண்ணாக*

3. முயற்சி உடையவரும் தமது வலிமையை அறிய வேண்டுமா?

**உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.** 473

தம்முடைய வலிமையை அறியாமல் விடாமுயற்சியால் ஒன்றைச் செய்யத் தொடங்கி இடையிலே தோற்றவர் பலராவர்.

*ஊக்கத்தின் - விடாமுயற்சியால்; ஊக்கி - தொடங்கி;*
*இடைக்கண் - இடையில்; முரிந்தார் - தோற்றார்.*

4. தன் வலிமையை அறியாது தன்னை வியந்து பேசலாமா?

**அமைந்தாங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.** 474

எல்லோருடனும் சேர்ந்து நடக்காது தன் வலிமையையும் அறியாது தன்னைத் தானே வியந்து பேசுகின்றவன் விரைவில் கெடுவான்.

*அமைந்து - சேர்ந்து; ஒழுகான் - நடக்காதவன்;*
*அளவு - வலிமை.*

5. வலிமையின் அளவை ஏன் அறிய வேண்டும்?

**பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.** 475

மயில் இறகு ஏற்றுகின்ற வண்டியும் அந்த மயில் இறகை அளவுக்கு அதிகமாக ஏற்றினால் அச்சு முறியும் (வலிமையற்ற மயிலிறகு கூட வலிமையுள்ள அச்சை முறிக்கும்).

*பீலி - மயில் இறகு; சாகாடு - வண்டி; இறும் - முறியும்.*

6. ஒன்றைச் செய்து அதன் நுனிவரை சென்றவர் அதற்கு மேலும் செல்ல முயன்றால் என்ன நடக்கும்?

**நுனிக்கொம்பர் ஏறினார்அ.்.துஇறந்து ஊக்கின்**
**உயிர்க்குஇறுதி யாகி விடும்.** 476

ஒரு மரத்தின் நுனிக்கொம்பில் ஏறி நிற்பவர் அதற்கு மேலும் கடந்து செல்ல முயன்றால் அதுவே அவருடைய உயிருக்கு முடிவை உண்டாக்கும்.

7. தமது பொருளின் அளவு குறையாது எப்படிக் பிறருக்குக் கொடுப்பது?

**ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி.** 477

தமது செல்வநிலையின் அளவை அறிந்து மற்றவர்களுக்குக் கொடுக்கவும். அதுவே பொருளைப் பேணிக்காத்து பிறருக்கு வழங்கும் வழியாகும்.

*ஆற்றின் - செல்வநிலை; போற்றி - பேணிக்காத்து;*
*ஈக - கொடுக்குக; வழங்கும் - கொடுக்கும்; நெறி - வழி.*

8. பொருள் வரும் வழி சிறிதாக இருந்தால் என்ன செய்வது?,

**ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை**
**போகுஆறு அகலாக் கடை. 478**

பொருள் செலவழிந்து போகும் வழி பெரிதாக இல்லையானால் பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும் அழிவு இல்லை.

*ஆகுஆறு - வரும்வழி; இட்டிது - சிறியது;*
*போகுஆறு - செலவழியும் வழி.*

9. பொருளின் அளவு அறிந்து ஏன் வாழ வேண்டும்?,

**அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும். 479**

தன்னிடம் உள்ள பொருளின் அளவறிந்து வாழாதவன் வாழ்க்கை உள்ளது போல் தோற்றமளித்து பின்னர் இல்லாது அழிந்து போகும்.

*உளபோல - உள்ளது போல; தோன்றா - தோன்றி.*

10. தன்னிடம் உள்ள பொருளை உலக நலனுக்கு அள்ளி வழங்கலாமா?

**உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை**
**வளவரை வல்லைக் கெடும். 480**

தன்னிடம் உள்ள பொருளின் அளவை ஆராய்ந்து பாராது உலக நலனுக்காகக் கொடுக்கும் தன்மையால் பொருள் வளத்தின் அளவு விரைவாகக் கெடும்.

*உளவரை - உள்ள அளவு; தூக்காத - ஆராயாத;*
*வளவரை - வளத்தின் அளவு;*
*ஒப்புரவு - உலகநலனுக்குக் கொடுத்தல்; வல்லை - விரைவு.*

## 49. காலம் அறிதல்

*(ஒன்றைக் செய்வதற்கான ஏற்ற நேரத்தை அறிதல்)*

1. ஒன்றைச் செய்வதற்கு ஏன் ஏற்ற நேரம் பார்க்க வேண்டும்?

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.** 481

வலிமை மிக்க ஆந்தையை காகம் பகலில் வென்று விடும். அது போல ஒரு தலைவனுக்கு தன் பகையை வெல்ல ஏற்ற நேரம் மிகவும் முக்கியமானது.

*கூகை - ஆந்தை; இகல் - பகை; வேந்தன் - தலைவன்.*

2. நல்ல செயல்களை ஏன் காலம் தப்பாது உடனே செய்ய வேண்டும்?

**பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்கும் கயிறு.** 482

செய்வதை தகுந்த காலத்தோடு சேர்ந்து செய்தால் அது நற்செயல்கள் தம்மை விட்டு நீங்காது இறுகக் கட்டும் கயிறாக இருக்கும்.

*பருவத்தோடு - காலத்தோடு; ஒழுகல் - செய்தல்;*
*ஆர்க்கும் - கட்டும்; ஒட்ட - சேர்ந்து; திருவினை - நற்செயல்;*
*தீராமை - நீங்காது.*

3. எப்படிப்பட்ட செயல்களை காலம் அறிந்து செய்ய வேண்டும்?

**அருவினை என்ப உளவோ கருவியால்**
**காலம் அறிந்து செயின்.** 483

செய்வதற்கு ஏற்ற காரணத்தோடு தக்க காலத்தை அறிந்து செய்தால் செய்ய முடியாத செயல்களும் உண்டோ?

*அருவினை - செய்யமுடியாதசெயல்; உளவோ - உண்டோ;*
*கருவியான் - காரணத்தோடு.*

4. தாம் செய்யும் செயலால் உலகத்தையே அடைய நினைக்கலாமா?

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின். 484**

தக்க காலத்தை அறிந்து ஆற்றலுடன் செய்தால் உலகத்தை அடைய நினைத்தாலும் அது கிடைக்கும்.

*ஞாலம் - உலகம்; கருதினும் - நினைத்தாலும்;*
*கைகூடும் - கிடைக்கும்; இடத்தால் - ஆற்றலால்.*

5. உலகத்தையே அடையக்கூடியவர் காலத்தை எதிர்பார்க்க வேண்டுமா?

**காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர். 485**

எதுவித மனக்கலக்கமும் இல்லாது உலகத்தையே அடைய விரும்புபவர் அதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்து இருப்பார்.

*காலம் கருதி - காலத்தை எதிர்பார்த்து; ஞாலம் - உலகம்;*
*கருதுபவர் - விரும்புபவர்; கலங்காது - மனங்கலங்காது.*

6. வலிமை உடையவன் காலத்தை எதிர்பார்த்து இருத்தல் எது போன்றது?

**ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து. 486**

வலிமை உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கி இருத்தல் போர்புரியும் ஆட்டுக்கடா பாய்வதற்கு பின்வாங்குதல் போன்றது.

*ஊக்கம் - வலிமை, ஒடுக்கம் - அடங்கியிருத்தல்;*
*தகர் - ஆட்டுக்கடா; பொருதல் - போர்புரிதல்;*
*பேரும் - பெயர்தல்; தகைத்து - போன்றது.*

7. அறிவுடையவரும் தக்க காலத்தை எதிர்பார்ப்பாரா?

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து**
**உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487**

அறிவுடையார் கோபத்தைக் கூட விரைவாக அங்கே வெளிக்காட்டாது தமக்கு ஏற்ற காலம் வரும் வரையும் கறுவிக் கொண்டு இருப்பர்.

*பொள்ளென - விரைவாக; ஆங்கே - அங்கே;*
*வேரார் - கோபத்தைக்காட்டார்; புறம் - வெளியே;*
*உள்வேர்ப்பர் - கறுவுவார்; கறுவுதல் - மனதில்கோபம் கொள்ளுதல்.*

8. பகைவரை அழிக்க என்ன செய்ய வேண்டும்?

**செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
**காணின் கிழக்காம் தலை.** 488

பகைவரைக் கண்டால் பணிவாக நடக்கவும். அவர்களுக்கு அழிவுகாலம் வரும் போது நிலைமை தலைகீழாக மாறும்.

*செறுநர் - பகைவர்; சுமக்க - பணிக; இறுவரை - அழிவுகாலம்; கிழக்காம் தலை - தலைகீழாகும்.*

9. கிடைத்தற்கு அரிய காலம் கிடைத்தால் என்ன செய்ய வேண்டும்?

**எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்.** 489

கிடைத்தற்கு அரிய காலம் வந்து சேர்ந்தால் அப்பொழுதே செய்தற்கு அரிய செயல்களை செய்து முடித்துக் கொள்ள வேண்டும்.

*எய்தற்கு - கிடைத்தற்கு; இசைந்தக்கால் - சேர்ந்தால்; அந்நிலையே - அப்போதே.*

10. காலம் வாய்க்கும் வரை எப்படிக் காத்திருந்து செயல்பட வேண்டும்?

**கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்**
**குத்து ஒக்க சீர்த்த இடத்து** 490

மீன் வரும் வரை எதிர்பார்த்திருக்கும் கொக்குப் போல காலம் வரும் வரை காத்திருக்கவும். காலம் வாய்க்கும் போது கொக்கு மீனைக் குத்தல் போல மிக விரைவாக செயலைச் செய்து முடிக்க வேண்டும்.

*ஒக்க - போல; கூம்பும் - வாடுதல் (செயலற்று இருத்தல்); பருவத்து - காலத்தில்; சீர்த்தஇடத்து - காலம் வாய்ந்த இடத்து.*

# 50. இடன் அறிதல்

*(செயல்செய்ய ஏற்றஇடம் அறிதல்)*

1. மிகச்சிறிய வேலையைத் தொடங்கவும் ஏற்ற இடம் பார்க்க வேண்டுமா,?

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடம்கண்ட பின்அல் லது.** **491**

எந்த ஒரு செயலையும் இகழ்ந்து சிரிக்க வேண்டாம். செயலைச் செய்யத் தகுந்த முழுமையான இடத்தைக் கண்ட பின்னர் அல்லாமல் அதனைச் செய்யத் தொடங்க வேண்டாம்.

*வினை - செயல்; எள்ளுதல் - இகழ்ந்து சிரித்தல்; முற்றும் - முழுமையாக.*

2. எதற்காக ஒன்றைச் செய்ய ஏற்ற இடம் பார்க்க வேண்டும்?

**முரண்சேர்ந்த மொய்ம்பின் அவர்க்கும் அரண்சேர்ந்துஆம்**
**ஆக்கம் பலவும் தரும்.** **492**

பாதுகாப்பான இடம் அமைந்தால் அறியாமைமிக்க வலிமை உயுடையவர்க்கும் பெரும் பயன் கிடைக்கும்.

*முரண் - அறியாமை; சேர்ந்த - மிக்க; மொய்ம்பின் - வலிமை; சேர்ந்து - அமைந்து; அரண் - பாதுபாப்பான இடம்; ஆக்கம் பலவும் - பெரும்பயன்.*

3. ஏற்ற இடம் அமைந்தால் வறுமை உடையவரும் தொழில் செய்ய முடியுமா?

**ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்.** **493**

செயல் செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டறிந்து பகைவர் இடத்திலிருந்து பேணிக் காத்துச் செய்தால் வறுமை உடையவரும் வெல்வர்.

*ஆற்றாரும் - வறுமையுடையவரும்; ஆற்றி - செய்து; அடுப - வெல்வர்; போற்றார் - பகைவர்; கண் - இடத்தில்.*

4. தொழிலில் பகைவரின் சூழ்ச்சியைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

**எண்ணியர் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின். 494**

எந்தச் செயலையும் ஏற்ற இடத்தை அறிந்து நெருங்கியவர்களுடன் சேர்ந்து ஆலோசித்துச் செய்தால் சூழ்ச்சி செய்ய நோக்கம் கொண்டவர்கள் அதனைக் கைவிடுவர்.

*எண்ணியார் - நோக்கம் கொண்டவர்; எண்ணம் - சூழ்ச்சி;*
*துன்னியார் - நெருங்கியவர்; துன்னி - ஆலோசித்து;*
*இழப்பர் - கைவிடுவர்.*

5. இடத்தைப் பொறுத்து ஆற்றல் தொழிற்படும் என்பதை எப்படி அறிவது?

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற. 495**

ஆழமான நீரில் முதலை மற்றைய மிருகங்களை வெல்லும். ஆனால் நீரை விட்டு நீங்கினால் அதனைப் பிற மிருகங்கள் வெல்லும்.

*பெரும்புனல் - ஆழமான நீர்; அடும் - வெல்லும்.*

6. ஒவ்வொரு செயலும் அதற்கேற்ற இடத்தில் தான் செய்ய வேண்டும் என்பதை எப்படி அறிவது?

**கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து. 496**

காற்றில் விரைந்து செல்லும் நெடிய தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது (செயல்களை அதற்கேற்ற இடத்தில் செய்க).

*கால் - காற்று; வல் - விரைந்து; நாவாய் - கப்பல்.*

7. ஒரு செயலைச் செய்து முடிக்கத் தேவையான துணை என்ன?

**அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின். 497**

செய்யும் செயல் எப்போதும் நிலைத்திருக்கக் கூடிய வழிகளை நன்கு சிந்தித்து அதற்கேற்ற இடத்தில் செய்தால், இதைச் செய்வேன் என்ற மனத்திடம் தவிர்ந்த வேறு துணை தேவையில்லை.

*அஞ்சாமை - மனத்திடம்; அல்லால் - தவிர்ந்த;*
*வேண்டா - தேவையில்லை; எஞ்சாமை - எப்பொழுதும் நிலைத்திருத்தல்.*

8. சிறுபடை உள்ளவன் பெரும்படையை வெல்ல முடியுமா?

**சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்**
**ஊக்கம் அழிந்து விடும்.** **498**

சிறுபடையுள்ளவன் தன் செயல்கள் பலிக்குமிடத்தில் சேர்ந்திருப்பானானால் பெரும் படை உடையவனின் முயற்சி அழிந்து விடும்.

*செல்லிடம் - செயல்கள் பலிக்குமிடம்; உறுபடை - பெரும்படை; ஊக்கம் - முயற்சி.*

9. எவை இல்லாவிட்டால் தாம் வாழுகின்ற நிலத்தோடு சேர்ந்து வாழ மனிதரால் முடியாது?

**சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்**
**உறைநிலத்தோடு ஓட்டல் அரிது.** **499**

நல்ல பாதுகாப்பான இடமும் செல்வமும் இல்லையென்றால் மனிதர் தாம் வாழுகின்ற நிலத்தோடு ஓட்டி வாழ்தல் அரிதாகும்.

*சிறை - பாதுகாப்பான இடம்; மாந்தர் - மனிதர்;*
*உறைநிலத்தோடு - வாழும் நிலத்தோடு; ஓட்டல் - ஓட்டி வாழ்தல்.*

10. வலிமை உடையவர்க்கும் தக்க இடம் தேவை என்பதை எப்படி அறிவது?

**கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா**
**வேலாள் முகத்த களிறு.** **500**

எவர்க்கும் அஞ்சாது வேல்வீரர்களைக் குத்திக் கொம்பில் கோத்துத் திரியும் யானையும், கால் புதையும் சேற்று நிலத்தில் சிக்கிக் கொண்டால் நரியும் அதனைக் கொல்லும்.

*கண்அஞ்சா - அடங்காது; கால்ஆழ் - கால்புதையும்;*
*களரின் - சேற்றுநிலத்தில்; அடும் - கொல்லும்; வேலாள் - வேல் வீரர்.*

# 51. தெரிந்து தெளிதல்

*(செயல் செய்வதற்கு ஏற்றவரை ஆராய்ந்து அறிதல்)*

1. எவற்றை ஆராய்ந்து ஒருவரைத் தாம் செய்யும் செயலுக்குத் துணையாக உறுதி செய்ய வேண்டும்?,

**அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்**
**திறம்தெரிந்து தேறப் படும்.** 501

அறவழி நடப்பவரா, பொருளில் பேராசை இல்லாதவரா, இன்பங்களில் மூழ்காதவரா, தன்னுயிர்க்கு அஞ்சாதவரா என்ற நான்கு குணங்களையும் ஆராய்ந்து உறுதிப்படுத்த வேண்டும்.

*திறம் - குணம்; தெரிந்து - ஆராய்ந்து;*
*தேறப்படும் - உறுதிப்படுத்தல்;*

2. துணிவுடன் ஒன்றைச் செய்வதற்கு யாரைத் தெரிந்து எடுக்கலாம்?

**குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாண்உடையான் கட்டே தெளிவு.** 502

மேன்மையுள்ள குடும்பத்தில் பிறந்து குற்றங்கள் செய்யாதவனாய் பழிக்கு வருந்தி நாணுகின்றவனை துணிவுடன் தெரிந்து எடுக்கலாம்.

*குடிப்பிறந்து - மேன்மையுள்ள குடும்பத்தில் பிறந்து; தெளிவு - துணிவு; வடுப்பரியும் - பழிச்செயலுக்கு வருந்தும்.*

3. முழுமையான அறிவுள்ளவரையும் தெரிந்து எடுக்க வேண்டுமா?

**அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு.** 503

கிடைத்தற்கு அரிய நூல்களைக் கற்று குற்றங் குறையற்ற அறிஞராக இருந்தாலும் ஆராய்ந்து பார்த்தால் அவரிடத்தும் அறியாமை கொஞ்சம் இருக்கும்.

*ஆசு - குற்றம்; கண்ணும் - இடத்திலும்; வெளிறு - அறியாமை; தெரியுங்கால் - ஆராய்ந்தால்.*

4. ஒருவரின் குணத்தையா குற்றத்தையா ஆராய்ந்து பார்த்து அவரைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்?

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல். 504**

ஒருவரது குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் எது மிகவும் கூடுதலாக இருக்கின்றது என்பதைப் பார்த்து அவரைப் பற்றித் தெரிந்து கொள்க.

*நாடி - ஆராய்ந்து; மிகை - மிகவும் கூடுதலானது.*

5. ஒருவரின் பெருமையையும் சிறுமையையும் எதைக் கொண்டு மதிப்பிடலாம்?

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்**
**கருமமே கட்டளைக் கல். 505**

அவரவர் செய்யும் செயலை உரைக்கல்லாக வைத்து அவர்களின் பெருமையையும் சிறுமையையும் மதிப்பிடலாம்.

*கட்டளைக்கல் - தங்கத்தை உரைத்துப்பார்க்கும் கல்;*
*தம்தம் - அவரவர்; கருமம் - செயல்.*

6. ஒன்றைச் செய்வதற்கு யாரைத் தேர்ந்தெடுக்கக் கூடாது?

**அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றுஅவர்**
**பற்றிலர் நாணார் பழி. 506**

எதுவித தொடர்பும் அற்றவரைத் தேர்ந்தெடுக்க வேண்டாம். அவர்கள் பற்று இல்லாதவர் ஆதலால் பழிக்கு அஞ்ச மாட்டார்கள்.

*அற்றாரை - தொடர்பற்றவரை; ஓம்புக - விட்டு விடுக;*
*தேறுதல் - தெளிதல்; நாணார் - அஞ்சமாட்டார்.*

7. எம்மிடம் அன்புள்ளவர் என்பதற்காக ஒருவரைத் தேர்ந்து எடுக்கலாமா?

**காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்**
**பேதைமை எல்லாம் தரும். 507**

அன்பைக் காரணமாகக் கொண்டு அறிவில்லாத மூடரைத் தேர்ந்தெடுத்தால் அது எல்லா வித அறியாமையையும் தரும்.

*காதன்மை - அன்புடைமை; கந்தா - காரணம்;*
*அறிவு அறியார் - அறிவில்லாதமூடர்; தேறுதல் - தேர்ந்து எடுத்தல்;*
*பேதைமை - அறியாமை.*

8. ஆராய்ந்து பாராது எவ்வித தொடர்பும் இல்லாதவனைத் தேர்ந்து எடுக்கலாமா?

**தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
**தீரா இடும்பை தரும். 508**

ஆராய்ந்து பாராது எவ்வித தொடர்பும் இல்லாதவனைத் தோந்தெடுத்தால் அது அவனது சந்ததியினருக்கும் தீராத துன்பத்தைத் தரும்.

*தேரான் - ஆராய்ந்து பாராது; பிறனை - தொடர்பில்லாதவனை; இடும்பை - துன்பம்; தெளிந்தான் - தேர்ந்தெடுத்தான்; வழிமுறை - சந்ததி.*

9. ஒருவரை தேர்ந்தெடுத்த பின் சந்தேகிக்கலாமா?

**தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள். 509**

ஆராயாது யாரையும் தேர்ந்தெடுக்க வேண்டாம். தேர்ந்தெடுத்த பின்னர் தேர்ந்த மதிப்பீட்டைச் சந்தேகப்பட வேண்டாம்.

*தேராது - ஆராயாது; தேறற்க - தேர்ந்தெடுக்க வேண்டாம்; தேறும் - தேர்ந்த; பொருள் - மதிப்பீடு; தேறுக - சந்தேகப்படாது.*

10. சந்தேகப்பட்டால் என்ன நடக்கும்?

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும். 510**

ஆராயாது ஒருவரை தெரிவு செய்வதும், ஆராய்ந்து தேர்ந்து எடுத்தவரை சந்தேகப்படுவதும் தீராத துன்பத்தைத் தரும்.

*தேரான் - ஆராயாதான்; தெளிவு - தெரிவு; தெளிந்தான் - தேர்ந்தெடுத்தவன்; ஐயுறவும் - சந்தேகம்.*

# 52. தெரிந்து வினையாடல்

*(தெரிந்தெடுத்தவர்க்கு வேலை வழங்குதல்)*

1. ஒருவர்க்கு தொழில் வழங்குவதற்கு முன் என்ன செய்ய வேண்டும்?

**நன்மையயும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையாள் ஆளப் படும்.** **511**

ஒன்றைச் செய்யக் கொடுத்து செய்வதன் நன்மை தீமையை ஆராய்ந்து பார்த்து நன்றாக இருந்தால் தொழில் வழங்கலாம்.

*நாடி - ஆராய்ந்து; நலம்புரிந்து - நன்றாக இருந்தால்; ஆளப்படும் - வழங்கப்படும்.*

2. எப்படிப்பட்டவன் தொழில் செய்ய வேண்டும்?

**வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை.** **512**

வருவாய் வரும் திட்டங்களைப் பெருக்கி அதனால் செல்வ வளத்தை வளர்த்து இடையூறுகளை ஆராய்ந்து நீக்குபவனே தொழிலைச் செய்யட்டும்.

*வாரி - வருவாய்; வினை - தொழில்.*

3. தொழில் செய்யத் தகுந்தவனைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

**அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்**
**நன்குடையான் கட்டே தெளிவு.** **513**

தொழிலில் பற்றும், தொழில்பற்றிய அறிவும், அதனைச் செய்து முடிக்கும் துணிவும், பிறர் பொருளில் ஆசை இன்மையும் ஆகிய நான்கு பண்பும் இருப்பவனையே தொழிலுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

*தேற்றம் - செய்து முடிக்கும் துணிவு; அவா இன்மை - ஆசைப்படாமை; தெளிவு - தெரிவு;*

4. ஆராய்ந்து தேர்ந்து வேலை கொடுத்த பின்னர் மாறுபவர் உண்டா?

**எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறுஆகும் மாந்தர் பலர். 514**

எல்லா வகையாலும் ஆராய்ந்து தேர்ந்தெடுத்தாலும் செய்யும் வேலையின் தன்மையால் வேறுபடும் மனிதர் பலர் இருக்கிறார்கள்.

*எனைவகை - எல்லாவகை; தேறிய - ஆராய்ந்த;*
*வினைவகை - வேலையின் தன்மை; வேறாகும் - வேறுபடும்.*

5. திறமை உடையவருக்கா அல்லது அன்புடையவருக்கா வேலை கொடுக்க வேண்டும்?

**அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று. 515**

அறிந்து செய்யக்கூடிய திறமை உடையவர்க்கு இல்லாமல் எம்மேல் அன்புடையவர் என்ற காரணத்தால் ஒருவர்க்கு வேலை செய்யச் சொல்லக்கூடாது.

*ஆற்றி - செய்தல்; வினை - வேலை;*
*சிறந்தான் - அன்புடையவன்.*

6. செய்யும் செயலை எப்படிச் செய்ய வேண்டும்?

**செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**
**எய்த உணர்ந்து செயல். 516**

வேலை செய்பவனைத் தேர்ந்தெடுத்து, செய்யவேண்டிய வேலையையும் ஆராய்ந்து அது செய்து முடியவேண்டிய காலத்தையும் மனதிற் கொண்டு செயலைச் செய்ய வேண்டும்.

*நாடி - ஆராய்ந்து; வினை - வேலை; எய்த - பொருந்த;*
*உணர்ந்து - மனதிற்கொண்டு.*

7. யாரிடம் எந்த வேலையைக் கொடுக்கலாம் என்பதை எப்படி அறிவது?

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து**
**அதனை அவன்கண் விடல். 517**

இந்த வேலையை இவ்வழியால் இவன் முடிப்பான் என்று ஆராய்ந்து பார்த்து அவ்வேலையை அவனிடம் கொடுக்க வேண்டும்.

*இதனை - இவ்வேலையை; இதனால் - இவ்வழியால்.*

8. ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைத்த பின் என்ன செய்ய வேண்டும்?

**வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குரியன் ஆகச் செயல். 518**

வேலை செய்வதற்காக ஒருவனைத் தேர்ந்து எடுத்த பின்பு அவனை அவ்வேலையைச் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவனாக்கி உயர்வடையச் செய்ய வேண்டும்.

*வினை - வேலை; உரிமை - உரியவன்; நாடிய - தேர்ந்த;*
*பிற்றை - பின்பு; அதற்குரியன் - அதற்குத் தகுதியுடையவன்.*

9. வேலை செய்பவர் நட்பைத் தவறாக நினைக்கலாமா?

**வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக**
**நினைப்பானை நீங்கும் திரு. 519**

வேலையையே கண்ணும் கருத்துமாகச் செய்பவனுடைய நட்பைத் தவறாக நினைப்பவரை விட்டு எல்லாச் சிறப்புகளும் நீங்கும்.

*வினைக்கண் - வேலையில்; வினையுடையான் - கருத்தாய்*
*இருப்பவன்; கேண்மை - நட்பு; வேறாக - தவறாக;*
*திரு - செல்வம் (பெருமை).*

10. உலகம் கெட்டுப் போகாதிருக்க ஒரு தலைவன் என்ன செய்ய வேண்டும்?

**நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்**
**கோடாமை கோடாது உலகு. 520**

தலைவன் வேலை செய்பவனின் நேர்மையை நாள்தோறும் ஆராய்ந்தால் உலகம் கெடாது.

*நாடுக - ஆராய்க; மன்னன் - தலைவன்; வினை - வேலை;*
*கோடாமை - நேர்மை; கோடாது - கெடாது.*

# 53. சுற்றம் தழால்

*(சுற்றத்தாரை அணைத்து வாழ்தல்)*

1. சுற்றத்தாரிடம் இருக்கும் குணம் என்ன?

**பற்றற்ற கண்ணும் பழமை பாரட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே உள.** 521

ஒருவரின் செல்வம் யாவும் நீங்கி வறுமை வந்த நேரத்திலும் அவரின் பழைய நிலையைப் பாராட்டிப் பேசும் குணம் சுற்றத்தாரிடமே இருக்கும்.

*பற்றற்ற - செல்வம் நீங்கி; கண்ணும் - நேரத்திலும்;*
*பழமை - பழைய நிலை.*

2. அன்புள்ள உறவினரை உடையவர் எப்படி இருப்பர்?

**விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா**
**ஆக்கம் பலவும் தரும்.** 522

அன்பு நீங்காத சுற்றம் ஒருவருக்குக் கிடைத்தால் அது பல வழிகளிலும் கிளைவிட்டுப் பெருகும் செல்வங்களைத் தரும்.

*விருப்புஅறா - அன்புநீங்கா; இயையின் - கிடைத்தால்;*
*சுற்றம் - உறவினர்; அறுப்புஅறா - கிளைத்துப் பெருகும்;*
*ஆக்கம் - செல்வம்.*

3. உறவினரோடு சேர்ந்து பழகாதவர் வாழ்வு எப்படிப்பட்டது?

**அளவளாவு இல்லாதவர் வாழ்க்கை குளவளாக்**
**கோடுஇன்றி நீர்நிறைந் தற்று** 523

சுற்றத்தாரோடு சேர்ந்து பழகி சிரித்து மகிழாதவன் வாழ்க்கை, கரையில்லாக் குளத்தில் நீர் நிறைந்து கிடப்பது போல் பயனற்றதாகும்.

*அளவளாவுதல் - கூடி மகிழ்தல்; குளவளா - குளப்பரப்பு;*

4. ஒருவனிடம் செல்வம் இருப்பதால் மட்டும் அவன் பயன் அடைந்துவிட முடியுமா?

**சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.** 524

சுற்றத்தார் சூழ்ந்திருக்க அவருடன் சேர்ந்து வாழ்தலே, ஒருவர் செல்வம் பெற்றதால் பெறக்கூடிய பயனாகும்.

*சுற்றப்பட - சூழ்ந்திருக்க; ஒழுகல் - வாழ்தல்.*

5. சுற்றத்தார் சூழ தொடர்ந்து வாழ்வது எப்படி?

**கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும்.** 525

சுற்றத்தாருக்கு வேண்டியதைக் கொடுத்தும் இனிமையாகப் பேசியும் வாழ்பவர் தொடர்ந்து சுற்றத்தாரால் சூழப்படுவர்.

*கொடுத்தல் - உதவுதல்; அடுக்கிய - தொடர்ந்து;*
*ஆற்றின் - வாழின்; சுற்றப்படும் - சூழப்படும்.*

7. எப்படிப்பட்டவன் உலகத்தில் அதிக சுற்றமுடையவனாக இருப்பான்?

**பெரும்கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குஉடையார் மாநிலத்து இல்.** 526

பெருங்கொடையாளி ஆகவும் கோபம் கொள்ளாதவனாகவும் இருப்பவனைப்போல அதிக சுற்றம் உடையவன் உலகத்தில் யாரும் இல்லை.

*பேணான் - கொள்ளான், வெகுளி - கோபம்,*
*மருங்குடையார் - சுற்றம் உடையார், மாநிலம் - உலகம்.*

6. சுற்றத்தாரால் வரும் உயர்வு யாருக்குக் கிடைக்கும்?

**காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள.** 527

காகம் உணவைக் கண்டதும் அதனை மறைத்து வைக்காது தன் இனத்தை "கா" "கா" என அழைத்து உண்ணும். அத்தகைய குணம் உள்ளவர்க்கு சுற்றத்தாரால் வரும் உயர்வும் கிடைக்கும்.

*கரவா - மறைக்காது; ஆக்கம் - உயர்வும்;*

8. சுற்றத்தாரோடு எவ்விதம் வாழ வேண்டும்?

**பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார் பலர்.** 528

சுற்றத்தார் எல்லோரையும் ஒரே மாதிரியாகப் பாராமல், அவரவர் தகுதியைப் பார்த்துப் பழகி ஒரு தலைவன் வாழ்வானானால் அதற்காக வாழும் சுற்றத்தார் பலராவர்.

*பொது நோக்கான் - ஒரே மாதிரிப்பாராது; வேந்தன் - தலைவன்; வரிசை - தகுதி; நோக்கின் - பார்ப்பின்; அதுநோக்கி - அதற்காக.*

9. பிரிந்து போகும் சுற்றத்தார் என்ன செய்வர்?

**தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும்.** 529

உறவாய் இருந்து எம்மை விட்டுப்பிரிந்தவர் அதற்கான காரணம் சரியாகப் பொருந்தவில்லை என்று மீண்டும் சுற்றமாக வருவர்.

*தமர் - உறவு; தன்துறந்தார் - எம்மைப் பிரிந்தார்; அமராமை - பொருந்தாமை; இன்றி - இல்லை.*

10. பிரிந்து போய் மீண்டும் வரும் சுற்றத்தாரை என்ன செய்வது?

**உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்**
**இழைத்துஇருந்து எண்ணிக் கொளஸ்.** 530

தலைவனிடமிருந்து பிரிந்து போய் மீண்டும் ஒரு காரியம் கருதி வந்த சுற்றத்தாரை, அக்காரியத்தைச் செய்து கொடுத்து ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

*உழை - இடம்; காரணத்தின் - காரியம் (காரணத்தால் ஆவது); இழைத்து - செய்து; எண்ணி - ஆராய்ந்து.*

# 54. பொய்ச்சாவாமை

*(மறதி இல்லாமை)*

1. எப்படிப்பட்ட மறதி தீமையானது?

**இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு.** 531

அளவற்ற களியாட்ட மகிழ்ச்சியால் வரும் மறதி, அடங்காத கோபத்தை விடத் தீமையானதாகும்.

*இறந்த - அடங்காத; தீதே - தீமையானது;*
*உவகை - களியாட்டம்; சோர்வு - மறதி.*

2. மறதி என்ன செய்யயும்?,

**பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை**
**நீச்ச நிரப்புகொன் றாங்கு.** 532

நித்தம் உள்ள வறுமை அறிவை அழிப்பது போல மறதி புகழை அழிக்கும்.

*பொச்சாப்பு - மறதி; கொல்லும் - அழிக்கும்; நிச்சம் - நித்தம்;*
*நிரப்பு - வறுமை; கொன்றாங்கு - கொல்வது போல.*

3. மறதிக்காரருக்கு புகழ் இல்லை என்று எப்படித் தெரியும்?

**பொய்ச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து**
**எப்பால்நூ லோர்க்கும் துணிவு.** 533

மறதிக்காரருக்கு புகழ் இல்லை. அது உலகத்திலுள்ள எப்படிப்பட்ட அறிஞரும் ஏற்றுக்கொண்ட முடிவாகும்.

*பொய்ச்சாப்பார்க்கு - மறதிக்காரருக்கு; புகழ்மை - புகழுடைமை;*
*துணிவு - முடிவு; எப்பால் - எவ்வகைப்பட்ட; நூலோர் - அறிஞர்.*

4. மறதிக்காரருக்கு நன்மைகள் உண்டாகுமா?

**அச்ச முடையார்க்கு அரண்இல்லை ஆங்கில்லை**
**பொச்சாப்பு உடையார்க்கு நன்கு. 534**

பயந்து நடுங்குபவனைச் சுற்றி பெரிய காவற்கோட்டை இருப்பினும் அது பயன் அளிக்காதது போல மறதிக்காரருக்கு நன்மைகள் உண்டாவதில்லை

*அச்சம் - பயம்; அரண் - காவற்கோட்டை; பொச்சாப்பு - மறதி; நன்கு - நன்மை.*

5. தாம் செய்ய வேண்டிய செயலை மறந்திருந்தால் என்ன நடக்கும்?

**முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை**
**பின்ஊறு இரங்கி விடும். 535**

செய்ய வேண்டிய செயலை முன்பே அறிந்து காப்பாற்ற மறந்திருந்தவன் இடையூறு வந்தபின் தன் பிழையை நினைத்து வருந்த வேண்டிவரும்.

*முன்னுற - முன்பே; இழுக்கியான் - மறந்தவன்; ஊறு - இடையூறு.*

6. மறதி இல்லாமல் இருப்பதற்கு சமமானது என்ன?

**இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அ∴துஒப்பது இல். 536**

ஒருவர்க்கு எவரையும் எப்போதும் மறக்காது இருக்கும் குணம் நீங்காது இருக்குமாயின் அதற்குச் சமமானது ஒன்றுமே இல்லை.

*இழுக்காமை - மறவாத தன்மை; வழுக்காது - நீங்காது; அ∴து -அதற்கு; ஒப்பானது - சமமானது.*

7. எதனையும் மறவாதவனுக்கு செய்ய முடியாத காரியம் உண்டா?

**அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்**
**கருவியால் போற்றிச் செயின். 537**

செய்ய வேண்டிய காரியத்தை என்றும் மனதில் நினைத்து பேணிச் செய்தால் செய்தற்கரியது என்று எதுவுமே இல்லை.

*பொச்சாவா - மறவாது; போற்றி - பேணி; கருவி - மனம் (கரணம்).*

8. மறதியால் சோர்ந்து இருப்பவர்க்கு வரும் துன்பங்கள் நீங்குமா?

**புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையயும் இல். 538**

சான்றோர் புகழ்ந்த செயல்களைப் போற்றிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாது சோர்ந்து இருப்பவர்க்கு வரும் துன்பங்கள் தீராது.

*இகழ்ந்தார் - சோர்ந்தார்; எழுமை - வரும்துன்பம்; இல் - தீராது.*

9. செருக்கால் வேலை செய்ய மறந்திருப்பதைப் போக்க வழி என்ன?

**இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 539**

தம்முடைய மேன்மைகளால் வரும் மகிழ்ச்சியின் செருக்கால் வேலைசெய்ய மறந்திருக்கும் போது முன்பு இப்படி வேலையை மறந்திருந்து கெட்டவரை நினைக்க வேண்டும்

*இகழ்ச்சி - சோர்வு (மறதி); உள்ளுக - நினைக்குக; மைந்துறும் - செருக்கடையும்.*

10. நினைத்ததை அடைய வழி என்ன?

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின். 540**

தான் நினைத்ததை அடையும் வரை தொடர்ந்தும் அதனை நினைப்பானேயானால் நினைத்ததை அடைதல் எளிதாகும்.

*உள்ளியது - நினைத்தது; எய்தல் - அடைதல்.*

# 55. செங்கோன்மை

*(நீதி முறை - நல்ல அரசியல்)*

1. நீதி முறை என்றால் என்ன?

**ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய்வ∴தே முறை.** 541

யாருக்காகவும் இரக்கம் கொள்ளாது நடுவு நிலைமையோடு குற்றத்தை ஆராய்ந்து அதற்கு ஏற்ற தண்டனையை தேர்ந்து வழங்குவதே நீதி முறையாகும்.

*ஓர்ந்து - குற்றத்தை ஆராய்ந்து; கண்ணோடாது - இரங்காது; இறைபுரிந்து - நடுவு நிலைமையோடு; செய்வ∴தே - வழங்குவதே.*

2. குடிமக்கள் எதனை நோக்கி வாழ்வர்?

**வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி** 542

உலகமெல்லாம் வானத்து மழையை எதிர் நோக்கி வாழ்வது போல குடிமக்கள் தலைவனின் நீதியை நோக்கி வாழ்வார்.

*வான் - மழை; மன்னவன் - தலைவன்; கோல் - நீதி முறை; குடி - குடிமக்கள்.*

3. நீதியைக் கூறும் அறநூல்கள் உண்டாக எது காரணம்?

**அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல்.** 543

ஒரு தலைவனின் நீதிமுறையே அறவோர்களின் நூல்களும் அறமும் உண்டாகக் காரணமாக இருந்தது.

*அந்தணர் - அறவோர்; ஆதியாய் - மூலகாரனமாய்; நின்றது - இருந்துது; மன்னன் - தலைவன்; கோல் - நீதிமுறை;*

4. எத்தகைய தலைவனின் கீழ் இவ்வுலகம் சேர்ந்து நிற்கும்?

**குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.** 544

தனது குடிமக்களை அணைத்து நீதிசெலுத்தும் உலகத் தலைவனின் கீழ் இவ்வுவலகமே சேர்ந்து நிற்கும்.

*குடி - குடிமக்கள்; கோல்ஓச்சும் - நீதிசெலுத்தும்;*
*மாநிலம் - உலகம்; மன்னன் - தலைவன்; அடி - கீழ்.*

5. தலைவன் நீதியுடன் நடந்தால் அந்நாட்டிற்கு என்ன வந்து சேரும்?

**இயல்புளிக் கோல்ஓச்சம் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு.** 545

முறைப்படி நீதி செலுத்தும் தலைவனின் நாட்டில் பருவ மழையும் நல்ல விளைச்சலும் ஒன்றாக வந்து சேரும்.

*இயல்புளி - முறைப்படி; கோல்ஓச்சம் - நீதி செலுத்தும்;*
*நாட்ட - நாட்டில்; பெயலும் - மழையும்;*
*தொக்கு - ஒன்றாகச் சேர்தல்.*

6. ஒரு தலைவனுக்கு வெற்றி தருவது எது?

**வேல்அன்று வென்றி தருவது மன்னவன்**
**கோல்அதூஉம் கோடாது எனின்.** 546

தலைவனுக்கு வெற்றியைத் தருவது ஆயுதமல்ல அவனது நீதியே. அதுவும் எதுவித தவறும் இல்லாது இருக்க வேண்டும்.

*வேல் - ஆயுதம்; வென்றி - வெற்றி; கோடாது - தவறாது.*

7. ஒரு தலைவனைக் காப்பது எது?

**இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்.** 547

உலகத்தை எல்லாம் காக்கும் தலைவனை ஒருவித தடையும் இல்லாமல் அவன் செலுத்துகின்ற நீதிமுறையே காக்கும்.

*இறை - தலைவன்; வையகம் - உலகம்; முட்டா - தடை இன்றி.*

8. நீதியில்லாத தலைவனுக்கு என்ன நடக்கும்?

**எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தான் தானே கெடும்.** 548

நீதி கேட்டு வருவோர் எளிதாய்ப் பார்க்க முடியாதவனாய், ஆராய்ந்து நீதி வழங்காத தலைவன் தாழ்ந்த நிலை அடைந்து தானே கெடுவான்.

*முறை - நீதி; எண்பதம் - எளிமை; ஓரா - ஆராயாது;*
*செய்யா - வழங்கா; தண்பதம் - தாழ்நிலை.*

9. தலைவன் என்றாலும் பிறரைத் தண்டித்தல் பழி ஆகாதா?

**குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்**
**வடுஅன்று வேந்தன் தொழில்.** 549

குடிமக்களை பிறர் வருத்தாமல் காத்து, தானும் அவர்களைப் பேணி குற்றங்களைத் தண்டித்தல் பழி ஆகாது, அது தலைவனின் தொழிலாகும்.

*புறங்காத்து - பிறரிடமிருந்து காத்து; ஓம்பி - பேணி;*
*கடிதல் - தண்டித்தல்; வடு - பழி.*

10. கொலைத் தண்டனை வழ்ங்குவது எதற்குச் சமமானது?

**கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்.** 550

தலைவன் கொடியவர்க்குக் கொலைத் தண்டனை கொடுத்தல் பயிரைக் காப்பாற்ற உழவன் களையைப் பிடுங்குதலுக்குச் சமமாகும்.

*ஒறுத்தல் - தண்டித்தல்; வேந்தன் - தலைவன்;*
*கட்டல் - பிடுங்குதல் களைகளைதல்; பைங்கூழ் - பசியபயிர்.*

# 56. கொடுங்கோன்மை

*(அநீதி முறை - நெறியற்ற அரசியல்)*

1. பொருளுக்கு ஆசைப்பட்டு குடிமக்களைத் துன்பப்படுத்தும் தலைவன் எப்படிப்பட்டவன்?

**கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு**
**அல்லவை செய்துஒழுகும் வேந்து. 551**

பொருளுக்கு ஆசைப்பட்டு குடிமக்களை அலைத்துத் துன்படுத்தும் தலைவன் கொலையே தொழிலாகக் கொண்டவர்களிலும் கொடியவனாவான்.

*அலைமேற்கொண்டு - அலையச்செய்தல்; அல்லவை - துன்பம்.*

2. குடிமக்களைத் துன்புறுத்தி பொருள் வாங்குவது எதைப் போன்றது?

**வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு. 552**

வழிபறி கொள்ளைக்காரர் ஆயுதத்தைக் காட்டி வெருட்டி கையிலுள்ள பொருளைத் தா எனப்பறிப்பது போன்றதே தலைவனானவன் நீதி என்ற பெயரில் குடிமக்களைத் துன்பப்படுத்திப் பொருள் யாசிப்பதும்.

*வேல் - ஆயுதம்; இடு - கொடு (கையிலுள்ளதைத் தா);*
*இரவு - யாசிப்பது; கோல் - நீதி (தண்டனைக்கோல்).*

3. நாட்டு நிலையை ஆராயாத தலைவனின் நாடு என்னாகும்?

**நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும். 553**

நாட்டு நிலையை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து அதனை ஒழுங்கு செய்யாத தலைவனின் நாடு நாள்தோறும் கெட்டு அழியும்.

*நாடி - ஆராய்ந்து; முறை - ஒழுங்கு;*

4. அநீதியுடன் நடக்கும் தலைவன் எவற்றை இழப்பான்?

**கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு.** 554

வரப்போகும் விளைவை ஆராயாது அநீதியாக நடக்கும் தலைவன், முன்னிருந்த பொருட்களையும் மக்களின் மதிப்பையும் ஒன்றாகச்சேர்ந்து இழப்பான்.

*கூழ் - பொருள்; குடி - குடிமக்கள்; கோல்கோடி - அநீதி; சூழாது - ஆராயாது; ஒருங்கு - ஒன்றாக.*

5. அநீதியாக சேர்த்த செல்வத்தை அழிக்கும் படை எது?

**அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை.** 555

மக்கள் துன்பப்பட்டு தாங்கமுடியாது அழுத கண்ணீர் அல்லவா அநீதியாகச்சேர்த்த செல்வத்தை அழிக்கும் படையாகும்.

*அல்லல் - துன்பம்; ஆற்றாது - தாங்காது.*

6. தலைவர்களுக்குப் புகழைத் தருவது எது?

**மன்னர்க்கு மன்னுதல் செங்கோண்மை அ∴துஇன்றேல்**
**மன்னாவாம் மன்னர்க்கு ஒளி.** 556

தலைவர்களுக்கு நிலைத்த புகழைத் தருவது நீதி வழுவாமையே. அந்த நீதி இல்லையேல் புகழ் தலைவர்களிடம் நிலைத்து நிற்காது.

*மன்னர்க்கு - தலைவர்க்கு; இன்றேல் - இல்லையானால்; மன்னுதல் - நிலைத்தல்; மன்னாவாம் - நிலையாது; ஒளி - புகழ்.*

7. அநீதியான தலைவனின் கீழ் வாழும் மக்களின் நிலை எப்படிப்பட்டது?

**துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்**
**அளிஇன்மை வாழும் உயிர்க்கு.** 557

மழை இல்லாமை உலக உயிர்களுக்கு எத்தகைய துன்பத்தைக் கொடுக்குமோ அத்தகைய துன்பத்தை இரக்கமில்லாத தலைவனின் கீழ் வாழும் உயிர்களும் அடையும்.

*துளி - மழைத்துளி; ஞாலம் - உலகம்; எற்று - எத்தகைய; வேந்தன் - தலைவன்; அளி - இரக்கம்; அற்று - அத்தகைய.*

8. அநீதியான தலைவனின் கீழ் வாழும் செல்வந்தர் நிலை என்ன?

**இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா**
**மன்னவன் கோல்கீழ்ப் படின்.** 558

அநீதியான தலைவனின் கொடுமைக்குக் கீழ் வாழும் மக்களுக்கு வறுமையை விட செல்வம் இருப்பதே துன்பம் தருவதாகும்.

*இன்மை - வறுமை; இன்னாதது - துன்பம்;*
*உடைமை - செல்வம் முறைசெய்யா - அநீதியான;*
*கோல் - தண்டனை வழங்கும் தடி.*

9. தலைவன் செய்பவற்றை முறை தவறிச் செய்தால் என்ன நடக்கும்?

**முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல்.** 559

தலைவன் செய்பவற்றை முறைதவறிச் செய்தால் மழை பெய்யும் காலத்திலும் பெய்யாது போகும்.

*முறைகோடி - முறைதவறி; உறைகோடி - பெய்யாமை;*
*ஒல்லாது - செய்யாது.*

10. தலைவன் குடிமக்களைக் காப்பாற்றாது சுயநலமாக இருப்பின் நாட்டின் நிலை என்னவாகும்?

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்.** 560

தலைவன் குடிமக்களைக் காப்பாற்றத் தவறினால் அந்நாட்டில் பசுக்களால் வரும் பயன் இல்லாது போகும். அறுவகைப்பட்ட தொழில் செய்வோரும் தம் எண்ணங்களைக் கைவிடுவர்

*ஆ - பசு; அறுதொழில் - உழவு, சிற்பம், தொழில்(கம்மியர்.;),*
*வரைவு, வாணிகம், வித்தை; நூல் - எண்ணம்;*
*மறப்பர் - கைவிடுவர்.*

# 57. வெருவந்த செய்யாமை

*(பயப்படும் படியான செயல் செய்யாதிருத்தல்)*

1. யார் நீதியுள்ள தலைவன்?

**தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.** 561

குற்றங்களை நடுவுநிலையாக நின்று ஆராய்ந்து மீண்டும் அச்செயலைச் செய்யாதிருக்கும் படி அக்குற்றத்திற்கு ஏற்ப தண்டனை கொடுப்பவனே நீதியுள்ள தலைவனாவான்.

*தக்காங்கு - நடுவாகநின்று; நாடி - ஆராய்ந்து; தலைச்செல்லா - மீண்டும் செய்யாது; வண்ணம் - இருக்கும்படி; ஒத்தாங்கு - அதற்கேற்ப; ஒறுப்பது - தண்டிப்பது.*

2. குற்றவாளியை எப்படி தண்டிக்க வேண்டும்?

**கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்.** 562

தமது உயர்வுகள் நீண்ட காலம் நிற்க விரும்புபவர் குற்றவாளியைத் தண்டிக்கும் போது கடுமையான தண்டனை கொடுப்பவர் போலக்காட்டி மென்மையாக வழங்க வேண்டும்.

*கடிது - கடுமை; ஓச்சி - உயர்த்திக்காட்டி; மெல்ல - மென்மையான; நெடிது - நீண்டகாலம்; ஆக்கம் - உயர்வு; நீங்காமை - நீங்காது.*

3. மக்கள் பயப்படும்படி நடக்கும் தலைவனுக்கு என்ன நடக்கும்?

**வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன் ஆயின்**
**ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.** 563

மக்கள் பயப்படும்படி கொடுமை செய்து வாழும் அநீதியான தலைவன் உறுதியாக உடனே கெடுவான்.

*வெருந்த - பயப்படும்; ஒழுகும் - வாழும்; ஒல்லை - உடனே; ஒருவந்தம் - உறுதியாக; வெங்கோலன் - அநீதியான தலைவன்.*

4. கொடுமைக்காரன் என்று பிறர் சொல்ல நடந்தால் என்ன நடக்கும்?

**இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்**
**உறைகடுகி ஒல்லைக் கெடும். 564**

மக்களால் கொடுமைக்காரன் என்ற இனிமை இல்லாத சொல்லால் அழைக்கப்படும் தலைவனின் உயர்வுகள் விரைந்து உடனே கெடும்.

*உரைக்கும் - அழைக்கும்; இன்னா - இனிமை இல்லாத; உறை - உயர்வு; கடுகி - விரைந்து; ஒல்லை - உடனே.*

5. தம்மைக் காணவருபவரிடம் பாராமுகமாய் வெறுப்போடு நடப்பவரின் செல்வத்திற்கு என்ன நடக்கும்?

**அருஞ்செல்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்**
**பேஎய்கண் டன்னது உடைத்து. 565**

எளிதல் கண்டு பேசமுடியதாவானாய் கடுகடுத்த முகத்தோடு இருப்பவனின் பெருஞ்செல்வம் பூதம் காத்த செல்வம் போன்று பயனற்றதாகும்.

*அருஞ்செல்வி - பாராமுகம்; இன்னாமுகம் - கடுகடுத்தமுகம்; பேய் - பூதம்; கண்டது - கண்காணித்தல்; உடைத்து - போன்றது.*

6. கடுங்சொல்லும் இரக்கமின்மையும் உள்ளவரின் செல்வம் என்னவாகும்?

**கடுங்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்**
**நீடுஇன்றி ஆங்கே கெடும். 566**

கடுஞ்சொல்லும் இரக்கமின்மையும் இருப்பின் அவரது பெருஞ் செல்வம் வளர்ச்சி இன்றி அப்பொழுதே கெட்டழியும்.

*கண்ணிலன் - இரக்கமில்லாதவன்; நீடுஇன்றி - வளர்ச்சிஇன்றி; நெடுஞ்செல்வம் - பெருஞ்செல்வம்; ஆங்கே - அப்பொழுதே.*

7. குற்றத்தை விடத் தண்டனை அதிகம் கொடுத்தால் என்ன விளையும்?

**கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்**
**அடுமுரண் தேய்க்கும் அரம். 567**

தலைவன் கடுஞ்சொற்கூறி குற்றத்திற்கு அதிகமாகத் தண்டனை வழங்கினால் அது அவன் வலிமையைத் தேய்க்கும் அரமாக வந்து நிற்கும்.

*கடுமொழி -கடுஞ்சொல்; கைஇகந்த - குற்றத்தின் மிக்க; தண்டம் - தண்டனை; வேந்தன் - தலைவன்; அடுமுரண் - பகையை வெல்லும் வலிமை; முரண் - வலிமை.*

8. ஒருவர் செய்த குற்றத்திற்கு ஆத்திரப்பட்டு தண்டனை வழங்கினால் என்ன நடக்கும்?

**இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்**
**சீறின் சிறுகும் திரு.** 568

உரியவர்களுடன் சேர்ந்து சிந்தித்துப் பார்க்காது சினந்து கொண்டு மூர்க்கத்தனமாகத் தண்டனை வாங்கினால் தலைவனின் செல்வம் குறைந்து போகும்.

*இனத்து - உரியவர்கள்; எண்ணாத - சிந்திக்காத;*
*சிறுகும் - குறையும்.*

9. பகைவர் தாக்கவரும் போது பாதுகாப்பற்று வாழும் தலைவனின் நிலையென்னாகும்?

**செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்**
**வெருவந்த வெய்து கெடும்.** 569

முன்னரே தக்க பாதுகாப்பு செய்யாத தலைவன் சண்டை வந்த போது அச்சம் கொண்டு விரைந்து அழிவான்.

*செரு - சண்டை; சிறை - பாதுகாப்பு; வேந்தன் - தலைவன்;*
*வெய்து - விரைந்து; வெருவந்து - அச்சம் கொண்டு.*

10. அநீதி செய்பவர் கல்லதாவரைச் சேர்த்துக் கொள்வது எதற்காக?

**கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்லது**
**இல்லை நிலக்குப் பொறை.** 570

அநீதி செய்வபர் கல்லாதவரைச் சேர்த்துக் கொள்ளவிட்டால் நிலத்துக்கு வேறு பாரம் கிடையாதே.

*கல்லார் - படிக்காதவர்; பிணிக்கும் - சேர்க்கும்;*
*கடுங்கோல் - அநீதி; பொறை - பாரம்.*

# 58. கண்ணோட்டம்

*(மனநெகிழ்ச்சியைக் கண்ணில் காணல்)*

1. கண்ணோட்டத்தின் சிறப்பு என்ன?

**கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை**
**உண்மையான் உண்டுஇவ் வுலகு.** 571

இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு காரணமே கண்ணோட்டம் என்று சொல்லப்படும் சிறப்புமிக்க பேரழகேயாகும்.

*கழிபெருங்காரிகை - மிகுந்த பேரழகு; உண்மையான் - இருப்பதால்.*

2. உலகநடைமுறை எதில் தங்கியுள்ளது?

**கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அ∴திலார்**
**உண்மை நிலக்குப் பொறை.** 572

உலகநடைமுறை இரக்கத்தில் தங்கியுள்ளது. அது இல்லாதவர் உயிரோடு இருப்பது நிலத்துக்குப் பாரமேயாகும்.

*உலகியல் - உலகநடைமுறை; கண்ணோட்டம் - இரக்கம்; பொறை - பாரம்; உண்மை - உயிரோடிருத்தல்.*

3. இரக்கம் இல்லாத கண் எது போன்றது?

**பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.** 573

பாடுவதற்குப் பொருத்தமில்லாத பண்ணால் என்ன பயன் உண்டாகும்? அது போல இரக்கம் இல்லாத கண் என்ன பயனைக்கொடுக்கும்?

*பண் - இராகம் (இசை); கண்ணோட்டம் - இரக்கம்.*

4. முகத்தில் இருப்பது கண் தானே?

**உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்**
**கண்ணோட்டம் இல்லாத கண். 574**

மனநெகிழ்ச்சியை அளந்து காட்டும் கண்ணில்லாதவர் முகத்தில் கண் இருப்பது போல் இருந்து என்ன செய்யும்?

*கண்ணோட்டம் - மனநெகிழ்ச்சி; உளபோல் - இருப்பதுபோல்.*

5. இரக்கத்தைப் பார்க்கமுடியாத கண்ணை எப்படி அழைக்கலாம்?

**கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அ∴துஇன்றேல்**
**புண்என்று உணரப் படும். 575**

ஒருவர் கண்ணிற்கு அணியும் ஆபரணம் இரக்கமாகும். அது இல்லாத கண், புண் என்று அறிந்து கொள்ளவேண்டும்.

*அணிகலம் - ஆபரணம்; கண்ணோட்டம் - இரக்கம்.*

6. இரக்கமில்லாதவர் எதற்குச் சமமானவர்?

**மண்ணோடு இயைந்த மரத்துஅனையர் கண்ணோடு**
**இயைந்துகண் ணோடா தவர். 576**

கண்ணில் கனியும் கருணை இல்லாதவர் மண்ணோடு சேர்ந்து நிற்கும் மரத்திற்குச் சமமானவர்.

*இயைந்த - கனிந்த(சேர்ந்த); கண்ணோட்டம் - கருணை; அனையர் - சமமானவர்.*

7. இரக்கமில்லாதவரிடமும் இரக்கமுள்ளவரிடமும் இல்லாதது என்ன?

**கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்**
**கண்ணோட்டம் இன்மையும் இல். 577**

இரக்கமில்லாதவரிடம் கண் இல்லை. கண் உள்ளவரிடம் (இரக்கமுள்ளவரிடம்) இரக்கமில்லாத தன்மை இல்லை.

8. இந்த உலகம் யாருக்கு உரிமையானது?

**கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்துஇவ் உலகு.** 578

தான் செய்யும் கடமைக்கு இடையூறு வராமல் கனிவாக நடக்க வல்லவர்க்கு இந்த உலகம் உரிமையுடையதாகும்.

*கருமம் - கடமை; சிதையாமல் - இடையூறில்லாமல்; கண்ணோட - கனிவாக.*

9. எப்படிப்பட்ட இரக்ககுணம் சிறப்பானது?

**ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்**
**பொறுத்துஆற்றும் பண்பே தலை.** 579

தம்மை அழிக்கும் இயல்புள்ளவர் இடத்திலும் கனிவான உள்ளத்துடன் பொறுக்கும் குணமே தலைசிறந்தது.

*ஒறுத்து - அழிக்கும்; பண்பினர் - இயல்பினர்; கண்ணும் - இடத்தும்; பண்பே - குணமே; கண்ணோடி - கனிவான.*

10. கண்ணோட்டத்தின் மிகவுயர்ந்த சிறப்புநிலை என்ன?

**பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.** 580

மகிழ்ச்சியைத் தரும் கண்ணோட்டம் என்னும் நாகரிகத்தை விரும்புகின்றவர், தமக்கு நஞ்சை ஊற்றுவதைக் கண்ணால் பார்த்தும் அந்த நஞ்சை உண்டு அமைவர்.

*பெய - ஊற்ற; நாகரிகம் - கண்ணோட்டம்.*

# 59. ஒற்றாடல்

*(ஒற்றர்களைப் பயன்படுத்தல்)*

1. ஒரு தலைவன் உளவுத்துறையில் காக்க வேண்டியவை எவை?

**ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்**
**தெற்றென்க மனனவன் கண்.** 581

எங்கு என்ன நடக்கின்றது என்பதை அறியும் ஒற்றனையும், சிறந்த நீதியுரைக்கும் நூலையும் ஒரு தலைவன் தன் இரண்டு கண் போன்றவை எனவறிந்து காக்க வேண்டும்.

*ஒற்றும் - உளவறிதலும்; உரைசான்ற நூல் - நீதியுரைக்கும் நூல்; தெற்றென - அறிந்து;*

2. தலைவன் விரைவாக அறியவேண்டியது என்ன?

**எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**
**வல்லறிதல் வேந்தன் தொழில்.** 582

எல்லாரிடத்திலும் நடப்பவை எல்லாவற்றையும் எப்பொழுதும் விரைவாக உளவு அறிதல் தலைவன் கடமையாகும்.

*எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; வல்லறிதல் - விரைவாக அறிதல்.*

3. ஒற்றரால் ஒற்றறிந்து வந்த விடயத்தை ஆராய வேண்டுமா?

**ஒற்றனான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்**
**கொற்றம் கொளக்கிடந்தது இல்.** 583

ஒற்றரால் அறிந்து வந்தவற்றை ஆராய்ந்து பாராத தலைவன் வெற்றி அடைவதற்கு வேறு ஒருவழியும் இல்லை.

*கொற்றம் - வெற்றி; கொளக்கிடந்தது இல் - ஒருவழியுமில்லை.*

4. எவரை எல்லாம் உளவறிய வேண்டும்?

**வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு**
**அனைவரையும் ஆராய்வது ஒற்று.** 584

தனக்குக் கீழ் வேலை செய்பவர்கள் தனது சுற்றம் பகைவர்கள் அனைவரையும் ஆராய்ந்து அறிவதே உளவறிதலாகும்.

*வினை - வேலை. வேண்டாதார்- பகைவர் ஒற்று - உளவு.*

5. எப்படி உளவாளி உளவறிய வேண்டும்?

**கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்**
**உகாஅமை வல்லதே ஒற்று.** 585

கண்டவர் சந்தேகப்படாத உருவத்தோடு பிறர் சந்தேகப்பட்டு சினந்து பார்த்தாலும் பயப்படாது, எப்பொழுதும் மனதில் இருப்பதை வெளியே சொல்லாது அறிய வல்லதே உளவாகும்.

*கடாஅ - சந்தேகப்படாத; கண்ணஞ்சாது - பயப்படாது; யாண்டும் - எப்பொழுதும்; உகாமை - வெளியிடாமை; ஒற்று - உளவு.*

6. எப்படிப்பட்டவன் ஒற்றனாவான்?

**துறந்தார் படிவத்தர் ஆகி இறந்துஆராய்ந்து**
**என்செயினும் சோர்வுஇலது ஒற்று.** 586

முற்றம் துறந்த முனிவர்கள் போலவும் வேறு வேடங்களுடனும் செல்லமுடியாத இடங்களுக்குள் எல்லாம் உள்ளே சென்று, ஆராய்ந்து அறிந்து என்ன கொடுமைகள் செய்தாலும் சோர்வடைந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாதவனே ஒற்றனாவான்.

*படிவத்தர் - வேடம்போடுபவர்; இறந்து - உள்ளே சென்று.*

7. உளவறிய எத்தகைய திறமை இருக்க வேண்டும்?

**மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை**
**ஐயப்பாடு இல்லதே ஒற்று.** 587

மற்றவாகள் மறைவாகச் செய்கின்ற செயல்களையும் எப்படியாவது கேட்டு அறிவதுடன், அப்படி அறிந்தவைகளையும் சந்தேகமில்லாது தெளிவாகத் தெரிந்து கொள்ளும் திறமையும் இருக்க வேண்டும்.

*மறைந்தவை - மறைவாகச் செய்பவவை; ஐயப்பாடு இல்லது - தெளிவாகத் தெரிந்து.*

8. ஓர் உளவாளி ஒற்றித் தந்த உளவை அப்படியே நம்பலாமா?

**ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588**

ஓர் உளவாளி உளவறிந்து தந்த ஒரு விடயத்தை இன்னொரு உளவாளியால் உளவறிந்து கொள்ளுங்கள்.

*ஒற்று - உளவாளி; ஒற்றி - உளவறிந்த; பொருளை - விடயத்தை; மற்றுமோர் - இன்னொரு; ஒற்றினால் - உளவாளியால்.*

9. எப்படி உளவாளிகள் சொல்வது உண்மை என அறிவது?

**ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்**
**சொல்தொக்க தேறப் படும். 589**

ஓர் உளவாளிக்கு மற்ற உளவாளி யார் என்று தெரியாதபடி அவர்களைக் கையாள வேண்டும். மூன்று உளவாளிகள் சொல்வன பொருந்தினால் அச்செய்தியை நம்பலாம்.

*ஒற்றுஒற்று - உளவாளிக்கு உளவாளி;*
*உணராமை - தெரியாதபடி; ஆள்க - கையாள்க;*
*தொக்க - பொருந்த; தேறப்படும் - நம்பப்படும்.*

10. உளவாளியின் திறமைக்குச் சிறப்புச் செய்யும் போது மற்றவர் அறியச் செய்யலாமா?

**சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்**
**புறப்படுத்தான் ஆகும் மறை. 590**

உளவாளிக்குச் சிறப்புச் செய்யும் போது மற்றவர் அறியச் செய்ய வேண்டாம். அப்படிச் செய்தால் மறைந்திருக்க வேண்டிய இரகசியங்களை வெளிபடுத்தியதாக முடியும்.

*ஒற்றின்கண் - உளவாளிக்கு; புறப்படும் - வெளிப்படும்;*
*ஆகும் - முடியும்; மறை - இரகசியம்.*

# 60. ஊக்கம் உடைமை

*(ஊக்கம் உள்ளவராய் இருத்தல்)*

1. எதை வைத்திருப்பவர் செல்வராவார்?

**உடையார் எனப்படுவது ஊக்கம்அ.்.து இல்லார்**
**உடையது உடையாரோ மற்று.** 591

ஊக்கத்தை தமது உடைமையாக வைத்திருப்பரே செல்வர் ஆவார். அது இல்லதாவர் வேறு எதை வைத்திருந்தாலும் செல்வராவாரோ?

*உடையார் - செல்வர் அ.்.து - அது; மற்று - வேறு;*
*உடையது - வைத்திருத்தல்; உடையரோ - செல்வரோ.*

2. செல்வம் என்று ஊக்கத்தையா பொருளையா சொல்வது?

**உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை**
**நில்லாது நீங்கி விடும்.** 592

ஊக்கத்துடன் இருப்பதே செல்வமாகும். பொருட்செல்வம் நில்லாது அழிந்து போகும்.

*உள்ளம் - ஊக்கம்; உடைமை - செல்வம்.*

3. தமது பொருளை இழந்தால் ஊக்கம் உடையவர் என்ன செய்வர்?

**ஆக்கம் இழந்தோம்என்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தும் கைத்துஉடை யார்.** 593

உறுதியான ஊக்கத்தை தமது கைவசம் வைத்திருப்பவர் தாம் தேடிய பொருளை இழந்து விட்டோம் என்று மனங்கலங்க மாட்டார்.

*ஆக்கம் - தேடியபொருள்: ஒருவந்தம் - உறுதி;*
*அல்லாவார் - மனங்கலங்கார்; கைத்து - கைப்பொருள் (கைவசம்).*

4. ஊக்கம் உடையவனை என்ன தேடிவரும்?

**ஆக்கம் அதர்வினாயச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையா னுழை.** 594

அசையாத ஊக்கம் ஊடையவரிடம் உயர்வுகள் தானே வழிகேட்டு தேடிச்சென்று சேரும்.

*அதர் - வழி: வினாய் - வினாவி (கேட்டு);*
*ஆசைவிலா - அசையாத;* ஆக்கம் - உயர்வு; உழை - இடம்.

5. ஊக்கத்தால் வரும் உயர்வின் அளவு என்ன?

**வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.** 595

நீரின் ஆழம் அளவிற்கே நீர்ப்பூவின் தண்டு நீள்வது போல மனிதரின் ஊக்கம் அளவே உயர்வு இருக்கும்.

*வெள்ளம் - நீர்; அனைய - போல; மலர் - பூ; நீட்டம் - நீளம்;*
*மாந்தர் - மனிதர்; உள்ளம் - ஊக்கம்; அனையது - அவ்வளவு.*

6. ஒருவன் உயர்வடைய என்ன செய்ய வேண்டும்?

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.** 596

நினைப்பதை எல்லாம் உயர்வாகவே நினைக்க வேண்டும். அவ்வுயர்ச்சி தவறிப்போனாலும் அந்த நினைப்பை விடாதிருத்தல் சிறப்பாகும்.

*உள்ளுவது - நினைப்பது; தள்ளினும் - தவறினாலும்;*
*தள்ளாமை - விடாதிருத்தல்; நீர்த்து - சிறந்தது.*

7. அழிவு வந்த போது அறிஞர் என்ன செய்வர்?

**சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்**
**பட்டுப்பாடு ஊன்றும் களிறு.** 597

உடம்பில் அம்புபட்டு வருந்தும் யானை அதனைத் தாங்கி நிற்றல் போல அறிஞர் அழிவு வந்த போதும் தம் செயலில் தளரமாட்டார்.

*சிதைவிடத்து - அழிவுவந்த இடத்து; ஒல்கார் - தளரார்;*
*ஊன்று - தாங்கி நிற்கும்; களிறு - ஆண்யானை.*

8. ஊக்கம் இல்லாதவர் இந்த உலகத்தில் அடையமுடியாதது என்ன?

**உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு. 598**

ஊக்கம் இல்லாதவர், இந்த உலகத்தில் நாமே பெரிய வள்ளலாக இருக்கிறோம் எனத் தம்மைத் தாமே நினைத்துச் செருக்கடைய முடியாது.

*உள்ளம் - ஊக்கம்; எய்தார் - அடையமாட்டார்; வள்ளியம் - வள்ளற்றன்மை.*

9. வலிமை உடற்பருமனைப் பொறுத்ததா மனஎண்ணத்தைப் பொறுத்ததா எப்படி அதனை அறியலாம்?

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாகக் குறின். 599**

யானை மிகப்பெரியதாகவும், கூர்மையான தந்தங்களை உடையதாகவும் இருப்பினும் புலி அதனைத் தாக்குமாயின் பயப்படும். (வலிமை உடற்பருமனைப் பொறுத்து இல்லை)

*பரியது - மிகப்பெரியது; கூர் - கூர்மை; கோடு - தந்தம்; வெரும் - பயப்படும்.*

10. ஊக்கம் இல்லாதவர் எது போன்றவர்?

**உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇல்லார்**
**மரம்மக்கள் ஆதலே வேறு. 600**

மிகுந்த ஊக்கமே ஒருவர்க்கு வலிமையாகும். அந்த ஊக்கம் இல்லாதவர் மரங்களே, மனிதராக் தெரிவதே மரத்துக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு.

*உரம் - வலிமை; உள்ளம் - ஊக்கம்; வெறுக்கை - மிகுந்த; வேறு - வேறுபாடு; மக்களாதலே - மனிதராய் இருப்பதே.*

# 61. மடி இன்மை

*(சோம்பல் இல்லாதிருத்தல்)*

1. சோம்பல் என்ன செய்யும்?

**குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்**
**மாசுஊர மாய்ந்து கெடும்.** 601

குடும்பம் என்னும் அணையாத விளக்கு சோம்பல் என்னும் இருள் படர்வதால் ஒளிமங்கி அணைந்து போகும்.

*குடி - குடும்பம்; குன்றா - அணையாத; விளக்கம் - விளக்கு; மடி - சோம்பல்; மாசு இருள்; ஊர - படர; மாய்ந்து - ஒளிமங்கி; கெடும் - அணையும்.*

2. குடும்பத்தை சிறப்படையச் செய்ய என்ன செய்யவேண்டும்?

**மடியை மடியா ஒழுகல் குடியைக்**
**குடியாக வேண்டு பவர்.** 602

தன் குடும்பத்தை சிறந்த குடும்பமாக விளங்கச்செய்ய விரும்புபவர், சோம்பலை அடக்கி ஊக்கத்துடன் செயல்பட வேண்டும்.

*குடியை - குடும்பத்தை; குடியாக - குடும்பமாக; வேண்டுபவர் - விரும்புபவர்; மடியை - சோம்பலை; மடியா - அடக்கி; ஒழுகல் - செயற்படல்.*

3. சோம்பல் உள்ளவனின் குடும்பம் என்னவாகும்?

**மடிமடிக் கொண்டுஒழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து.** 603

சோம்பலை தனது நோயாகக் கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடும்பம் அவனுக்கு முன்னர் அழிந்து போகும்.

*மடி - சோம்பல் (நோய்) ஒழுகும் - நடக்கும்; குடி - குடும்பம்; மடியும் - அழியும்; பேதை - அறிவில்லாதவன்.*

4. சோம்பலில் முடங்கிக் கிடப்பதால் என்ன விளையும்?

**குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றி லவர்க்கு. 604**

மிகுந்த முயற்சி இல்லாது சோம்பலில் முடங்கிக்கிடப்பவர்க்கு குடும்பமும் அழிந்து அதனால் குற்றமும் பெருகும்.

*குடி - குடும்பம்; மடிந்து - அழிந்து:; மாண்ட - மிகுந்த; உஞற்று - முயற்சி; மடிமடிந்து - சோம்பலில் முடங்கி;*

5. கெட்டு அழிந்து போகின்றவர்கள் விரும்பி ஏறும் உல்லாசக் கப்பல்கள் எவை?

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன். 605**

விரைவாகச் செய்யவேண்டியதை நீண்ட நேரம் மெல்ல மெல்லச் செய்வது, செய்யவேண்டியதை மறந்தே போவது; எதனையும் செய்யாது சோம்பலுடன் இருப்பது, தூங்கிக் காலம் கழிப்பது ஆகிய நான்கும் அழிந்து போகின்றவாகள் விரும்பி ஏறும் உல்லாசக் கப்பல்களாகும்.

*நெடுநீர் - செயலை நீடித்துச் செய்தல்; மடி - சோம்பல்;*
*கெடுநீரார் - அழிந்துபோபவர்; காமம் - விருப்பம்;*
*கலன் - கப்பல்; காமக்கலன் - உல்லாசக்கப்பல்;*

6. சோம்பல் உடையவர்கள் சோம்பலால் பயன் அடைவார்களா?

**படியுடையார் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது. 606**

பெரிய நிலத்துக்குச் சொந்தக்காரனின் செல்வங்கள் கிடைத்தாலும் சோம்பலுடையவர் சிறந்த பயனடைய முடியாது.

*படி - நிலம்; பற்று - செல்வம்; அமைந்த - கிடைத்த;*
*மடி - சோம்பல்; மாண் - சிறந்த. எய்தல் - அடைதல்.*

7. சோம்பல் உடையவர்களால் பிறர் பழிப்பதைத் தாங்கிக்கொள்ள முடியுமா?

**இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர். 607**

சோம்பலை விரும்பி அதிக முயற்சி செய்யாதிருப்பவர் தம் மனம் வருந்தும்படி பிறர் இகழ்ந்து சிரிக்கும் சொல்லையும் கேட்பர்.

*இடிபுரிந்து - மனம்வருந்தும்படி; எள்ளும் - இழ்ந்து சிரிக்கும்;*
*மாண்ட - அதிக; மடிபுரிந்து - சோம்பலை விரும்பி;*
*உஞற்று - முயற்சி.*

8. சோம்பல் உடையவரை அது என்ன நிலை அடையச் செய்யும்?

**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு**
**அடிமை புகுத்தி விடும்.** 608

ஒருவன் தனது குடும்பத்தை வழிநடத்தும் தன்மையில் சோம்பலைத் தங்கியிருக்க விடுவானானால், தன் பகைவர்க்கு (தன் தகுதிக்குச் சமனில்லாதவர்க்கு) அடிமையாய் ஏவல் வேலை செய்ய வைத்துவிடும்.

*ஒன்னார் - பகைவர்(ஒத்த தகுதியில்லார்);*
*அடிமை - ஏவல் வேலை செய்தல்; குடிமை - குடும்பத்தை வழி நடத்தும் தன்மை; மடிமை - சோம்பல்.*

9. சோம்பலால் ஒரு குடும்பத்திற்கு வந்து சேர்ந்த துன்பம் எப்போது நீங்கும்?

**குடிஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**மடிஆண்மை மாற்றக் கெடும்.** 609

ஒருவன் சோம்பலை தன்னைவிட்டு ஓடச்செய்துவிட்டால் குடும்பத்தை நடத்தும் தன்மையில் வந்த துன்பங்கள் நீங்கும்.

*மடியாண்மை - சோம்பலை ஆளுதல்;*
*குடியாண்மை - குடும்பத்தை நடத்தும் தன்மை; மாற்றுதல் - ஓடச்செய்தல்; குற்றம் - துன்பம்.*

10. சோம்பல் இல்லாத தலைவனுக்கு என்ன கிடைக்கும்?

**மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்**
**தாஅயது எல்லாம் ஒருங்கு.** 610

சோம்பல் இல்லாத தலைவன், திருமால் தாவி அளந்த உலகங்களை எல்லாம் ஒன்றாகப் பெறுவான்.

*மடி - சோம்பல்; மன்னவன் - தலைவன்; எய்தும் - பெறுவான்; ஒருங்கு - ஒன்றாக; அடியளந்தான் - திருமால் (வாமன அவதாரம்); தாஅய - தாவி.*

# 62. ஆள்வினை உடைமை

*(முயற்சி உள்ளவராய் இருத்தல்)*

1. ஒருவர்க்கு ஒன்றைச் செய்வதற்கான வல்லமையைத் தருவது எது?

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.** 611

இதனை நாம் எப்படிச் செய்யமுடியும் என்று மனம் சோர்வுடையாது இருக்க வேண்டும். அச்செயலைச் செய்வதற்கான வல்லமையை முயற்சி தரும்.

*அருமை - முடியாதது: அசாவாமை - மனம்சலியாது; பெருமை - வல்லமை.*

2. ஒரு செயலைத் தொடங்கி இடைநடுவே கைவிடலாமா?

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.** 612

ஒரு செயலைச் செய்யத் தொடங்கி இடைநடுவே விட்டு விடுபவர்களை உலகமும் கைவிட்டு விடுகின்றது. அதனால் செய்யத் தொடங்கிய செயலை இடையே கெடவிடாது பாதுகாத்துச் செய்க.

*வினைக்கண் - செயல்செய்யும் போது; வினைகெட - செயல்கெட; தீர்ந்தார் - விட்டார்; ஓம்பல் - பாதுகாத்தல்; வினைகுறை - செயலை குறைவாக; தீர்ந்தன்று - விட்டுவிடும்.*

3. எல்லோருக்கும் உதவினோம் என்ற செருக்கு யாருக்கு இருக்கும்?

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.** 613

விடாமுயற்சி என்னும் பெருங்குணம் உள்ளவரிடமே எல்லோருக்கும் உதவினோம் என்ற செருக்கு இருக்கும்.

*தாளாண்மை - விடாமுயற்சி; வேளாண்மை - எல்லோருக்கும்*

4. விடாமுயற்சி இல்லாதவன் பிறர்க்கு உதவுவதல் எது போன்றது?

**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாள்ஆண்மை போலக் கெடும்.** 614

விடாமுயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவுதல், பயந்து நடுங்கும் குணமுள்ளவன் தன் கையில் வாள் எடுத்துப் போர் புரிதல் போலக் கெடுதலுடையதாகும்.

*வேளாண்மை - பிறர்க்கு உதவுவதல்; பேடி - பயந்து நடுங்குபவர்கள்(அலி); வாளாண்மை - வாட்போர்செய்தல்; தாளாண்மை - விடாமுயற்சி.*

5. யாரால் சுற்றத்தாரின் துன்பங்களை நீக்கி அவர்களைத் தாங்கி நிற்க முடியும்?

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்.** 615

தான் இன்பங்களை விரும்பாமல், தொழிலைச் செய்து முடிக்க விரும்புகின்றவனே தனது சுற்றத்தவரின் துன்பங்களை நீக்கி அவர்களைத் தாங்கும் தூணாக நிற்பான்.

*விழையான் - விரும்பதாவன்; விழைவான் - விரும்புகின்றவன்; கேளிர் - சுற்றத்தரின்; துடைத்து - நீக்கல்; ஊன்றும் - தாங்கும்.*

6. முயற்சியாலும், முயற்சி இன்மையாலும் வருவது என்ன?

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.** 616

முயற்சி செல்வத்தை வளர்க்கும். முயற்சி செய்யாதிருத்தல் வறுமையை உண்டாக்கிவிடும்.

*திருவினை - செல்வத்தை; இன்மை - வறுமை.*

7. யாருடைய முயற்சியில் இலக்குமி தங்கி வாழ்வாள்?

**மடிஉளான் மாமுகடி என்ப மடிஇலான்**
**தாள்உளாள் தாமரையி னாள்.** 617

சோம்பி இருப்பவனிடம் மூதேவி இருப்பாளென்றும் சோம்பல் இல்லாதவன் முயற்சியில் இலக்குமி தங்கி வாழ்வாள் என்றும் சொல்வர்.

*மடி - சோம்பல்; உளாள் - இருப்பாள்; மாமுகடி - மூதேவி; தாள் - முயற்சி; மடியிலான் - சோம்பலில்லாதவன்; தாமரையினாள் - இலக்குமி.*

8. முயற்சிசெய்ய வாய்ப்புக் கிடைக்காவிட்டால் அது பழியாகுமா?

**பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.** 618

வாய்ப்பின்மை யார்க்கும் பழியைத் தராது. ஆனால் அறியக் கூடியவற்றை அறிந்து முயற்சி செய்யாமலிருப்பது பெரும்பழியாகும்.

*பொறிஇன்மை - வாய்ப்பின்மை; ஆள்வினை - முயற்சி; இன்மை - செய்யாது; அறிவறிந்து - அறியக்கூடியவற்றை அறிந்து.*

9. விதியை நம்பிக்கொண்டு இருக்கலாமா?

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருந்தக் கூலி தரும்.** 619

விதியால் ஒரு பயனும் இல்லையென்றாலும் உடல் வருந்தி முயற்சி செய்தால் அதற்குத் தகுந்த கூலிகிடைக்கும்.

*தெய்வம் - விதி (ஊழ்); மெய் - உடல்;*

10. விதியை வெல்ல முடியுமா?

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.** 620

தளர்வடையாமல் தாமதிக்காது தொடர்ந்து முயற்சி செய்பவர்கள், விதியையும் முறியடித்து வெற்றியடைவர்.

*ஊழை - விதி; உட்பக்கம் - முறியடித்தல்; உலைவு - தளர்ச்சி; உஞற்று - முயற்சி; தாழாது - தாமதிக்காது.*

# 63. இடுக்கண் அழியாமை

*(துன்பத்தில் மனம் கலங்காதிருத்தல்)*

1. துன்பம் வந்தால் என்ன செய்ய வேண்டும்?

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்துஊர்வது அ∴துஒப்பது இல்.** 621

துன்பம் வந்தால் சிரியுங்கள். அத்துன்பத்தை வென்று விடுவதற்கு சிரிப்பைப் போல சிறந்தது வேறு ஒன்றும் இல்லை.

*இடுக்கண் - துன்பம்; நகுக - சிரிக்க; வருங்கால் - வரும்போது; அடுத்துஊர்வது - வென்றுவிடுதல்; ஒப்பது - போல்.*

2. மிகப்பெரிய துன்பத்தை அறிவுடையவர் எப்படி நீக்குவார்?

**வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.** 622

வெள்ளம் போல் வந்த துன்பமும் அறிவுடையவனின் மனத்தின் ஊக்கத்தினால் அழியும்.

*அனைய - போல்; இடும்பை - துன்பம்:*
*உள்ளத்தின் - மனத்தின்; உள்ள - ஊக்கத்தால்; கெடும் - அழியும்.*

3. எவர் துன்பத்தைப் பார்த்து துன்பப்படமாட்டார்?

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்.** 623

துன்பம் வந்த போது அதனைப் பார்த்து துன்பப்படாதவர், துன்பத்திற்கு துன்பம் விளைவிப்பார்.

*இடும்பை - துன்பம்; இடும்பைப்படாதவர் - துன்பப்படாதவர்; படுப்பர் - விளைவிப்பர்.*

4. ஒருவனுக்கு வந்த துன்பம், துன்பப்படுவது எது போன்றது?

**மடுத்துவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்பாடு உடைத்து.** 624

வண்டியைச் செலுத்தும் இடமெல்லாம் வண்டியை இழுத்துச் செல்லும் எருது போன்று, தன் செயலைச் செய்து முடிக்கும் திறமை உள்ளவனுக்கு வந்த துன்பம் துன்பப்படும்.

*மடுத்தவாய் - செலுத்தும் இடம்; பகடு - எருது; அன்னான் - போன்றவன். உற்ற - வந்த; இடுக்கண் - துன்பம்; இடர்பாடு உடைத்து - துன்பப்படும்.*

5. ஒன்றைச் செய்து முடிக்கும் முன் அடுத்தடுத்து துன்பம் வந்தால் என்ன செய்வது?

**அடுக்கி வரினும் அழிவுஇலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும்.** 625

அடுக்கடுக்காக துன்பம் வந்தாலும், கொண்ட கொள்கையின் உறுதியை விடாதவனுக்கு வந்த துன்பம் துன்பப்படும்.

*அடுக்கி - அடுத்தடுத்து; அழிவுஇலான் - மனவுறுதி உள்ளவன்; உற்ற - வந்த; இடுக்கண் - துன்பம்.*

6. பிறருக்குக் கொடுத்து பொருளை இழந்தவர்கள் வருத்தப் படுவார்களா?

**அற்றேம்என்று அல்லல் படுபவோ பெற்றேம்என்று**
**ஓம்புதல் தேற்றா தவர்.** 626

பொருளை பெற்றிருக்கிறோமே என்று அதனைப் பேணிக் காத்திட அறியாதவர், வறுமை வந்த போது இழந்துவிட்டோமே என்று வருத்தப்படுவார்களா?

*அற்றோம் - இழந்தோம்; அல்லல் - வருத்தம்;*
*ஓம்புதல் - பேணுதல்; தேற்றாதவர் - அறியாதவர்.*

7. யார் துன்பத்தை துன்பமாக ஏற்றுக் கலக்கமடையார்?

**இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்.** 627

உடம்பானது துன்பத்திற்கு இலக்காகும் என்பதை உணர்ந்த அறிவுடையார், தமக்கு வந்த துன்பத்தை துன்பமாக ஏற்றுக் கலக்கமடைய மாட்டார்கள்.

*இலக்கம் - இலக்கு(குறி); கலக்கத்தை - துன்பத்தை;*
*கையாறு - துன்பம், மேல் - மேலோர் (அறிவுடையார்).*

8. யார் எப்போதும் துன்பம் அடைவதில்லை?

**இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்**
**துன்பம் உறுதல் இலன்.** 628

இன்பத்தை விரும்பாமல் துன்பபடுவது இயல்பு தானே எனக் கூறுகிறவன், எப்போதும் துன்பம் அடைவதில்லை.

*விழையான் - விரும்பாதவன்; உறுதல் - அடைதல்;*
*இடும்பை - துன்பம்.*

9. இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்றாக மதிப்பவன் என்ன செய்வான்?

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.** 629

இன்பம் வந்தபோது அந்த இன்பத்தை விரும்பாதவன் அதுபோல துன்பம் வந்தபோதும் துன்பமடைவதில்லை.

*விழையான் - விரும்பான், உறுதலின் - அடைவதில்லை.*

10. எவன் பகைவரும் விரும்பும் சிறப்புடையவனாவான்?

**இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு.** 630

ஒருவன் துன்பத்தையே இன்பமாகக் கொள்வானானால், அவன் தன் பகைவரும் விரும்பும் சிறப்புடையவனாவான்.

*இன்னாமை - துன்பம்; ஒன்னார் - பகைவர்;*
*விளையும் - விருப்பும்.*

# அங்கவியல்

## 64. அமைச்சு

*(அமைச்சரின் சிறப்பு)*

1. யார் அமைச்சன் ஆகலாம்?

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு.** 631

செய்யப்போகும் செயல், அதனைச் செய்யும் வழி, ஏற்ற காலம், அதற்கு தேவையான பொருள் ஆகியவற்றைச் சிந்தித்து சிறப்புடன் செயல்படுபவனே அமைச்சன் ஆவான்.

*வினை - செயல்; செய்கை - செய்யும் வழி; கருவி - பொருள்.*

2. அமைச்சனிடம் இருக்க வேண்டிய பெருமைகள் என்ன?

**வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு.** 632

எதற்கும் அஞ்சாத மன உறுதி, குடிமக்களைக் காத்தல், தேவையானவற்றைக் கற்றல், மக்களின் தேவையை அறிதல், விடாமுயற்சி ஆகிய ஐந்து பெருமைகளும் உடையவனாக அமைச்சன் இருக்க வேண்டும்.

*வன்கண் - அஞ்சாமை; அமைச்சு - அமைச்சன்;*
*ஆள்வினை - விடாமுயற்சி; கற்றல் - படித்தல்;*
*மாண்டது - பெருமைப்பட்டது.*

3. அமைச்சனிடம் இருக்க வேண்டிய வல்லமைகள் என்ன?

**பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்லது அமைச்சு.** 633

பகைவர்க்குத் துணையாக இருப்பவரைப் பிரித்தல், வேண்டியவர்க்கு பொருள் கொடுத்தல், பேணிக் காத்தல், பிரிந்து போனவரில் திறமை மிக்கவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளல் ஆகியவற்றில் வல்லவனாக அமைச்சன் இருக்க வேண்டும்.

*பொருத்தல் - சேர்த்தல்; அமைச்சு - அமைச்சன்.*

4. அமைச்சனிடம் இருக்க வேண்டிய திறமை என்ன?

**தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு. 634**

என்ன செயலைச் செய்ய வேண்டும் என்று தெரிந்து எடுத்தலும், அதனை ஆராய்ந்து செய்வதும், முடிவான கருத்தை உறுதியாகச் சொல்லலும் ஆகிய திறமைகள் அமைச்சனிடம் இருக்க வேண்டும்.

*தேர்ந்துசெயலும் - ஆராயந்து செய்வதும்;*
*ஒருதலை - முடிவு (அறுதி);*

5. எப்படிப்பட்ட அமைச்சன் ஒரு தலைவனுக்குத் துணையாக இருப்பான்?

**அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்**
**திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. 635**

நீதி அறிந்தவனாக, கல்வியறிவால் நிறைந்து, தேவையானவற்றை எடுத்துச் சொல்லும் ஆற்றல் உள்ளவனாக, எந்த நேரத்திலும் செயல்படும் வழி அறிந்தவனே எச்செயலையும் ஆராயக் கூடிய துணைவனாவான்.

*அறன் - நீதி; ஆன்றமைந்த - கல்வியால் நிறைந்த;*
*திறன் - வழி, எஞ்ஞான்றும் - எந்த நேரத்திலும்; தேர்ச்சி -ஆராய்தல்.*

6. எத்தகைய அமைச்சனை அதிநுட்பமான செய்கள் தாக்காது?

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாவுள முன்நிற் பவை. 636**

இயற்கையான நுண்ணறிவும், கற்ற நூல் அறிவும் சேர்ந்து விளங்கும் அமைச்சர்க்கு முன் நிற்கக் கூடிய அதிக நுட்பமான செயல்கள் என்ன தான் இருக்கின்றன?

*மதிநுட்பம் - இயற்கையான நுண்ணறிவு; நூல் - கற்ற நூல்.*

7. ஒரு அமைச்சர் எப்படிச் செயல்பட வேண்டும்?

**செயற்கை அறிந்துக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல். 637**

நூல்களைக் கற்று, செய்யும் செயலைச் செய்வது எப்படியென்று அறிந்த இடத்திலும், அப்பொழுது நடக்கின்ற உலக நிலைமையை அறிந்தே செயல் செய்ய வேண்டும்.

*கடைத்து - இடத்து; இயற்கை - நிலைமை.*

8. ஒரு அமைச்சரின் கடமை என்ன?

**அறிகொன்று அறியான் எனினும் உறுதி**
**உழைஇருந்தான் கூறல் கடன். 638**

அறிந்து சொல்பவற்றை இகழ்பவனாகவும், சொந்த அறிவும் இல்லாதவனாகவும் தலைவன் இருப்பினும், பக்கத்தில் இருக்கும் அமைச்சன், அறிவுரைகளை எடுத்துக் கூறல் கடமையாகும்.

*அறிகொன்று - சொன்னதை இகழ்ந்து; உழை - பக்கம்; அறியான் - அறிவிலான்; உறுதி - அறிவுரை.*

9. தலைவனுக்கு தீங்கு நினைக்கும் அமைச்சன் யாருக்குச் சமமாவான்?

**பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்**
**எழுபது கோடி உறும். 639**

பக்கத்திலிருந்து தீங்கு நினைக்கும் அமைச்சன் ஒருவன் எழுபது கோடி பகைவர்க்குச் சமமாவான்.

*பழுது - தீங்கு; எண்ணும் - நினைக்கும்; மந்திரி - அமைச்சன்; தெவ்வோர் - பகைவர்; தெவ் - பகை; உறும் - ஒப்பர்.*

10. செயல்திறன் இல்லாதவர் ஒரு செயலை எப்படிச் செய்வர்?

**முறைப்படச் சூழ்ந்தும் முடிவுஇலவே செய்வர்**
**சிறப்போடு இலாஅ தவர். 640**

செயல்திறன் இல்லாதவர்கள் செய்ய வேண்டியதை முறையாக ஆராய்ந்து வைத்திருந்தாலும், செய்யும் போது அதனை அரைகுறையாகவே செய்வர்.

*முறைப்பட - முறையாக; சூழ்ந்து - ஆராய்ந்து; முடிவுஇலவே - முடிவிலாது (அரைகுறை); திறப்பாடு - செயல்திறன்.*

## 65. சொல்வன்மை

*(சொல்லின் ஆற்றல்)*

1. நாவன்மையால் வரும் புகழ் எப்படிப்பட்டது?

**நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று. 641**

நாவன்மை என்னும் திறமை தரும் புகழ் எவ்வகைப்பட்ட புகழ்களுக்குள்ளும் அடங்காத சிறப்புடையது.

*நாநலம் - நாவன்மை; நலனுடைமை - திறமை; நலம் - புகழ்; அந்நலம் - அந்தப்புகழ்;*

2. நாம் பேசும் போது எதனைக் காத்துக்கொள்ள வேண்டும்?

**ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்துஓம்பல் சொல்லின்கண் சோர்வு. 642**

நன்மையும், தீமையும் பேசும் சொற்களால் வருவதால் பேசும் போது சொற்களில் தவறு உண்டாகாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

*ஓம்புதல் - பேணுதல்; சோர்வு - தவறு.*

3. சொல்வன்மை என்றால் என்ன?

**கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல். 643**

கேட்போரை தன்வசப்படுத்தும் தன்மையுடையதாய், அதனைக் கேட்காதவரும் விரும்பிக் கேட்கக் கூடியதாகச் சொல்வதே சொல்வன்மையாகும்.

*பிணிக்கும் - தன்வசப்படுத்தும்;*
*தகையவாய் - தன்மையுடையதாய்; வேட்ப - விரும்பு;*
*கேளாரும் - கேட்காதவரும்.*

4. சொல்லும் போது எதனைக் கருத்திற் கொண்டு ஒன்றைச் சொல்ல வேண்டும்?

**திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனின்ஊங்கு இல். 644**

சொல்வதை கேட்பவரின் குணத்தை அறிந்து சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதைவிட மேலான ஒழுக்கமும் மதிப்பும் வேறில்லை.

*திறன் - குணம்; அறன் - ஒழுக்கம்; பொருள் - மதிப்பு; அதனின் - அதைவிட; ஊங்கு - மேலானது.*

5. சொல்ல வேண்டியதை எப்படிச் சொல்ல வேண்டும்?

**சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை அறிந்து. 645**

இன்னொரு சொல்லால் நாம் சொல்லப் போகும் சொல்லை, வெல்லமுடியாது என்பதை அறிந்து சொல்ல வேண்டியதைச் சொல்லுக.

6. பிறர் சொல்வதில் எதனை எடுத்துக் கொள்ள வேண்டும்?

**வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசுஅற்றார் கோள். 646**

பிறர் விரும்பிக் கேட்குமாறு சொல்லி, பிறர் சொல்வதிலுள்ள பயனை ஏற்றுக் கொள்ளல் குற்றமற்ற சிறப்புடையோரின் கொள்கையாகும்.

*வேட்பதாம் - விரும்பும்படி; கோடல் - கொள்ளல்; மாசுஅற்றார் - குற்றமற்றவர்; கோள் - கொள்கை.*

7. எத்தகைய சொல்வன்மை உள்ளவனை யாரும் வெல்ல முடியாது?

**சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 647**

எதனையும் நன்கு சொல்ல வல்லவனாகவும், மறதி இல்லாதவனாகவும், சபைக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனை எதிர்த்து வெல்வது யாராலும் முடியாது.

*சோர்வு - மறதி; இகல் - எதிர்த்து.*

8. எத்தகையவர் சொல்வதை உலகம் ஏற்று நடக்கும்?

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648**

சொல்ல வேண்டியதை ஒழுங்குபடுத்தி இனிமையாகச் சொல்ல வல்லவர் சொன்னால் உலகம் அவற்றை விரைந்து கேட்டு, அவர் ஏவல்ப்படி நடக்கும்.

*தொழில் - ஏவல்; ஞாலம் - உலகம்; நிரந்து - ஒழுங்கு; இனிது - இனிமையாக.*

9. ஒன்றை பல சொற்களால் சொல்ல விரும்புபவர் யார்?

**பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர். 649**

குற்றமற்ற சில சொற்களால் ஒன்றைச் சொல்ல அறியாதவரே, நிச்சயமாக பல வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்ல விரும்புவர்.

*காமுறுவர் - விரும்புவர்; மாசுஅற்ற - குற்றமற்ற; தேற்றாதவர் - அறியாதவர்; மன்ற - நிச்சயமாக.*

10. தாம் கற்றதை பிறருக்கு எடுத்துச் சொல்ல முடியாதவர் எதற்குச் சமமாவர்?

**இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது**
**உணர விரித்துஉரையா தார். 650**

தாம் கற்றதை மற்றவர் விளங்கிக் கொள்ளும்படி விரித்துச் சொல்ல முடியாதார், பூங்கொத்தாக மலர்ந்த பின்பும் மணம் வீசாத மலருக்குச் சமமாவர்.

*இணர் - பூங்கொத்து; ஊழ்த்தும் - மலர்ந்தும்; நாறாமலர் - மணம்வீசா மலர்.*

# 66. வினைத் தூய்மை

*(நற்செயல் செய்தல்)*

1. நற்செயல் செய்வதால் என்ன கிடைக்கும்?

**துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
**வேண்டிய எல்லாம் தரும்.** 651

நல்ல துணை அமைந்தால் உயர்வு கிடைக்கும். நற்செயல் செய்வதால் வேண்டியது எல்லாம் கிடைக்கும்.

*ஆக்கம் - உயர்வு; வினைநலம் - நற்செயல்.*

2. எத்தகைய செயல்களைச் செய்யக் கூடாது?

**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.** 652

புகழும் நன்மையும் தராத செயல்களை என்றும் செய்யாது விட்டுவிட வேண்டும்.

*ஒருவுதல் - விட்டுவிடுதல்; பயவா - தராத; வினை - செயல்; நன்றி - நன்மை.*

3. புகழ்தராத செயல்களை யார் செய்யக் கூடாது?

**ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்.** 653

மற்றவரை விட உயரவேண்டும் என விரும்புபவர் தமது புகழ் கெடும் செயல்களைச் செய்யாது நீக்கிவிட வேண்டும்.

*ஓஒதல் - நீக்கல்; ஒளி - புகழ்; மாழ்கும் - கெடும்; செய்வினை - செயல்; ஆஅதும் - உயரவேண்டும்.*

4. யார் வறுமை வந்த போதும் இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்?

**இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்**
**நடுக்கற்ற காட்சி யவர். 654**

வறுமைப்படுவதாக இருந்தாலும் தெளிந்த அறிவுடையவர்கள்; இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

*இடுக்கண் - வறுமை; இளிவந்த - இளிவான; காட்சி - அறிவு; நடுக்கற்ற - தெளிவான.*

5. எத்தகைய செயல்களைச் செய்யக் கூடாது?

**எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**
**மற்றுஅன்ன செய்யாமை நன்று. 655**

பின்பு நினைத்து கவலைப்படக் கூடிய செயலைச் செய்ய வேண்டாம். தவறுதலாகச் செய்தாலும் மீண்டும் அது போன்ற செயலைச் செய்யாது இருப்பது நல்லது.

*ஏற்றுதல் - நினைத்தல்; இரங்குவது - கவலைப்படுவது; மற்று - மீண்டும்; அன்ன - அது போன்ற.*

6. சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யலாமா?

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை. 656**

தன்னைப் பெற்ற தாய் பசியால் வாடுவதைக் கண்டாலும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்ய வேண்டாம்.

*ஈன்றாள் - பெற்றதாய்; பழித்தல் - இகழ்தல்; வினை - செயல்.*

7. எதைவிட சான்றோர்களின் வறுமை சிறந்தது?

**பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை. 657**

பாவங்களால் சேர்த்த செல்வத்தை விட சான்றோரின் கொடிய வறுமை தலை சிறந்ததாகும்.

*பழிமலைந்து - பழிசேர்ந்து; எய்திய - வந்த; ஆக்கம் - செல்வம்; கழி - கொடிய; நல்குரவு - வறுமை.*

8. எச்செயல் செய்துமுடிந்த பின்னரும் துன்பம் தரும்?

**கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பிழை தரும். 658**

பெரியோர் செய்யக்கூடாது என்று ஒதுக்கிய செயல்களை விட்டு விடாது செய்பவர்க்கு, அவை செய்து முடிந்த பின்னரும் துன்பமே தரும்.

*கடிந்த - ஒதுக்கிய; கடிந்துஒரார் - விட்டுவிடாது; பீழை - துன்பம்.*

9. நாம் இழந்த பொருட்கள் மீண்டும் வந்து பயன் தருமா?

**ஆழக்கொண்டது எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை. 659**

ஒருவனை வருத்தி அழவைத்து எடுத்த பொருள் எல்லாம் இழந்தவன் அழ, அழ எடுத்தவனை விட்டுப் போய்விடும். நல்ல வழியில் வந்த பொருட்கள் இழந்துவிட்டாலும் பின்னரும் வந்து பயன் தரும்.

*பிற்பயக்கும் - பின்னர் பயன் தரும்;*
*நற்பாலவை - நல்ல வழியில் வந்தவை.*

10. தீய செயல்களால் பொருள் சேர்த்துவைப்பது எதைப் போன்றது?

**சலத்தால் பொருள்செய்துஏம் ஆர்த்தல் பசுமட்**
**கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று. 660**

தீய செயல்களால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் ஈர மண்ணால் செய்த பாத்திரத்தில் உடனே நீரை ஊற்றிவைத்து பாதுகாப்பதைப் போன்றது.

*சலத்தால் - தீயவழியில்; ஏமம் - பாதுகாத்தல்;*
*பசுமண் - ஈரமண்; கலம் - பாத்திரம்; இரீஇ - வைத்தல்.*

## 67. வினைத்திட்பம்

*(தொழில் செய்வதற்கான மன உறுதி)*

1. செயலின் உறுதி என்றால் என்ன?

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.** 661

ஒரு செயலின் உறுதியென்று சொல்வது ஒருவனின் மனவுறுதியே ஆகும். மற்றவை எல்லாம் மனவுறுதிக்குப் பின் நிற்பவையே.

*வினைத்திட்பம் - செயலின்உறுதி; மனத்திட்பம் - மனஉறுதி.*

2. மனவுறுதியுடன் செயலாற்ற உதவும் கொள்கை என்ன?

**ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.** 662

இடையூறு வரும் செயல்களைச் செய்யாமலும், செய்யும் செயலில் இடையூறு வந்தால் அதற்கு மனந்தளராது இருப்பதுமாகிய இவ்விரண்டு வழிகளுமே, செயலாற்ற உதவும் கொள்கை என்று வினைத்திட்பம் பற்றி ஆராய்ந்தவர் கூறுவர்.

*ஊறு - இடையூறு; ஓரால் - செய்யாமல்; ஆறு - வழி;*
*ஒல்காமை - தளராமை; ஆய்ந்தவர் - ஆராய்ந்தவர்;*
*கோள் - கொள்கை.*

3. செயல் உறுதியை எப்படிக் கடைப்பிடிப்பது?

**கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.** 663

ஒரு செயலை செய்து முடிக்கும் வரை அதனை வெளியிடாது இருப்பதே வெற்றி தருவதாகும். இடையிலே வெளிப்படுமாயின் செய்பவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

*கடை - கடைசிவரை; கொட்க - வெளியிடல்;*
*ஆண்மை - வெற்றி; எற்றா - நீங்காத; விழுமம் - துன்பம்.*

4. எல்லோரும் சொல்லியபடி செய்து முடிப்பார்களா?

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்**
**சொல்லிய வண்ணம் செயல். 664**

இதனைச் செய்வேன் என்று கூறுதல் எல்லோர்க்கும் எளிதாகும். ஆனால் சொல்லியபடி செய்து முடித்தல் அருமையாகும்.

*அரியவாம் - அருமையாகும் வண்ணம் - விதம்(படி).*

5. எவ்வாறு ஒருவரின் செயலின் உறுதி மற்றவர்களின் மதிப்பைப் பெறுகின்றது?

**வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும். 665**

செயலில் வெற்றி அடைந்து மேன்மை பெற்றவர்களின் செயலின் உறுதி, ஆட்சியாளருக்கு தெரிய வருவதால், அது எல்லோராலும் மதிக்கப்படுகின்றது.

*வீறுஎய்தி - வெற்றியடைந்து; மாண்டார் - மேன்மையடைந்தார்; உள்ளல் - மதித்தல்; வினைத்திட்பம் - செயலின் உறுதி; ஊறுஎய்தி - தெரியவருதல்.*

6. யார் நினைத்ததை நினைத்தப்படி அடைவர்?

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின். 666**

ஒன்றை நினைத்தவர் தாம் நினைத்ததைச் செய்வதில் உறுதியாக இருப்பாராயின் அடைய நினைத்த பொருளை எல்லாம் நினைத்தப்படியே அடைவர்.

*எண்ணிய - நினைத்த; எண்ணியாங்கு - நினைத்தப்படி; எய்தும் - அடைவர்; திண்ணியர் - உறுதியுடையர்.*

7. சிறிய உருவம் உள்ளவர்களால் பெரிய செயல்களைச் செய்ய முடியுமா?

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சுஆணி அன்னார் உடைத்து. 667**

உருண்டு செல்கின்ற பெரிய தேரினை சிறிய அச்சாணி வலிமையுடன் தாங்கி நிற்பது போல், உருவத்தில் சிறியவராக இருந்தாலும் செயலில் உறுதியுடையவர்கள் இருக்கிறார்கள். ஆதலால் உருவத்தைப் பார்த்து யாரையும் இகழ்ந்து சிரிக்க வேண்டாம்.

*உருவு - உருவம்; எள்ளாமை - இகழ்ந்து; உருள் - உருளும்; அன்னார் - போன்றோர்.*

8. செய்யத் துணிந்த வேலையை எப்படிச் செய்ய வேண்டும்?

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்.** 668

எவ்வித மனக்கலக்கமும் இல்லாது செய்யத் துணிந்த வேலையை, சோம்பல் இன்றி காலம் தாழ்த்தாது விரைந்து செய்ய வேண்டும்.

*துளங்காது - சோம்பல்; தூக்கம் கடிந்து - காலம்தாழ்த்தாது விரைந்து; வினை - வேலை.*

9. துன்பம் வந்தாலும் செய்யும் செயலைச் செய்து முடிக்க வேண்டுமா?

**துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி**
**இன்பம் பயக்கும் வினை.** 669

மிகவும் துன்பம் வந்தாலும் துணிவோடு அதனைப் பொறுத்துக் கொண்டு இன்பம் தரும் செயலைச் செய்து முடியுங்கள்.

*உற - மிகவும்; வரினும் - வந்தாலும்; ஆற்றி - பொறுத்து.*

10. செயலில் உறுதி இல்லாவிட்டால் என்ன?

**எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
**வேண்டாரை வேண்டாது உலகு.** 670

செய்யும் செயலை உறுதியுடன் செய்ய விரும்பாதவர்கள் வேறு எந்த விடயத்திலும் எவ்வளவு உறுதி உள்ளவராக இருந்தாலும் அவரை உலகம் விரும்பாது.

*எனைத்திட்பம் - எவ்வளவு உறுதி; எய்திய - உள்ள; வேண்டாது - விரும்பாது; வினைத் திட்பம் - செயல் உறுதி; வேண்டாரை - விரும்பாதவரை.*

# 68. வினை செயல் வகை

*(செயல் செய்யும் முறை)*

1. எதனால் செய்யும் செயலில் தீமை உண்டாகும்?

**சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது.** 671

ஒன்றை ஆராய்ந்து முடிவெடுத்து செய்யத் துணிந்த பின்னர், அதனைச் செய்வதற்கு காலம் தாழ்த்துவது தீமையை உண்டாக்கும்.

*சூழ்ச்சி - ஆராய்ந்து; எய்தல் - செய்தல்;*
*தாழ்ச்சி - தாழ்த்துவது; தங்குதல் - நேரவிரயம்.*

2. எந்தெந்த வேலையை எந்தெந்த விதத்தில் செய்யவேண்டும்?

**தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.** 672

மெல்ல நிதானுத்துடன் செய்யும் வேலையை ஆறுதலாகச் செய்க. விரைந்து செய்யும் வேலையில் காலதாமதம் கூடாது.

*தூங்குக - ஆறதலாக; தூங்கி - நிதானத்துடன்;*
*செயற்பால - செய்யவேண்டியது; துங்காது - விரைந்து;*
*தூங்கற்க - காலதாமதம் கூடாது.*

3. ஒரு வேலையைச் செய்ய இயலாத இடத்து என்ன செய்வது?

**ஓல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல்.** 673

இயலும் வழியால் எல்லாம் ஒரு செயலைச் செய்து முடித்தல் நல்லது. செயலைச் செய்ய இயலாது இடத்து எந்த வழியால் செய்தால் அதனைச் செய்யலாம் எனப்பார்த்துச் செய்க.

*ஓல்லும் - இயலும்; நோக்கி - பார்த்து; வாய் - வழி;*

4. ஒரு வேலையைக் குறையாக மிச்சமிருக்க விடலாமா?

**வினைபகை என்றுஇரண்டின் எச்சம் நினையும்கால்**
**தீஎச்சம் போலத் தெறும். 674**

வேலை, பகைவர் இந்த இரண்டின் மிச்சங்களையும் விட்டுவைத்தலை, ஆராய்ந்து பார்த்தால் நெருப்பின் மிச்சத்தை விட்டு வைத்தது போல தொடர்ந்து அழிக்கும்.

*வினை - வேலை; பகை - பகைவர்; எச்சம் - மிச்சம்; தெறும் - அழிக்கும்; நினையுங்கால் - ஆராய்ந்து பார்த்தல்; தீ - நெருப்பு.*

5. எவற்றை ஆராய்ந்து பார்த்து ஒரு வேலையைத் தொடங்க வேண்டும்?

**பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல். 675**

வேலை செய்வதற்கான பொருள், தகுந்த கருவிகள், வேலை செய்வதற்கு ஆகும் காலம், வேலையின் தன்மை, ஏற்ற இடம் ஆகிய ஐந்தையும் சந்தேகம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

*வினை - செயல்; இருள் தீர - சந்தேகம் தீர.*

6. ஒரு வேலையைச் செய்யத் தொடங்கும் போது வேறு எவற்றை நாம் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்?

**முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல். 676**

செய்யும் செயலால் வரும் முடிவு என்ன? அதற்கு வரக்சுடிய இடையூறு என்ன? செய்து முடிந்த பின்னர் அதனால் வரும் பெரும் பயன் என்ன? ஆகிய இவற்றை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

*முற்றி - முடிந்த;*

7. செய்யப் போகும் வேலையின் செயல் முறையை அறிவது எப்படி?

**செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளம் கொளல். 677**

வேலையைச் செய்பவன், அவ்வேலையைச் செய்யும்முறை பற்றிய கருத்தை அந்த வேலையை முழுதாக அறிந்தவனிடம் தெரிந்து கொள்ள வேண்டும்.

*செய்வினை - செய்யும்வேலை; செயல்முறை - செய்யும்முறை; உள்ளம் - கருத்து; அவ்வினை - அந்த வேலை; உள்ளறிவான் - முழுதாக அறிந்தவன்.*

8. செய்கின்ற வேலையால் இன்னொரு வேலையையும் செய்து முடித்தல் எது போன்றது?

**வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.** 678

செய்கின்ற வேலையால் இன்னொரு வேலையை செய்து முடித்துக் கொள்ளல், மதநீரால் நனைந்த கன்னத்தையுடைய யானையால் இன்னோர் யானையைக் கட்டுவது போன்றது.

*வினையால் - வேலையால்; ஆக்கி - செய்து;*
*கோடல் - கொள்ளல்; யாத்தல் - கட்டல்; அற்று - போன்றது,*
*நனைகவுள் - மதநீரால் நனைந்த கன்னம்.*

9. நண்பர்க்கு நன்மை செய்வதா பகைவரைச் சேர்த்துக் கொள்வதா நல்லது?

**நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்தே**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல்.** 679

நண்பர்க்கு நன்மை செய்வதிலும், விரைவாகப் பகைவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

*நட்டார் - நண்பர், ஒட்டார் - பகைவர், ஒட்டி - சேர்த்து*

10. அற்பர்கள் சூறையாடிய பொருளை அவரிடமிருந்து பெற வழி உண்டா?

**உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்**
**கொள்வார் பெரியார்ப் பணிந்து.** 680

பெருமையற்ற அற்பரின் பொல்லாங்குக்கு அஞ்சி, அவர்களிடம் இருந்து இன்றியமையாத பொருள் கிடைத்தால் பெரியோர் அடக்கமாக அதனை ஏற்றுக் கொள்வர்.

*பணிந்து - அடக்கமாக; குறை - இன்றிமையாத பொருள்;*
*உள்நடுங்கல் - பொல்லாங்கு; பெறின் - கிடைத்தல்;*
*உறை - பெருமை; உறைசிறியார் - அற்பர்.*

# 69. தூது

*(தூது சொல்பவனின் இயல்பு)*

1. தூது சொல்பவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்**
**பண்புடைமை தூதுஉரைப்பான் பண்பு.** 681

அன்புள்ளவனாகவும், மேன்மையான குடும்பத்தில் பிறந்தவனாகவும், தலைவனால் விரும்பப்படும் நற்குணமுள்ளவனாகவும் தூது சொல்பவன் இருக்க வேண்டும்.

*ஆன்றகுடி - மேன்மையான குடும்பம்; பண்புடைமை - நற்குணம்.*

2. தூது சொல்பவர்க்கு கட்டாயம் இருக்கவேண்டிய தகுதிகள் என்ன?

**அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு**
**இன்றி யமையாத மூன்று.** 682

தலைவனிடத்தில் அன்பும், எதனையுமறியும் அறிவும், சொல்ல வேண்டியதை ஆராய்ந்து சொல்லும் ஆற்றலும் ஆகிய மூன்றும் தூது சொல்பவர்க்கு கட்டாயம் இருக்க வேண்டும்.

*வன்மை - ஆற்றல்; இன்றியமையாதது - கட்டாயம்.*

3. தூது சொல்பவன் எதில் வல்லவனாக இருக்கவேண்டும்?

**நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்**
**வென்றி வினையுரைப்பான் பண்பு.** 683

ஆயுதங்கள் வைத்திருப்பவரிடம் சென்று தன் தலைவனின் வெற்றி தரும் கருத்தை உரைப்பவன், கற்ற அறிஞருக்குள் கல்வியில் வல்லவானாக இருக்க வேண்டும்.

*நூலார் - அறிஞர்; நூல்வல்லவன் - கல்வியில் வல்லவன்; வினை - கருத்து; ஆகுதல் - இருத்தல்; வேல் - ஆயுதம்; வென்றி - வெற்றி.*

4. எப்படிப்பட்டவன் தூது செல்ல வேண்டும்?

**அறிவுஉரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்**
**செறிவுஉடையான் செல்க வினைக்கு.** 684

இயற்கையான அறிவு, மதிக்கப்படும் தோற்றம், ஆராய்ந்து கற்ற கல்வி ஆகிய மூன்றும் நிறைந்தவனே தூது செல்ல வேண்டும்.

*உரு - தோற்றம்; செறிவு - நிறைவு.*

5. தூது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்.

**தொகச்சொல்லித் தூவாதநீக்கி நகச்சொல்லி**
**நன்றி பயப்பதாம் தூது.** 685

தேவையான விடயங்களை தொகுத்து, பொருத்தம் அற்றவற்றை நீக்கி, மனம் மகிழுமாறு சொல்லி நன்மை உண்டாக்குவதாகத் தூது இருக்க வேண்டும்.

*தோக - தொகுத்து; தூவாத - பொருத்தமற்ற; நக - மகிழ; நன்றி - நன்மை; பயப்பது - உண்டாக்குவது.*

6. தூது சொல்பவன் அறிந்து இருக்க வேண்டிய தந்திரம் என்ன?

**கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்**
**தக்கது அறியவதாம் தூது.** 686

கற்றவனாக, மற்றவர்களின் கோபப்பார்வைக்குப் பயப்படாதவனாக, கேட்பவர் மனம் அத்தூதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் சொல்லி, நேரத்துடன் தான் வந்த வேலையை முடிக்கும் தந்திரம் அறிந்தவனாக தூதுவன் இருக்க வேண்டும்.

*கண்அஞ்சன் - கோபபப்பார்வைக்குப் பயப்படாதவன்; அறிவதாம் - அறிவதே; செலச்சொல்லி - மனதில்பதியச் சொல்லி.*

7. சிறந்த தூதுவன் எவற்றைச் சிந்தித்து தூது சொல்ல வேண்டும்?

**கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து**
**எண்ணி உரைபான் தலை.** 687

தான் செய்யப் போகும் கடமையை உணர்ந்தவனாக, எந்தச் சந்தர்ப்பத்தில் தூது சொல்கின்றேன் என்பதைக் கருத்தில் கொண்டு, தனக்குப் பாதுகாப்பான இடமா இல்லையா என்பதை அறிந்து, யாவற்றையும் நன்றாகச் சிந்தித்து சொல்பவனே தலை சிறந்த தூதனாவான்.

*கடன் - கடமை; காலம் - சந்தர்ப்பம்; எண்ணி - சிந்தித்து.*

8. தூது சொல்பவனிடம் இருக்க வேண்டிய பண்புகள் எவை?

**தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்**
**வாய்மை வழியுரைப்பான் பண்பு.** 688

தூதின் காரணம் சொல்பவனிடம் தூய ஒழுக்கமும், ஏற்ற துணையும், மனத்துணிவும் ஆகிய மூன்று வலிமையும் பண்புகளாக இருக்க வேண்டும்.

*தூய்மை - தூயஒழுக்கம்; துணைமை - துணை;*
*வாய்மை - வலிமை; வழி - காரணம்.*

9. தூதுவர் எதனைச் சொல்லக் கூடாது?

**விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்**
**வாய்சோரா வன்க ணவன்.** 689

சொல்லி அனுப்பும் செய்தியை மற்றைய தலைவர்க்குச் சொல்பவன், வசையுள்ள கடுங்கோபச் சொற்களை வாய்தவறியும் சொல்லாத மனவுறுதி உள்ளவனாக இருக்க வேண்டும்.

*விடுமாற்றம் - அனுப்பும்செய்தி, வடுமாற்றம் - வஞ்சினவுரை,*
*வாய்சோரா - வாய்தவறி; வன்கணவன் - மன உறுதி.*

10. உயிர் போகும் என்றாலும் தூது சொல்ல வேண்டுமா?

**இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது.** 690

தனது உயிர்போகும் என்றாலும் மனஉறுதியோடு தலைவனுக்கு நன்மை வரக்கூடியதைச் செய்பவனே தூதன்.

*இறுதிபயத்தல் - உயிர்போதல்; எஞ்சாது - மனவுறுதியோடு;*
*உறுதி - நன்மை; இறைவர்க்கு - தலைவனுக்கு.*

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

*(பெருந்தலைவர்களுடன் சேர்ந்து பழகும் முறை)*

1. பெருந்தலைவர்களுடன் எப்படிச் சேர்ந்து பழக வேண்டும்?

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.** 691

வலிமை மிக்க தலைவர்களுடன் நெருப்பில் குளிர் காய்பவன் போல் அதிகம் விலகிப் போகாமலும், மிக நெருங்காமலும் சேர்ந்து பழக வேண்டும்.

*அகலாது - விலகாது; அணுகாது - நெருங்காது;*
*தீக்காய்வார் - குளிர் காய்பவர்; இகல் - வலிமை.*

2. தலைவன் விரும்புகின்றவைகளை விருப்பாது இருப்பதால் என்ன நன்மை வரும்?

**மன்னர் விழைய விழையாமை மன்னரால்**
**மன்னிய ஆக்கம் தரும்.** 692

தலைவன் விரும்புகின்றவைகளை தாம் விரும்பாதிருப்பவர்க்கு அத்தலைவனால் பெருஞ்செல்வம் கிடைக்கும்.

*விழைய - விரும்புகின்றவை; விழையாமை - விரும்பாது;*
*மன்னிய - மிகுந்த(பெரும்); ஆக்கம் - செல்வம்.*

3. எமக்கு மேலுள்ளவர்களிடம் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி?

**போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்**
**தேற்றுதல் யார்க்கும் அரிது.** 693

தம்மைக் காப்பாற்றிக் கொள்வதாயின் பொறுக்க முடியாத குற்றங்களைச் செய்யாது இருக்க வேண்டும். சந்தேகம் வந்தபின் அதனைத் தீர்த்துவைத்தல் யார்க்கும் அரிதாகும்.

*போற்றின் - காப்பதாயின்; கடுத்தல் - சந்தேகம்;*
*தேற்றல் - தீர்த்தல்.*

4. பெருமைமிக்க பெரியவர்க்கு அருகில் எதனைச் செய்யக் கூடாது?

**செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்**
**ஆன்ற பெரியா ரகத்து. 694**

பெருமைமிக்க பெரியவர்க்கு அருகே, மற்றவருடைய காதுக்குள் சொல்வதும் சேர்ந்து சிரிப்பதையும் தவிர்த்துப் பழகவேண்டும்.

*செவி - காது; நகை - சிரிப்பு; அவித்து - தவிர்த்து; ஆன்ற - பெருமை; ஒழுகல் - பழகல்;*

5. பெரியவர் பேசும் இரகசியங்களை ஒட்டுக் கேட்கலாமா?

**எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை**
**விட்டக்கால் கேட்க மறை. 695**

எதனையும் அறிவதற்க்காக ஒட்டுக் கேட்காது, தொடர்ந்து அது என்ன என்றும் கேட்காது அவர்களாக அதனை வெளியே சொன்னால் அவிரகசியங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

*எப்பொருளும் - எதனையும்; ஓரார் - அறிய; மறை - இரகசியம்; தொடரார் - தொடர்ந்து; விட்டாக்கால் - வெளிப்படுத்தின்.*

6. அவர்களிடம் எப்படிப் பேசவேண்டும்?

**குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்புஇல**
**வேண்டும் வேட்பச் சொலல். 696**

அவர்களின் மனநிலையறிந்து தக்க நேரம் பார்த்து, வெறுப்புத் தராத சொல்ல வேண்டிய செய்திகளை அவர்கள் மகிழுமாறு சொல்ல வேண்டும்.

*குறிப்பறிந்து - மனநிலையறிந்து; காலம்கருதி - நேரம் பார்த்து; வேட்ப - மகிழ.*

7. அவர்களிடம் எதனைச் சொல்லக் கூடாது?

**வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்**
**கேட்பினும் சொல்லா விடல். 697**

விருப்பமானவற்றைச் சொல்லி பயனில்லாதவற்றை அவராகக் கேட்டாலும் எப்போதும் சொல்லாது விடவேண்டும்.

*வேட்பன - விரும்புவை; வினையில் - பயனில்லாத; எஞ்ஞான்றும் - எப்போதும்.*

8. அவர் தமக்கு உறவு என்று எண்ணி எப்படியும் நடக்கலாமா?

**இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற**
**ஒளியோடு ஒழுகப் படும். 698**

என்னிலும் வயதில் குறைந்தவர் இந்த முறையில் எனக்கு உறவினர் என்று இகழாது அவரது புகழை மதித்து நடக்க வேண்டும்.

*இளையர் - வயதிற்குறைந்தவர்; ஒளி - புகழ்;*
*இனமுறையர் - உறவினர்; ஒழுகல் - நடத்தல்.*

9. அவரால் மதிக்கப்படுகிறோம் என்பதற்காக எதனையும் செய்யலாமா?

**கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்**
**துளக்கற்ற காட்சி யவர். 699**

நிலையான அறிவுடையவர்கள், மதிக்கப்படுகிறோம் என்று எண்ணி அவர் விரும்பாதவற்றைச் செய்யார்.

*கொளப்பட்டேம் - மதிக்கப்பட்டோம்; கொள்ளாத - விரும்பாத;*
*துளக்கற்ற - நிலைத்த; காட்சியவர் - அறிவுள்ளவர்.*

10 நீண்ட காலமாக அவரைத் தெரியும் என்பதற்காக தகுதியில்லாதவற்றைச் செய்யலாமா?

**பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்**
**கெழுதகைமை கேடு தரும் 700**

நீண்டகாலம் பழக்கம் எனநினைத்து, தகுதி இல்லாதனவற்றைச் செய்யும் உரிமை கேட்டினைத் தரும்.

*பழையம் - நீண்டநாள் பழக்கம்; கருதி - நினைத்து;*
*பண்புஅல்ல - தகுதியற்ற; கெழுதகைமை - உரிமை.*

# 71. குறிப்பு அறிதல்

*(சொல்லாமலே மனக்கருத்தை அறிதல்)*

1. குறிப்பு அறிபவன் இவ்வுலகிற்கு என்னாவான்?

**கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக்கு அணி.** 701

ஒருவர் ஒன்றும் சொல்லாமல் இருக்க அவரைப் பார்த்து எப்போதும் அவரின் உள்ளக் கருத்தை அறிபவன் வற்றாதநீர் நிறைந்த இந்த உலகிற்கு அணிகலனாவான்.

*கூறாமை - சொல்லாமை; நோக்கி - பார்த்து: குறிப்பு - உள்ளக்கருத்து; எஞ்ஞான்றும் - எப்போதும்; மாறாநீர் - வற்றாதநீர்; வையக்கு - உலகிற்கு*

2. குறிப்பை உணர்பவரை எப்படி மதிக்க வேண்டும்?

**ஐயப் படாஅது அகத்து உணர்வானைத்**
**தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.** 702

மற்றவர் மனத்திலுள்ளதை எதுவித சந்தேகமில்லாது உணர்பவனை, தெய்வத்தைப் போல மதிக்க வேண்டும்.

*ஐயம் - சந்தேகம்; ஐயப்படாது - சந்தேகமில்லாது; அகத்து - மனத்து; ஒப்ப - போல.*

3. ஒருவரது செய்கையால் அவரது மனக்கருத்தை அறிய வல்லவரை என்ன செய்ய வேண்டும்?

**குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.** 703

ஒருவரது செய்கைகளைக் கொண்டு அவரது மனக்கருத்தை உணர வல்லவரை, எமது உறுப்புகளில் எதனைக் கொடுத்தாவது எமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

*குறிப்பின் - செய்கையின், குறிப்பு - மனக்கருத்து.*

4. மனக்கருத்தை உணரவல்லவர்க்கும் உணரமுடியாதவர்க்கும் உள்ள வேறுபாடு என்ன?

**குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை**
**உறுப்புஓர் அனையரால் வேறு. 704**

ஒருவர் மனதில் எண்ணியதை அவர் கூறாமலே அறிய வல்லவரோடு, மற்றவர் உடலிலுள்ள உறுப்புக்களால் ஒத்தவராக இருப்பினும் அறிவால் வேறுபாடுடையவரே.

*குறித்தது - எண்ணியது; ஓரனையர் - ஒத்தவர்;*
*கொள்வார் - அறிவார்.*

5. மனித உறுப்புக்களில் கண்ணின் பயன் என்ன?

**குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்**
**என்ன பயத்துவோ கண். 705**

ஒருவரின் செய்கைகளால் அவரின் மனக்கருத்தை உணரமுடியாவிட்டால் உறுப்புகளில் கண் என்ன பயனைக் கொடுக்கும்?

*குறிப்பு - மனக்குறிப்பு; செய்கை - கருத்து.*

6. மனதில் உள்ளதை முகம் எதனைப் போல் காட்டும்?

**அடுத்தது காட்டும் பளிங்குபோல நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம். 706**

தனக்கு அடுத்துள்ள பொருளைக் காட்டும் கண்ணாடி போல நெஞ்சம் குறிப்பதை முகம் காட்டும்.

*பளிங்கு - கண்ணாடி: கடுத்தது - குறித்தது.*

7. ஒருவரின் மனதிலுள்ள விருப்பு வெறுப்பை கண்ணா காட்டும்?

**முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும். 707**

விரும்பினாலும் வெறுத்தாலும் அவ்வுணர்ச்சியை மற்ற உறுப்புகளைவிட தானே முந்திக் காட்டும் முகத்திற்கு அறிவு குறைந்து போய்விட்டதோ?

*முது - அறிவு; உவப்பினும் - விரும்பினாலும்;*
*முந்துறும் - முந்தும்; காயினும் - வெறுத்தாலும்.*

8. மனதிலுள்ளதை உணர்பவர் எதனை அறிந்து கொள்வார்?

**முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்றது உணர்வார்ப் பெறின். 708**

மனதில் உள்ளதைப் பார்த்து உணர்பவர் இருந்தால், அவரது முகத்தைப் பார்த்து நின்றாலே போதும் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வார்.

*முகம்நோக்கி - முகம் பார்த்து; அமையும் - போதும்; உற்றது - நடந்தது; அகம்நோக்கி - உள்ளத்தைப் பார்த்து; உற்றது - நடந்தது.*

9. எது நட்பையும் பகையையும் சொல்லும்?

**பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின். 709**

ஒருவரின் பார்வையின் வேறுபாட்டை உணர்பவர்க்கு பகைமையும் நட்பையும் கண்ணே சொல்லும்.

*கண்ணின் - பார்வையின்; வகைமை - வேறுபாடு; கேண்மை - நட்பு; உரைக்கும் - சொல்லும்.*

10. மனதை அளக்கும் அளவுகோல் எது?

**நுண்ணியம் என்பர் அளக்கும்கோல் காணும்கால்**
**கண்அல்லது இல்லை பிற. 710**

ஆராய்ந்து பார்த்தால் கூர்மையான அறிவுடையோம் என்று சொல்பவர் உபயோகிக்கும் அளவுகோல் கண்ணேயாகும். வேறெதுவும் இல்லை.

*நுண்ணியம் - கூர்மையனஅறிவு; காணும்கால் - ஆராய்ந்து பார்த்தல்; அளக்கும்கோல் - அளவுகோல்.*

# 72. அவை அறிதல்

*(ஒன்றைப் பேசுவதற்கு சபையின் தன்மையை அறிதல்)*

1. சபையில் ஒன்றைச் சொல்லும் போது எதனை அறிந்து சொல்ல வேண்டும்.?

**அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகைஅறிந்து தூய்மை யவர். 711**

சொல்லினை தொகுத்துக் கூற அறிந்த நல்ல அறிவுடையவர், சபையில் உள்ளவர்களின் தன்மையை அறிந்து அதற்குத் தக்கவாறு ஆராய்ந்து ஒன்றைச் சொல்ல வேண்டும்.

*அவை - சபை; தொகை - தொகுதி;*
*தூய்மையவர் - தூய அறிவு உடையவர்.*

2. சபையில் பேசுவதற்கு நேரம் அவசியமா?

**இடைதெரிந்து நன்குஉணர்ந்து சொல்லுக சொல்லின்**
**நடைதெரிந்த நன்மை யவர். 712**

சொல்லின் நடையை ஆராய்ந்து அறிந்த சிறப்புடையோரும், காலத்தை (நேரத்தை) அறிந்து பேச வேண்டியதை நன்குணர்ந்தே பேசவேண்டும்.

*இடைதெரிந்து - காலம்(நேரம்); சொல்லுக - பேசுக;*
*தெரிந்த - ஆராய்ந்த; நன்மையவர் - சிறப்புடையோர்.*

3. சபையின் தன்மை அறியாது பேசுபவரிடம் எது இருக்காது?

**அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்**
**வகையறியார் வல்லதூஉம் இல். 713**

சபையின் தன்மையை அறியமால் சொல்ல முனைபவர்க்கு சொற்களின் வகையும் தெரியாது, அவர்களிடம் பேசும் வல்லமையும் இருக்காது.

*சொல்லல் - செல்ல; மேற்கொள்பவர் - முனைபவர்.*

4. சபைக்கு ஏற்றவாறு பேசுவது எப்படி?

**ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்**
**வான்சுதை வண்ணம் கொளல்.** 714

அறிஞர்களின் முன் நாமும் அறிஞர்களாகப் பேச வேண்டும். அறிவிலார் முன் நாமும் வெண்சுண்ணாம்பு போல ஒன்றும் அறியாதவராகக் காட்டிக் கொள்ளவேண்டும். (அறிவு இல்லாதவரை வெள்ளைகள் என்பது மரபு).

*ஒளியார் - அறிஞர்; ஒள்ளியர் - அறிவுள்ளவர்;*
*வெளியார் - அறிவிலார்; வான்சுதை - வெண்சுண்ணாம்பு.*

5. நம்மை விட அறிவிற் சிறந்த மூதறிஞர்களது சபையில் நாம் எப்படி இருக்கவேண்டும்?

**நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு.** 715

நல்லவை என்று சொல்வனவற்றுள் மிகவும் நல்லது தம்மிலும் அறிவு முதிர்ந்தவர்களின் சபையில் ஒன்றையும் முந்திக் கொண்டு சொல்லாது அடங்கி இருப்பதே.

*முதுவருள் - மூதறிஞர்; கிளவா - சொல்லா;*
*செறிவு - அடக்கம்.*

6. அறிஞர்களது சபையில் உரையாற்றும் போது அதில் தடுமாறுவது எது போன்றது?

**ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்**
**ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு.** 716

விரிவாகக் கற்றுணர்ந்த அறிவுடையவர் முன்னர் பேசும் போது தவறுவிடுதல் நல்லொழுக்கமுடன் வாழ்ந்தவன் நிலை தவறியது போலாகும்.

*ஆற்றின் - நல்லொழுக்கத்தில்; வியன்புலம் - அதிக அறிவு;*
*ஏற்று - கற்று; இழுக்கு - தவறு.*

7. எமது அறிவுத்திறன் தெரிய வேண்டுமாயின் எப்படிப்பட்டவர் முன் பேச வேண்டும்?

**கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்**
**சொல்தெரிதல் வல்லார் அகத்து.** 717

சந்தேகமில்லாது சொற்களின் கருத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலுடையவர்களது சபையில் பேசினால், கற்றவர்களின் கல்வியின் பெருமை விளங்கும்.

*கசடு - சந்தேகம், அற - இல்லாது, வல்லார் - ஆற்றுலுள்ளவர்,*
*சொல்தெரிதல் - சொல்லின் கருத்தை அறிதல்.*

8. எதனையும் உணரவல்லவர் முன் பேசுவது எதைப் போன்றது?

**உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொறிந் தற்று. 718**

சொல்வதை உணர்ந்து கொள்பவர் முன் பேசுவது, தானாக வளரும் பயிருள்ள பாத்தியில் நீரை ஊற்றுவதைப் போன்றது.

*சொல்லல் - பேசுதல்; சொறிதல் - ஊற்றுதல்.*

9. நல்ல அறிஞருள்ள சபையில் பேசக்கூடியவர்கள் அறிவிலார் சபையில் பேசலாமா?

**புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார். 719**

நல்ல அறிஞருள்ள சபையில், நன்கு மனதில் பதியுமாறு பேசக் கூடியவர்கள் அறிவிலார் சபையில் மறந்தும் பேசாது இருக்க வேண்டும்.

*புல்லவை - அறிவிலார்சபை; பொச்சாந்தும் - மறந்தும்;*
*நல்லவை - அறிஞர் சபை;*
*செலச்சொல்லுதல் - மனதில்பதியச் சொல்லுதல்.*

10. அறிஞர்கள் தம்மோடு ஒத்த அறிவில்லாதவர்களின் சபையில் பேசுவது எது போன்றது?

**அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தார்**
**அல்லார்முன் கோட்டி கொளஅல். 720**

தம் போல் அறிவுள்ள கூட்டத்தார் இல்லாத சபையின் முன் பேசுதல், சாக்கடையில் ஊற்றிய அமிழ்தம் போல் பயனற்றதாகும்.

*அங்கணம் - சாக்கடை; உக்க - ஊற்றிய;*
*கணத்தார் - கூட்டத்தார்; கோட்டி - சபை.*

# 73. அவை அஞ்சாமை

*(சபையில் பேசப் பயப்படாமை)*

1. எவர் சபைக்குப் பயப்படாது பேச்சுத்தடுமாறாது பேசுவார்கள்?

**வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்**
**தொகைஅறிந்த தூய்மை யவர்.** 721

சொற்களைத் தொகுத்துக்கூற அறிந்த நல்லவுறிவுடையவர்கள், தாம் கற்று வல்லமை அயடைந்தவைகளை வகைப்படுத்திப் பேசும் பொழுது பயத்தால் பேச்சுத் தடுமாறமாட்டார்கள்.

*வகை - வகைப்படுத்தி; தூய்மையவர் - நல்லறிவுடையவர்; தொகை - தொகுப்பு; வாய்சோரார் - பேச்சுத்தடுமாறார்.*

2. கற்றவர்களுள் இவர் நன்கு கற்றவறென்று யாரைச் சொல்வர்?

**கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்.** 722

கற்ற அறிஞர் முன் தாம் கற்றதை அவருடைய மனதில் பதியுமாறு, சொல்லவல்லவரை கற்றவர்களுள் கற்றவர் என்று சொல்வர்.

*கற்றாருள் - கற்றவர்களுள்; கற்றார் - கற்றவர்; கற்றார்முன் - அறிஞர்முன்; செல - பதியுமாறு.*

3. சபையில் அஞ்சாது எல்லோராலும் பேசமுடியுமா?

**பகையகத்துச் சாவார் எளியர் அரியர்**
**அவையகத்து அஞ்சா தவர்.** 723

பகைவரின் போர்க்களத்தில் போர்புரிந்து பலர் சாவார். அவைக் களத்தில் (சபையில்) அஞ்சாது பேசுபவர் சிலரே.

*பகைஅகம் - போர்க்களம்; அவைஅகம் - அவைக்களம்.*

4. சபையில் பேசுபவர் எத்தகைய குணமுள்ளவராக இருக்க வேண்டும்?

**கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல். 724**

அறிஞர் முன் பேசும் போது அவர்கள் மனதில் பதியுமாறு தான் கற்றதைச் சொல்லி, தம்மை விட அதிகம் கற்றவரிடம் தமக்குத் தெரியாத மிகுதியையும் தெரிந்து கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

*மிக்கார் - அதிகம் கற்றார்; மிக்க - மிகுதி; தாம்கற்ற - தான் கற்றதை; செல - பதியுமாறு.*

5. சபைக்கு அஞ்சாது கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு கற்பதை எப்படிக் கற்க வேண்டும்?

**ஆற்றின் அளவுஅறிந்து கற்க அவைஅஞ்சா**
**மாற்றம் கொடுத்தல் பொருட்டு. 725**

சபைக்கு அஞ்சாது பதில் கொடுக்க வேண்டுமனால் கற்க வேண்டியதை முறைப்படி கருத்தறிந்து கற்கவும்.

*அவை - சபை; மாற்றம் - பதில்; ஆற்றின் - முறைப்படி; அளவு - கருத்து.*

6. ஏன் கற்றவர்கள் சிலர் சபையில் பேசப்பயப்படுகிறார்கள்?

**வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்**
**நுண்ணவை அஞ்சு பவர்க்கு. 726**

வீரம் இல்லாதவனுக்கு வாளோடு என்ன தொடர்பிருக்கின்றது? சபையில் பேசப்பயப்படுபவர்க்கு கற்றநூலோடு என்ன தொடர்பிருக்க முடியும்?

*நுண்ணவை - அறிவுடையோர் சபை.*

7. சபையில் பேசப்பயப்படுபவர் கற்ற நூல் எதற்குச் சமன்?

**பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சு மவன்கற்ற நூல். 727**

பகைவரின் போர்க்களத்தில் பேடியின் கையிலுள்ள கூர்மையான வாளும், சபையில் பேசப்பயப்படுபவர் கற்ற நூலும் சமனானவை.

*பகைஅகம் - பகைவர் போர்க்களம்; ஒள்வாள் - கூரியவாள்.*

8. தான் கற்றதைச் சபையில் கூறமுடியாதவரால் பயன் என்ன?

**பல்லவை கற்றும் பயம்இலரே நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லா தவர். 728**

நல்ல அறிவுடையோர் இருக்கும் சபையில் நன்றாக மனதில் பதியுமாறு பேசமுடியாதவர் பல நூல்களைக் கற்றும் பயன் இல்லாதவரே.

*பயம் - பயன்; இலர் - இல்லாதவர்; செல - பதிய.*

9. கற்றறிந்தும் சபைக்கு அஞ்சுபவரை எப்படிச் சொல்வர்?

**கல்லா தவரின் கடையென்ப கற்றுஅறிந்தும்**
**நல்லார் அவைஅஞ்சு வார். 729**

நூல்களைக் கற்றறிந்தும் நல்ல அறிஞர்களின் சபையில் பேசப்பயப்படுபவரை கல்லாதவரிலும் இழிவானவர் என்று சொல்வர்

*கடை - இழிவு; அஞ்சுவார் - பயப்படுவார்.*

10. சபையில் பேசப்பயப்படுபவர் எதற்குச் சமமானவர்?

**உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தவர். 730**

சபைக்குப் பயந்து தாம் கற்றதை பிறர் புரிந்து கொள்ளச் சொல்ல முடியாதவர், உயிரோடு இருப்பினும் இறந்தவர்க்குச் சமமானவரே.

*உளர் - இருப்பவர்; இல்லார் - இறந்தவர்; ஒப்பர் - சமமானவர்; களன் - சபை.*

# 74. நாடு

*(நாட்டின் சிறப்பு)*

1. நாடு என்று எதனைக் கூறலாம்?

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்**
**செல்வரும் சேர்வது நாடு.** 731

குறையாத விளைச்சலும், கற்ற அறிஞரும், நிறைந்த செல்வமுடையவரும் சேர்ந்ததே நாடுடாகும்.

*தள்ளா - குறையாத; தக்கார் - அறிஞர்; தாழ்விலா - நிறைந்த.*

2. சிறந்த நாடு எது?

**பெரும்பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால்**
**ஆற்ற விளைவது நாடு.** 732

பெரும் பொருளால் பிறதேசத்தவராலும் விரும்பத்தக்கதாகி, அழிவுகள் இல்லாமல், மிக நன்றாக பயிர்விளைவதே சிறந்த நாடாகும்.

*பெள் - விரும்ப; பெட்டக்கதாகி - விரும்பக்கூடியதாய்; அருங்கேடு - அழிவில்லாது.*

3. செல்வங் கொழிக்கும் நாட்டில் ஏன் வரி செலுத்த வேண்டும்?

**பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு**
**இறைஒருங்கு நேர்வது நாடு.** 733

புதிதாக இயற்கை அழிவுகளால் போரால் ஒன்றாக நாட்டிற்கு வந்து சேரும் பாரத்தைத் தாங்கி, தலைவனுக்கு வரியை ஒன்றாகச் செலுத்த உடன்படுவதே நாடாகும்.

*பொறை - பாரம்; வருங்கால் - வரும்போது; இறை - வரி; ஒருங்கு - ஒன்றாக; நேர்வது - உடன்படுவது.*

4. எத்தகைய துன்பங்கள் வந்து சேராது ஒரு நாடு இயங்க வேண்டும்?

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு.** 734

மிக்க பசியும், நீங்காத நோயும், நெடுங்காலப் பகையும் சேராது இயங்குவதே நாடாகும்.

*உறு - மிக்க; ஓவா - நீங்காத; செறு - நெடுங்கால; இயல்வது - இயங்குவது.*

5. எவை ஒரு நாட்டில் இல்லாது இருக்க வேண்டும்?

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு.** 735

கருத்து வேறுபாடுடைய பல கட்சிக் குழுவினரும், நாட்டை பாழ்படுத்தும் உட்பகையும், அரசை வருத்திக் கொலை செய்யும் குறும்புத்தனமும் இல்லாது இருப்பதே நாடாகும்.

*அலைக்கும் - வருந்தும்; வேந்து - அரசு (நாடு).*

6. எந்த நாட்டை நாடுகளுள் தலை சிறந்த நாடு என்பர்?

**கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா**
**நாடுஎன்ப நாட்டின் தலை.** 736

அழிவுகளை அறியாததாய், அழிந்த போதும் தன் வளத்தில் சிறிதும் குறையாத நாடு, நாடுகளுள் தலை சிறந்தது என்பர்.

*கேடு - அழிவு; கெட்ட இடத்தும் - அழிந்த போதும்.*

7. ஒரு நாட்டிற்கு உறுதி தருவது எது?

**இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.** 737

நிலத்தின் கீழுள்ள நீர் (கிணறு, நீர் ஊற்று), நிலத்தின் மேலுள்ள நீர் (ஆறு, குளம், ஏரி) ஆகிய இருவகை நீர்நிலைகளும், செழிப்பு உடைய மலையும், மழையும், வலிமையுடைய அரணுமே ஒரு நாட்டிற்கு உறுதி தரும்.

*இருபுனல் - நிலத்தின் மேல் நீர், கீழ் நீர்; வாய்ந்த - செழித்த; வருபுனல் - மழை; உறுப்பு - உறுதி.*

8. எவை ஒரு நாட்டிற்கு அழகுதரும் என்று கூறுவர்?

**பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.** 738

நோயின்மை, செல்வம், விளைச்சல், இன்பம், பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகுதரும் என்று சொல்வார்கள்.

*பிணி - நோய்; ஏமம் - பாதுகாப்பு; அணி - அழகு.*

9. எதனை ஒரு நாடு என்று அழைக்க முடியாது?

**நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல**
**நாட வளம்தரு நாடு.** 739

நாட்டில் வாழ்பவர் வருந்தித்தேடாது கிடைக்கக்கூடிய இயற்கை வளம் மிக்கதே நாடு என்பர். வருந்தித் தேடி வளம் பெறும் நாடு நாடாகாது.

*நாடா - தேடாது; வளத்தன - வளம்மிக்க; நாட - தேடி; நாடுஅல்ல - நாடாகாது.*

10. ஒரு நாட்டிற்கு மேலே சொன்ன இயற்கைவளம் மட்டும் இருந்தால் போதுமா?

**ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்துஅமை வில்லாத நாடு.** 740

நல்ல அரசாங்கம் அமையாத நாட்டில், மேலே சொன்ன வளம் யாவும் சேர்ந்திருந்தாலும் அவற்றால் பயன் ஒன்றுமில்லை.

*ஆங்குஅமைவு - அத்தகைய வளம்; எய்தல் - சேர்தல்; பயமின்றே - பயன் இல்லை. வேந்து - அரசாங்கம்; அமைவில்லாத - அமையாத.*

## 75. அரண்

*(நாட்டின் பாதுகாப்பு)*

1. ஒரு நாட்டின் அரண் எவர்களுக்கு எல்லாம் உறுதியாய் இருக்கும்?

**ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்கும் பொருள்.** 741

வேறு நாட்டோடு போர் செய்பவர்க்கும் அரண் உறுதியாயிருக்கும். போருக்குப்பயந்து தமது உயிரைப் போற்றிக் காப்பவர்க்கும் அரண் உறுதியாயிருக்கும்.

*ஆற்றுதல் - செய்தல்; பொருள் - உறுதி;
தன்போற்றுபவர் - தம்மைக் காப்பவர்.*

2. இயற்கை அரண் எவற்றை உடையது?

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.** 742

தெளிந்த நீரும், மண்ணும், மலையும், குளிர்நிழலை உடைய காடும் உடையதே இயற்கை அரண் ஆகும்.

*மணிநீர் - தெளிந்தநீர்; அணிநிழல் - குளிர் நிழல்.*

3. செயற்கை அரண் எப்படி இருக்க வேண்டும்?

**உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல்.** 743

உயரம், அகலம், வலிமை, எளிதிற் கைப்பற்ற முடியாத தன்மை ஆகிய நான்கும் அமைந்திருப்பதே செயற்கை அரண் என்று நூல் கூறும்.

*திண்மை - வலிமை; அருமை - எளிதில் கிடைக்காதது.*

4. எவரின் முயற்சியை அழிப்பது அரணாகும்?

**சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை**
**ஊக்கம் அழிப்பது அரண். 744**

பாதுகாக்க வேண்டிய இடம் சிறியதாய், பரந்த இடத்தை உள்ளடக்கியதாக, எதிர்த்து வந்த பெரும்பகைவரின் முயற்சியை அழிப்பது அரணாகும்.

*காப்பு - பாதுகாப்பு; பேரிடம் - பரந்த இடம்; ஊக்கம் - முயற்சி; உறுபகை - பெரும்பகை.*

5. கோட்டையின் உள்ளரண் எப்படி இருக்க வேண்டும்?

**கொளற்குஅரியதாய்க் கொண்டகூழ்த் ஆகி அகத்தார்**
**நிலைக்குஎளிதாம் நீரது அரண். 745**

கைப்பற்றிக் கொள்ள முடியாததாய், உண்பதற்கு வேண்டிய உணவு உள்ளதாய், உள்ளிருந்து போர்புரிவோர் நிலைக்குத் தக்க எளியதன்மை உடையதாய் அரண் இருக்க வேண்டும்.

*நீரது - தன்மை; கொண்ட கூழ் - உள்ள உணவு; அகத்தார் - உள்ளிருப்பவர்.*

6. பாதுகாப்பான அரணுள் பொருள்மட்டும் இருந்தால் போதுமா?

**எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்**
**நல்ஆள் உடையது அரண். 746**

உள்ளே இருப்பவர்க்கு வேண்டிய எல்லாப் பொருளும் உடையதாய், தக்க சமயத்தில் உதவும் நல்லவீரரையும் உடையதாக அரண் இருக்க வேண்டும்.

*இடத்து உதவும் - தக்கசமயத்தில் உதவும்; நல்லாள் - நல்லவீரர்.*

7. அரணுக்கு எத்தகைய வலிமை இருக்க வேண்டும்.?

**முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்**
**பற்றற்கு அரியது அரண். 747**

முற்றுகை இட்டும், முற்றுகை இடாது தாக்கியும், உளவால் வஞ்சித்துக் கைப்பற்றுவதற்கும் முடியாததாய் அரண் இருக்க வேண்டும்.

*முற்றியும் - முற்றுகையிட்டும்; முற்றாது - முற்றுகை இடாது; எறிந்து - தாக்கி; அறைப்படுத்தும் - உளவால் வஞ்சித்தும்.*

8. எத்தகைய சிறப்புடன் அரண் இருக்க வேண்டும்?

**முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்**
**பற்றியார் வெல்வது அரண். 748**

முற்றுகை இட்டவாறு சூழ்ந்தவரையும், உள்ளே தங்குமிடத்தில் தங்கியவாறு போர்புரிந்து வெல்லும் சிறப்புடன் அரண் இருக்க வேண்டும்.

*முற்றுஆற்று - முற்றுகைஇட்டவாறு; முற்றியவரை - சூழ்ந்தவரை; பற்று - தங்குமிடம்; பற்றிஆற்றி - தங்கியவாறு.*

9. அரண் எப்படிப் பெருமை பெறும்?

**முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து**
**வீறுஎய்தி மாண்டது அரண். 749**

போர் தொடங்கியதும் பகைவர் இறந்து வீழ, போர் செய்யும் தன்மையில் வெற்றி பெற்று பெருமை பெறுவதே அரண் ஆகும்.

*முனைமுகம் - போர்த்தொடக்கம், மாற்றலர் - பகைவர்; வினைமுகம் - போர்த்தன்மை; வீறுஎய்தி - வெற்றிபெற்று; மாண்டது - பெருமையுடையது.*

10. நல்ல அரண் இருந்தும் பயன் இல்லாது போவது எதனால்?

**எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி**
**இல்லார்கண் இல்லது அரண். 750**

அரணில் எவ்வளவுதான் மிக்க சிறப்புக்கள் இருந்தாலும், அதனைத் தொழிற்படுத்தக் கூடிய திறமை இல்லாதார் இருந்தால் அவ்வரணால் பயன் இல்லை.

*எனைமாட்சி - எவ்வளவு சிறப்பு.*

# 76. பொருள் செயல்வகை

*(பொருளீட்டலின் சிறப்பு)*

1. மதிக்கப்படாதவரையும் மதிப்புடையவராக்குவது எது?

**பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருள்அல்லது இல்லை பொருள்.** 751

ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும், மதிப்புடையவராகச் செய்வது அவரிடமுள்ள செல்வமே அல்லாமல் வேறு பொருள் இல்லை.

*பொருளல்லவர் - மதிக்கப்படாதவர்; பொருளாக - மதிக்க*
*பொருள் - செல்வம்.*

2. பொருள் இல்லாவிட்டால் என்ன?

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லோரும் செய்வர் சிறப்பு.** 752

பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வார்கள், செல்வர்களை எல்லோரும் மதிப்பார்கள்.

*இல்லாரை - பொருளில்லாரை; எள்ளுவர் - இகழ்வர்;*
*சிறப்பு - மதிப்பு.*

3. பொருள் என்ன செய்யும்?

**பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று.** 753

பொருள் என்னும் அணையாத விளக்கு, ஒருவனுக்கு அவன் நினைத்த தேசங்களுக்கெல்லாம் சென்று அவனின் துன்பத்தைப் போக்க உதவும்.

*பொய்யா - அணையா; விளக்கம் - விளக்கு;*
*இருள் அறுக்கும் - துன்பத்தை நீக்கும்; தேயம் - தேசம்.*

4. பிறருக்கு தீமை செய்யாது வந்த பொருள் எதனைக் கொடுக்கும்?

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து**
**தீதுஇன்றி வந்த பொருள். 754**

பொருளை உண்டாக்கும் வழியை அறிந்து, பிறருக்குத் தீமை செய்யாது வந்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

*அறன் - அறம்; திறன் - வழி; தீதின்றி - தீமை இன்றி.*

5. எத்தகைய பொருளை பகைவரிடம் புரள விட வேண்டும்?

**அருளொடும் அன்பொடும் வராப் பொருள்ஆக்கம்**
**புல்லார் புரள விடல். 755**

அருளொடும், அன்போடும் சேர்ந்து வராமல் தேடிச் சேர்த்த பொருளை பகைவரிடம் புரளவிட வேண்டும்.

*ஆக்கம் - தேட்டம்; புல்லார் - பகைவர்.*

7. அரசாங்கத்தை சேரவேண்டிய பொருள்கள் எவை?

**உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள். 756**

புதையுலும், சுங்கவரியும், பகைவர் செலுத்தும் கப்பமும் அரசாங்கத்திற்குரிய பொருள்களாகும்.

*உறுபொருள் - புதையல்; உல்குபொருள் - சுங்கவரிப்பொருள்; தெறுபொருள் - கப்பம்.*

6. அருள் என்ற குழந்தையை வளர்ப்பது யார்?

**அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு. 757**

ஒருவரின் உள்ளத்திலிருக்கும் அன்பு என்ற தாய் பெற்ற அருள் என்ற குழந்தையை, பொருளென்று நாம் கூறும் செல்வச் செவிலித்தாயே வளர்க்கின்றாள்.

*குழவி - குழந்தை; செவிலி - வளர்ப்புத்தாய்.*

8. தன் கையிலுள்ள பொருளைக் கொண்டு ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குவது எதனைப் போன்றது?

**குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று**
**உண்டாகச் செய்வான் வினை.** 758

தன் கையிலுள்ள பொருளைக் கொண்டு ஒரு தொழிலை உண்டாக்குவது, மலையின் மேல்ஏறி நின்று யானைகள் போர் புரிவதை காண்பது போல மிக எளிதானது.

*குன்று - மலை; கைத்து - கையிலுள்ள.*

9. ஏன் பொருளைத் தேட வேண்டும்?

**செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்**
**எ∴குஅதனின் கூரியது இல்.** 759

பொருளைத் தேடுங்கள். ஏனெனில் பகைவரின் செருக்கை அறுக்கக் கூடிய கூர்மையான ஆயுதம் அதைவிட வேறில்லை.

*செய்க - தேடுக; செறுநர் - பகைவர்; எ∴கு - ஆயுதம்.*

10. பொருள் உள்ளவர்க்கு வேறு எவை கிடைக்கும்?

**ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு.** 760

சிறந்த பொருளை மிக அதிகமாகத் தேடி வைத்திருப்பவர்க்கு அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் மற்ற இரண்டும் (அறமும், இன்பமும்) ஒன்றாகச் சேர்ந்து மிக எளிதில் கிடைக்கும்.

*ஒண் - சிறந்த; காழ்ப்ப - மிக அதிகம்; ஒருங்கு - சேர்ந்து; இயற்றியார் - ஈட்டியவர்; எண்பொருள் - எளிதிற்கிடைக்கும் பொருள்.*

# 77. படை மாட்சி

*(படையின் சிறப்பு)*

1. எப்படிப்பட்ட படை அமைந்தால் அதனை ஒரு தலைவனின் சிறந்த செல்வமாகக் கொள்ளலலாம்?

**உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை.** 761

படையானது பிரிவுகள் உடையதாக, இடையூறுகளுக்கு அஞ்சாத, வெற்றிப்படையாக இருப்பின் அதுவே தலைவனின் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வமாகும்.

*உறுப்பு - பிரிவு; அமைந்து - உடையதாய்; ஊறு - இடையூறு; வெறுக்கை - செல்வம்; வெல்படை - வெற்றிப்படை.*

2. இடையூறுகளுக்கு அஞ்சாத மனவுறுதி எந்தப் படைக்கு இருக்கும்?

**உலைவுஇடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவுஇடத்துக்**
**தொல்படைக்கு அல்லால் அரிது.** 762

போரில் சேதம் வந்து தளர்ச்சியடைந்த போதும் இடையூறுகளுக்கு அஞ்சாத மனவுறுதி அனுபவமுள்ள மூலப்படைக்கு அல்லாமல் மற்றைய படைகட்கு இருப்பது அரிதாகும்.

*தொலை - சேதம்; உலை - தளர்ச்சி; ஊறு - இடையூறு; வன்கண் - மனவுறுதி; தொல் - (பழைய) மூலம்.*

3. ஒருவனால் பெரும்படையை அழிக்க முடியுமா?

**ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்.** 763

எலியைப் போன்ற பகைவர்கள் கடல் போலத் திரண்டு ஆரவாரித்தால் என்ன? ஒரு நாகம் மூச்சுவிட அவை அழிந்து போகும்.

*ஒலித்தக்கால் - ஆரவாரித்தால்; உவரி - கடல்; கெடும் - அழியும்; உயிர்ப்ப - மூச்சவிட.*

4. சிறந்த படை எது?

**அழிவுஇன்று அறைபோகாது ஆகி வழிவந்த**
**வன்க ணதுவே படை. 764**

போரால் அழிவடையாமல், பகைவரால் வஞ்சிக்கப்படாது, நெடுங்காலம் உறுதியுடையதாக இருப்பதே சிறந்த படையாகும்.

*வழிவந்த - தொன்றுதொட்டு வந்த (நெடுங்காலம் இருந்த)*
*அறைபோகாது - வஞ்சிக்கப்படாது.*

5. படைக்கு எத்தகைய ஆற்றல் இருக்க வேண்டும்?

**கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**
**ஆற்ற லதுவே படை. 765**

எமனே சினந்து எதிர்த்து வந்தாலும், கூடி எதிர்த்து நிற்கும் ஆற்றல் படைக்கு இருக்க வேண்டும்.

*கூற்று - எமன்; உடன்று - சினந்து;*
*மேல்வருதல் - எதிர்த்துவருதல்.*

6. படையினருக்கு இருக்க வேண்டிய உறுதிகள் யாவை?

**மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
**எனநான்கே ஏமம் படைக்கு. 766**

வீரம், மானம், முன்னிருந்த தலைசிறந்த வீரர் சென்றவழி நடத்தல், நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருத்தல் ஆகிய நான்கு உறுதிகளும் படையினருக்குத் தேவையாகும்.

*மறம் - வீரம்; ஏமம் - உறுதி.*

7. பகைவரை எதிர்கொள்ளும் போது படை என்ன செய்ய வேண்டும்?

**தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த**
**போர்தாங்கும் தன்மை அறிந்து. 767**

முதலில் எதிர்த்து வந்த போர்ப்படையினரை எதிர்கொள்ளும் தன்மையை அறிந்து, எதிரியின் முன்னணிப்படை தன் மேல் வராமல் தடுத்து, தாம் அவர் மேல் செல்வதே படையின் செயலாகும்.

*தார் - முன்னணிப்படை; தாங்கி தடுத்து; தானை - படை;*
*தாங்கும் - எதிர்கொள்ளும்; தலை - முதல்.*

8. ஆற்றல் இல்லாத படைக்கு எப்படி பெருமை கிடைக்கின்றது?

**அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை**
**படைத்தகையால் பாடு பெறும்.** 768

படைக்கு, மாற்றானைச் சென்று தாக்கும் வீரமும் மாற்றான் படைவந்து தாக்கினால் தாங்கும் ஆற்றலும் இல்லையெனினும், தோற்றப் பொலிவால் படை பெருமை பெறும்.

*அடல்தகை - மாற்றானைத்தாக்கல்; தானை - படை;*
*படைத்தகை - தோற்றப் பொலிவு; பாடு - பெருமை.*

9. எவை இல்லாவிட்டால் ஒரு படை பகையை வெல்லும்?

**சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்**
**இல்லாயின் வெல்லும் படை.** 769

படையின் அளவு குறைவதும், தலைவனிடத்தில் நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லையானால் ஒரு படை பகையை வெல்லும்.

*சிறுமை - குறைதல்; செல்லாத்துனி - நீங்காத வெறுப்பு.*

10. தலைவன் இல்லாதபடை என்னவாகும்?

**நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை**
**தலைமக்கள் இல்வழி இல்.** 770

உறுதியுள்ள போர்வீரர்கள் மிக அதிகமாக இருந்தாலும், படைத்தலைவன் இல்லாவிட்டால் படை நிலைத்து நிற்காது.

*நிலைமக்கள் - உறுதியான போர்வீரர்கள்;*
*தலைமக்கள் - படைத்தலைவன்; சால - மிகவும்.*

# 78. படைச் செருக்கு

*(படையினரின் செருக்கு)*

1. படையினர் எப்படி தம் படைச் செருக்கைச் சொல்லிக் காட்டுவர்?

**என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ**
**முன்நின்று கல்நின் றவர்.** 771

பகைவர்களே! என் தலைவன் முன் எதிர்த்து நின்று நடுக்கல்லாக நின்றவர் பலர். ஆதலால் என் தலைவன் முன் எதிர்த்து நில்லாதீர்கள் எனத் தமது செருக்கைக்காட்டுவர்.

*ஐ - தலைவன்; நில்லன்மின் - நில்லாதீர்கள்;*
*தெவ்விர் - பகைவர்; கல் - நடுக்கல் (நினைவுக்கல்).*

2. தோற்றபடையினரும் எப்படித் தமது செருக்கைக் சொல்லிக் காட்டுவர்?

**கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது.** 772

காட்டு முயலை எய்து வீழ்த்திய அம்பை கையில் வைத்திருப்பதை விட, யானை மேல் எறிந்து தவறிய வேலை ஏந்துவது நல்லது எனக்கூறுவர்.

*கான - காட்டு; பிழைத்த - தவறிய.*

3. படைச்செருக்கு உள்ளவர்கள் பகைவர்களுக்கு இரங்கலாமா?

**பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்றுஅதன் எ்.கு.** 773

பகைவரை அஞ்சாது எதிர்த்து அடக்கும் வீரத்தை பெரிய ஆண்மை என்று சொல்வர். ஆனால் அப்பகைவர்களுக்குத் தீமை நடந்தால் அதற்கு இரங்கி உதவுவது, அந்த ஆண்மைக்கு மேலும் உறுதியைக் கொடுக்கும்.

*பேராண்மை - பெரிய ஆண்மை; உற்றக்கால் - நடந்தால்;*
*எ்.கு - உறுதி. தறுகண் - பகைவரை அஞ்சாது அடக்கும்*
*வீரம்; ஊராண்மை - உதவும் தன்மை.*

4. செருக்குள்ள படைவீரனை எப்படி அறிவது?

**கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும். 774**

கையில் இருந்த வேலைத் தன்னை எதிர்த்து வந்த ஆண் யானையின் உயிரைப் போக்க எறிந்து விட்டு, அடுத்து வருவதைத் தாக்க தன் உடம்பில் பாய்ந்திருந்த வேலைப் பறித்தெடுத்து 'எங்க வா பார்ப்போம்' எனச் சிரிப்பான்.

*களிறு - ஆண்யாணை; மெய் - உடம்பு; நகும் - சிரிப்பான்.*

5. படைவீரர் புறமுதுகு காட்டி ஓடினார் என்று எதைக் கொண்டு சொல்கிறார்கள்?

**விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்**
**ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 775**

பகைவரை கோபித்துப் பார்த்த கண், அவர்கள் எறியும் வேலைக் கண்டு பயந்து சிறிது இமைத்தாலும், அதுவும் பகைவர்க்கு புறமுதுகு காட்டி ஓடுவதேயாகும்.

*ஓட்டு - புறமுதுகு காட்டுதல்(புறங்கொடுத்தல்),*
*வன்கணவர் - அஞ்சாதவர்(வீரா).*

6. ஒரு போர்வீரன் எந்த நாட்களை வீணான நாட்களென எடுத்துவைப்பான்?

**விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**
**வைக்கும்தன் நாளை எடுத்து. 776**

தான் வாழ்ந்த நாட்களையெல்லாம் எடுத்து எண்ணிப் பார்த்து, போரில் விழுப்புண் படாத நாட்களை வீணாய்ப் போண நாட்களென எடுத்துவைப்பான்.

*விழுப்புண் - போரில் உண்டாகும் காயம்;*
*வழுக்கிய - தவறிய(வீணான).*

7. வீரர்கள் ஏன் உயிர்வாழ விரும்புவதில்லை?

**சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்**
**கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777**

அழகுடைய வீரக்கழலை காலில் கட்டியிருக்கும் வீரர்கள், எங்கும் சுழன்று பரவும் புகழை விரும்புவதால் உயிர்வாழ விரும்புவதில்லை.

*இசை - புகழ்; வேண்டா - விரும்பாத; நீர்மை - தன்மை;*
*காரிகை - அழகு; கழல்யாப்பு - வீரக்கழல்கட்டுதல்;*
*காரிகைநீந்து - அழகிய தன்மை.*

8. தலைவர் கோபித்தாலும் தம் வீரத்தில் குன்றாத வீரர் யார்?

**உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்**
**செறினும்சீர் குன்றல் இலர். 778**

போர் வந்தால் தம்முயிர்க்கு அஞ்சாத வீரர், தலைவன் கோபித்தாலும் தம் வீரத்தில் குறைவடையமாட்டார்கள்.

*மறவர் - வீரர்; இறைவன் - தலைவன்; சீர் - வீரம்;*
*செறினும் - கோபித்தாலும்.*

9. போரில் வெல்வேன் என்று கூறிச்சென்று இறந்து போகின்றவரை எவரும் இகழ்ந்து பேசமாட்டார்களா?

**இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே**
**பிழைத்தது ஒறுக்கிற் பவர். 779**

செய்த சபதத்தை முடிப்பதற்காகச் சென்று சாகும் வீரரை, அது நடக்கவில்லை என இகழக்கூடியவர் யார்?

*இழைத்தது - சபதம்; இகவாமை - முடிப்பதற்கு;*
*பிழைத்தது - நடவாமை; ஒறுக்குதல் - இகழ்தல்.*

10. கேட்டுப் பெறக்கூடிய பெருமையுடைய சாவெது?

**புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்கது உடைத்து. 780**

தன்னை பாதுகாத்தவர் கண்ணீர் சிந்தச்சாவதாயின், அச்சாவு இரந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய பெருமை உடையதாகும்.

*புரந்தார் - காத்தவர்; சாகில் - சாவதாயின்; சாக்காடு - சாவு.*

## 79. நட்பு

*(நட்பின் சிறப்பு)*

1. எதற்காக நட்புக் கொள்ள வேண்டும்?

**செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்குஅரிய யாவுள காப்பு.** 781

நட்பைப்போல செய்து கொள்வதற்கு இலகுவானவை எவை இருக்கின்றன? நாம் செய்யும் தொழிலுக்கு அதுபோல பாதுகாப்புத் தரக்கூடியவை எவை உள்ளன?

*வினை - தொழில்.*

2. அறிவுடையார் நட்பும் அறிவிலார் நட்பும் எத்தகையது?

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு.** 782

அறிவுடையார் நட்பு பிறைச் சந்திரன் நிறைந்து வளர்வது போல் நாள்தோறும் நிறையும் இயல்புடையது. அறிவிலார் நட்பு நிறைமதி தேய்வது போல நாள்தோறும் குறைந்து போகும்.

*நிறைநீர - நிறையும் இயல்பு; நீரவர் - அறிவுடையவர்;*
*கேண்மை - நட்பு; பிறை - பிறைச்சந்திரன்;*
*பேதையார் - அறிவில்லாதவர்.*

3. பண்புடையவர் நட்பு எப்படிப்பட்டது?

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளார் தொடர்பு.** 783

நூல்களைக் கற்கக்கற்க அது இன்பம் தருவது போல பழகப்பழக பண்புடையவர் நட்பும் இன்பம் தரும்.

*நவில்தொறும் - கற்கக்கற்க; நயம் - இன்பம்;*
*பயில்தொறும் - பழகப்பழக;*

4. ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழ்வதற்காகவா நட்புக் கொள்வது?

**நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தல் பொருட்டு. 784**

ஒருவரோடு ஒருவர் நட்புக்கொள்வது சிரித்துப் பேசி மகிழ்வதற்காக அல்ல. நண்பர் தகாதவழியில் செல்லும் போது முற்பட்டுச்சென்று இடித்துரைத்து திருத்துவதற்கேயாகும்.

*நகுதல் - சிரித்தல்; நட்டல் - நட்புக் கொள்வது;*
*இடித்தல் - இடித்துரைத்தல்.*

5. ஒருவருடன் சேர்ந்து பழகுவதாலா நட்பு உண்டாகும்?

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்புஆம் கிழமை தரும். 785**

ஒருவருடன் நட்புக் கொள்வதற்கு ஒரே இடத்தில் இருத்தலும் பழகுதலும் வேண்டியதில்லை. உணர்ச்சிதான் நட்பு என்னும் உரிமையைத் தரும்.

*புணர்ச்சி - ஒரே இடத்தில் இருத்தல், கிழமை - உரிமை.*

6. ஒருவரைக் கண்டதும் முகம் மலர்ந்து சிரிப்பது நட்பா?

**முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு. 786**

முகம் மலர்ந்து சிரித்து நட்புக்கொள்வது நட்பாகாது. நெஞ்சுக்குள் இருக்கும் மனம் கனிய நட்புக்கொள்வதே நட்பாகும்.

*நக - சிரிக்க(கனிய); நட்பது - நட்புக் கொள்வது;*
*அன்று - ஆகாது ; அகம் - மனம்.*

7. எது உண்மையான நட்பாகும்?

**அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு. 787**

அழிவைத்தரும் கெட்டவற்றை நீக்கி, நல்ல வழிக்குத் திருப்பி, வேறு துன்பம்வரின் உடனிருந்து தானும் வருந்துவதே நட்பாகும்.

*அழிவினவை - கெட்டவை; ஆறு - நல்வழி; அல்லல் - துன்பம்;*
*உய்த்து - திருப்பி; உழப்பது - வருந்துவது.*

8. நட்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.** 788

உடுத்திருக்கும் உடை நழுவினால் அதை பிடிக்க உடனே கை செல்வதுபோல நண்பருக்குத் துன்பம் வந்தால் உடனே சென்று நீக்குவதே நட்பாகும்.

*உடுக்கை - உடை; இழந்தவன் - நழுவ விட்டவன்;*
*இடுக்கண் - துன்பம்; களைவது - நீக்குவது.*

9. நண்பரோடு நட்புடன் மகிழ்ந்திருக்க என்ன செய்ய வேண்டும்?

**நட்புக்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புன்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.** 789

நட்போடு மகிழ்ந்திருக்க வேண்டுமெனில் மனவேறுபாடு இல்லாமல் இயலும் வழிகளிலெல்லாம் உதவி செய்து நண்பரைத் தாங்கும் உறுதி வேண்டும்

*வீற்றிருத்தல் - மகிழ்ந்திருத்தல்; கொட்பு - பிரிவு;*
*ஒல்லும் - இயலும்; ஊன்றும் - தாங்கும்; நிலை - உறுதி.*

10. நட்பை எடை போடலாமா?

**இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்என்னும் நட்பு.** 790

இவர் என்னிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கின்றார், நாமும் இவரிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறோம் என்று பாராட்டினாலும் நட்பு இழிவடைந்து போகும்.

*இனையர் - இவ்வளவன்பு உள்ளவர்; இன்னம் - இத்தன்மை;*
*புனையின் - பாராட்டினால்; புல் - இழிவு.*

# 80. நட்பு ஆராய்தல்

*(ஆராய்ந்து நட்புக் கொள்ளுதல்)*

1. ஆராயாமல் நட்புச் செய்தால் என்ன?

**நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்**
**வீடுஇல்லை நட்பாள் பவர்க்கு.** 791

நட்புச் செய்தபின்னர் அதனில் இருந்து விடுபடமுடியாது. ஆதலால் ஆராயாது நட்புச் செய்தல் போலக் கேடு தருவது வேறு ஒன்றும் இல்லை.

*நாடாது - ஆராயாது; நட்டல் - நட்புச் செய்தல்;*
*வீடு இல்லை - விடுபட முடியாது.*

2. ஆராயாமல் நட்புச் செய்தால் எத்தகைய துயரம் வரும்?

**ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்.** 792

ஒருவரின் குணநலன்களை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பார்த்துக் கொள்ளாத நட்பு, கடைசியாக அவன் சாவதற்குக் காரணமான துயரத்தைக் கொடுக்கும்.

*கேண்மை - நட்பு; கடைமுறை - கடைசியாக.*

3. நட்புக் கொள்ளும் போது எவற்றை ஆராய வேண்டும்?

**குணமும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்துயாக்க நட்பு.** 793

ஒருவரின் குணத்தையும், ஒழுக்கத்தையும், குற்றங்களையும், அவர் கூடிய கூட்டத்தையும் ஆராய்ந்து அறிந்து நட்புச் செய்யவும்.

*குடிமை - ஒழுக்கம்; குன்றாஇனம் - கூடிய கூட்டம்.*

4. எப்படிப்பட்டவரோடு நட்பக் கொள்ள வேண்டும்?

**குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.** 794

மேன்மையுள்ள குடும்பத்தில் பிறந்து, தனக்கு வரும் பழிச்சொற்களுக்கு வெட்கப் படுபவனின் நட்பை எதனையும் கொடுத்தாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

*நாணுதல் - வெட்கப்படுதல்.*

5. நாம் அழுது மனம் வருந்தும்படி புத்தி சொல்பவர் நட்பை ஏற்றுக் கொள்ளலாமா?

**அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய**
**வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.** 795

தவறு செய்கின்ற போது அழும்படி சொல்லியும் அல்லது இடித்துரைத்தும் அதனைப் போக்கத்தெரிந்தவர் நட்பை ஆராய்ந்து பார்த்து ஏற்றுக்கொள்க.

*இடித்து - இடித்துரைத்து; வழக்கு - போக்குதல்; அறியவல்லார்- தெரிந்தவர்.*

6. எப்படி உண்மையான நண்பரை அறிவது?

**கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்.** 796

கேடு வந்தால் அதிலும் ஒரு நிலைத்த நன்மை உண்டு. அந்தக்கேடே உண்மையான நண்பரின் உள்ளத்தை நீட்டி அளக்கும் அளவு கோலாக அமையும்.

*உறுதி - நிலைத்த நன்மை; கிளைஞர் - நண்பர்.*

7. அறிவில்லாதார் நட்பை என்ன செய்ய வேண்டும்?

**ஊதியம் என்பது ஒருவற்கு பேதையார்**
**கேண்மை ஒரீஇ விடல்.** 797

அறிவில்லாதவர் நட்பை நீக்கி விடுவதே ஒருவர்க்குப் பெரிய பயனைத் தரும்.

*ஊதியம் - பெரும்பயன்; பேதையார் - அறிவில்லாதவர்; ஒரீஇ - நீக்கி*

8. துன்பம் வந்த போது கைவிடுபவர் நட்பை என்ன செய்ய வேண்டும்?

**உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லல்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.** 798

ஊக்கத்திற்கு இடைஞ்சல் தருவதை நினைக்க வேண்டாம். துன்பம் வந்தபோது கைவிடுபவர் நட்பை ஏற்றுக் கொள்ளவேண்டாம்.

*உள்ளற்க - நினைக்க வேண்டாம்; உள்ளம் - ஊக்கம்; சிறுகுவ - இடைஞ்சல்; அல்லல் - துன்பம்; ஆற்றறுத்தல் - கைவிடுதல்.*

9. ஏன் துன்பத்தில் கைவிடுபவர் நட்பை வைத்திருக்கக் கூடாது?

**கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடும்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்.** 799

கேடுவரும் காலத்தில் கைவிடுபவர் நட்பை சாகும் நேரத்தில் நினைத்தாலும் அது மனதைச் சுடும்.

*கேண்மை - நட்பு: அடும்காலை - சாகும் நேரத்தில்; உள்ளினும் - நினைத்தாலும்; உள்ளம் - மனம்.*

10. யாருடைய நட்பைக் கைவிட வேண்டும்?

**மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றுஈத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு.** 800

குற்றமற்றவர் நட்பைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களோடு ஒத்த குணமில்லாதவர் நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிட்டுவிட வேண்டும்.

*மாசு - குற்றம்; கேண்மை - நட்பு; ஈந்து - கொடுத்து; ஒருவுக - விடுக; ஒப்பிலார் - ஒத்த குணமில்லாதார்.*

# 81. பகைமை

*(நீண்ட கால நட்பின் சிறப்பு)*

1. பழைமை என்றால் என்ன?

**பழமை எனப்படுவது யாதுஎனின் யாதும்**
**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 801**

பழமை என்று சொல்லப்படுவது என்னவென்றால் நெருங்கிய நண்பனின் உரிமையை சிறிதளவும் சிதைத்திடாத நட்பாகும்.

*யாதும் - சிறிதும்; கிழமை - உரிமை; கீழ்ந்திடா - சிதைத்திடா.*

2. நட்பிற்கு உறுதி தருவது எது?

**நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு**
**உப்புஆதல் சான்றோர் கடன். 802.**

நட்பிற்கு உறுதியைக் கொடுப்பது உரிமையாகும். அதற்கு இனிமை சேர்ப்பது சான்றோர்களின் கடமையாகும்.

*உறுப்பு - உறுதி; கெழுதகைமை - உரிமை; உப்பு - இனிமை; கடன் - கடமை.*

3. நண்பர்கள் தாமே உரிமை எடுத்துக்கொண்டு ஒன்றை செய்வது சரியா?

**பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை**
**செய்தாங்கு அமையாக் கடை. 803**

உரிமையுடன் அப்படிச் செய்து மன நிறைவு கொள்ளாத இடத்து பழகிய நட்பால் என்ன பயன்?

*எவன் - என்ன; கெழுதகைமை - உரிமை; கடை - இடம்; அமையா- நிறையாத; ஆங்கு - அப்படி.*

4. கேளாது தாமே உரிமை எடுத்துக் கொள்வதை எவர் விரும்புவர்?

**விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்**
**கேளாது நட்டார் செயின். 804**

உரிமையால் நண்பர் ஒன்றைக் கேளாது செய்தால், அச் செயலை நன்கு மதிப்பவர் அதனை விரும்பிப் பார்த்துக் கொண்டு இருப்பர்.

*நட்டார் - நண்பர்; விழைதகையான் - நன்குமதிப்பவன்; வேண்டி - விரும்பி; கெழுதகையால் - உரிமையால்.*

5. மனம் வருந்தத் தக்க செயலை நண்பர் செய்தால் என்ன செய்வது?

**பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க**
**நோதக்க நட்டார் செயின். 805**

வருந்தத் தக்கதை நண்பர் செய்தால் அது ஒன்றில் அறியாமையாலோ, அல்லது மிக்க உரிமையாலோ செய்ததென்று உணர வேண்டும்.

*பேதைமை - அறியாமை; பெருங்கிழமை - மிக்க உரிமை; நோதக்க - வருந்தத்தக்க; நட்டார் - நண்பர்.*

6. நட்பின் எல்லையைத் தாண்டாதவர் நட்பு எத்தகையது?

**எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்**
**தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 806**

நட்பின் எல்லையோடு நின்றவர், தொடர்புவிட்ட போதும் பழைய நட்பை விடமாட்டார்கள்.

*எல்லைக்கண் - எல்லையோடு; தொலைவிடத்தும் - தொடர்புவிட்ட போதும்; தொல்லை - பழைய; துறவார் - விடமாட்டார்.*

7. அழிவு தரும் வேலையை நண்பர் செய்தாலும் அன்பு மாறாதிருப்பவர் யார்?

**அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர். 807**

அன்பால் தொடர்ந்து வந்த நட்பை உடையவர், தம் நண்பர் அழிவு தரும் செயலைச் செய்தாலும் அவர் மேல் கொண்ட அன்பை விடார்.

*அழிவந்த - அழிவு; அன்பறார் - அன்பைவிடார்; கேண்மை - நட்பு; வழிவந்த - தொடர்ந்து வந்த.*

8. நண்பர் பிழைசெய்தால் யாருக்கு அது புதுமையாகத் தோன்றும்?

**கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
**நாள்இழுக்கம் நட்டார் செயின். 808**

நண்பர் செய்தபிழையைப் பிறர் சொன்னாலும் கேட்காத உரிமை மிக்கவருக்கு, நண்பர் பிழைசெய்தால் அது புதுமையானதாகும்.

*கேள் - நண்பர்; இழுக்கம் - பிழை; கெழுதகைமை - உரிமை; வல்லார் - மிக்கார்; நாள் - புதுமை; நட்டார் - நண்பர்.*

9. உலகம் யாருடைய நட்பை விரும்பும்?

**கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடாஅர் விழையும் உலகு. 809**

விடாமல் தொடர்ந்து வந்த நட்பைக் கைவிடாத நட்புடையவரை உலகம் விரும்பும்.

*கெடாது - விடாது; வழிவந்த - தொடர்ந்துவந்த; கேண்மையார் - நட்புடையவர்; விழையும் - விரும்பும்.*

10. பகைவராலும் விரும்பப்படுவர் யார்?

**விழையார் விழையப் படுப பழையார்கண்**
**பண்பின் தலைப்பிரியா தார். 810**

பழைய நண்பர்கள் என்ன செய்த போதிலும் தம் பழைய நட்பின் தன்மையிலிருந்து நீங்காதவர் பகைவராலும் விரும்பப்படுவர்.

*விழையார் - பகைவர்; விழையப்படுவர் - விரும்பப்படுவர்; தலைப்பிரியார் - நீங்காதார்; பண்பு - தன்மை.*

# 82. தீ நட்பு

*(தீய குணமுள்ளவரோடு கொள்ளும் நட்பின் தீமை)*

1. பண்பில்லாதவர் நட்பை என்ன செய்ய வேண்டும்?

**பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை**
**பெருகுதலின் குன்றல் இனிது.** 811

எம்மை அள்ளிக் குடிப்பவர் போலப் பழகினாலும் பண்பு இல்லாதவர் நட்பை வளர்த்துக் கொள்வதைவிட குறைப்பதே இனிமையாகும்.

*பருகுதல் - குடித்தல்; கேண்மை - நட்பு; பெருகல் - வளர்தல்; குன்றல் - குறைதல்*

2. தம் பயனுக்காக மட்டும் நட்புச் செய்பவர் நட்பைப் பெறலாமா?

**உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்.** 812

பயன் கிடைத்தால் நட்புச் செய்தும், கிடைக்காவிட்டால் நீங்கிப் போகும் ஒத்த குணமில்லாதவர் நட்பைப் பெற்றாலும், இழந்தாலும் என்ன கிடைக்கப்போகிறது?

*உறின் - கிடைத்தால்; அறின் - இல்லாத போது;*
*ஒரூஉம் - நீங்கும்; ஒப்பிலார் - ஒத்த குணமில்லார்; கேண்மை - நட்பு*

3. பயனை எதிர்பார்க்கும் நண்பர் எவருக்குச் சமமாவர்?

**உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாரும் கள்வரும் நேர்.** 813

வருவதைக் கணக்குப் பார்க்கும் நண்பரும், விலைமகளிரும், கள்வரும் சமமானவர்கள்.

*உறுவது - வருவது; சீர்தூக்கும் - கணக்குப் பார்க்கும்;*
*பெறுவதுகொள்வார் - விலை மகளிர்;*

4. எப்படிப்பட்டவர் நட்பைவிட தனிமை தலைசிறந்தது?

**அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை.** 814

போர்க்களத்தில் கீழே தள்ளிவிட்டுப் போகும் பழக்கப்படாத குதிரை போன்றவரின் நட்பைவிட தனிமை தலைசிறந்தது.

*அமரகம் - போர்க்களம்; ஆற்றுஅறுக்கும் - வீழ்த்தும்; கல்லாமா - பழக்கப்படாதகுதிரை;*

5. யாருடைய நட்பு கிடைக்காதிருப்பது நல்லது?

**செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை**
**எய்தலின் எய்தாமை நன்று.** 815

நாம் செய்தும், எமக்குத் துணையாக அமையாத அற்பரின் தீயநட்பு கிடைப்பதைவிடக் கிடைக்காதிருப்பது நல்லது.

*ஏமம் - துணை; புன்கேண்மை - தீயநட்பு; எய்தல் - கிடைத்தல்; சிறியவர் - அற்பர்; எய்தாமை - கிடைக்காமை;*

6. அறிவில்லாதவரின் நட்பைவிட எது மேலானது?

**பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி உறும்.** 816

அறிவில்லாதவரின் மிக நெருங்கிய நட்பைவிட, அறிஞரின் பகைமை கோடி மடங்கு மேலானது.

*பேதை - அறிவிலி; கெழீஇ - நெருங்கிய; ஏதின்மை - பகைமை.*

7. சிரித்துப் பேசி நடிக்கும் நட்பைவிட எது சிறந்தது?

**நகைவகை ராகிய நட்பின் பகைவரால்**
**பத்துஅடுத்த கோடி உறும்.** 817

உதட்டளவு சிரிப்போடு இருக்கும் நட்பைவிட, பகைவரால் வரும் துன்பம் பத்துக்கோடி மடங்கு சிறந்தது.

*நகைத்தல் - சிரித்தல்; பத்தடுத்தகோடி - பத்துக்கோடி;*

8. நாம்செய்யும் காரியத்தைக் கெடுப்பவர் நட்பை என்ன செய்ய வேண்டும்?

**ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்லாடார் சோர விடல்.** 818

எம்மால் செய்யக்கூடிய காரியத்தைக் கெடுப்பவர் நட்பைச் சொல்லாமலே சோரவிடவேண்டும்.

*ஒல்லும் - இயலும்; கருமம் - காரியம்; உடற்றுதல்- கெடுத்தல்; கேண்மை - நட்பு.*

9. சொல்வது ஒன்று செய்வது ஒன்றானவர் நட்பு நல்லதா?

**கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு.** 819

செயல் வேறாகவும், சொல் வேறாகவும் இருப்பவர் நட்பு கனவிலும் துன்பம் தருமே.

*இன்னாது - துன்பம்; வினை - செயல்; தொடர்பு - நட்பு.*

10. சபையில் பலர்முன் இழிவு செய்பவர் நட்பை என்ன செய்ய வேண்டும்?

**எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றில் பழிப்பார் தொடர்பு.** 820

வீட்டில் நெருங்கிப் பழகி, சபையில் பழிப்பவர் நட்பை கொஞ்சமாயினும் எம்மை நெருங்கவிடாது காத்துக் கொள்ள வேண்டும்.

*எனைத்தும் - கொஞ்சமும்; குறுகுதல் - நெருங்குதல்; ஓம்பல்- காத்தல்; மனை - வீடு; மன்று - சபை; மனைகெழீஇ - வீட்டில் நெருங்கிப்பழகி.*

## 83. கூடாநட்பு

*(உதட்டளவிலான நட்பின் தீமை)*

1. மனமொத்துச் சேராதவர் நட்பு எப்படிப்பட்டது?

**சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு.** **821**

மனமொத்துச் சேராது கூடிப்பழகுபவர் நட்பின் சிறப்பை ஆராய்ந்தால், அது பொன்னை வெட்டுவதற்கு உதவும் பட்டடைக் கல் போன்றதாகும்.

*சீர் - சிறப்பு; காணின் - ஆராய்ந்தால்; நேரா - சேராது; எறிதற்கு - வெட்டுவதற்கு; நிரந்தவர் - கூடிப் பழகுபவர்;*

2. எமக்கு உற்றார் போல இருந்தும் உறவு கொள்ளாதவர் நட்பு எத்தகையது?

**இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்.** **822**

எமக்கு உற்றார் போல இருந்தும் உறவு கொள்ளாதவர் நட்பு விலை மகளிர் மனம் போல வேறுபடும்.

*இனம் - உற்றார்; மகளிர் - விலைமகளிர்; கேண்மை - நட்பு.*

3. பகைவராய் இருக்கும் கற்ற அறிஞர்கள் மனம்மாறி நட்புக் கொள்வார்களா?

**பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்**
**ஆகுதல் மாணார்க்கு அரிது.** **823**

பலவகை நல்ல நூல்களைக் கற்ற போதும், அதனால் மனந்திருந்தி நல்லவராகுதல் பகைவர்க்கு முடியாத செயலாகும்.

*கடைத்தும் - போதும்; மாணார் - பகைவர்;*

4. நட்புடன் பழகும் வஞ்சகர்கட்கு என்ன செய்ய வேண்டும்?

**முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா**
**வஞ்சரை அஞ்சப் படும்.** 824

கண்டதும் முகம் மலர்ந்து சிரித்துப்பேசி மனதில் கெடுதி நினைக்கும் வஞ்சகர்களுக்குப் பயப்பட வேண்டும்.

*நகாஅ - சிரித்து; அகத்து - மனதில்; இன்னா - கெடுதி; அஞ்சல் - பயப்படுதல்;*

5. பேசும் பேச்சில் தேன் சிந்தும் நண்பரை நம்பலாமா?

**மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்**
**சொல்லினால் தேறற்பாற்று அன்று.** 825

மனமொத்துப் பழகாதவரின் சொற்களை நம்பி எந்த ஒரு கருமத்தையும் உறுதி செய்ய வேண்டாம்.

*அமையாதவர் - பழகாதவர்(பொருந்தாதவர்); தேறல் - உறுதி;*

6. நண்பரைப் போல் நடப்பவரை எப்படி அறிவது?

**நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்**
**ஒல்லை உணரப் படும்.** 826

நண்பரைப்போல் நல்லவற்றைச் சொன்னாலும் பகைவரின் சொற்கள் அதனை விரைவாக உணர்த்தும்.

*நட்டார் - நண்பர்; ஒட்டார் - பகைவர்; ஒல்லை - விரைவாக;*

7. சொற்களாலே எம்மைப்பணியும் பகைவரை நம்பலாமா?

**சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்.** 827

வில் வளைவது அம்பை எய்து கொல்வதற்காகவே ஆதலால் சொற்களால் பணியும் பகைவரை ஏற்றுக் கொள்ளவேண்டாம்.

*சொல்வணக்கம் - சொல்லின்பணிவு; ஒன்னார் - பகைவர்; வில் வணக்கம் - வில் வளைவது.*

8. எம்மைத் தொழுபவர் நட்பை நம்பலமா?

**தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து.** **828**

பகைவர் தொழுத கைக்குள்ளும் உயிரைக் குடிக்கும் ஆயுதமிருக்கும். அவர்கள் அழுது வடிக்கும் கண்ணீரும் அது போன்றதே.

*படை - கொலைக்கருவி; ஒன்னார் - பகைவர்.*

9. உள்ளே ஒன்றை நினைத்து வெளியே நடிக்கும் பகைவரை என்ன செய்வது?

**மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லல் பாற்று.** **829**

வெளியே மிகுந்த நட்புடையவராய்க் காட்டி தம் மனதில் எம்மை இகழ்பவரை அவர் மகிழுமாறு நட்பாகி, பேய் தழுவுதல் போல் தழுவ வேண்டும்.

*எள்ளுதல் - இகழ்தல்; நக - மகிழ; சா - பேய்;*
*சாப்புல்லல் - பேய் தழுவுதல்.*

10. பகைவர் நண்பராக வந்தால் என்ன செய்வது?

**பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு**
**அகம்நட்பு ஒரீஇ விடல்.** **830**

பகைவர் நண்பராக வரும் காலம் வந்தால் முகம் மலர்ந்து நட்புச்செய்து, மனதில் அவர் நட்பை நீக்கி விட வேண்டும்.

*நட்பாம் - நட்பாகும்; நட்டு - நட்புச்செய்து; அகம் - மனம்.*

# 84. பேதைமை

*(தனக்கு நன்மை தருவது எது என அறியாதிருத்தல்)*

1. பேதைமை என்றால் என்ன?

**பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதம்கொண்டு**
**ஊதியம் போக விடல்.** 831

பேதைமை என்பது என்னவென்றால் தீமைகளை எடுத்துக் கொண்டு, நன்மைகளைப் போகவிடுதலாகும்.

*ஏதம் - தீமை, ஊதியம் - நன்மை*

2. பேதைமையிலே மிகக்கூடிய பேதைமை எது?

**பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்.** 832

ஒழுக்கத்திற்கு மாறுப்பட்ட, தனக்கு நன்மை தராத செயல்களை விரும்பிச் செய்தல் பேதைமையில் மிகக் கூடிய பேதைமையாகும்.

*காதன்மை - விரும்புதல், கை - ஒழுக்கம்.*

3. பேதைமை உள்ளவர்கள் என்ன செய்வார்கள்?

**நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.** 833

தான் செய்யக்கூடாத செயல்களுக்கு வெட்கப்படாமையும், எதைச் செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து பாராமையும், எவரிடத்திலும் அன்பில்லாதிருத்தலும், எதனையும் பேணாமையும் பேதைமை உடையவரின் செயல்களாகும்.

*நாணாமை - வெட்கப்படாமை; நாடாமை - ஆராயாமை;*
*நாரின்மை - அன்பில்லாமை; தொழில் - செயல்.*

4. படித்தவர்களில் பேதைமை உள்ளவர்கள் எத்தகையவர்?

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்**
**பேதையின் பேதையார் இல். 834**

படித்துணர்ந்தும், மற்றவர்களுக்கு கற்றதை எடுத்துச் சொல்லியும், தான் மட்டும் கற்றபடி அடங்கி நடக்காத அறிவிலி போல் வேறு அறிவிலிகள் இல்லை.

*ஓதி - படித்து. பேதை - அறிவிலி.*

5. அறிவிலியின் செயல்களால் அவனுக்கு என்ன நடக்கும்?

**ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு. 835**

ஒருமனதாகத் தான் செய்யும் செயலாலுண்டாகும் துன்பச் சகதியில், அறிவிலி தானே புகுந்து வருந்துவான்.

*ஒருமை - ஒருமனதாக; ஆற்றும் - செய்யும்;*
*பேதை - அறிவிலி; எழு - உண்டாகும்; மை - துன்பம்;*
*அளறு - சகதி; அழுந்தும் - வருந்தும்.*

6. பேதை செய்யும் செயலுக்கு என்ன நடக்கும்?

**பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
**பேதை வினைமேல் கொளின். 836**

எதனையும் செய்யும்முறை அறியாத பேதை, ஒரு செயலை மேற்கொண்டால் அதுவும் நிலைக்காது அவனும் விலங்கு மாட்டிக் கொள்வான்.

*பொய்படும் - நிலைக்காது; புனை - விலங்கு;*
*கை - செய்யும்முறை.*

7. அறிவிலிக்கு செல்வம் கிடைத்தால் என்ன நடக்கும்?

**ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெரும்செல்வம் உற்றக் கடை. 837**

அறிவிலிக்கு பெரும் செல்வம் கிடைத்தால் அவனோடு எதுவித தொடர்பும் அற்றவர்கள் வயிறார உண்ண, அவனது சுற்றத்தார் பசியோடு இருப்பர்.

*ஏதிலார் - தொடர்பற்றவர்கள்; ஆர - வயிறார;*
*தமர் - சுற்றத்தார்; பேதை - அறிவிலி; உற்ற - கிடைத்தால்.*

8. பேதையின் கையில் அவனுக்கென்று உரிமையாகப் பொருள் கிடைத்தால் அவன் நிலை என்னாகும்.?

**மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்**
**கையொன்று உடைமை பெறின்.** 838

பேதையின் கையில் உரிமையாகப் பொருள் கிடைத்தால் அவன்நிலை பித்துப்பிடித்த ஒருவன் மேலும் கள்குடித்து மயங்கியது போலாகும்.

*மையல் - பித்து: களித்தல் - கள்மயக்கம்; உடைமை - உரிமை.*

9. பேதைகளின் நட்பு பிரியும் போது துன்பம் தருமா?

**பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
**பீழை தருவதுஒன்று இல்.** 839

பேதைகளுடன் செய்துகொள்ளும் நட்பு மிகவும் இனிமையானது. ஏனெனில் பிரியும் போது எந்தவொரு துன்பமும் தருவதில்லை.

*கேண்மை - நட்பு, பீழை - துன்பம், இல் - இல்லை.*

10. அறிஞர் சபையில் பேதை, நுழைவது எது போன்றது?

**கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல்.** 840

சான்றோர் சபையில் அறிவிலான் புகுதல் அசுத்தமான காலைக் கழுவாது, படுக்கையில் வைப்பது போன்றதாகும்.

*கழாஅக்கால் - கழுவாதகால், பள்ளி - படுக்கை,*
*குழாம் - சபை (கூட்டம்), புகல் - புகுதல்*

## 85. புல்லறிவாண்மை

*(அறிவில்லாதவன் தன்னை அறிவுள்ளவனாக மதித்தல்)*

1. இல்லாமையில் பெரிய இல்லாமை எது?

**அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை**
**இன்மையா வையாது உலகு. 841**

அறிவு இல்லாமையே இல்லாமைகளில் பெரிய இல்லாமையாகும். மற்றைய பொருட்கள் இல்லையெனினும் உலகம் அதனை இல்லாமையாகக் கொள்ளாது.

*இன்மை - இல்லாமை; பிறிது - மற்றைய; வையாது - கொள்ளாது.*

2. அறிவு இல்லாதவன் தன்னிடம் உள்ளவற்றை மற்றவர்க்குக் கொடுப்பதற்கு காரணம் என்ன?

**அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்**
**இல்லை பெறுவான் தவம். 842**

அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒன்றைக் கொடுப்பதற்கு காரணம் வேறு ஒன்றும் இல்லை. அது பொருளைப் பெறுகிறவன் செய்த தவமேயாகும்.

*ஈதல் - கொடுத்தல்; பிறிதுயாதும் - வேறு ஒன்றும்.*

3. அறிவிலாதார் தங்களுக்காக என்ன செய்வர்?

**அறிவிலாதார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை**
**செறுவார்க்கும் செய்தல் அரிது. 843**

அறிவிலார் தம்மைத் தாமே வருத்திக் கொள்ளும் துன்பத்தை பகைவர்களாலும் செய்ய முடியாது.

*பீழிக்கும் - வருத்தும்; பீழை - துன்பம்; செறுவார் - பகைவர்.*

4. புல்லறிவு என்றால் என்ன?

**வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை**
**உடையம்யாம் என்னும் செருக்கு.** 844

புல்லறிவு என்று சொல்லப்படுவது என்னவென்றால், தன்னைத் தானே மிகுந்த அறிவுடையவனாக மதிக்கும் செருக்கேயாகும்.

*வெண்மை - புல்லறிவுடைமை; ஒண்மை - மிகுந்த அறிவு.*

5. புல்லறிவுடையவர் தாம் படியாத நூல்களையும் படித்ததாகக் கூறுவது எதனை உண்டாக்கும்?

**கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற**
**வல்லதூம் ஐயம் தரும்.** 845

தாம் படியாத நூல்களையும் படித்ததாகக் காட்டிக் கொள்ளுவதனால், அவர்கள் நன்கு கற்றுத் திறமையடைந்தவற்றிலும் பிறருக்கு சந்தேகத்தை உண்டாக்கும்?

*கல்லாத - படியாத; கசடுஅற - குற்றம் நீங்க; ஐயம் - சந்தேகம்.*

6. ஒருவர் தம்மிடமுள்ள குற்றங்களை நீக்காவிட்டால் என்ன?

**அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்**
**குற்றம் மறையா வழி.** 846

தம்முடைய குற்றங்களை நீக்காத இடத்து, உடலை மறைத்து விட்டதாகக் கருதி ஆடை அணிவதே புல்லறிவாகும்.

*தம்வயின் - தம்மிடம்; மறையா - நீக்கா.*

7. புல்லறிவாளன் ஏன் தன்னைத் தானே துன்பம் செய்து கொள்கிறான்?

**அருமறை சோரும் அறிவுஇலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு.** 847

அரிய மறைபொருளை அலட்சியப்படுத்தும் அறிவிலான், அதன் காரணமாக தனக்குத் தானே பெரிய துன்பத்தைச் செய்துகொள்கின்றான்.

*சோரும் - அலட்சியப்படுத்தும், பெருமிறை - பெரிய துன்பம்.*

8. புல்லறிவாளன் தன்னைத் தானே வருத்துவதைத் தடுக்க முடியாதா?

**ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஓம் அளவும்ஓர் நோய்.** 848

இப்படிச் செய்யென்று சொன்னாலும் செய்யான், தானாகவும் செய்யத் தெரிந்து கொள்ளமாட்டான், அவனது உயிர் போகும் அளவும் அவனுக்கு அது ஒரு நோயாக இருக்கும்.

*ஏவவும் - சொல்லவும், தேறான் - தெரிந்துகொள்ளான்.*

9. அறிவிலிக்கு நல்ல அறிவுரை சொல்ல முடியாதா?

**காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டான்ஆம் தான்கண்ட வாறு.** 849

அறிவிலிக்கு அறிவுரை சொல்பவன் தான் ஒன்றும் தெரியாமல் போவான். அறிவிலி தனக்குத் தெரிந்தவாறு தெரிந்து கொள்ளுவான்.

*காணாதான் - அறிவிலி, காட்டுவான் - அறிவுரை சொல்பவன், கண்ட - தெரிந்த; காணான்- தெரியாமல் போவான்.*

10. புல்லறிவாளனை உலகம் எப்படிக் கருதும்?

**உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும்.** 850

உலகத்தார் உண்டென்று சொல்வதை இல்லையென்று சொல்பவனை உலகம் ஒரு பேயாகக் கருதும்.

*அலகை - பேய்.*

# 86. இகல்

*(மாறுபாடு கொள்ளுதல்)*

1. இகல் என்றால் என்ன?

**இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்**
**பண்பின்மை பாரிக்கும் நோய். 851**

மனவேறுபாடு என்பது எல்லா உயிர்களுக்கும் பிரிவை உண்டாக்கி, கெட்ட குணத்தை வளர்க்கும் நோயாகும்.

*இகல் - மனவேறுபாடு: பகல் - பிரிவு;*
*பண்பின்மை - கெட்டகுணம்; பாரிக்கும் - வளர்க்கும்.*

2. மற்றவருடன் உண்டான மனவேறுப்பாட்டால் என்ன செய்யக் கூடாது?

**பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னாசெய் யாமை தலை. 852**

மற்றவருடனிருந்து பிரிந்ததை நினைத்து ஒருவன் வெறுப்பனவற்றைச் செய்தாலும் மன வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு துன்பம் செய்யாதிருத்தலே தலை சிறந்ததாகும்.

*பகல் - பிரிதல்; பற்றா - வெறுப்பை; இகல் - மனவேறுபாடு.*

3. மனவேறுபாடு நீங்கினால் என்ன கிடைக்கும்?

**இகல்என்னும் எவ்வநோய் நீங்கின் தவல்இல்லாத்**
**தாவில் விளக்கம் தரும். 853**

மனவேறுபாடென்னும் துன்பந்தரும் நோயை மனத்தைவிட்டு நீக்கினால் நிலைத்த குற்றமற்ற புகழ் கிடைக்கும்.

*இகல் - மனவேறுபாடு; எவ்வம் - துன்பம்;*
*தவலில்லா - நிலைத்த, தாவில் - குற்றமற்ற.*

4. மற்றவர்களுடனுள்ள மனவேறுபாட்டை நீக்குவதால் புகழ் மட்டுந்தானா கிடைக்கும்?

**இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின். 854**

துன்பங்களிலே பெருந்துன்பமான இந்த மனவேறுபாடு நீங்கினால் இன்பங்களில் எல்லாம் பெரிய இன்பம் கிடைக்கும்.

*இகல் - மன வேறுபாடு; பயக்கும் - கிடைக்கும்;*
*கெடின் - நீங்கின்.*

5. மனவேறுபாடு கொள்ளாதவரை என்ன செய்ய முடியாது?

**இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே**
**மிகல்ஊக்கும் தன்மை யவர். 855**

மனவேறுபாடற்று எல்லோருடனும் சேர்ந்து நடக்கும் ஆற்றலுள்ளவரை, வெல்லும் தன்மையுள்ளவர் யார்?

*இகல்எதிர் - மனவேறுபாடற்று; ஒழுக - நடக்க;*
*மிகல்ஊக்கல் - வெல்லுதல்.*

6. மற்றவரோடு மனவேறுபாடு கொள்ளுதல் இனிமையானதென நினைப்பவர் நிலை என்னாகும்?

**இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து. 856**

மனவேறுபாடே மிகவும் இனிமையானது என்று சொல்பவன் வாழ்க்கையில் யாவும் மிகவிரைவில் நீங்கி அழிந்து போகும்.

*இகல் - மனவேறுபாடு: மிகல் - மிகவும், தவல் - நீங்கி,*
*நணித்து - மிகவிரைவில்.*

7. மனவேறுபாடு கொள்பவர் எதனை அறியமாட்டார்?

**மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்**
**இன்னா அறிவி னவர். 857**

மனவேறுபாடு கொண்டு பொல்லாங்கு செய்யும் உணர்வினை உடையோர் வெற்றிதரும் உண்மைப் பொருளை அறியமாட்டார்.

*மிகல்மேவல் - வெற்றிதரும், மேவல் - கொண்டு,*
*இன்னா - பொல்லாங்கு; அறிவு - உணர்வு,*
*காணார் - அறியமாட்டார்.*

8. மனவேறுபாட்டை என்ன செய்யவேண்டும்?

**இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை**
**மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.** 858

மனவேறுபாட்டை எதிர்த்து நீக்கினால் நன்மை உண்டாகும். அதனை மேன்மேலும் வளர்த்துக் கொண்டால் மிகுந்த கேடு வரும்.

*சாய்தல் - நீக்குதல்; ஆக்கம் - நன்மை;*
*மிகல்ஊக்கின் - மேன்மேலும் வளர்த்தல்.*

9. மனவேறுபாடுடையவன் மனநிலை எப்படிப்பட்டது?

**இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
**மிகல் காணும் கேடுதரற்கு.** 859

தனக்கு நன்மை வரும்போது மனவேறுபாட்டைப் பார்க்க மாட்டான். கேட்டினை உண்டாக்கிக் கொள்வதற்கு மனவேறுபாட்டை மிகவும் நன்றாகப் பார்ப்பன்.

*காணான் - பார்க்கமாட்டான்; ஆக்கம் - நன்மை;*
*மிகல்காணும் - நன்றாகப்பார்ப்பான்.*

10. மற்றவர்களோடு மனவேறுபாடற்று நட்புடன் நடந்தால் என்ன கிடைக்கும்?

**இகலான்ஆம் இன்னாது எல்லாம் நகலான்ஆம்**
**நன்னயம் என்னும் செருக்கு.** 860

மனவேறுபாட்டால் துன்பங்கள் எல்லாம் வரும். நட்பால் நல்ல நீதியுள்ளவன் என்ற பெருமை கிடைக்கும்.

*இகல் - மனவேறுபாடு; நன்னயம் - நல்ல நீதி;*
*செருக்கு - பெருமை.*

# 87. பகைமாட்சி

*(பகையை வெல்வதால் வரும் பெருமை)*

1. பகையை வெல்ல வழி என்ன?

**வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா**
**மெலியார்மேல் மேக பகை.** 861

உங்களை விட வலிமை உள்ளவர்களை பகைத்து எதிர்ப்பதைத் தவிர்த்து, வலிமை குறைந்தவரை எதிர்த்து நிற்க விரும்பவும்.

*மாறு - பகைத்து; ஓம்புக - தவிர்க்க;*
*மெலியார் - வலிமை குறைந்தவர்.*

2. எதுவித துணையும் வலிமையும் அற்றவன் பகைவனை வெல்ல முடியுமா?

**அன்புஇலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.** 862

எவரோடும் அன்பு இல்லாதவனாய், வலிமை மிக்க துணைவர் இல்லாதவனாய், தானும் வலிமை அற்றவனாய் இருப்பவன் பகைவனின் வலிமையை எப்படி வெல்லுவான்?

*ஆன்ற - வலிய துவ்வான் - வலிமை அற்றவன்;*
*ஏதிலான் - பகைவன் துப்பு - வலிமை.*

3. எப்படிப்பட்டவன் எளிதில் பகைவரிடம் தஞ்சம் புகுவான்?

**அஞ்சும் அறியான் அமைவுஇலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.** 863

எதற்கும் பயப்படுபவனாய், அறிய வேண்டியவற்றை அறியாதவனாய், மற்றவர்களுடன் சேர்ந்து பழகாதவனாய், யாருக்கும் எதனையும் கொடுக்காதவனாய் இருப்பவன் எளிதில் பகைவரிடம் தஞ்சம் புகுவான்.

அமைவுஇலன் - சேராதவன் ஈகலான் - கொடுக்காதவன்.

4. எத்தகையவனை பகைவர் மிக எளிதில் வெல்லமுடியும்?

**நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும்**
**யாங்கணும் யார்க்கும் எளிது. 864**

கோபத்தை விடாதவனாய் ஒழுக்கமில்லாதவனாய் இருப்பவனை எப்போதும், எந்த இடத்திலும் யாரும் வெல்லலாம்.

*நீங்கான் - விடாதவன்; வெகுளி - கோபம்;*
*நிறைஇலன் - ஒழுக்கமில்லாதவன், எஞ்ஞான்றும் - எப்போதும்;*
*யாங்கணும் - எந்த இடத்திலும்.*

5. யாருடைய பகைமை பகைவர்க்கு இனிக்கும்?

**வழிநோக்கான் வாய்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்புஇலன் பற்றார்க்கு இனிது. 865**

ஒழுக்கத்தைக் காக்காது, தனக்கு வாய்ப்பனவற்றைச் செய்யாது, தனக்கு வரும் பழியைப் பொருட்படுத்தாது, பண்பில்லாது இருப்பவனது பகைமை பகைவர்க்கு இனிக்கும்.

*வழிநோக்கான் - ஒழுக்கத்தைப் பாரான்; பற்றார் - பகைவர்.*

6. எவருடைய பகைமை விரும்பத்தக்கது?

**காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்**
**பேணாமை பேணப் படும். 866**

காரணமில்லாது கோபம் கொள்பவனாய், அளவுக்கு அதிகமான சிற்றின்ப ஆசையுள்ளவனாய் இருப்பவனின் பகைமை விரும்பத் தக்கதாகும்.

*காணாச்சினம் - காரணமற்றசினம்; பேணாமை - பகைமை,*
*பேணப்படும் - விரும்பப்படும்.*

7. எம்மோடிருந்து கொண்டே எமக்குத் தீமை செய்பவரை என்ன செய்யவேண்டும்?

**கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து**
**மாணாத செய்வான் பகை. 867**

எம்மோடு பக்கத்திலிருந்து கொண்டே தீமைகள் செய்பவனை பொருள் கொடுத்தாவது பகைவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*மாணா - தீமை; அடுத்து - பக்கத்து.*

8. எத்தகைய பகைவன் தன்னை வெல்வதற்கு துணைபுரிவான்?

**குணன்இலனாய்க் குற்றம் பலஆயின் மாற்றார்க்கு**
**இனன்இலன்ஆம் ஏமாப்பு உடைத்து. 868**

குணமில்லாது, பல குற்றங்கள் செய்வதால் துணையாக யாரும் இல்லாதவன், பகைவர் தன்னை வெல்லத் துணைபுரிவான்.

*இனன் - துணை; இலன் - இல்லாதவன்; மாற்றார் - பகைவர்; ஏமாப்பு - துணை.*

9. எப்படிப்பட்ட பகைவரை வென்ற மகிழ்ச்சி நெடுங்காலம் மாறாதிருக்கும்?

**செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா**
**அஞ்சும் பகைவர்ப் பெறின். 869**

அறிவற்ற கோழைகளை, பகைவராகப் பெற்றால், எதிர்ப்பவர்க்கு வென்ற மகிழ்ச்சி நெடுங்காலம் மாறாதிருக்கும்.

*செறுவார் - எதிர்ப்பவர்; சேண் - நெடுங்காலம்; இகவா - மாறாது, அஞ்சும் - கோழை.*

10. படிக்காதவனை எதிர்க்க முடியாதவனுக்கு எது வந்து சேராது?

**கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்**
**ஒல்லானை ஒல்லாது ஒளி. 870**

படிக்காதவனை எதிர்த்து வரும் கொஞ்சப்பொருளையும் எடுக்க முடியாதவனிடம் எப்பொழுதும் புகழ் வந்து சேராது.

*கல்லான் - படியாதவன்; வெகுளும் - எதிர்த்து; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; ஒல்லாது - சேராது, ஒளி - புகழ்.*

## 88. பகைத்திறம் தெரிதல்

*(பகையை வெல்வதற்கான தன்மையை அறிதல்)*

1. பகையை விரும்பலாமா?

**பகைஎன்னும் பண்பு இலதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற்று அன்று.** 871

பகை என்று சொல்லப்படும் முறையற்ற செயலை வேடிக்கையாகவும் ஒருவன் விரும்புவது நல்லதல்ல.

*பண்பு - முறை; நகை - வேடிக்கை; வேண்டுதல் - விரும்புதல்; பாற்றன்று - நல்லதல்ல.*

2. யாரோடு பகை கொள்ளக் கூடாது?

**வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை.** 872

வில்லுடைய வீரரைப்பகைத்துக் கொண்டாலும், சொல்லால் எழுச்சி உண்டாக்கும் அறிஞரைப் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

*வில்லேர் உழவர் - வில் வீரர்; ஏர் - எழுச்சி;*
*சொல்லேர் உழவர் - சொல்லால் எழுச்சி உண்டாக்குமறிஞர்.*

3. தனியாக நின்று பலரைப் பகைப்பவன் எப்படிப்பட்டவன்?

**ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்**
**பல்லார் பகைகொள் பவன்.** 873

தனியாக நின்று பலரைப் பகைத்துக் கொள்பவன் பித்துப் பிடித்தவரை விட அறிவில்லாதவன்.

*ஏமுற்றார் - பித்தர்; ஏழை - அறிவில்லாதவன்.*

4. பகைவனை நண்பனாக்கிக் கொள்ளலாமா?

**பகைநட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன்**
**தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874**

பகையை நீக்கி நட்பாக்கிக் கொண்டு நடக்கின்ற குணமுடையவனின் பெருந்தன்மையில் இந்த உலகமே தங்கியுள்ளது.

*பண்பு - குணம்; தகைமை - பெருந்தன்மை.*

5. தனக்குதவ துணைவரில்லாதபோது இரண்டு பகைவர் எதிர்த்தால் என்ன செய்வது?

**தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்**
**இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. 875**

தனக்குத் துணையாக ஒருவருமில்லாத போது, பகைவர் இரண்டானால் அவன் அவற்றில் ஒரு பகையைத் தனக்கு இனிய துணையாகக் கொள்ள வேண்டும்.

*இன்றால் - இல்லாதபோது; இன்துணை - இனியதுணை.*

6. எமக்கு வேறுவகையால் அழிவு வந்த இடத்து பகையை என்ன செய்யவேண்டும்?

**தேறினும் தேறா விட்டாலும் அழிவின்கண்**
**தேறான் பகாஅன் விடல். 876**

பகைவனை நம்பினாலும் நம்பாவிட்டாலும் தனக்கழிவு வந்த போது பகைவனை மிக நெருங்காமலும் விட்டு நீங்காமலும் இடைநடுவே விட்டுவிடவேண்டும்.

*தேறினும் - நம்பினும்; தேறாவிடினும் - நம்பாவிட்டாலும்; தேறான் - மிக நெருங்கி; பகாஅன் - நீங்கி.*

7. எமது துன்பத்தைப் பகைவரிடம் சொல்லலாமா?

**நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க**
**மென்மை பகைவர் அகத்து. 877**

துன்பப்படுவதை தாமாக அறிந்து கொள்ளாதவர்க்கு துன்பத்தைச் சொல்லவேண்டாம். பகைவரிடத்தில் பலவீனத்தைத் தெரியப்படுத்த வேண்டாம்.

*நோவற்க - துன்பத்தை சொல்லல்; நொந்தது - துன்பப்பட்டது; மென்மை - பலவீனம்; மேவற்க - தெரியப்படுத்த வேண்டாம்.*

8. பகைவரிடம் இருக்கும் செருக்கை எப்படிப் போக்குவது?

**வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு.** 878

தன்னை வலிமைப்படுத்தும் வழியை அறிந்து, தன்னை மேம்படுத்திக் காத்துக் கொண்டால், பகைவரின் செருக்கு அழியும்.

*வகை - வழி; தற்செய்து - மேம்படுத்தி; மாயும் - அழியும்.*

9. எப்போது பகையை நீக்கினாலது மிக இலகுவானதாயிருக்கும்?

**இளைதுஆக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.** 879

முள்மரத்தை இளமையாக இருக்கும் போதே அழிக்க வேண்டும். அது வைரம்பாய்ந்து முதிர்ந்த பின், களைபவர் கையைக்குத்தி வருத்தும்.

*இளைதாக - இளமையாக; களையுநர் - களைபவர்,*
*காழ்த்த - வைரம் பாய்தல்.*

10. பகைவரின் கர்வத்தை அடக்கமுடியாதவரை என்னவென்று சொல்லலாம்?

**உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர்**
**செம்மல் சிதைக்கலா தார்.** 880

தமது பகைவரது கர்வத்தையழிக்க முடியாதவர் சுவாசிப்பவர் ஆனாலும் நிச்சயமாக இறந்தவரே.

*மன்ற - நிச்சயமாக; செயிர்ப்பவர் - பகைவர்; செம்பல் - கர்வம்;*
*சிதைத்தல் - அழித்தல்.*

# 89. உட்பகை

*(உட்பகையால் வரும் கேடு)*

1. உட்பகையை விளக்க முடியுமா?

**நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்**
**இன்னாஆம் இன்னா செயின்.** 881

நிழலும், நீரும் நல்லதில்லையானால் துன்பம் தரும். அதுபோல் உறவினர் தமது இயல்பு நீங்கி தீமை செய்தால் அதுவும் துன்பமாகும்.

*இன்னாத - நல்லதில்லாத; இன்னா - துன்பம்;*
*தமர்நீரும் - உறவினர் இயல்பும்.*

2. உட்பகைக்கா வெளிப்பகைக்கா பயப்பட வேண்டும்?

**வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு.** 882

வாள் போல் வெட்டும் வெளிப்படையான பகைவர்க்கு பயப்பட வேண்டாம். உறவினர் போலிருந்து கெடுக்கும் உட்பகைவர் தொடர்புக்குப் பயப்படவேண்டாம்.

*கேள் - உறவினர்.*

3. உட்பகைக்கு என்ன செய்ய வேண்டும்?

**உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவுஇடத்து**
**மண்பகையின் மாணத் தெறும்.** 883

உட்பகைக்கு அஞ்சி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் சோர்ந்திருக்கும் நேரத்தில் மட்பாத்திரத்தை வெட்டும் கருவிபோல் தப்பாது அழிப்பார்.

*உலைவு - சோர்வு; மாண - தப்பாது; தெறும் - அழிக்கும்.*

4. மனவிரோதத்தால் உட்பகை உண்டானால் என்ன விளையும்.?

**மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா**
**ஏதும் பலவும் தரும். 884**

மனவிரோதத்தால் உட்பகை உண்டாகினால், அது அவனது இனத்தவரிடையே விரோதத்தை உண்டாக்கும் தீமை பலவற்றைத் தரும்.

*மனம்மாணா - மனவிரோதம்; இனம்மாணா - இன விரோதம்; ஏதும் - தீமை.*

5. உறவு முறையானவாரிடையே உட்பகை தோன்றினால் என்ன வரும்?

**உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்**
**ஏதம் பலவும் தரும். 885**

உறவு முறையானவரிடையே உட்பகை தோன்றினால் அது இறக்கும் நிலையை உண்டாக்கும் தீமை பலவற்றையும் தரும்.

*உறல்முறை - உறவுமுறை; ஏதம் - தீமை; இறல்முறை - இறக்கும் நிலை.*

6. தன்னைச் சேர்ந்தவரிடையே உட்பகை உண்டானால் என்ன நடக்கும்?

**ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்**
**பொன்றாமை ஒன்றல் அரிது. 886**

தம்மைச் சேர்ந்தவரிடையே பகைமையுண்டானால் எந்த நேரத்திலும் உயிரோடு இருத்தலரிதாகும்.

*ஒன்றாமை - பகைமை; ஒன்றியார் - சேர்ந்தார்; எஞ்ஞான்றும் - எந்த நேரத்திலும்; பொன்றாமையொன்றல் - உயிரோடிருத்தல்.*

7. ஒரே குடும்பத்தாரிடையே உட்பகை தோன்றினால் அவர்கள் எப்படி இருப்பார்கள்?

**செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி 887**

சிமிழின் மூடிபோல சேர்ந்து கூடியிருந்தாலும் உட்பகை ஏற்பட்ட குடும்பத்தார் மனதால் சேராது இருப்பார்கள்.

*செப்பு - சிமிழ்; புணர்ச்சி - சேர்ந்து; குடி - குடும்பம்.*

8. உட்பகை தோன்றிய குடும்பத்திற்கு என்ன நடக்கும்.?

**அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது**
**உட்பகை உற்ற குடி. 888**

உட்பகை கொண்ட குடும்பம் அரத்தால் தேய்க்கப்பட்டு இரும்பு தேய்வது போல வலிமையழிந்து குன்றும்.

*அரம்பொருத - அரம்தேய்த்த; பொன் - இரும்பு;*
*உரம் - வலிமை.*

9. உட்பகை மிகச்சிறிதாக இருந்தாலும் கேடு வருமா?

**எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்**
**உட்பகை உள்ளதாம் கேடு. 889**

எள்ளிலுள்ள பிளவு போல சிறிதாக இருந்தாலும் உட்பகையினுள்ளே கேடிருக்கும்.

*எள்பகவு - எள்ளின்பிளவு; அன்ன - போல.*

10. மனப்பொருத்தம் இல்லாதவருடன் வாழும் வாழ்க்கை எது போன்றது?

**உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்பொடு உடன்உறைந் தற்று. 890**

மனப்பொருத்தம் இல்லாதவருடன் வாழும் வாழ்க்கை குடிசைக்குள் பாம்போடு சேர்ந்து வசிப்பதைப் போன்றாதாகும்.

*உடம்பாடு - மனப்பொருத்தம்; குடங்கர் - குடிசை,*
*உறைதல் - வசித்தல்.*

## 90. பெரியாரைப் பிழையாமை

*(பெரியோர்க்கு தவறு செய்யாதிருத்தல்)*

1. உலகநன்மைக்காக பாடுபடும் பெரியோரை இகழலாமா?

**ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை.** 891

செயலாற்றும் வல்லமையடையவரை இகழாது இருத்தலே தம்மைக் காப்பவர் செய்யும் பாதுகாப்புகளுள் தலை சிறந்ததாகும்.

*ஆற்றுவார் - செயலாற்றுவார்; ஆற்றல் - வல்லமை; போற்றுவார் - காப்பவர்; போற்றலுள் - பாதுகாப்புகளுள்.*

2. பெரியோரை மதிக்காவிட்டால் என்ன?

**பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியோரால்**
**பேரா இடும்பை தரும்.** 892

ஆற்றல் மிக்க பெரியோர்களை மதியாது நடப்பதால் அப்பெரியவர்களால் நீங்காத துன்பம் உண்டாகும்.

*பேணாது - மதியாது; ஒழுகின் - நடந்தால்; பேரா - நீங்காத; இடும்பை - துன்பம்.*

3. பெரியோருக்கு கேடு செய்யலாமா?

**கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்**
**ஆற்று பவர்கண் இழுக்கு.** 893

ஒருவன் கெட்டுப் போக விரும்பினால் பகைவரை உடனே கொல்லக்கூடிய ஆற்றலுள்ள பெரியோருக்கு, எவரையும் கேளாது கேடு செய்வானாக.

*அடல் - கொல்லுதல்: கெடல் - கெட்டுப்போதல்; இழுக்கு - கேடு.*

4. ஆற்றலுள்ளவர்க்கு ஆற்றலில்லாதவர் துன்பம் செய்தல் எதைப்போன்றது?

**கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**
**ஆற்றாதார் இன்னா செயல். 894**

ஆற்றலுடையவர்க்கு ஆற்றலில்லாதவர் துன்பம் செய்தல் இயமனைக் கையால் அழைத்து போன்றதாகும்.

*கூற்று - இயமன்; விளித்தல் - அழைத்தல்; இன்னா - துன்பம்; ஆற்றாதார் - ஆற்றலில்லாதார்.*

5. ஒருவர் வலிமைமிக்க ஆட்சியாளரின் கோபத்திற்கு ஆளானால் என்ன நடக்கும்?

**யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெம்துப்பின்**
**வேந்து செறப்பட டவர். 895**

வலிமைமிக்க ஆட்சியாளரின் கோபத்திற்குள்ளானவர் தப்பி எங்கே சென்றாலும் எப்பொழுதும் அவர்களால் உயிர் வாழ முடியாது.

*யாண்டு - எங்கு; யாண்டும் - எப்பவும்;*
*உளராகார் - உயிர்வாழார், செறப்படுதல் - கோபப்படுதல்.*

6. பெரியோருக்குப் பிழை செய்தால் என்ன விளையும்?

**எரியால் சுடப்படினும் உய்வுஉண்டாம் உய்யார்**
**பெரியார்ப் பிழைத்துஒழுகு வார். 896**

நெருப்பால் சுடப்பட்டாலும் பிழைக்கமுடியும். ஆனால் பெரியோருக்குப் பிழைசெய்பவர் தப்பிப்பிழைக்க முடியாது.

*உய்வு - பிழைக்க; உய்யார் - பிழைக்கமாட்டார்.*

7. பெரியோர்களது கோபத்தைத் தடுக்குமாற்றல் எதற்கு உண்டு?

**வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்**
**தகைமாண்ட தக்கார் செறின். 897**

பெருமையில் சிறந்த அறிஞர்கள் கோபிப்பார்களேயானால் வலிமைமிக்க வாழ்க்கையும், பெரும் பொருளும் என்ன செய்யமுடியும்?

*வகை - வலிமை; மாண்ட - மிக்க; வான் - பெரும்;*
*தகை - பெருமை; தக்கார் - அறிஞர்; செறின் - கோபித்தல்.*

8. பெரியோர்களை கெடுக்க முனைபவர்கள் என்னாவார்கள்?

**குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு**
**நின்றன்னார் மாய்வர் நிலத்து.** **898**

பெருமையில் மலைபோன்ற பெரியோர்களை கெடுக்க நினைப்பவர்கள், குடிப்பெருமையோடு உலகத்தில் நிலைத்து நின்றவர்களானாலும் அழிந்து போவர்.

*குன்று - மலை; குன்ற - கெட; மதிப்பின் - நினைப்பின்; மாய்வர் - அழிவார்; நிலத்து - உலகத்து.*

9. ஆட்சியாளர்களை பெரியோர்கள் கோபிக்க முடியுமா?

**ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்.** **899**

உயர்ந்த கொள்கை உடையவர் கோபித்தால், ஆட்சியினிடையிலே பிரிந்து ஆட்சித் தலைவனும், அவனுடைய தலைமைப் பதவியும் கெட்டழியும்.

*ஏந்திய - உயர்ந்த; சீறின் - கோபித்தால்; கெடும் - அழியும்; முரிந்து - பிரிந்து.*

10. அளவு கடந்த கட்டுக்காவலும் துணையுமுள்ளவரை பெரியோர்களால் என்ன செய்யமுடியும்?

**இறந்துஅமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்**
**சிறந்துஅமைந்த சீரார் செறின்.** **900**

அளவு கடந்த கட்டுக்காவல்களும் துணையும் உள்ளவராயினும் பெருமையிற் சிறந்த நற்குணமமைந்த நடுநிலையாளர்கள் கோபித்தால் உய்வடைய மாட்டார்கள்.

*இறந்தமைந்த - அளவுகடந்த; சீரார் - நடுநிலையாளர்; செறின் - கோபித்தால்*

## 91. பெண்வழிச் சேறல்

*(பெண்ணின் சொல்வழி நடத்தல்)*

1. கடமையே கண்ணும் கருத்துமாக இருப்பவர் விரும்பாதது எது?

**மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்**
**வேண்டாப் பொருளும் அது. 901**

இல்லறத்தை விரும்புபவர் சிறந்த பயனைப் பெறமாட்டார். ஆதலால் கடமையை விரும்புபவர் விரும்பாத பொருளும் அதுவேயாகும்.

*மனை - இல்லறம்; விழைதல் - விரும்புதல்;*
*எய்தார் - பெறமாட்டார்; வினை - கடமை.*

2. யாருடைய உயர்வு பெரிய மானக்கேட்டைத் தரும்?

**பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும். 902**

தன் கடைமையைப் பேணாது பெண்ணை விரும்பி அலைபவனின் உயர்வு பெரியதோர் மானக்கேடாகத் தலைக்குனிவைத் தரும்.

*பெண்விழைவான் - பெண்ணை விரும்புவான்; ஆக்கம் - உயர்வு; நாணாக - மானமாக; நாணும் - தலைக்குனிவு.*

3. எச்செயல் நல்லவர்கள் முன் வெட்கப்பட வேண்டிய நிலையையுண்டாகும்?

**இல்லாள்கண் தாழ்ந்த இயல்புஇன்மை எஞ்ஞான்றும்**
**நல்லாருள் நாணத் தரும். 903**

மனைவியிடம் பணிந்து நடக்கும் தகுதியற்ற செயல் எப்பொழுதும் நல்வர்கள் முன் வெட்கப்பட வேண்டிய நிலையையுண்டாக்கும்.

*இல்லாள் - மனைவி; தாழ்ந்த - பணிந்த; நாணும் - வெட்கம்.*

4. யாருடைய செயலாற்றும் திறமை வெற்றியடையாது?

**மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்**
**வினையாண்மை வீறுஎய்தல் இன்று.** 904

மனைவிக்குப் பயப்படும் மறுமைப் பயனில்லாதவன் செயலாற்றலில் வெற்றி பெறமுடியாது.

*வீறு - வெற்றி; வினையாண்மை - செயலாற்றல்; எய்தல் - அடைதல்.*

5. எவன் நல்லவர்களுக்கு நன்மை செய்யப்பயப்படுபவான்?

**இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்**
**நல்லார்க்கு நல்ல செயல்.** 905

மனைவியுடன் வாழப்பயப்படுபவன் எப்பொழுதும் நல்லவர்களுக்கு நன்மை செய்யவும் பயப்படுவான்

*அஞ்சுவான் - பயப்படுவான்; இல்லாள் - மனைவி; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.*

6. பெரும் செல்வம் இருந்தாலும் யாரால் அதனை அனுபவிக்க முடியாது?

**இமையாரின் வாழினும் பாடுஇலரே இல்லாள்**
**அமைஆர்தோள் அஞ்சு பவர்.** 906

மனைவியின் மூங்கிலைப்போன்ற தோளைச் சேரப் பயப்படுபவர் தேவர்களிலும் மேலான வாழ்க்கை வாழ்ந்தாலும் அனுபவிக்க முடியாதவரே.

*இமையாரின் - தேவர்களிலும்; பாடு - அனுபவித்தல்; அமை - மூங்கில்.*

7. எத்தகைய ஆண்மையை விட நாணமுள்ள பெண் பெருமை பெறுவாள்?

**பெண்ஏவல் செய்துஒழுகும் ஆண்மையின் நாணுடைப்**
**பெண்ணே பெருமை உடைத்து.** 907

பெண்ணுக்குப் பணிவிடை செய்து வாழ்பவனின் ஆண்மையை விடப்பெண்ணே பெருமை பெறுவாள்.

*ஏவல் - பணிவிடை; ஒழுகும் - வாழும்.*

8. பெண்ணின் விருப்பப்படி நடப்பவரால் எவற்றைச் செய்ய முடியாது?

**நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நன்னுதலாள்**
**பெட்டாங்கு ஒழுகு பவர். 908**

அழகிய நெற்றியையுடைய பெண்ணின் விருப்பப்படி நடப்பவரால் நண்பர்களின் குறைகளையும் தீர்க்கமுடியாது, நல்ல செயல்களையும் செய்யமுடியாது.

*நட்டார் - நண்பர்; நன்று - நல்ல; பெட்டாங்கு - விருப்பப்படி; நன்னுதலாள் - அழகிய நெற்றியுடையவள்.*

9. பெண்ணுக்கு பணிவிடை செய்து வாழ்பவரிடம் எவை இருக்காது?

**அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ஏவல் செய்வார்கண் இல். 909**

அறச்செயலும் நிறைந்த பொருளும் மற்ற இன்பங்களும் பெண்ணுக்குப் பணிவிடை செய்பவரிடமிருக்காது.

*ஆன்ற - நிறைந்த; பிறவினை - மற்ற இன்பம்; ஏவல் - பணிவிடை.*

10. பெண்ணிடம் மயங்கி நடக்குமியல்பு யாரிடம் இருக்காது?

**எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்**
**பெண்சேர்ந்துஆம் பேதைமை இல். 910**

கடமை உணர்வுள்ள நெஞ்சோடு தமது உழைப்பால் வந்த செல்வமுடையவர்க்கு எப்போதும் பெண்ணிடம் மயங்கும் அறிவீனம் இருக்காது.

*எண் - கடமை; இடன் - செல்வம்; எஞ்ஞான்றும் - எப்போதும்; சேர்தல் - மயங்குதல்; பேதமை - அறிவீனம்.*

## 92. வரைவின் மகளிர்

*(விலை மகளிர்)*

1. விலைகமளிரின் இனியசொல் எதனைத் தரும்?

**அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்**
**இன்சொல் இழுக்குத் தரும்.** 911

ஒருவரை அன்பிற்காக விரும்பாது பொருளுக்காக விரும்பும் பெண்களின் இனியசொல் துன்பத்தைத் தரும்.

*இழுக்கு - துன்பம்; விழையார் - விரும்பார்;*
*ஆய்தொடியார் - மகளிர்.*

2. விலை மகளிரை என்ன செய்ய வேண்டும்?

**பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்**
**நயன்தூக்கி நள்ளா விடல்.** 912

எவ்வளவு பொருள் கிடைக்கும் என்பதைக் கணக்குப்பார்த்து அதற்காகப் பண்பாகப் பேசும் பண்பில்லாத விலைமகளிரால் கிடைக்கும் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து அவரோடு சேராது விடவும்.

*நயன்தூக்கி - இன்பத்தை ஆராய்ந்து: நள்ளா - சேராது.*

3. விலைமகளிரைத் தழுவுதல் எது போன்றது?

**பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டுஅறையில்**
**ஏதில் பிணம்தழீஇ யற்று.** 913

விலைமகளிரின் பொய்யான தழுவுதல் இருட்டறையில் முன்பின் தெரியாத பிணத்தைத் தழுவுதல் போன்றது.

*பொருட்பெண்டிர் - விலைமகளிர்; பொய்ம்மை - பொய்யான;*
*முயக்கம் - தழுவுதல்; ஏதில் - முன்னறியாத அயல்.*

4. அருளாளர்கள் விலைமகளிரை விரும்புவார்களா?

**பொருட்பொருளார் புன்நலம் தோயார் அருட்பொருள்**
**ஆயும் அறிவி னவர். 914**

அருளாகிய பொருளை ஆராயும் அறிவுடையவர் விலைமகளிரின் இழிவான இன்பத்தில் மூழ்கார்.

*பொருட்பொருளார் - விலைமகளிர்; தோயார் - மூழ்கார்;*
*புன்னலம் - இழிந்த இன்பம்.*

5. அறிவுடையார் விலைமகளிரை விரும்புவரா?

**பொதுநலத்தார் புன்நலம் தோயார் மதிநலத்தின்**
**மாண்ட அறிவி னவர். 915**

தமது இயற்கை அறிவால் மிகுந்த கல்வியறிவு உடையவர் பொதுமகளிரின் புணர்ச்சி இன்பத்தில் முழ்கமாட்டார்.

*பொது நலத்தார் - பொது மகளிர்; புன்நலம் - புணர்ச்சியின்பம்;*
*தோயார் - மூழ்கார்; மதிநலம் - அறிவுத்திறம்;*
*மாண்ட - மிகுந்த.*

6. புகழை விரும்புகின்றவர் விலைமகளிரைச் சேர்வரா?

**தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்**
**புன்நலம் பாரிப்பார் தோள். 916**

தம்மிடமுள்ள தகுதிகளால் மகிழ்ச்சியடைய வைத்து புணர்ச்சி இன்பத்தை விலைப்படுத்தும் விலைமகளிரின் தோளை தாம் பெற்ற நன்மையை உலகெங்கும் பரப்பும் புகழாளர் சேரார்.

*செருக்கி - மகிழவைத்து;*
*தோயார் - சேரார்; புன்னலம் - புணர்ச்சியின்பம்,*
*பாரிப்பார் - பரப்புவார் (விலைப்படுத்துவார்); தகை - தகுதி.*

7. ஒழுக்கம் இல்லாதவர் விலை மகளிரைச் சேர்வாரா?

**நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்**
**பேணிப் புணர்பவர் தோள். 917**

மனதில் பொருளைவிரும்பி பிறரைப் புணர்பவர் தோளை ஒழுக்கமில்லாதவர் சேர்வர்.

*நிறைநெஞ்சம் - ஒழுக்கம்; தோய்வர் - சேர்வர்;*
*நெஞ்சில் - மனதில்; பேணி - விரும்பி.*

8. அறிவிலார்க்கு விலைமகளிரின் தழுவல் எது போன்றிருக்கும்?

**ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப**
**மாய மகளிர் முயக்கு.** **918**

ஆராயும் அறிவில்லாதவர்க்கு வஞ்சகமகளிரான விலைமகளிரின் தழுவல் மோகினி பிடித்தது போன்றது என்பர்.

*ஆயும் - ஆராயும்; அறிவினர்அல்லார் - அறிவிலார்; அணங்கு - மோகினி; மாய - வஞ்சக; முயக்கு - தழுவதல்.*

9. விலைமகளிரின் தோள் எத்தகையது?

**வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்**
**பூரியர்கள் ஆழும் அளறு.** **919**

விலைமகளிரின் மென்மையான தோள் உயர்வில்லா கீழ்மக்கள் மூழ்கும் நரகமாகும்.

*வரைஇலாமாணிழையார் - விலைமகளிர்; புரை - உயர்வு; பூரியர் - கீழ்மக்கள்; அளறு - நரகம்.*

10. திருமகளால் கைவிடப்பட்டவருக்கு நட்பாக வருபவை எவை?

**இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப் பட்டார் தொடர்பு.** **920**

திருமகளால் கைவிடப்பவர்க்கு இருவித மனமுடைய விலைமகளிரும் கள்ளும் சூதாட்டமும் நட்பாக வந்து சேரும்.

*திரு - திருமகள்; கவறும் - சூதும்.*

# 93. கள் உண்ணாமை

*(மதுவருந்தாது இருத்தல்)*

1. மதுவைக் காதலிப்பவர் நிலை என்னாகும்?,

**உள்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்**
**கள்காதல் கொண்டுஒழுகு வார்.** 921

மதுவின் மேல் காதல் கொண்டு வாழ்பவரைப் பார்த்து எப்பொழுதும் பகைவர் பயப்படமாட்டார்கள். அவர்களின் புகழும் மங்கும்.

*ஒளியிழப்பர் - புகழ்மங்கும்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; கள் - மது.*

2. மதுவைக் குடிக்கலாமா?

**உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்.** 922

மதுவைக் குடிக்க வேண்டாம். சான்றோரால் மதிக்கப்பட விரும்பாதவர் குடிக்க வேண்டுமானால் குடிக்கட்டும்.

3. சான்றோர் முன்பு மது அருந்தலாமா?

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி.** 923

எல்லாக் குற்றத்தையும் பொறுக்கும் தாயின் முன் மதுவுண்டு மயங்குதல் வெறுப்புத் தருவதாகும். தாய்கே இப்படியானால் சான்றோர் முன்பு எப்படி இருக்கும்?

*ஈன்றாள் - தாய்; முகத்தேயும் - முன்பும்; இன்னா - வெறுப்பு; களி - மயக்கம்.*

4. எவரைவிட்டு நாணம் புறமுதுகு காட்டி ஓடும்?

**நாண்என்னும் நல்லாள் புறம்கொடுக்கும் கள்என்னும்**
**பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924**

நாணமென்னும் நல்லவீரன், மயக்கந்தரும் கள் குடித்தலென்று பிறரால் விரும்பப்படாத பெருங்குற்றத்தைச் செய்பவரிடமிருந்து புறமுதுகு காட்டியோடிவிடுவான்.

*நாண் - நாணம்: நல்ஆள் - நல்லவீரன்; கள் - மயக்கம்; புறங்கொடுத்தல் - புறமுதுகுகாட்டுதல்.*

5. பொருளைக் கொடுத்து தம்மையே மயக்கும் மதுவை வாங்கி அருந்துவதன் காரணமென்ன?

**கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து**
**மெய்அறி யாமை கொளல். 925**

பொருளைக் கொடுத்து தன் உடலைத் தானறியாத நிலையைப் பெறுவதன் காரணம் செய்யத்தக்கது எதுவென்பதை அறியாததேயாகும்.

*கை - செய்யத்தக்கது; மெய் - உடல்; அறியாமை - அறியாத நிலை.*

6. மது அருந்துபவர்களை யாரோடு ஒப்பிடலாம்?

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர். 926**

தூங்கினவர்க்கும் செத்தவர்க்கும் மூச்சுவிடுதல் தவிர வேறுபாடு இல்லாதது போல எப்போதும் மது அருந்துபவர் நஞ்சு குடிப்பவருக்கு அறிவையிழப்பதால் சமமாவர்.

*துஞ்சினார் - தூங்கினார்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.*

7. மது அருந்துபவரை பிறர் என்ன செய்வர்?

**உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்**
**கள்ஒற்றி கண்சாய் பவர். 927**

மது அருந்தி அறிவுமயங்கிச் சாய்கின்றவரின் மனதிலுள்ளதை அறிந்து உள்ளூரார் எப்பொழுதும் இகழ்ந்து சிரிப்பர்.

*உள்ஒற்றி - மனதிலுள்ளதை அறிந்து; கள் ஒற்றி - மதுவருந்தி; நகப்படுவர் - இகழப்படுவர்; கண்சாய்தல் - மயங்கிச்சாய்தல்.*

8. மதுவை பிறர் அறியாமல் குடிக்கலாமா?

**களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து**
**ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928**

குடிப்பவன் குடித்தறியேன் என்று சொல்வதைக் கைவிட்டு விடவேண்டும். உங்கள் மனதில் மறைத்து வைத்திருந்ததும் மது அருந்தும்பொழுது வெளிவந்து விடும்.

*களித்தறியேன் - குடித்தறியேன்; நெஞ்சத்து - மனத்து; ஒளித்ததும் - மறைத்ததும்.*

9. மது உண்டவனுக்கு அறிவுரை கூறமுடியுமா?

**களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929**

மது மயக்கத்தில் இருப்பவனுக்குக் காரணம் காட்டியறிவுரை கூறுதல் நீரினுள் மூழ்கியவனை, தீப்பந்தத்துடன் துருவித் தேடுவது போலாகும்.

*களித்தான் - கள்ளில்மயங்கியவன்; கீழ்நீர் - நீரினுள்; தீ - நெருப்பு; குளித்தான் - மூழ்கியவன்; துரீஇ - துருவித்தேடுதல்.*

10. குடிப்பாரை ஏன் திருத்தவே முடியாது?

**கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்**
**உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 930**

தான் கள் குடிக்காத நேரம் இன்னொரு குடிகாரன் குடித்து யாவற்றையும் மறந்து தள்ளாடுவதைப் பார்த்தும் தன்நிலையை எண்ணிப் பார்க்கமாட்டான் போலும்.

*கள் - மது; களித்தான் - குடிகாரன்; காணுங்கால் - பார்த்தும்;*

# 94. சூது

*(சூதாடலால் வரும் கேடு)*

1. சூதாட்டத்தை விரும்பலாமா?

**வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூம்**
**தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று** 931

சூதாடுதலை விரும்பாதீர்கள். அதில் வென்றாலும் இரும்பால் செய்த தூண்டில் முள்ளை மீன் இரையென விழுங்குவது போல வென்றதும் இழந்து அவதிப்பட வேண்டிவரும்.

*வேண்டற்க - விரும்பாதீர்; பொன் - இரும்பு.*

2. சூதாடிகள் சிறப்புடன் வாழ்வார்களா?

**ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்**
**நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு.** 932

ஒருமுறை வெற்றியடைந்து நூறுமுறை தோல்வியடையும் சூதாடிகளுக்கு நன்மைபெற்று வாழவழி உண்டோ?

*இழக்கும் - தோல்வியடையும், சூதர் - சூதாடிகள்; ஆறு - வழி.*

3. தொடாந்து சூதாடுவதால் ஒருவனின் பொருளுக்கு என்ன நடக்கும்?

**உருள்ஆயம் ஓவாது கூறின் பொருளாயம்**
**போஓய்ப் புறமே படும்.** 933

உருட்டுகின்ற சூதாட்டத் தாயத்திற்கு ஒருவன் ஓயாமல் பந்தயம் கூறுவானாயின், அவனது பொருள்வருவாய் போய் எதிரிகளைச் சேரும்.

*உருளாயம் - சூதாட்டக்காய்; ஓவாது - ஓயாமல்;*

4. சூது வறுமையைத் தருமா?

**சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்**
**வறுமை தருவதுஒன்று இல். 934**

இடைஞ்சல்கள் பல செய்து புகழையழிக்கும் சூதைவிட வறுமை தரக்கூடியது வேறொன்றுமில்லை.

*சிறுமை - இடைஞ்சல்; சீர் - புகழ்.*

5. சூதாட்டத்தில் தம்மைவிட ஆளில்லையென்று கூறுவபர் நிலையென்னாகும்?

**கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார். 935**

சூதையும் சூதாடுமிடத்தையும் சூதாடுவதில் தமது கைத் திறமையையும் கூறிச் செருக்கடைந்து அதனைக் கைவிடாதவர்கள் ஒன்றுமே இல்லதாவர்களாகி விடுவார்கள்.

*கவறு - சூது; கழகம் - ஆடும்களம்; தருக்கி - செருக்குற்று; இவறியார் - கைவிடாதவர்.*

6. சூதாடுபவர் வயிறார உண்பார்களா?

**அகடுஆரார் அல்லல் உழப்பர் சூதுஎன்னும்**
**முகடியால் மூடப்பட் டார். 936**

சூதென்ற மூதேவியால் மூடபப்பட்டவர் வயிறார உண்ணாது துன்பத்தால் வருந்துவர்.

*அகடு - வயிறு; அல்லல் - துன்பம்; உழப்பர் - வருந்துவர்; முகடி - மூதேவி.*

7. சூதாடிகளிடமிருந்து செல்வம் மட்டுமா அழியும்?

**பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின். 937**

சூதாடுமிடத்தில் பொழுதைக் கழித்தால் தொன்றுதொட்டு வந்த செல்வமும் பண்பும் அழியும்.

*பழகிய - தொன்று தொட்டுவந்த; காலை - பொழுது; கழகம் - இடம்.*

8. சூது வேறு என்னவெல்லாம் செய்யும்?

**பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து**
**அல்லல் உழப்பிக்கும் சூது. 938**

இருக்கும் பொருளை சூது அழிப்பதோடு பொய் பேசும்படி செய்து, அருளையும் அழித்து துன்பத்தால் வருந்தச்செய்யும்.

*கெடுத்து - அழித்து; அல்லல் - துன்பம்.*

9. சூதாடுபவரிடம் சேர்ந்திருக்காத ஐந்தும் என்ன?

**உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின். 939**

உடுப்பு, செல்வம், உணவு, புகழ், கல்வி என்ற ஐந்தும் சூதாட்டத் தாயத்தை கையில் எடுப்பவனிடம் சேராது.

*உடை - உடுப்பு; ஊண் - உணவு; ஒளி - புகழ்.*

10. தோல்வி அடைய அடைய சூதாடலை விரும்புவது எதனைப் போன்றது?

**இழந்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழந்தொறூஉம் காதற்று உயிர். 940**

பொருளை இழக்க இழக்க விரும்பும் சூது போன்றதே துன்பப்படப்பட உயிர்வாழ ஆசைப்படுவதும்.

*இழந்தொறும் - இழக்கும்தோறும்; காதலிக்கும் - விரும்பும்.*

# 95. மருந்து

1. நோய் எதனால் உண்டாகின்றது?

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.** 941

மருத்துவ நூலோர் வாதம் பித்தம் சிலேற்பனம் என்று எண்ணிய மூன்றும் கூடினாலும் குறைந்தாலும் நோயை உண்டாக்கும் என்பார்கள்.

*மிகினும் - கூடினும்; வளி - வாதம்; சிலேற்பனம் - சளி.*

2. என்ன செய்தால் உடலுக்கு மருந்தே வேண்டியதில்லை?

**மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்** 942

முன் உண்ட உணவு சீரணமாகி விட்டதையுணர்ந்து அதன்பின் உண்டால் உடலுக்கு மருந்து என்றொன்று வேண்டியதில்லை.

*யாக்கை - உடல்; அருந்தியது - உண்டது;*
*அற்றது - சீரணித்தது; போற்றி - உணர்ந்து.*

3. மனிதன் நீண்ட நாள் வாழவழி என்ன?

**அற்றால் அளவுஅறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு.** 943

உணவு சீரணமான பின் உண்ணும் உணவை எவ்வளவு உண்ண வேண்டும் என்பதை அறிந்து உண்பதே மனிதன் நீண்ட நாள் வாழ்வதற்கு வழியாகும்.

*அற்றல் - சீரணமாதல்; உடம்பு பெற்றான் - மனிதன்;*
*நெடிது - நீண்ட; உய்க்கும் - வாழ; ஆறு - வழி.*

4. உணவு உட்கொள்ளும் போது எதனைத்தெளிவாக அறிந்து உண்ணவேண்டும்?

**அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல**
**துய்க்க துவரப் பசித்து.** 944

சீரணமாகிவிட்டதா என்பதை அறிந்து, நன்றாகப் பசித்த பின்னர் உண்ணும் போது ஒன்றுக்கொன்று மாறுபாடு கொள்ளாத உணவா என்பதையறிந்தே உண்ணவேண்டும்.

*அற்றது - சீரணித்தது; கடைப்பிடித்து - தெளிவாக அறிந்து; துய்க்க - உண்க; துவரப்பசிந்து - நன்றாகப்பசித்து; மாறல்ல - மாறுபாடு கொள்ளாத.*

5. மாறுபாடில்லாத உணவை எவ்வளவு உண்டால் உயிருக்கொரு சேதமும் வராது?

**மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு.** 945

ஒன்றுக்கொன்று மாறுபாடு இல்லாத உணவை மனம் விரும்பியபடி உண்ணாது, இது போதும் என மறுத்து உண்டால் உயிருக்கு ஒரு சேதமும் வராது.

*உண்டி - உணவு; ஊறுபாடு - சேதம்*

6. எவனிடம் நோய் நிற்கும்?,

**இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபே ரிரையான்கண் நோய்.** 946

எவ்வளவு குறைவாக உண்ணவேண்டும் என்பதை அறிந்து உண்பவனிடம் இன்பம் நிற்பது போல அளவுக்கு அதிகமாக உண்பவனிடம் நோய் நிற்கும்.

*இழிவு - குறைவாக; கழிபேர் - அளவுக்கதிகம்; இரையான் - உண்பவன்.*

7. எவனிடம் நோய் அளவுக்கு அதிகமாக வரும்?

**தீயளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்**
**நோயளவு இன்றிப் படும்.** 947

உணவைப்பற்றி ஒன்றையும் ஆராயாது பசியின் அளவைவிட மிக்வும் அதிகமாக உண்டால் நோய் அளவுக்கதிகமாக வரும்.

*தீயளவு - பசியினளவு; தெரியான் - ஆராயாது; பெரிதுஉண்ணின் - அதிகமாகவுண்டால்.*

8. மருந்தை எப்படிச் செய்வது?

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.** **948**

என்ன நோய் என்பதை அதன் குறிகளால் ஆராய்ந்து, நோய் வந்த காரணத்தை அறிந்து, அதைத் தீர்க்கும் வழி எது எனத்தெரிந்து அதனைப் பிழையில்லாது செய்க.

*நோய் முதல் - நோயின் காரணம்; வாய் - வழி;*
*தணிக்கும் - தீர்க்கும்; வாய்ப்பது - பிழைஇல்லாது.*

9. வைத்தியம் செய்யும் போது வைத்தியன் என்ன செய்ய வேண்டும்?

**உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.** **949**

மருத்துவத்தைக் கற்றவன், நோய் உற்றவனின் உடல்நிலை, நோயின் தன்மை; அதைத்தீர்க்க எடுக்கும் காலஅளவு ஆகியவற்றறைக் கருத்தில் கொண்டு வைத்தியம் செய்யவேண்டும்.

*உற்றான் - நோயுற்றவன்; பிணி - நோய்;*
*பிணி அளவு - நோயின் தன்மை;*
*உற்றான் அளவு - நோயுற்றவன் உடல் நிலை.*

10. மருத்துவம் எத்தனை பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

**உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.** **950**

நோயுற்றவன், அதனைத் தீர்க்கும் மருத்துவன், அதற்குதவும் மருந்து, மருந்தை அருகிலிருந்து கொடுத்துதவுபவன் என நான்கு பகுதிகளாக மருத்துவம் பிரிக்கப்பட்டுள்ளது.

# ஒழிபு இயல்

## 96. குடிமை

*(நற்குடிப் பிறந்தவர் இயல்பு)*

1. எவரிடத்தில் நேர்மையும் நாணமும் இயல்பாகச் சேர்ந்திருக்கும்?,

**இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு.** 951

நற்குடியில் பிறந்தவரிடமே இயல்பாக நேர்மையும் நாணமும் ஒன்றாகச் சேர்ந்து இருக்கும். மற்றவரிடத்தில் இயல்பாகச் சேர்ந்திருப்பதில்லை.

*செப்பம் - நேர்மை; கண் - இடத்தில்.*

2. நற்குடிப்பிறந்தவர் எவற்றிலிருந்து விலகிநடக்க மாட்டார்?

**ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.** 952

நற்குடிப்பிறந்தார் ஒழுக்கம் உண்மை நாணம் ஆகிய மூன்றிலிருந்தும் விலகார்.

*வாய்மை - உண்மை; இழுக்கார் - விலகார்.*

3. உண்மையான நற்குடிப் பிறந்தவர்களின் பண்புகள் என்ன?

**நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.** 953

எல்லோரையும் சிரித்த முகத்துடன் வரவேற்றல், மற்றவர்க்குக் கொடுப்பது, இனிமையாகப் பேசுதல், யாரையும் இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் உண்மையான நற்குடிப் பிறந்தவர்களின் பண்புகளாகும்.

*நகை - சிரிப்பு; ஈகை - கொடை; வாய்மை - உண்மை.*

4. நற்குடிப் பிறந்தவரின் பண்பை பொருள் கொடுத்து மாற்ற முடியுமா?

**அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர். 954**

பலகோடிப் பொருள் பெறுவதாக இருந்தாலும் நற்குடிப் பிறந்தார் தம் பண்புக்குத் தாழ்வுவரக் கூடிய செயலெதனையும் செய்யார்.

*அடுக்கிய கோடி - பலகோடி. குன்றுதல் - தாழ்தல்.*

5. பழம்பெருமை மிக்க குடியில் பிறந்தவர் தாம் கொடுப்பதை எப்பொழுதாயினும் கைவிடுவரா?

**வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பில் தலைப்பிரிதல் இன்று. 955**

பழம் பெருமைமிக்க குடியில் பிறந்தவர் கொடுக்கும்பொருள் குறைந்தாலும் தமது கொடுக்கும் பண்பில் இருந்து நீங்கமாட்டார்.

*வழங்குவது - கொடுப்பது; உள்வீழுதல் - குறைதல்;*
*தலை பிரிதல் - நீங்குதல்.*

6. நற்குடிப்பிறந்தோர் வஞ்சனைச்செயல் செய்வரா?

**சலம்பற்றிச் சால்புஇல செய்யார் அற்ற**
**குலம்பற்றி வாழ்தும் என்பார். 956**

குற்றமற்ற நற்குடியில் பிறந்து வாழ்கிறோம் என நினைப்பவர் வஞ்சனையுடைய தகாத செயல்களைச் செய்யமாட்டார்.

*சலம் - வஞ்சனை; சால்பில - தகாத; மாசு - குற்றம்.*

7. நற்குடிப் பிறந்தவரிடத்தில் உள்ள குற்றம் மற்றவர்க்குத் தெரியவருமா?

**குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்**
**மதிக்கண் மறுப்போல உயர்ந்து. 957**

நற்குடியில் பிறந்தவரிடம் உள்ள குற்றம் வானத்து நிலவில் உள்ள களங்கம் போல எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியும்.

*விசும்பு - வானம்; மதி - நிலவு; மறு - களங்கம்.*

8. அன்பில்லாத தன்மை நற்குடிப் பிறந்தவனிடம் தோன்றுமா?

**நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப் படும்.** **958**

நற்குடிப்பிறந்தவனின் குணங்களில் அன்பில்லாத தன்மை தோன்றுமானால் அவன் அக்குடிப் பிறந்தவனா எனச் சந்தேகிக்க வேண்டிவரும்.

*நார் - அன்பு; நாரின்மை - அன்பின்மை; ஐயம் - சந்தேகம்.*

9. ஒருவர் நற்குடிப்பிறந்தார் என்பதை எப்படி அறியமுடியும்?

**நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.** **959**

நிலத்தின் இயல்பை அதில் முளைத்த முளை காட்டும். அதுபோல நற்குடிப்பிறந்தார் என்பதை அவர் வாயிலிருந்து வரும் சொல் காட்டும்.

10. ஒருவர் தன் குடிப்பெருமையைக் காக்க விரும்பின் எதனைக் காக்க வேண்டும்?

**நலம்வேண்டின் நாண்உடைமை வேண்டும் குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு.** **960**

ஒருவர் தமக்கு நன்மை கிடைக்கவேண்டுமானால் நாணத்தைக் காக்க வேண்டும். குடிப்பெருமையைக் காக்க வேண்டுமாயின் எல்லோரிடமும் பணிவாக நடக்க வேண்டும்.

*நலம் - நன்மை; குலம் - குடி; நாண் - நாணம்.*

# 97. மானம்

*(தன்னிலையில் இருந்து தாழ்ந்து போகாதிருத்தல்)*

1. மானம் குன்றும் செயல்களைச் செய்யலாமா?

**இன்றி அமையாச் சிறப்பின் ஆயினும்**
**குன்ற வருப விடல்.** 961

இன்றியமையாத சிறப்பைத் தருவதாக இருந்தாலும் தன் மானம் குறையும்படி வரும் செயல்களைச் செய்யாது விடவேண்டும்.

*குன்ற - குறைய.*

2. நன்றாக வாழ்வதற்காக நேர்மையற்ற செயல்களைச் செய்யலாமா?

**சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர்.** 962

புகழொடும் மானத்தோடும் வாழ விரும்புபவர் நன்கு சிறப்போடு வாழவேண்டும் என்பதற்காக நேர்மையற்ற செயல்களைச் செய்யமாட்டார்.

*சீர் - சிறப்பு; சீரல்ல - நேர்மையற்ற; சீரொடு - புகழொடு; பேராண்மை - மானம்.*

3. வாழ்வில் உயர்ந்தநிலையை அடையும் போது ஒருவர் எப்படி நடக்க வேண்டும்?

**பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு.** 963

வாழ்வில் உயர்ந்த நிலையிலிருக்கும் போது எல்லோரிடத்திலும் பணிவாகவும் அந்த நிலை கொஞ்சம் குறையும் போது தனது பெருமை வெளிப்பட மானத்துடனும் நடக்க வேண்டும்.

*பெருக்கம் - உயர்வு; சுருக்கம் - குறைதல்.*

4. மனிதர் தம் நிலையிலிருந்து தாழ்ந்தால் எதற்குச் சமமாவர்?

**தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை. 964**

மனிதர் தம் உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த போது தலையிலிருந்து உதிர்ந்த மயிருக்குச் சமமாவர்.

*இழிந்த - உதிர்ந்த; அனையர் - ஒப்பர்; மாந்தர் - மனிதர்; இழிந்த - தாழ்ந்த.*

5. மிகப்பெரிய உயர்ந்தநிலையில் உள்ளவர்களுக்குத் தாழ்வு வருமா?

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின். 965**

மலைபோன்று உயர்ந்த பெருமையெல்லாம் பெற்றவரும் கூட சிறிய குன்றிமணியளவு இழிந்த செயல் செய்தாலும் தாழ்வு அடைவர்.

*குன்றின் - மலை; அனையாரும் - போன்றவரும்;*
*குன்றுவர் - தாழ்வர்; குன்றுவ - இழிந்த; குன்றி - குன்றிமணி.*

6. தன்மானத்தை விட்டு தம்மை இகழ்வார் பின்னே செல்லலாமா?

**புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று**
**இகழ்வார்பின் சென்று நிலை. 966**

தன்மானத்தை விட்டு தம்மை இகழ்வார் பின் சென்று நிற்கும் நிலை புகழைத்தராது. எனவே வரும் புதிய உலகமும் சேர்க்காதாதலால் அதனால் வரும் பயன் என்ன?

*புத்தேள் நாடு - புதிய உலகம்;*
*உய்யாதால் - சேர்கக்காதாதலால்.*

7. மானத்தைவிட்டு பகைவர்பின் சென்று வாழலாமா?

**ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று. 967**

தன் பகைவர் பின்னே சென்று ஒருவன் வாழ்தலை விட அப்பொழுதே இறந்தான் என்று சொல்வப்படுதல் நன்றாகும்.

*ஒட்டார் - பகைவர்; கெட்டான் - இறந்தான்.*

8. தம் உயிர்க்காக மானத்தை இழக்கலாமா?

**மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த இடத்து. 968**

மேன்மையின் பெருமை எல்லாம் அழிய நேர்ந்த இடத்து, தன் உடம்பைக் காத்து வாழும் வாழ்வு மீண்டும் உயிர் வாழ்வதற்கான மருந்தோ?

*ஊன்ஓம்பும் - உடம்பைக் காத்து; பெருந்தகைமை - மேன்மை; பீடு - பெருமை; மற்று - மீண்டும்.*

9. மானத்திற்காக உயிர்விடுபவர் எதைப் போன்றவர்?

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின். 969**

உடலிலிருந்து மயிர் உதிர்ந்தால் உயிர்வாழாத கவரிமான் போன்றவர் தம் மானம் அழிந்தால் உயிர்விடுவர்.

*கவரிமா - கவரிமான்; அன்னார் - போன்றவர்; நீப்பர் - விடுவர்.*

10. மானத்திற்காக உயிர்விடுபவரை உலகம் என்ன செய்யும்?

**இளியவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970**

தமக்கு இழிவு வந்தால் உயிர்வாழாத மானம் உடையவரின் புகழை இந்த உலகம் வணங்கிப்போற்றும்.

*இளி - இழிவு; ஒளி - புகழ்; தொழுது - வணங்கி: ஏத்தும் - போற்றும்.*

# 98. பெருமை

*(செயற்கரிய செய்த போதும் செருக்கடையாத தன்மை)*

1. ஒருவரின் வாழ்வுக்குப் புகழைத் தருவது எது?

**ஒளிஒருவர்க்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு**
**அஃதுஇறந்து வாழ்தும் எனல்.** 971

மற்றவர்களால் செய்யமுடியாததைச் செய்வோம் என்று எண்ணும் ஊக்கமே ஒருவர்க்கு புகழைத் தரும். அதனை நீக்கி உயிர்வாழ்வோம் என எண்ணுதல் இழிவைத்தரும்.

*ஒளி - புகழ்; வெறுக்கை - ஊக்கம்; இளி - இழிவு; இறந்து - நீக்கி.*

2. ஏன் மனிதரிடையே பெருமையில் வேறுபாடுகள் இருக்கின்றன?

**பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.** 972

எல்லா மனிதரும் பிறப்பால் ஒத்தவரே ஆயினும் அவரவர் செய்யும் தொழிலின் வேறுபாட்டால் வரும் சிறப்பியல்பான பெருமையும் ஒத்திருப்பதில்லை.

*சிறப்பு - பெருமை; ஒவ்வா - ஒத்திருக்காது.*

3. ஒருவர் பெரியவரா சிறியவரா என்பதை அவரிருக்கும் நிலையைக்கொண்டு அறிய முடியுமா?

**மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்**
**கீழ்அல்லார் கீழ்அல் லவர்.** 973

மேலான காரியங்களைச் செய்யமுடியாத சிறியோர் மேலான இடத்து இருந்தாலும் பெரியோர் ஆகார். பெரியோர் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் சிறியோர் ஆகார்.

*மேல் - மேலான; மேல்அல்லார் - சிறியோர்; மேல்அல்லர் - பெரியோர் ஆகார்; கீழ் - தாழ்ந்த; கீழ் அல்லார் - பெரியோர்; கீழ்அல்லர் - சிறியோர் ஆகார்.*

4. பெருமை யாரிடம் நிலைத்து இருக்கும்?

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு.** 974

கற்புடைய பெண்கள் தம்மைத் தாம் காப்பதுபோல பெருமையயும் தன்னைத்தான் மதித்து வாழ்பவனிடமே இருக்கும்.

*ஒருமைமகளிர் - கற்புடைய பெண்கள்.*

5. பெருமையுடையார் என்று யாரைச் சொல்லலாம்?

**பெருமை உடையார் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.** 975

மற்றவரால் செய்யமுடியாத அரிய செயலைச் செய்யவேண்டிய முறையில் செய்து முடிப்பவரே பெருமை உடையவராவர்.

*ஆற்றுவர் - செய்வர்; ஆற்றின் - முறையால்.*

6. பெரியோரை மதித்துப் போற்றும் எண்ணம் யாரிடம் இருப்பதில்லை?

**சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்**
**பேணிக்கொள் வோம்என்னும் நோக்கு.** 976

பெரியாரை மதித்து அவரிடம் இருந்து கற்றுக் கொள்வோம் என்னும் எண்ணம் அற்பர்களின் மனதில் இருப்பதில்லை.

*கொள்வோம் - கற்போம்; நோக்கு - எண்ணம்;*
*சிறியார் - அற்பர்; உணர்ச்சி - மனம்; பேணி - மதித்து.*

7. யாரிடம் சிறப்புகள் வந்து சேர்ந்தால் செருக்குக்காட்டுவர்?

**இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்பும்தான்**
**சீரல் லவர்கண் படின்.** 977

சிறப்புக்கள் அற்பரிடத்தே வந்து சேருமாயின் மிகுந்த அழிவுகளைச் செய்து செருக்கினைக் காட்டுவர்.

*இறப்பு - மிக்கஅழிவு; சீரல்லவர் - அற்பர்.*

8. பெருமையுடையவரும் சிறுமையுடையவரும் எப்படிநடப்பர்?

**பணியுமாம் என்றும் பெறுமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.** **978**

மிக்க சிறப்பான நிலையில் இருந்தாலும் பெருமையுள்ளவர் பணிந்து நடப்பர். சிறுமையுடையவர்கள் சிறப்புகளில்லாத இடத்தும் தம்மைத்தாமே வியந்து பாராட்டிக் கொள்வர்.

*அணியும் - பாராட்டும்.*

9. பெருமை என்றால் என்ன, சிறுமை என்றால் என்ன?

**பெருமை பெருமிதம் இன்மை சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்.** **979**

பெருமை என்பது மிக்க உயர்வாக வாழ்ந்தாலும் செருக்கடையாது வாழ்வது. சிறுமை என்பது சிறப்பில்லாத வாழ்விலும் செருக்கின் உச்சியில் வாழ்வது.

*பெருமிதம் - செருக்கு; ஊர்ந்துவிடல் - உச்சிக்குச் செல்லல் (மிக்கச் செல்லல்)*

10. பெருமை உடையோர்க்கும் சிறுமையுடையோர்க்கும் என்ன வித்தியாசம்?

**அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும்.** **980**

பெருமையுடையவர் மற்றவரின் குற்றத்தை மறைப்பர். சிறுமையுடையவர் நன்மையைப் பாராது குற்றத்தையே பெரிதாகக் கூறுவர்.

# 99. சான்றாண்மை

*(நிறைகுணங்களை ஆளுதல்)*

1. சான்றாண்மை உள்ளோரிடம் என்ன இயல்பாக இருக்கும்?

**கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.** 981

செய்ய வேண்டிய கடமை எதுவெனவறிந்து சான்றாண்மையை கடைப்பிடிப்பவர்க்கு நல்ல குணங்கள் யாவும் இயல்பாகவே இருக்கும்.

*கடன் - கடமை; நல்லவை - நற்குணங்கள்;*
*மேற்கொள்ளுதல் - கடைப்பிடித்தல்.*

2. சான்றோர்க்கு நலம் அளிப்பது என்ன?

**குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத்து ள்ளதூஉம் அன்று.** 982

சான்றோர்க்கு நலம் அளிப்பது குணநலனே. மற்றையநலம் வேறு எந்த நலத்துள்ளும் உள்ளதில்லை.

3. எவை சான்றாண்மையைத் தாங்கி நிற்கின்றன?

**அன்பு நாண்ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்.** 983

எல்லோரிடத்தும் செலுத்தும் அன்பு, பழிக்கு அஞ்சும் நாணம், இல்லை என்று கூறாது கொடுக்கும் ஒப்புரவு, இரக்கம், உண்மை பேசுதல் ஆகிய ஐந்துபண்பான தூண்களும் சான்றாண்மை என்னும் பாரத்தைத் தாங்கி நிற்கின்றன.

*கண்ணோட்டம் - இரக்கம்; வாய்மை - உண்மை;*
*சால்பு - சான்றாண்மை; ஊன்றிய - தாங்கிய.*

4. சால்பின் குணம் என்ன?

**கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நல்லதது சால்பு.** 984

ஓர் உயிரையும் கொல்லாத குணத்தையுடையது தவம். பிறர் செய்த தீமையை யாருக்கும் சொல்லாத குணத்தையுடைது சால்பு.

*நலம் - குணம்; நோன்மை - தவம்.*

5. சான்றோர்களின் வலிமை என்ன?

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.** 985

எதனையும் செய்யும் சான்றோரின் வலிமை பணிவாக நடப்பதே. அதுவே சான்றோருக்கு தம் பகைவரைத் தம் வழிக்கு மாற்றும் படையாக இருக்கின்றது.

*ஆற்றுவார் - செய்வார்; ஆற்றல் - வலிமை;*
*மாற்றாரை - பகைவரை.*

6. சால்பின் தரத்தை அளந்து பார்க்கும் உரைக்கல் எது?

**சால்புக்குக் கட்டளை யாதெனில் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.** 986

சால்பின் தரத்தை அறியும் உரைக்கல் எதுவென்றால் தமக்குச் சமமில்லாத தாழ்ந்தவர்களிடத்திலும் தோல்வியை ஏற்றுக் கொள்வதேயாகும்.

*கட்டளை - உரைக்கல் (பொன்னைத் தரம்பார்க்கும் கல்);*
*துலை - ஒப்பு; துலைஅல்லார் - சமமில்லார்.*

7. சால்புடையவர் தமக்கு துன்பம் செய்பவர்க்கு என்ன செய்வர்?

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.** 987

சால்புடையவர் தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் நன்மையே செய்யாவிட்டால் அச்சால்பு வேறு என்ன பயனைத் தரும்?

*இன்னா - துன்பம்; இனியது - நல்லது.*

8. வறுமை எப்போது இழிவைத் தராது?

**இன்மை ஒருவர்க்கு இளிவுஅன்று சால்புஎன்னும்**
**திண்மை உண்டாகப் பெறின். 988**

சால்பு என்னும் மனவுறுதி உண்டாகுமானால் வறுமை ஒருவர்க்கு இழிவாகாது.

*இன்மை - வறுமை; இளிவு - இழிவு; திண்மை - உறுதி.*

9. சான்றாண்மை உள்ளவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார். 989**

எல்லா நற்குணங்களும் நிறைந்து சான்றாண்மைக்குக் கடலென்று சொல்லப்படுபவர் ஊழிக்காலத்தால் உலகம் நிலைமாறினும், தாம் தம் நிலையிலிருந்து மாறமாட்டார்.

*சான்றாண்மை - சால்புடையமை; ஆழி - கடல்.*

10. சான்றாண்மை உடையவர்கள் தம் நிலைமாறினால் என்ன நடக்கும்?

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்**
**தாங்காது மன்னோ பொறை. 990**

எல்லா நற்குணங்களும் நிறைந்த சான்றாண்மை உடையோர், தமது தன்மையில் இருந்து குறைவாரானால் இந்தப் பூமியும் தன் நிறையைத் தாங்காது நிலை தளரும்.

*இருநிலம் - பூமி; பொறை - நிறை.*

# 100. பண்புடைமை

*(பிறர் இயல்பை அறிந்து நடக்கும் தன்மை)*

1. பண்புடைமையை அடைய வழி என்ன?

**எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.** 991

எவரிடத்திலும் எளிமையாய்ப் பழகுபவர் பண்புடைமை என்னும் இயல்பையடைதல் எளிது என்று சொல்வர்.

*எண்பதம் - எளிமை; எய்தல்-அடைதல்;*
*யார்மட்டும் - எவரிடத்தும்; வழக்கு - இயல்பு.*

2. பண்புடைமை என்றால் என்ன?

**அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புஉடைமை என்னும் வழக்கு.** 992

அன்புடையவராக இருந்தல், மேன்மைநிறைந்த குடிப்பிறந்தவர் ஆகவிருத்தல் ஆகிய இரண்டும் பண்புடைமை என்னும் வழியாகும்.

*ஆன்றகுடி - சிறப்பு நிறைந்தகுடி; வழக்கு - வழி.*

3. மனிதர் தம்மிடையே எதில் ஒத்திருக்க வேண்டும்?

**உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு.** 993

மனிதர் தம்மிடையே முகம், கை, கால் போன்ற உறுப்புகளால் ஒத்திருத்தல் ஒப்பாகாது. பொருந்தக் கூடிய ஒப்பாவது, நெருங்கிய பண்புகளில் ஒத்திருத்தலேயாகும்.

*மக்கள் - மனிதர்; வெறுத்தக்க - நெருங்கிய;*
*ஒப்பதாம் - பொருந்தக்கூடிய.*

4. யாருடைய பண்பை உலகம் பெரிதாகப் பாராட்டும்?

**நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்**
**பண்பு பாராட்டும் உலகு.** 994

எல்லோரும் பயனடையக் கூடியதாய், நீதியுடன் தர்மத்தை செய்பவர் பண்பை உலகம் பாராட்டும்.

*நயன் - நீதி; நன்றி - தர்மம்.*

5. பகைவனையும் மதிக்கும் பண்பு யாரிடம் இருக்கும்?

**நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புஉள பாடுஅறிவார் மாட்டு.** 995

ஒருவரை விளையாட்டாகவும் இகழ்ந்து பேசுவது தீமையாகும். மற்றவர் வருத்தத்தை அறிபவரிடத்தில் பகைவனையும் மதிக்கும் பண்பு இருக்கும்.

*நகை - விளையாட்டு; இன்னாது - தீமையானது; பாடு - வருத்தம்.*

6. யாரிடத்தில் உலகம் இருக்கின்றது?

**பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.** 996

பண்புடையவரிடமே உலகம் தங்கி இருக்கின்றது. அது இல்லையேல் உலகம் மண்ணுக்குள் புகுந்து அழிந்துவிடும்.

*பட்டு - (படுதல்)தங்குதல்; புக்கு - புகுந்து; மாய்வது - அழிவது.*

7. பண்பு இல்லாதவர் எப்படிப்பட்டவர்?

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.** 997

அரம் போன்ற கூர்மையான அறிவிருந்தாலும், மனிதருக்குரிய பண்பில்லாதவர் மரம் போன்றவரே.

*மக்கள் - மனிதர்.*

8. எது பெரிய இழுக்காகக் கருதப்படும்?

**நண்புஆற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்**
**பண்புஆற்றா ராதல் கடை.** **998**

நட்புச் செய்ய முடியாதவராய் தீமையே செய்து வாழ்பவரிடமும் பண்பு இல்லாதவராய் நடப்பது பெரும் இழுக்காகும்.

*நண்பு - நட்பு; நயனில - தீமை; கடை - இழுக்கு; ஆற்றாராதல் - செய்யாதவராய்.*

9. யாருக்கு இந்த உலகம் பகலில் கூட இருளாகத் தெரியும்?

**நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.** **999**

நன்கு சிரித்து மகிழும் பண்பு இல்லாதவர்க்கு இந்த மிகப்பெரிய உலகம் பகற்பொழுதில் கூட இருளாகத் தான் தெரியும்.

*நகல் - சிரித்துமகிழும்; மாயிருஞாலம் - மிகப்பெரிய உலகம்.*

10. பண்பில்லாதவனுக்குக் கிடைத்த செல்வத்திற்கு என்ன நடக்கும்?

**பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலம்தீமை யால்திரிந் தற்று.** **1000**

பண்பிலாதவனுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம், பாத்திரத்திலுள்ள அழுக்கால் நல்ல பால் திரிந்துபோதல் போலப் பயனற்றுப் போகும்.

*கலம் - பாத்திரம்; திரிதல் - கெடுதல்.*

## 101. நன்றிஇல் செல்வம்

*(நன்மையக் கொடுக்காத செல்வம்)*

1. வீடு முழுவதும் பெரும் பொருளிருந்தும் அதனை உண்ணாதவனை என்னவென்று சொல்லலாம்?

**வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அ∴துஉண்ணான்**
**செத்தான் செயக்கிடந்து இல். 1001**

வீடுநிறைந்த பெரும் பொருளைச் சேர்த்துவைத்து அதனை உண்ணாதவன் செய்யக் கூடியது ஏதும் இல்லை. ஆதலால் அவன் செத்தவனேயாவான்.

*வாய்சான்ற - வீடு நிறைந்த.*

2. பிறருக்கு எதனையும் கொடுக்காது இருப்பவர் யார்?

**பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 1002**

வாழ்வுக்கு எல்லா வகையிலும் பொருள்தான் வேண்டுமென்ற மயக்கத்தாலே யாருக்கும் எதனையும் கொடுக்காது உலோபத் தனமாக இருக்கும் அந்த இழிபிறப்பு.

*ஈயாது - கொடுக்காது; இவறும் - உலோபத்தனம்;*
*மருள் - மயக்கம்; மாணா - இழிவு.*

3. எவரின் பிறப்பு நிலத்துக்குச் சுமையாகும்?

**ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை. 1003**

பொருளைச் சேர்த்துக் குவிப்பதையே விரும்பி, புகழை விரும்பாத மனிதரின் பிறப்பு நிலத்துக்குச் சுமையாகும்.

*ஈட்டம் - சம்பாதித்தல்; இவறி - விரும்பி; இசை - புகழ்;*
*ஆடவர் - மனிதர்; தோற்றம் - பிறப்பு; பொறை - சுமை.*

4. ஒன்றையும் ஈயாதவன் தன் பெயர்சொல்ல எதனை மிச்சமாக விட்டுச்செல்வான்?

**எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்.** 1004

ஒருவராலும் விரும்பப்படாதவன் தான் இறந்த பின்பு எதற்கு மிச்சமென்று எண்ணுவானோ?

*எச்சம் - மிச்சம்; நச்சப்படுதல் - விரும்பப்படுதல்*
*ஒருவரான் - ஒருவராலும்.*

5. ஒன்றையும் கொடுக்காது தானும் அனுபவிக்காதிருப்பவர் அடையும் பயனென்ன?

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல்.** 1005

மற்றவர்க்குக் கொடுத்தும் தாமனுபவித்தும் வாழாதவர்க்கு பல கோடிப் பொருள் இருந்தாலும் பயன் ஒன்றுமில்லை.

*துய்ப்பது - அனுபவிப்பது; அடுக்கிய கோடி - பல கோடி.*

6. ஒன்றும் ஈயாதவன் தன்னிடமிருக்கும் செல்வத்திற்கு என்னவாக இருப்பான்?

**ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று**
**ஈதல் இயல்பிலா தான்.** 1006

தானும் அனுபவியாது தகுந்தவர்க்கு ஒன்றையும் கொடுக்குமியல்பும் இல்லாதவன், தன்னிடமிருக்கும் பெருஞ்செல்வத்திற்கு நோயாக இருப்பான்.

*ஏதம் - நோய்; துவ்வான் - அனுபவியான்; ஈதல் - கொடுத்தல்.*

7. இல்லாதவர்க்கு கொடுக்கதாவன் செல்வம் எது போன்றது?

**அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று.** 1007

இல்லாதவர்க்கு ஒன்றைக் கொடாதவனின் செல்வம், மிக்க அழகுடைய பெண் தனித்திருந்து முதுமையடைவதைப் போன்றதாகும்.

*அற்றார் - இல்லாதவர்; ஆற்றாதான் - கொடுக்கதான்;*
*மிகநலம் - மிக்கஅழகு; மூத்தல் - முதுமை.*

8. ஒருவராலும் விரும்பப்படாதவன் செல்வம் எது போன்றது?

**நச்சுப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று.** 1008

ஒருவராலும் விரும்பப்படாதவனின் செல்வம், ஊரின் நடுவே நச்சுமரம் பழுத்தது போன்றதே.

*நச்சுப்படாதவன் - விரும்பப்படாதவன்; நச்சு - நஞ்சு.*

9. உலோபிகளின் பொருளுக்கு என்ன நடக்கும்?

**அன்புஒரீஇத் தன்செற்று அறம்நோக்காது ஈட்டிய**
**ஒண்பொருள் கொள்வார் பிறர்.** 1009

அன்பைப் புறக்கணித்து தானும் அனுபவிக்காமல் தர்மத்தையும் நினைத்துப் பார்க்காது, சம்பாதித்து வைத்த சிறந்த பொருளைப் பிறர் எடுத்துக் கொள்வர்.

*தற்செற்று - தானும்அனுபவியாது; அறம் - தர்மம்; நோக்காது - பாராது; ஈட்டிய - சம்பாதித்த; ஒண் - சிறந்த.*

10. புகழையுடைய செல்வர்க்கு வரும் வறுமை எது போன்றது?

**சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி**
**வறம்கூர்ந் தனையது உடைத்து.** 1010

புகழையுடைய செல்வரின் சிறிய வறுமை மழைபெய்யாது உலகவளம் குறைந்தது போன்றதாகும்.

*சீர் - புகழ்; சிறுதுனி - சிறியவறுமை; மாரி - மழை; வறம்கூர்தல் - பெய்யாது போதல்.*

# 102. நாண்உடைமை

*(தகாதசெயல் செய்ய மனம்கூசுதல்)*

1. நாணம் என்றால் என்ன?

**கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற.** 1011

தகாத செயல்செய்ய மனம் செல்லாது கூசுவதே நாணமாகும். உடற்கூச்சத்தால் பெண்களுக்கு வரும் நாணம் வேறு வகையானது.

*கருமம் - செயல்; திருநுதல்நல்லார் - பெண்கள்.*

2. மனிதர்க்கு சிறப்புத்தருவது எது?

**ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல**
**நாண்உடைமை மாந்தர் சிறப்பு.** 1012

எல்லோருக்கும் உணவு, உடை, சந்ததியெல்லாம் ஒன்றாகத் தானிருக்கின்றன. மனிதர்க்கு சிறப்பைக் கொடுப்பது நாணுடைமையேயாகும்.

*ஊண் - உணவு; எச்சம் - சந்ததி; மாந்தர் - மனிதர், வேறல்ல - ஒன்றே.*

3. நாணத்தில் தங்கியிருப்பது எது?

**ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்**
**நன்மை குறித்தது சால்பு.** 1013

உயிர்களெல்லாம் தசையாலான உடம்பில் தங்கியிருப்பது போல சால்பு, நாணம் என்னும் நற்குணத்தில் தங்கியுள்ளது.

*ஊன் - தசை; நாண் - நாணம்; குறித்தது - தங்குவது.*

4. சான்றோர்க்கு நாணம் அவசியமா?

**அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்**
**பிணிஅன்றோ பீடு நடை.** 1014

சான்றோர்க்கு நாணம் அணிகலன் ஆகும். அது இல்லையானால் அவர்களின் பெருமித நடை ஒரு நோயாகும்.

*அணி - அணிகலன்; பிணி - நோய்; பீடு - பெருமிதம்.*

5. யாரை உலகம் நாணத்திற்கே உறைவிடம் என்று சொல்லும்?

**பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு**
**உறைபதி என்னும் உலகு.** 1015

பிறருக்கு வரும் பழியையும் தமது பழியையும் ஒன்று போல் மதித்து நாணுபவரை, உலகம் நாணத்தின் உறைவிடம் என்று சொல்லும்.

*தம்பழி - தமது பழி; உறைபதி - உறைவிடம்.*

6. பெரியோர்க்கு நாணத்தின் வேலி எதற்குத் தேவை?

**நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்.** 1016

பெரியோர் நாணத்தை வேலியாகக் கொள்ளாமல் இந்தப்பரந்த உலகத்தை பாதுகாக்க விரும்பமாட்டார்கள்.

*நாண் - நாணம்; வியன்ஞானம் - பரந்த உலகம்;*
*மேலாயவர் - பெரியோர்.*

7. நாணத்தை மதிப்பவர் எப்படிப்பட்டவர்?

**நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாண்ஆள் பவர்.** 1017

நாணத்தை ஆள்பவர், நாணத்தால் உயிரை விடுவாரே தவிர, உயர்வாழ்வதற்காக நாணத்தை விடமாட்டார்.

*துறப்பர் - விடுவார்; உயிர்பொருட்டால் - உயிர்க்காக;*
*துறவார் - விடார்.*

8. யாரைக்கண்டு அறம் நாணம் அடைந்து விலகும்?

**பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.** 1018

பிறர் கண்டு நாணத் தக்கசெயலை தான் நாணாது, ஒருவன் செய்வானானால் அவனைக் கண்டு அறம் நாணமடைந்து விலகும் தன்மையுடையது.

9. எது ஒருவரின் நலமனத்தையும் சுட்டு எரிக்கும்?

**குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்**
**நாணின்மை நின்றக் கடை.** 1019

ஒருவர் தனது கொள்கையில் பிழைத்தால் அது அவரின் குலத்தைச் சுட்டு எரிக்கும். நாணம் இல்லாத தன்மையிருக்குமானால் அது அவரின் நலமனைத்தையும் சுட்டெரிக்கும்.

*நின்றக்கடை - இருக்குமானால்.*

10. நாணம் இல்லாதவர் இயங்கித்திரிதல் எது போன்றது?

**நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று.** 1020

மனதில் நாணமில்லாதவர் இங்குமங்கும் இயங்கித் திரிதல் மரத்தால் செய்த பொம்மையை கயிற்றால் ஆட்டி இயங்க வைத்து, உயிருள்ளதாக பார்ப்போரை மயங்கவைத்தல் போலாகும்.

*நாண் - நாணம்; அகத்து - மனத்து; நாணால் - கயிற்றால்; மரப்பாவை - மரபொம்மை; மருட்டி - மயக்கி.*

# 103. குடி செயல் வகை

*(தான் பிறந்த குடும்பத்தை மேன்மையடையச் செய்தல்)*

1. பெருமையில் சிறந்த பெருமை எது?

**கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுஉடையது இல்.** 1021

தொழிலைச் செய்யும் ஒருவன், அதனைச் செய்து முடிக்கமால் நிறுத்தமாட்டேன் என்று முயன்று செய்வதைப் போன்ற பெருமையில் சிறந்த பெருமை வேறு இல்லை.

*கருமம் - தொழில்; கைதூவேன் - நிறுத்தேன்; பீடு - பெருமை.*

2. பிறந்த குடியை உயரச்செய்வதற்கு வழி என்ன?

**ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**
**நீள்வினையால் நீளும் குடி.** 1022

முயற்சி, நிறைந்த அறிவு ஆகிய இரண்டினதும் இடைவிடாத செயலால் குடியை உயரச் செய்யலாம்.

*ஆள்வினை - முயற்சி; ஆன்ற - நிறைந்த;*
*நீள்வினை - இடைவிடாதசெயல்; நீளும் - உயரும்.*

3. தான்பிறந்த குடியை உயரச் செய்பவருக்கு எது துணைபுரியும்?

**குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.** 1023

குடியை உயரச்செய்வேன் என்னும் ஒருவர்க்கு தெய்வம் ஆடையை இறுகக்கட்டிக் கொண்டு தானே முன்வந்து துணைபுரியும்.

*செய்வல் - செய்வேன்; மடி - ஆடை; தற்றுதல் - இறுக உடுத்துதல்;*
*முந்துறும் - முன்வந்து நிற்கும்.*

4. தன் குடியை முன்னேற்ற நினைப்பவருக்கு அவர் செய்யும் செயல்கள் எப்படி நிறைவடையும்?

**சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்**
**தாழாது உஞற்று பவர்க்கு.** 1024

தான் பிறந்த குடீயைத் தாழவிடாது மேன்மையடையச் செய்ய விரைவாக முயல்பவர்க்கு அச்செயல் அவரெண்ணாமலே தானே நிறைவடையும்.

*சூழாமல் - எண்ணாமல்; ஊஞற்றுபவர் - முயல்பவர்.*

5. உலகம் யாரைத் தனது சுற்றமாகச் சூழ்ந்து கொள்ளும்?

**குற்றம் இலனாயக் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.** 1025

குற்றம் இல்லாதவனாக தான் பிறந்த குடி உயர்வதற்காக வாழ்பவனை உலகம் தன் சுற்றமாகச் சூழ்ந்துகொள்ளும்.

*சுற்றும் - சூழும்.*

6. எதனை நல்லஆண்மை என்று சொல்வர்?

**நல்ஆண்மை என்பது ஒருவர்க்குத் தான்பிறந்த**
**இல்ஆண்மை ஆக்கிக் கொளஎல்.** 1026

ஒருவர்க்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது, தான் பிறந்த குடியினை ஆளும் தன்மையை உண்டாக்கிக் கொள்ளலேயாகும்.

*இல்ஆண்மை - குடியை ஆளுதல்; இல் - குடி.*

7. பிறந்தகுடியின் பொறுப்பு யாரிடம் இருக்கும்?

**அமர்அகத்து வன்கண்ணர் போலத் தமர்அகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை.** 1027

போர்களத்தில் போரைத்தாங்கி நடத்தும் மாவீரன் போல தம் குடியின் பொறுப்பும் தாங்க வல்லார் மேலே தான் இருக்கும்.

*அமரகம் - போர்க்களம்; வன்கண்ணர் - மாவீரர்;*
*தமரகம் - தமதுகுடி; மேற்றே - மேலே; ஆற்றுவார் - வல்லார்*

8. தான்பிறந்த குடிஉயரப் பாடுபடுபவர் காலநேரம் பார்க்க வேண்டுமா?

**குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும். 1028**

தான் பிறந்த குடியின் உயர்ச்சிக்காகப் பாடுபவர்க்கு காலநேரம் என்றொன்று இல்லை. அதனைச் செய்யாது, சோம்பலுடன் என் குடும்பத்தில் உள்ளவர் வாழ, நானா பாடுபட்டு உழைக்க வேண்டுமென்று நினைத்து மானத்துடன் இருந்தால் அக்குடி கெட்டழியும்.

*பருவம் - காலம்; மடி - சோம்பல்; கருதல் - நினைத்தல்.*

9. தன் குடும்பத்துன்பத்தை நீக்குபவனது உடம்பு எத்தகையது?

**இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு. 1029**

தன் குடும்பத்தின் துன்பத்தை நீக்குபவனது உடம்பு, துன்பத்தை ஏந்தும் பாத்திரமல்லவா?

*இடும்பை - துன்பம்; கொள்கலம் - பாத்திரம்; குற்றம் - துன்பம்.*

10. துன்பத்தைத்தாங்க வல்லவர் இல்லாத குடும்பத்திற்கு என்ன நடக்கும்?

**இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்**
**நல்ஆள் இலாத குடி. 1030**

துன்பம் வந்தகாலத்தில் பக்கத்துக் துணையாகத் தாங்க வல்ல, நல்லவரில்லாத குடும்பமாகிய மரம், துன்பமென்ற கோடாரி அடியில் வெட்ட விழுந்துவிடும்.

*இடுக்கண் - துன்பம்; கால் - அடி; கொன்றிட - வெட்ட;*
*அடுத்து - பக்கத்து; ஊன்றும் - தாங்கும்; குடி - குடும்பம்.*

# 104. உழவு

*(உழவுத் தொழில்)*

1. ஏன் உழவுத்தொழில் தலை சிறந்ததாகக் கருதப்படுகின்றது?

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.** 1031

சுற்றிச்சுற்றிப் பிறதொழில்களைச் செய்தாலும் உழவுத் தொழிலின் பின்னே தான் உலகம் நிற்கின்றது. உழவுத் தொழிலால் மிக்க துன்பப்பட்டாலும் உழவுத்தொழிலே தலை சிறந்தது.

*சுழன்றும் - சுற்றியும்; ஏர் - உழவு; உழந்து - துன்பப்பட்டு.*

2. உழவர் உலகத்தார்க்கு எது போன்றவர்?

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.** 1032

உழவுத்தொழிலைச் செய்யமுடியாது இருப்போரை எல்லாம் தாங்குவதால் உழவர் உலகதார்க்கு அச்சாணி போன்றவர்.

*உழுவார் - உழவர்; ஆணி - அச்சாணி; ஆற்றாது - முடியாது; அ∴து - அது; எழுவார் - போவார்; பொறுத்து - தாங்கி.*

3. உலகத்தில் வாழ்பவர் யார்?

**உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**
**தொழுதுஉண்டு பின்செல் பவர்.** 1033

உழவுத் தொழிலைச் செய்து அதனால் கிடைப்பதை உண்டு வாழ்கின்றவரே வாழ்பவர். மற்றவர் எல்லோரும் உணவுக்காக உழவரை வணங்கி உண்டு அவர் பின் செல்பவரேயாவர்.

4. உழவர் எத்தகையவர்?

**பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பவர்**
**அலகுஉடை நீழ லவர். 1034**

நெற்கதிர்ச் செல்வத்தால் புகழுடையும் உழவர் பல அரசின் குடைநிழலும் தமதுகுடைக்கீழ்க்காண்பர்.

*நீழல் - நிழல்(புகழ்); அலகு - நெற்கதிர்; உடை - செல்வம்*

5. கேட்பவர்க்கு தம்மிடம் இருப்பதை ஒளிக்காது கொடுப்பவர் யார்?

**இரவார் இரப்பவர்க்குஒன்று ஈவார் கரவாது**
**கைசெய்துஊண் மாலை யவர். 1035**

கையால் வேலைசெய்து உண்ணும் இயல்புடைய உழவர் மற்றவரிடம் சென்று ஒன்றையும் கேட்கமாட்டார். தம்மிடம் கேட்பவர்க்கு ஒளிக்காமல் கொடுப்பார்.

*இரவார் - கேட்கமாட்டார்; இரப்பார் - கேட்பவர்;*
*கரவாது - ஒளிக்காது; மாலை - இயல்பு;*
*கைசெய்து - கையால்செய்து; ஊன் - உணவு.*

6. உழவரின் உழவுத்தொழில் ஒடுங்கினால் என்ன நடக்கும்?

**உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம் என்பார்க்கு நிலை. 1036**

உழவரின் கை ஒடுங்கினால் விரும்புவதெல்லாவற்றையும் விட்டுவிட்டோம் எனச்சொல்லும் துறவிகளும் தமது நிலையில் நிற்கமுடியாது.

*மடங்கின் - ஒடுங்கின்; விழைவதும் - விரும்புவதும்.*

7. நிலத்தில் பயிர் செழித்துவிளைய என்ன செய்யவேண்டும்?

**தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்துஎருவும்**
**வேண்டாது சாலப் படும். 1037**

ஒரு பலம் நிறையுள்ள புழுதியைக் கால்பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒருபிடி எருவும் பசலையாகப் போடாமலே பயிர் செழித்து விளையும்.

*தொடி - ஒருபலம்; கஃசு - கால்பலம்;*
*உணக்கின் - காயவிட்டால்; சாலப்படும் - செழித்து விளையும்.*

8. பயிருக்கு என்ன செய்யவேண்டும்?

**ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றுஅதன் காப்பு.** 1038

உழுவதிலும் பார்க்க எரு இடுதல் நல்லது, பயிரின் களை களைந்த பின் நீர் பாச்சுவதை விட அதனைப் பாதுகாத்தல் நன்றாகும்.

*ஏர் - உழுதல்; கட்டல் - களைதல்; காப்பு - பாதுகாப்பு.*

9. வயற்சொந்தக்காரன் வயலுக்குச் செல்லாதிருந்தால் என்ன நடக்கும்?

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்.** 1039

வயலுக்குச் செல்லாது உரியவன் வீட்டிலிருந்தால் நிலம், அவனது மனைவியை விட அவனின் மேல் வெறுப்புக் கொண்டு அவனோடு ஊடிவிடும்.

*கிழவன் - உரியவன்; புலந்து - வெறுப்புற்று;*
*இல்லாள் - மனைவி.*

10. எம்மிடமேதும் இல்லையென்று கூறிக்கொண்டு இருப்பவரைப் பார்த்து நிலமகள் என்ன செய்வாள்?

**இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்.** 1040

எம்மிடம் ஒரு பொருளும் இல்லையென்று முடங்கி இருப்பாரைக் கண்டால் நிலமகள் என்று சொல்லப்படும் நல்லவள் சிரிப்பாள்.

*இலம் - இல்லை; அசைஇ - முடங்கி; நகும் - சிரிக்கும்.*

# 105. நல்குரவு

*(வறுமை)*

1. வறுமையை விடத் துன்பமானது என்ன?

**இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.** 1041

வறுமையைவிடத் துன்பமானது எதுவென்றால் வறுமையின் இல்லாமையே துன்பமானதாகும்.

*இன்மை - வறுமை; இன்னாதது - துன்பமானது;*
*இன்மையே - இல்லாமையே:*

2. எதற்காக ஒருவர்க்கு வறுமை வரும்?

**இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.** 1042

வறுமை என்று சொல்லப்படும் பாவி, ஒருவரிடம் மறுமை இன்பத்தையும்; இம்மை இன்பத்தையும் இல்லாமல் செய்யவே வரும்.

*இன்மை - வறுமை; மறுமை - மறுபிறப்பு; இம்மை - இப்பிறப்பு.*

3. வறுமை எவற்றைக் கெடுக்கும்?

**தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை.** 1043

வறுமை என்னும் ஆசை, பழைய குடிப்பெருமையையும் புகழையும் ஒன்றாகக் கெடுக்கும்.

*தொல்வரவு - பழையகுடிப்பெருமை; வரவு - வரலாறு;*
*தோல் - புகழ்; தொகையாக - மொத்தமாக;*
*நல்குரவு - வறுமை; நசை - ஆசை.*

4. நற்குடிப்பிறந்தார் வறுமைவந்தால் மாறுவரா?

**இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்.** 1044

வறுமை நற்குடிப்பிறந்தவரையும் இழிவுதரும் சொற்களை பேசவைக்கும் சோர்வை உண்டாக்கும்.

*இற்பிறந்தார் - நற்குடிப்பிறந்தார்; இன்மை - வறுமை.*

5. எப்படிப்பட்ட துன்பம் வறுமையென்று சொல்லப்படும்?

**நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்.** 1045

வறுமையென்று சொல்லப்படும் பெருந்துன்பத்துக்குள் பல்வகைப்பட்ட துன்பங்கள் ஒன்று சேர்ந்து பெரிதாகும்.

*நல்குரவு - வறுமை; இடும்பை - பெரும்துன்பம்.*

6. வறுமையில் வாடும் அறிஞரின் சொற்களில் என்ன உண்டாகும்?

**நற்பொருள் நன்குஉணர்ந்து சொல்லிலும் நல்கூர்ந்தார்**
**சொற்பொருள் சோர்வு படும்.** 1046

நல்ல நூலின் கருத்துக்களை நன்றாக உணர்ந்து சொன்னாலும் வறுமையடைந்தவரின் சொல்லின் பொருளிலே சோர்வுண்டாகும்.

*நல்கூர்ந்தார் - வறுமையடைந்தார்; படும் - உண்டாகும்.*

7. கெட்ட செயல்களால் வறுமையடைபவர் நிலை எப்படிப்பட்டது?

**அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும்.** 1047

தர்மற்ற வழியால் வறுமையடைந்தவர் பெற்ற தாயாலும் அயலவர் போலப் பார்க்கப்படுவர்.

*அறம் - தர்மம்; நல்குரவு - வறுமை; ஈன்ற - பெற்ற;*
*நோக்கப்படும் - பார்க்கப்படும்.*

8. வறுமையடைந்தார் உள்ளம் எதை நினைத்து வருந்தும்?

**இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு.** 1048

நேற்றுக் கொல்வது போலவந்து துன்புறுத்திய வறுமை, இன்றும் என்னிடம் வருமோ! என நினைத்து வருந்தும்.

*நெருநல் - நேற்று; நிரப்பு - வறுமை.*

9. வறுமையுற்றவனுக்கு நிம்மதியாக உறங்க முடியுமா?

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதுஒன்றும் கண்பாடு அரிது.** 1049

நெருப்பினுள் கிடந்தும் தூங்க முடியும். ஆனால் வறுமைக்குள் எந்தவகையாலும் தூங்குதலரிதாகும்.

*நிரப்பு - வறுமை; துஞ்சல் - தூங்குதல்; கண்பாடு - தூக்கம்.*

10. வறுமையில் வருந்துபவர்கள் ஏன் தம் உயிரை விடுவதில்லை?

**துப்புரவு இல்லார் துவரத் துறவாமை**
**உப்பிற்கும் காடிக்கும் கூற்று.** 1050

அனுபவிக்கும் பொருட்களில்லாத வறியவர் உயிரை விடாது இருப்பது உப்புக்கும் கஞ்சிக்கும் இயமனாக இருப்பதனாலேயாகும்.

*துப்புரவு - அனுபவப்பொருள்; காடி - கஞ்சி; கூற்று - இயமன்; துவரத்துறவாமை - உயிர்விடுதல்.*

# 106. இரவு

*(இரந்து கேட்டல்)*

1. எவரிடம் ஒன்றைக் கேட்கலாம்?

**இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று.** 1051

கொடுக்கக்கூடியவரைக் கண்டால் அவரிடம் இரந்து கேட்கவும். அவர் கொடுக்காது ஒளிப்பாரானால் அது அவருக்குப் பழியே தவிர கேட்பவருக்குப் பழியாகாது.

*இரக்க - கேட்க; இரத்தக்கார் - கேட்கக்கூடியவர்;*
*கரப்பின் - ஒளித்தால்.*

2. மற்றவரிடம் கேட்பது இன்பம் தருமா?

**இன்பம் ஒருவர்க்கு இரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின்.** 1052

கேட்பவை எதுவித துன்பமும் தராமல் வருமாயின் பிறரிடம் கேட்டுப்பெறுதலும் ஒருவருக்கு இன்பமேயாகும்.

3. எப்படிப்பட்டவரிடம் கேட்டுப்பெறுவதுகூட அழகாக இருக்கும்?

**கரப்புஇலா நெஞ்சின் கடன்அறிவார் முன்நின்று**
**இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.** 1053

இருப்பதையில்லை என்று ஒளிக்காத மனத்தோடு கேட்பவர் மானத்தையும் அறிபவர் முன்னின்று கேட்பதும் ஓர் அழகேயாகும்.

*கரப்பு - ஒளித்தல்; நெஞ்சு - மனம்; கடன் - மானம் (காரணம்);*
*ஏஎர் - அழகு.*

4. யாரிடம் கேட்டுப் பெறுவதும் கொடை போன்றிருக்கும்?

**இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தேற்றாதார் மாட்டு.** 1054

தம்மிடம் உள்ளதை ஒளிக்க வேண்டுமெனக் கனவிலும் அறியாதவரிடம் இரந்து கேட்பதும், மற்றவர்க்குக் கொடுப்பது போன்றதேயாகும்.

*ஈதல் - கொடுத்தல்; கரத்தல் - ஒளித்தல்;*
*தேற்றாதார் - அறியாதார்.*

5. ஏன் சிலர் கண்களாலே கேட்டுப் பெறுகிறார்கள்?

**கரப்பிலார் வையத்து உண்மையால் கண்நின்று**
**இரப்பவர் மேற்கொள் வது.** 1055

வைத்துக் கொண்டு இல்லையென்று ஒளிக்காதவர்கள் உலகத்தில் வாழ்கிறார்கள் என்ற உண்மையால், கேட்பவர் தமது குறையைச் சொல்லாது பார்வையால் யாசித்தலை மேற்கொள்கின்றனர்.

*கரப்பிலர் - ஒளிக்காதவர்; வையம் - உலகம்.*

6. ஒளிக்காது கொடுப்பவரைக் கண்டால் என்ன நடக்கும்?

**கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரம்புஇடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.** 1056

இருப்பதை இல்லையென்று ஒளிக்கும் நோய் இல்லாதவரைக் கண்டால் வறுமைத் துன்பமெல்லாம் ஒன்றாக அழிந்து போகும்.

*கரப்பிடும்பை - ஒளிக்கும்நோய்; ஒருங்கு - ஒன்றாக;*
*கெடும் - அழியும்; நிரப்பிடும்பை - வறுமைத்துன்பம்.*

7. இகழ்ந்து சிரிக்காது கொடுப்பவரைக் கண்டால் இரப்பவர் மனமென்ன செய்யும்?

**இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துஉள்ளம்**
**உள்ளத்தின் உவப்பது உடைத்து.** 1057

இகழ்ந்து சிரிக்காது கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் மனம் மகிழ்ந்து உள்ளுக்குள் பூரிப்படையும்.

*எள்ளாது - சிரிக்காது; ஈவார் - கொடுப்பார்; உள்ளம் - மனம்;*
*உவத்தல் - பூரித்தல்.*

8. இரப்பவரில்லாது இருந்தால் இந்த உலகம் எப்படி இருக்கும்?

**இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று.** 1058

பொருள்கேட்டு இரப்பவர் இல்லையானால் குளிர்மையுடைய இப்பெரிய உலகத்து இயக்கம், மரத்தால் செய்த பொம்மை கயிற்றால் இங்கும் அங்கும் இயக்கப்படுதல் போல இருக்கும்.

*இரப்பார் - கேட்பவர்; ஈர்ங்.கண் - குளிர்மை;*
*மாஞாலம் - பெரிய உலகம்; மரப்பாவை - மரப் பொம்மை.*

9. பொருள் கேட்பாரில்லாது இருப்பது கொடுப்பவர்க்கு நல்லது தானே?

**ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை.** 1059

ஒன்றை இரந்துகேட்டுப் பெற்றுக் கொள்வார் இல்லாதவிடத்து, கொடுப்பவர்க்கு என்ன புகழ் உண்டாகும்?

*ஈவார் - கொடுப்பார்; தோற்றம் - புகழ்;*
*இரந்துகோள் - கேட்டுப் பெறுவது.*

10. ஒன்றைக் கேட்டு இரப்பவர் கோபிக்கலாமா?

**இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை**
**தானேயும் சாலும் கரி** 1060

பொருள்கேட்டு இரப்பவன் கோபம் கொள்ளாதிருக்க வேண்டும். மற்றவர்க்கும் அந்நிலை இருக்கும் என்பதற்கு அவனது வறுமைத்துன்பமே உதாரணமாகும்.

*வெகுளாமை - கோபம் கொள்ளாமை;*
*நிரப்பு இடும்பை - வறுமைத் துன்பம்*

# 107. இரவச்சம்

*(பொருளை இரந்து கேட்கத் தயங்குதல்)*

1. கேட்பதை இல்லை என்று கூறாதவரிடம் கேட்டுப்பெறுவது நல்லதா?

**கரவாது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்.** 1061

ஒளிக்காது மகிழ்வோடு கொடுக்கும் நோக்கமுள்ளவர் இடத்தும் கேட்காது இருப்பது கோடிமடங்கு நல்லது.

*கரவாது - ஒளிக்காது; உவந்து - மகிழ்ந்து;*
*ஈயும் - கொடுக்கும்; கண்ணன்னார் - நோக்கமுள்ளவர்;*
*கண்ணும் - இடத்தும்.*

2. இரந்து கேட்டு உயிர்வாழ வேண்டுமா?

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகுஇயற்றி யான்.** 1062

இரந்து கேட்டும் உயிர்வாழ வேண்டுமானால் இவ்வுலகைப் படைத்தவனும் அலைந்து திரிந்து கெட்டு அழியட்டும்.

*இரந்தும் - கேட்டும்; பரந்து - திரிந்து; கெடுக - அழிக;*
*இயற்றியான் - படைத்தவன்.*

3. எத்தகைய வைராக்கியம் போன்ற முரட்டுத்தனம் வேறு இல்லை?

**இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்**
**வன்மையின் வன்பாட்டது இல்.** 1063

வறுமைத் துன்பத்தை இரந்துகேட்டு வாங்கித்தீர்ப்போம் என்னும் வைராக்கியத்தைப் போன்ற முரட்டுத்தன்மை வேறில்லை.

*இன்மை இடும்பை - வறுமைத்துன்பம்; தீர்வாம் - தீர்ப்போம்;*
*வன்மை - வைராக்கியம்; வன்பாடு - முரட்டுத்தனம்.*

4. இரந்து கேட்கமனம் கூசும்தன்மை எப்படிப்பட்டது?

**இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்**
**காலும் இரவுஒல்லாச் சால்பு.** 1064

வசதியில்லாத போதும் பிறரிடம் கேட்க மனம் கூசும் தன்மை இந்த உலகம் முழுவதும் கொள்ள முடியாதளவு பெருமையுடைய தாகும்.

*இடம் இல்லாத - வசதியில்லா; காலும் - போதும்; இரவு - கேட்க; சால்பு - தன்மை; தகைத்தே - பெருமையுடையதே; ஒல்லா - முடியாத(கூசும்).*

5. இரந்து கேட்டு உண்பதைவிட இனிமையானது எது?

**தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்குஇனியது இல்.** 1065

தெளிந்த நீர்போல சமைத்த கூழ் இருந்தாலும் முயற்சியால் கிடைத்ததை உண்பதிலும் மிகவும் இனிமையானது ஏதுமில்லை.

*தெள்நீர் - தெளிந்தநீர்; அடுபுற்கை - சமைத்தகூழ்; தாள் - முயற்சி; ஊங்கு - மிக.*

6. நாவிற்கு இழிவு தரக்கூடியது எது?

**ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்தது இல்.** 1066

பசுவுக்கு நீர் வேண்டுமென்று இரந்து கேட்டாலும், அப்படிக் கேட்பது போன்ற இழிவு நாவிற்கு வேறு ஒன்றும் இல்லை.

*ஆ - பசு; இரப்பினும் - கேட்டாலும்; நா - நாக்கு; இரவின் - கேட்டலின், இளி - இழிவு.*

7. யாரிடம் சென்று இரந்து கேட்கக்கூடாது?

**இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று.** 1067

இரந்து கேட்பதானால் பொருளைவைத்துக் கொண்டில்லை என்பவரிடம் சென்று இரந்து கேட்க வேண்டாமென்று, இரந்து கேட்போர் எல்லோரையும் இரந்து கேட்கின்றேன்.

*கரப்பார் - இல்லையென்பவர்; இரப்பாரை - இரந்து கேட்பவரை; இரவன்மின் - இரக்கவேண்டாம்; இரப்பன் - கேட்கிறேன்.*

8. பொருளைவைத்துக் கொண்டில்லை என்பவரிடம் போய் யாசிப்பதால் என்ன நடக்கும்?

**இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.** 1068

இருப்பதை ஒளித்து வைத்து, இல்லையெனச் சொல்லும் கல் நெஞ்சப்பாறை தாக்கினால், யாசித்தல் என்னும் உறுதியில்லாத தோணி உடைந்துவிடும்.

*இரவு - யாசித்தல்; ஏமாப்பில் - உறுதிஇல்லாத;*
*கரவு - ஒளித்தல்; பார் - பாறை; பக்கு - உடைதல்.*

9. இரந்துகேட்டு மற்றவர் இல்லை என்றால் இரந்தவர் நிலை எப்படி இருக்கும்?

**இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள**
**உள்ளதூஉம் இன்றிக் கெடும்.** 1069

இரந்து கேட்க வேண்டுமே என நினைக்கவே மனம் வேதனையடையும். பொருளை ஒளித்து வைத்துக்கொண்டு இல்லையென்கிறார்களே என்பதை நினைக்க, அந்த வேதனையைத் தாங்கவும் மனம் இல்லாது அழிந்து போகும்.

*இரவு - இரத்தல்; உள்ள - நினைக்க; உருகும் - வேதனை அடையும், கரவுள்ள-ஒளிப்பதை நினைக்க; உள்ளம் - மனம்.*

10. பொருளை ஒளித்து வைத்துக்கொண்டு இல்லையென்பவர் நிலை எப்படி இருக்கும்?

**கரப்பவர்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்**
**சொல்லாடப் போஒம் உயிர்** 1070

பொருளை ஒளித்துக் கொண்டு 'இல்லை' என்று சொல்லும் சொல்லைக் கேட்டவுடனே கேட்பவர்க்கு உயிர் போய்விடுமே. பொருளை இல்லை என்று ஒளிப்பவர்க்கு உயிர் எங்கு போய் ஒளித்திருக்குமோ?

*கரப்பார்க்கு - ஒளிப்பவருக்கு; யாங்கு - எங்கு;*
*இரப்பவர் - கேட்பவர்; சொல்லாட - உரையாட.*

# 108. கயமை

*(கீழ்மக்களின் தன்மை)*

1. கயவர் யார்?

**மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்டது இல்.** 1071

உருவத்தில் மனிதரைப்போலவே இருப்பர் கயவர். அவரைப் போன்ற போலி மனிதரை யாம் கண்டதில்லை.

*மக்களே - மனிதரே; கயவர் - கொடியவர்; ஒப்பாரி - போலி; (வஞ்சகர்) அவரன்ன - அவரைப்போல.*

2. கயவர் எப்படிப்பட்டவர்?

**நன்றுஅறி வாரின் கயவர் திருஉடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்.** 1072

நன்மை செய்வதை அறிந்தவரை விடக் கயவர் சிறப்புடையவர். ஏனெனில் மனதில் கவலையில்லாதவர்.

*நன்று - நன்மை; திரு - சிறப்பு; நெஞ்சத்து - மனத்து; அவலம் - கவலை.*

3. கயவர் யாரைப் போன்றவர்?

**தேவர் அனயர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்.** 1073

தேவரைப்போல் தாம் விரும்பியதைச் செய்து நடப்பதால் கயவரும் தேவரைப் போன்றவரே.

*மேவன - விரும்பியன; ஒழுகல் - நடத்தல்;*

4. யாரைப்பார்த்து கயவர் தாம் பெரியவரென இறுமாப்படைவர்?

**அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்** 1074

கீழ்மக்களாகிய கயவர் தமக்குக் கீழ்ப்பட்டு நடப்பவரைக் கண்டால் அவரைவிடத் தாம் மேன்மையானவர் என இறுமாப்படைவர்.

*பட்டி - நாய் (அவிட்டுவிட்ட), அகப்பட்டி - கீழானவர்; ஆவார் - நடப்பவர்; மிகப்பட்டு - மேன்மை; செம்மாப்பு - இறுமாப்பு.*

5. கயவர்கள் கொஞ்சம் ஒழுங்காக நடப்பதற்கு எது காரணம்?

**அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்**
**அவாவுண்டேல் உண்டாம் சிறிது.** 1075

கீழ்மக்களின் ஒழுக்கத்திற்குக் காரணம் தண்டனை கிடைக்குமென்ற பயமே, எஞ்சியதில் அவர்கள் ஆசைப்படுவது ஏதாவது இருக்குமானால் அதனாலும் கொஞ்சம் ஒழுக்கம் உண்டாகும்.

*அச்சம் - பயம்; கீழ்கள் - கீழ்மக்கள்; ஆசாரம் - ஒழுக்கம்; அவா - ஆசை; சிறிது - கொஞ்சம்.*

6. தாம் கேட்ட இரகசியத்தை கயவர் என்ன செய்வர்?

**அறைபறை அன்னார் கயவர்தாம் கேட்ட**
**மறைபிறர்க்கு உய்த்துஉரைக்க லான்.** 1076

தாம் கேட்ட இரகசியத்தை எடுத்துச்சென்று பிறரிடம் சொல்வதால், 'கயவர்' செய்தி பரப்பும் அறைபறை போன்றவர்.

*அறைபறை - அறையப்படும்பாறை; மறை - இரகசியம்; உய்த்து - எடுத்துச் சென்று, உரைத்தல் - சொல்லுதல்; அன்னார் - போன்றவர்.*

7. கயவர் பிறருக்குக் கொடுப்பரா?

**ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்**
**கூன்கையர் அல்லா தவர்க்கு.** 1077

முட்டிக்கையால் தமது கன்னத்தை உடைப்பவர்க்கு அல்லாமல் கயவர் தாம் உண்ட எச்சில் கையைக்கூட மற்றவர்க்கு உதறமாட்டார்.

*ஈர்ங்கை - எச்சில்கை; விதரார் - உதறமாட்டார்; கொடிறு - கன்னம்; கூன்கை - முட்டிக்கை.*

8. கீழ்மக்களை எப்படிப் பயன்படுத்தலாம்?

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். 1078

நாம் ஒன்றைச் சொன்னவுடன் சான்றோரிடமிருந்து பயன் பெறலாம். கரும்பைப்போல் இடித்துப் பிழிந்தால் கீழ்மக்கள் பயன்படுவார்.

*கொல்ல - வருத்த (இடித்துப்பிழிய); கீழ் - கீழ்மக்கள் (கயவர்).*

9. பிறர் மேன்மை கண்டால் கயவர் என்ன செய்வர்?

**உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகும் கீழ்.** 1079

பிறர் உடுப்பதையும் உண்பதையும் கீழ்மக்கள் பார்த்தால் பொறாமைப்பட்டு வேண்டுமென்றே அவர்மீது குற்றம் காண வல்லவராவர்.

*வடு - குற்றம்; கீழ் - கீழ்மக்கள்(கயவர்).*

10. கயவர் எதற்கு உரியவர்?

**எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து.** 1080

கயவர் ஒரு துன்பம் வந்தால் தம்மைத்தாமே பிறரிடம் விரைவாக விற்றுவிடுவதற்கு உரியவராவர், வேறு எதற்கு உரியவர்?

*எற்றிற்கு - எதற்கு; உற்றக்கால் - வந்தால்; விற்றற்கு - விற்பதற்கு.*

# இன்பத்துப்பால்

# களவு இயல்

## 109. தகை அணங்கு உறுத்தல்

*(காதலியின் அழகு வருத்துதல்)*

1. காதலன் காதலியை நினைத்து எப்படி மயங்குகிறான்?

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு** 1081

தெய்வப்பெண்ணோ? மயிலோ? பாரமான தோட்டினை அணிந்த மனிதப்பெண்ணோ? மயங்குகின்றதே என் நெஞ்சம்!

*அணங்கு - தெய்வப்பெண்; கனங்குழை - பாரமானதோடு; மாதர் - மனிதப்பெண்; மாலும் - மயங்கும்.*

2. அவள் பார்வை எப்படி இருந்தது?

**நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்குஅணங்கு**
**தானைக்கொண் டன்னது உடைத்து.** 1082

அவள் என்னைப்பார்த்தாள் அதற்கு எதிராக நான் அவளை நோக்க, என்னை திரும்புவும் அவள் பார்த்தது, ஒரு படையையே கொண்டு வந்து என்னைத் தாக்கியது போல் இருந்தது.

*நோக்கினாள் - பார்த்தாள்; நோக்கெதிர் - எதிராகநோக்குதல்; அணங்கு - பெண், தானை - படை.*

3. அந்தக் கண்களால் அறிந்தது என்ன?

**பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனிஅறிந்தேன்**
**பெண்தகையால் பேரமர்க் கட்டு** 1083

இயமன் என்ன என்பதை முன்பு அறியேன். இப்போது அறிந்து கொண்டேன். அது பெண்தன்மையுடன் கூடிய பெரிதாக அமைந்த கண்களையுடையது.

*பண்டு - முன்பு; கட்டு - கண்ணையுடையது; பேரமர் - பெரிதாக அமைந்த; கூற்று - எமன்.*

4. எப்படி அந்தக் கண்கள் அமர்ந்திருந்தன?

**கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்**
**பேதைக்கு அமர்ந்தன கண். 1084**

பெண்தன்மையுள்ள அப்பேதைக்கு, கண்கள் பார்ப்பவரின் உயிரை உண்ணும் தோற்றத்தோடு அமர்ந்திருந்தன.

*கண்டார் - பார்ப்பவர்; பெண்தகை - பெண்தன்மை.*

5. அப்பெண்ணின் பார்வையின் தன்மை எப்படியிருந்தது?

**கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 1085**

அந்த இளம் பெண்ணின் பார்வை என்னைக் கொல்வதால் எமனோ என்னைத் தடவியதால் கண்ணோ என்னைப் பார்க்க மருளுவதால் பெண்மானோ இந்த மூன்று தன்மையும் உடையதாக இருக்கின்றது.

*கூற்றமோ - எமனோ; பிணையோ - பெண்மானோ;*
*மடவரல் - இளம்பெண்; நோக்கம் - பார்வை.*

6. எப்படி இருந்திருந்தால் அந்தக் கண்கள் துன்பம் செய்யமாட்டா?

**கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்**
**செய்யல மன்இவள் கண். 1086**

வளைந்த புருவங்கள் வளையாது இருந்து மறைக்குமானால் இவள் கண்கள் நான் நடுங்கும் துன்பத்தைச் செய்யமாட்டா.

*கொடும்புருவம் - வளைந்தபுருவம்; கோடா - வளையாது;*
*அஞர் - துன்பம்; செய்யல - செய்யமாட்டா.*

7. பெண்ணின் மார்பை மறைக்கும் ஆடை எது போன்றது?

**கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்**
**படாஅ முலைமேல் துகில். 1087**

பெண்ணின் சாயாத மார்பகத்தின் மேலிருக்கும் ஆடை மதங் கொண்ட ஆண்யானையின் கண்ணை மறைக்க இட்ட முகபடாம் போன்றது.

*கடாம் - மதம்; களிறு - ஆண்யானை; கடாகளிறு - மதயானை;*
*மாதர் - பெண்; கட்படாம் - கண்ணை மறைக்க அணிவது*
*(யானைக்கு); படாஅ - சாயாத; முலை - மார்பு;*
*துகில் - ஆடை.*

8. உனது வலிமையை உடைத்தது எது?

**ஒள்நுதற்கு ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும்என் பீடு.** 1088

போர்க்களத்தில் வந்து என்னுடன் போர் செய்யாத பகைவரும், மற்றவர் சொல்லக் கேட்டு அஞ்சும் என் வலிமை இவளின் அழகியநெற்றிக்கு உடைந்ததே.

*ஒள்நுதல் - அழகியநெற்றி; ஞாட்பு - போர்க்களம்;*
*பீடு - வலிமை; நண்ணாரும் - நெருங்காப்பகைவர்;*
*உட்கும் - அஞ்சும்;*

9. அவளுக்கு அணிகலன்கள் தேவையா?

**பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு**
**அணிஎவனோ ஏதில தந்து.** 1089.

பெண்மான் போன்ற அழகிய மருண்டபார்வையும் நாணமும் உடையவளுக்கு பொருந்தாத அணிகலன்களை செய்து கொடுத்தது ஏனோ?

*பிணை - பெண்மான்; ஏர் - அழகு; ஏதில - பொருந்தாத;*
*மடநோக்கு - மருண்டபார்வை.*

10. மதுவை விடக் காதல் சிறந்ததா?

**உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்**
**கண்டார் மகிழ்செய்தல் இன்று.** 1090

காச்சியமது குடித்தவர்க்கு அல்லாமல் காதலைப் போல பார்த்தவர்க்கு மயக்கத்தைத் தருவதில்லையே.

*அடு - காச்சுதல்; அடுநறா - காச்சியமது;*
*மகிழ்செய்தல் - மயக்கம் தருதல்; காமம்-காதல்.*

# 110. குறிப்பறிதல்

*(காதலியின் மனநிலையை அறிதல்)*

1. காதலியின் பார்வை எத்தனை வகைப்பட்டது?

**இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு**
**நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து.** 1091

இவளின் மைதீட்டிய கண்களில் இரண்டுவகையான பார்வைகள் இருக்கின்றன. ஒரு பார்வை காதல் நோயை உண்டாக்கும் பார்வை. மற்றதோ அந்தக்காதல் நோய்க்கு மருந்தாகவும் இருக்கின்றது.

*உண்கண் - மைதீட்டிய கண்; நோய் - காதல் (காமம்)*

2. அவளது திருட்டுப்பார்வையின் அளவு என்ன?

**கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தின்**
**செம்பாகம் அன்று பெரிது.** 1092

அவளது கணநேரத் திருட்டுத்தனமான பார்வை காதலின்பத்தின் பாதியல்ல அதைவிடப்பெரிதாகும்.

*கண்களவு - திருட்டுப்பார்வை; காமம் - காதலின்பம்;*
*சிறுநோக்கம் - கணநேரப்பார்வை; செம்பாகம் - பாதி.*

3. அவள் செயல் எதற்கு நீராகிறது?

**நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்.** 1093

பார்த்தாள், நான் பார்த்ததும் தலை குனிந்தாள். அந்தச்செயல் அவள் வளர்க்கும் அன்புப்பயிர் வளர ஊற்றிய நீராகும்.

*நோக்கினாள் - பார்த்தாள்; யாப்பு - பயிர்;*
*இறைஞ்சினாள் - தலைகுனிந்தாள்; அட்டிய - ஊற்றிய.*

4. பார்வையால் என்ன செய்துகொண்டு இருந்தாள்?

**யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்.** 1094

நான் பார்க்கும்போது அவள் நிலத்தைப் பார்ப்பாள். நான் பார்க்காதபோது அவள் என்னைப்பார்த்து மெல்லத் தனக்குள் மகிழ்வாள்.

*நோக்கும் - பார்க்கும்; காலை - போது; நகும் - மகிழும்.*

5. அவள் நேராகவா பார்த்தாள்?

**குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்.** 1095

என்னை நேராக உற்றுப் பார்க்கவில்லையே தவிர ஒரு கண்ணைச் சுருக்கியவள் போலப் பார்த்து மகிழ்ந்தாள்

*குறிக்கொண்டு - நேராக (குறித்து); சிறக்கணித்தாள் - சுருக்குதல்.*

6. அவள் சொற்களால் என்ன அறிய முடிந்தது?

**உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்**
**ஒல்லை உணரப் படும்.** 1096

அயலவர் போலச் சொன்னாலும் பகைவர் இல்லாதவர் சொல் விரைவாகத் தெரியவரும்.

*உறாதவர் - அயலார்; செறார் - பகையில்லாதவர்;*
*ஒல்லை - விரைவாக; உணரப்படும் - தெரியவரும்.*

7. காதலுற்றவரை அறிவது எப்படி?

**செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்**
**உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.** 1097

பகையில்லாத கடுஞ்சொல்லும் பகைவர் போன்ற பார்வையும், வெளியே அயலவர் போல் நடப்பதுமே காதலுற்றவர் குறிப்பாகும்.

*செறார் - பகையில்லாதவர்; சிறுசொல் - கடுஞ்சொல்;*
*செற்றார் - பகைவர்; நோக்கு - பார்வை; உறார் - அயலார்.*

8. அவள் சிரிக்கும் போது என்ன உண்டாகிறது?

**அசைஇயற்கு உண்டுஆண்டுஓர் ஏஎர்யான் நோக்கப்**
**பசையினள் பைய நகும். 1098**

நான் பார்க்கும்போது விரும்பினவளாய் மெல்லச் சிரிப்பாள். மெல்லிய இயல்புள்ள அவளிடம் அப்போது ஓர் அழகு உண்டாகின்றது.

*அசை - மெல்லிய ஆண்டு - அப்போது; ஏஎர் - அழகு; பசையினள் - விரும்பினள்; பைய - மெல்ல; நகும் - சிரிக்கும்.*

9. காதலர் பார்வை எப்படிப்பட்டது?

**ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே யுள. 1099**

தெரியாதவரைப் பார்ப்பது போல பொதுவாகப் பார்த்துக் கொள்ளுதல் காதல் கொண்டவரிடம் இருக்கும்.

*எதிலார் - தெரியாதவர், நோக்கு - பார்த்தல், கண்ணே - இடம்.*

10. காதலுக்கு ஒருவரோடு ஒருவர் பேசுவது அவசியமா?

**கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல. 1100**

இருவரும் கண்ணொடு கண்பார்த்து அந்தப் பார்வைகள் ஒன்றாக அன்பினிற் கலக்குமானால் வாய்ச் சொற்களால் எந்தப் பயனும் இல்லை.

*நோக்கு ஒக்கின் - பார்வை ஒன்றாகுமாயின்.*

## 111. புணர்ச்சி மகிழ்தல்

*(இன்ப முயக்கத்தின் மகிழ்ச்சி)*

1. பெண்ணிடம் என்ன இருக்கிறது?

**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள.** 1101

கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் அறியும் ஐம்புல இன்பங்களும், ஒளியுள்ள வளையலணிந்த பெண்ணிடமே உள்ளன.

*உயிர்த்து - முகர்ந்து; உற்று - தொட்டு; கண்ணே - இடமே; ஒண்தொடி - ஒளியுள்ள வளையல் அணிந்தபெண்.*

2. பெண்ணால் வந்த காதல் நோய்க்கு மருந்தென்ன?

**பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்நோய்க்குத் தானே மருந்து.** 1102

நோய்களுக்கு வேறுபிற மருந்துகள் இருக்கின்றன. ஆனால் அணிகலன்களை அணிந்த இவளால் வந்தநோய்க்கு இவளே மருந்தாக இருக்கின்றாள்.

*பிணிக்கு - நோய்க்கு; அணியிழை - பெண்.*

3. காதலியின் தோளில் தூங்கும் இன்பமா வைகுந்தமா இனியது?

**தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு.** 1103

தாம் விரும்பும் காதலியின் மெல்லியதோளில் தூங்குவதைவிட, திருமாலின் வைகுந்தம் அவ்வளவு இனிமையானதா?

*தாமரைக்கண்ணன் - திருமால்; இனிதுகொல் - இனிமையானதா; தாமரைக்கண்ணாள் உலகு - வைகுந்தம்; வீழ்வார் - விரும்பும்.*

4. எப்படிப்பட்ட தீயை அவள் வைத்திருக்கின்றாள்?

**நீங்கின் தெறூஉம் குறுகும்கால் தண்என்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்.** 1104

இவளை விட்டு நீங்கினால் சுடுவதும், நெருங்கினால் குளிர்வதும் ஆகிய இந்த புதுமையான தீயை இவள் எங்கு பெற்றாள்?

*தெறூஉம் - சுடும்; குறுகும் - நெருங்கின்; தண் - குளிர்;*
*யாண்டு - எங்கு.*

5. எத்தகைய இன்பத்தை அவள் தோள்கள் தருகின்றன?

**வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே**
**தோட்டார் கதுப்பினாள் தோள்.** 1105

பூவணிந்த அடர்ந்த கூந்தலையுடையவளின் தோள்கள் விரும்பியபொழுது, விரும்பிய அந்தந்தப் பொருள்போலவே இன்பம் தருகின்றன.

*வேட்டல் - விரும்பல்; அவைஅவை - அந்தந்த;*
*தோட்டார் - பூவணிந்தவர்; கதுப்பு - அடர்ந்தகூந்தல்.*

6. அவளுடைய தோள்கள் எதனால் செய்யப்பட்டன?

**உறுதொறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள்.** 1106

நான் தழுவும் பொழுதெல்லாம் எனக்குப் புத்துயிர் உண்டாகத் தீண்டுவதால் அவளுக்குத் தோள்கள் அமிழ்தத்தால் செய்யப் பட்டிருக்கின்றன.

*உறுதொறு - தழுவும்பொழுது; உயிர்தளிர்ப்ப - புத்துயிர்.*

7. அவள் தழுவியது எப்படி இருந்தது?

**தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு.** 1107

அழகிய மாமை நிறமுள்ள பெண்ணின் தழுவல், தனது வீட்டிலிருந்து, தனது உழைப்பை எல்லோருக்கும் பிரித்துக்கொடுத்து உண்டது போல் இருந்தது.

*இல் - வீடு; பாத்து - பிரித்து; அம் - அழகிய;*
*மா - மாமைநிறம்; அரிவை - பெண்; முயக்கு - தழுவல்;*

8. விரும்பும் காதலர் இருவருக்கும் இன்பம் தருவது எது?

**வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை**
**போழப் படாஅ முயக்கு.** 1108

விரும்புகிற காதலர் இருவருக்கும் இன்பம் தருவது காற்றுங்கூட இடையே பிரிக்காத அளவுக்குத் தழுவும் தழுவலேயாகும்.

*வீழும் - விரும்பும்; வளி - காற்று; போழ்தல் - பிரித்தல்; போழப்படா - பிரிக்கப்படா; முயக்கு - தழுவல்.*

9. காதலால் கூடியவர் பெறும் பயன்கள் என்ன?

**ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
**கூடியவர் பெற்ற பயன்.** 1109

ஊடல் கொள்ளல் ஊடலின் காரணத்தை உணர்தல், பின்னர் சேர்தல் ஆகியவையே காதலால்கூடியவர் பெறும் பயன்களாகும்.

*ஊடல் - பொய்க்கோபம்; புணர்தல் - சேர்தல்; காமம் - காதல்.*

10. பெண்ணைச் சேரும் பொழுதெல்லாம் ஏற்படும் காமம் எது போன்றது?

**அறிதொறு அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு.** 1110

சிவந்த நகையணிந்த இவளைச் சேரும் பொழுதெல்லாம் ஏற்படும் காமம், அறியாத நூலின் பொருளை அறியுந்தோறும் எமது அறியாமையைக் காண்பது போன்றதாகும்.

*செறிதொறும் - சேரும் போதும்; சேயிழை - சிவந்த நகை அணிந்தவள்.*

## 112. நலம் புனைந்து உரைத்தல்

*(காதலியின் அழகைப் புகழ்ந்து சொல்லுதல்)*

1. காதலி மென்மையானவளா?

**நல்நீரை வாழி அனிச்சமே நின்னினும்**
**மெல்நீரள் யாம்வீழ் பவள்.** 1111

அனிச்சம் பூவே! நல்ல மென்மையுடையாய்! நீ வாழ்வாயாக! நான் விரும்புபவள் உன்னிலும் மென்மையுடையவள்.

*நீரை - தன்மை; நின்னினும் - உன்னிலும்;*
*மெல்நீரள் - மென்மையுடையவள்;*

2. ஏன் நெஞ்சம் மயங்குகின்றது?

**மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்**
**பலர்காணும் பூவொக்கும் என்று.** 1112

இவளுடைய கண் பலரும் பார்க்கும் பூவை ஒத்திருக்கின்றன என்று நெஞ்சமே! மலர்களைக் கண்டால் மயங்குகின்றாயே!

*மையாத்தல் - மயங்குதல்.*

3. காதலியின் அழகு எத்தகையதோ?

**முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
**வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.** 1113

தளிர்நிற உடம்பும், முத்துப்பற்களும், வேல் போன்ற மைதீட்டிய கண்களும், மூங்கில் போன்ற தோள்களும், நல்ல வாசனை வீசும் மணமும் உடையவள் அவள்.

*முறி - தளிர்; மேனி - உடம்பு; முத்தம் - முத்து;*
*முறுவல் - பல்; வெறி - வாசனை; நாற்றம் - மணம்;*
*உண்கண் - மைதீட்டிய கண்.*

4. எப்பூ காதலியின் கண்ணைப் பார்த்து வெட்கப்படும்?

**காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்**
**மாணிழை கண்ஒவ்வேம் என்று.** 1114

குவளை மலர்கள் காணுமாயின் இவளுடைய கண்களுக்கு நாம் ஒப்பாகவில்லையே என்று வெட்கப்பட்டு தலை கவிழ்ந்து நிலத்தைப் பார்க்கும்.

*காணின் - காணுமாயின்; நோக்கும் - பார்க்கும்; ஒவ்வோம் - ஒப்பாகமாட்டோம். மாணிழை - சிறந்த நகைகளை அணிந்தபெண்.*

5. காதலியின் இடை எத்தகையது?

**அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.** 1115

அவள் அனிச்சம்பூக்ககளின் காம்புகளை நீக்காமல் தலையில் சூடினால் அந்தப் பாரம் தாங்காமல் முறியும் இடைக்கு நல்ல மங்கலப்பறை அறையப்படமாட்டாது.

*கால் - காம்பு; களைதல் - நீக்குதல்; பெய்தாள் - சூடினாள்; நுசும்பு - இடை.*

6. காதலியின் முகத்தைக் கண்டு எவை கலங்குகின்றன?

**மதியும் மடந்தை முகனும் அறியா**
**பதியின் கலங்கிய மீன்.** 1116

காதலியின் முகத்திற்கும் சந்திரனுக்கும் வேறுபாடு அறியமுடியாமல் வானத்து நட்சத்திரங்கள் தம் நிலையிலிருந்து கலங்கித் திரிகின்றன.

*மதி - சந்திரன்; மடந்தை - பெண் (காதலி); பதி - நிலை; மீன் - நட்சத்திரம்.*

7. அவள் முகத்திற்கும் சந்திரனுக்கும் வித்தியாசம் இருக்கின்றதா?

**அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
**மறுஉண்டோ மாதர் முகத்து.** 1117

தேய்ந்து வளர்ந்து பிரகாசிக்கும் சந்திரனுக்குப்போல மாதர் முகத்தில் மறு இருக்கின்றதோ?

*அறுவாய் - தேய்ந்து; அவிர்மதி - பிரகாசிக்கும் சந்திரன்.*

8. மாதரின் முகம்போன்ற அழகு சந்திரனுக்கு இருந்தால் என்னாகும்?

**மாதர் முகம்போல ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி.** **1118**

சந்திரனே வாழ்வாயாக! இம்மாதரின் முகம் போல அழகுதவழ நீயும் இருப்பாயானால் என் காதலை அடைவாய்.

*ஒளி - அழகு; மதி - சந்திரன்.*

9. காதலியின் முகம்போன்று சந்திரனுமிருந்தால் அது என்ன செய்யவேண்டும்?

**மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்**
**பலர்காணத் தோன்றல் மதி.** **1119**

சந்திரனே! மலர் போன்ற கண்களையுடைய என் காதலியின் முகத்திற்கு ஒப்பாக இருக்க நீ விரும்பினால் பலரும் காணத் தோன்றாதிரு.

*தோன்றல் - தோன்றாதே.*

10. மாதரின் பாதம் மென்மையானதா?

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்.** **1120**

அனிச்சமலரும் அன்னப்பறவையின் இறகும் மாதரின் பாதத்திறகு நெருஞ்சி முள் போன்றவை.

*தூவி - இறகு; அடி - பாதம்; நெருஞ்சிப்பழம் - நெருஞ்சிமுள்.*

## 113. காதற் சிறப்புரைத்தல்

*(காதலின் மென்மையைக் காதலர் கூறுதல்)*

1. காதலியின் உமிழ்நீர் எது போன்றிருந்தது?

**பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வால்எயிறு ஊறிய நீர்.** 1121

மென்மொழி பேசுபவளது வெண்பற்களில் ஊறிய நீர் பாலுடன் தேன்கலந்தது போன்றது.

*பணிமொழி - மென்மொழி; வால் - வெண்மை; எயிறு - பல்; வால்எயிறு - வெண்பல்.*

2. உங்கள் இருவருக்கும் இடையேயுள்ள நட்பு எத்தகையது ?

**உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு.** 1122

அப்பெண்ணுக்கும் எனக்குமிடையே உள்ள நட்பு, உடம்போடு உயிருக்கு என்ன தொடர்போ அதைப் போன்றதேயாகும்.

*மடந்தை - பெண்.*

3. கண்ணின் கருமணியின் பாவையாகிய நானேன் போகவேண்டும் ?

**கருமணியில் பாவாய்நீ போதாய்யாம் வீழும்**
**திருநுதற்கு இல்லை இடம்.** 1123

நான் விரும்பும் அழகிய நெற்றியுடைய என் காதலிக்கு இருக்க இடமில்லை ஆதலால் என் கண்ணின் கருமணியில் இருக்கும் பாவையே! நீ போய் விடு!

*வீழும் - விரும்பும்; திருநுதல் - அழகிய நெற்றி.*

4. காதலியால் எப்படி வாழ்தலும் சாதலும் நடக்கின்றன?

**வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்**
**அதற்குஅன்னாள் நீங்கும் இடத்து.** 1124

ஆராய்ந்து அணிந்த நகைகளையுடைய என் காதலி என்னுடன் சேரும்போது எனது உயிரை வாழவைப்பவள், என்னைவிட்டு நீங்கும் போது சாகவைக்கிறாள்.

*ஆயிழை - ஆராய்ந்து அணிந்த நகைகளையுடையவள்*

5. காதலியை நினைப்பதுண்டா?

**உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்**
**ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.** 1125

அழகிய போர் செய்யும் கண்களையுடைய என் காதலியின் குணங்களை நான் மறந்தால்தானே நினைக்கமுடியும், ஆனால் ஒரு முறையேனும் மறந்ததில்லையே.

*ஒள் -அழகு; உள்ளுவன் - நினைப்பவன்; மறப்பின் - மறந்தால்; அமர்கண் - போர்க்கண்.*

6. காதலர் எப்படிப்பட்டவர்?

**கண்உள்ளின் போகார் இமைப்பின் பருவரார்**
**நுண்ணியர்எங் காத லவர்.** 1126

எம் காதலர் கண்ணுக்குளிருந்து போகமாட்டார். கண்ணை இமைத்தாலும் வருந்தமாட்டார். ஏனெனில் அவர் அவ்வளவு நுட்பமானவர்.

*பருவரார் - வருந்தமாட்டார்; பருவந்து - வருந்தி; நுண்ணியர் - நுட்பமானவர்.*

7. ஏன் கண்ணுக்கு மை தீட்டுதில்லை?

**கண்உள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து.** 1127

கண்ணுக்குள் இருக்கும் காதலர் கண்ணுக்கு மைபூசினால் மறைந்துவிடுவார் என்பதை அறிந்து கண்ணுக்கு மை தீட்டுவதில்லை.

*கண்ணுள்ளார் - கண்ணுக்குளுள்ளார்; காதலவர் - காதலர்; கரப்பாக்கு - மறைதல்.*

8. ஏன் சூடாக ஒன்றையும் சாப்பிடுதில்லை ?

**நெஞ்சத்தார் காத லவராக வெய்துஉண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.** 1128

காதலர் நெஞ்சுக்குள் இருப்பதால் சூடானவற்றைச் சாப்பிட்டால் அவருக்குச் சுட்டுவிடுமென எண்ணிப் பயப்படுகிறேன்.

*வெய்து - சுடானது; உண்டல் - சாப்பிடல்; வேபாக்கு - சுடும்.*

9. காதலனை அன்பில்லாதவர் என்று ஏன் இந்த ஊர் கூறுகின்றது?

**இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே**
**ஏதிலர் என்னும்இவ் ஊர்.** 1129

கண்ணை இமைத்தாலே காதலர் மறைந்து போய்விடுவார் என்பதை அறிவேன். அதற்காகவே நான் கண்ணை இமையாது இருப்பதால் இந்த ஊர் அவரை அன்பில்லாதவர் என்று சொல்கின்றது.

*கரப்பாக்கு - மறைதல்; அனைத்திற்கே - அதற்காகவே;*
*ஏதிலர் - அன்பில்லாதவர்.*

10. காதலர் பிரிந்து வாழ்கின்றாரா?

**உவந்துஉறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துஉறைவர்**
**ஏதிலர் என்னும்இவ் ஊர்.** 1130

காதலர் எப்போதும் எனது உள்ளத்தில் மகிழ்ச்சியாக வாழ்கின்றார். ஆனால் அதனை அறியாது, இவ்வூர் அவர் பிரிந்து வாழ்கின்றார் அன்பில்லாதவர் என்கின்றது.

*உவந்து - மகிழ்ந்து; இகந்து - பிரிந்து;*
*ஏதிலர் - அன்பில்லாதவர்.*

## 114. நாணுத் துறவுரைத்தல்

*(காமம் மிகுதியால் வெட்கத்தை கைவிடல்)*

1. காமம் உள்ளவர்க்குத் துணை எது ?

**காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடல்அல்லது இல்லை வலி.** 1131

காமத்தில் அழுந்தி வருந்துபவர்க்கு பாதுகாப்புத் தருவது மடல் ஏறுவதே, அதைத் தவிர வலிமை தரக்கூடியது வேறு இல்லை.

*மடல் - பனையின் கருக்கமட்டையால் செய்த குதிரை; உழந்து - அழுந்தி, ஏமம் - பாதுகாப்பு, மடல்ஏறுதல் - பனை மட்டைக் குதிரையில் ஏறிச்சவாரி செய்து காதலை உண்மையென உறுதி செய்தல்.*

2. ஏன் இப்படி மடல் ஏறுகிறாய்?

**நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்**
**நாணினை நீக்கி நிறுத்து.** 1132

என் காதலியை நினைத்து வருந்தும் துன்பத்தைப் பொறுக்காமல் உடம்பும் உயிரும் வெட்கத்தை விட்டு மடல் ஏறத் துணிந்தன.

*நோனா - பொறாத; நீக்கி - விட்டு; நிறுத்து - துணிந்து.*

3. இப்போது இருப்பது என்ன?

**நாணொடு நல்லாண்மை பண்டுஉடையேன் இன்றுஉடையேன்**
**காமுற்றார் ஏறும் மடல்.** 1133

முன்பு நாணத்தோடு நல்ல ஆண்மையும் உடையவனாக இருந்தேன். காதலியின் நினைவால் இன்று காமம் மிகுந்தவர் ஏறும் மடலை உடையவனாக இருக்கின்றேன்.

*பண்டு - முன்பு; காமுற்றார் - காமம் கொண்டவர்; மடல் - பனை மட்டையால் செய்த குதிரை.*

4. முன்பு இருந்த நாணமும் ஆண்மையும் எங்கே போயிற்று?

**காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை என்னும் புணை.** 1134

காமம் என்னும் பெருவெள்ளம், நாணத்தோடு நல்ல ஆண்மை என்ற தோணிகளை இழுத்துக் கொண்டு போய்விட்டதே.

*கடும்புனல் - பெருவெள்ளம்; உய்க்கும் - கொண்டுபோதல்; புணை - தோணி.*

5. யார் மடலேறும் துன்பத்தைத் தந்தது?

**தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு**
**மாலை உழக்கும் துயர்.** 1135

மாலை போல் சிறு காப்புகளை அணிந்த என் காதலி, மாலைக் காலத்தில் வருத்தும் துன்பத்தையும், மடலேறுதலையும் எனக்குத்தந்தாள்.

*தொடலை - மாலை; குறுந்தொடி - சிறு காப்பு; உழக்கும் - வருத்தும்; துயர் - துன்பம்.*

6. மடலேறுதல் அச்சத்தைக் தரவில்லையா?

**மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற**
**படல்ஒல்லா பேதைக்குஎன் கண்.** 1136

ஒன்றுமறியாத பேதையான என் காதலியின் நினைவால் என் கண்கள் உறங்காததால் மடல் ஊர்தலை யாமத்திலும் உறுதியாக நினைக்கிறேன்.

*ஊள்ளுவென் - நினைப்பேன்; ஒல்லா - மூடாது; படல்ஒல்லா - உறங்காது. படல் - ஒன்றொடொன்று சேர்தல்.*

7. பெண்கள் மடல் ஏறுவரா?

**கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்.** 1137

கடல்போலக் காமத்தில் மூழ்கினாலும், அத்துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, மடல் ஏறாமலிருக்கும் பெண்ணைவிடப் பெருமையுடையது வேறு இல்லை.

*உழல்தல் - மூழ்குதல்; பெருந்தக்கது - பெருமையுடையது.*

8. எது மன்றத்தில் வெளிப்படுகின்றது?

**நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்**
**மறைஇறந்து மன்று படும்.** 1138

இவர் ஒழுக்கத்திலரியவர் இரங்கத்தக்கவர் என்பதைக் கருத்தில் கொள்ளாது, காமம் மறைந்திருக்காமல் வெளிப்படுகின்றதே!

*நிறை - ஒழுக்கம்; மன்று - அம்பலம்;*
*மன்றுபடும் - அம்பலப்படும் (வெளிப்படும்);*
*மறை இறந்து - மறைந்திருக்காது; அளியர் - இரங்கத்தக்கவர்;*

9. யாரும் அறியாத உன்னை எல்லோரும் எப்படி அறிந்தனர்?

**அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்**
**மறுகின் மறுகும் மருண்டு.** 1139

என்னை எல்லோரும் அறியமாட்டார்கள் என்றே என் காமம் அலராகத் தெருவெல்லாம் மயங்கிச் சுழல்கின்றது.

*மறுகின் - தெருவின்; மருகும் - சுழலும், மருண்டு - மயங்கி;*
*அலர் - பலரும் பழி சொல்லல்.*

10. ஏன் பிறர் உன்னைப் பார்த்துச் சிரிக்கின்றனர்?

**யாங்கண்ணின் காண நகுப அறிவுஇல்லார்**
**யாம்பட்ட தாம்படா வாறு.** 1140

காதலால் நாம்பட்ட துன்பத்தைத் தாம் படாததால் அறிவில்லாதவர் நாம் காண, நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றனர்.

*நகுதல் - சிரித்தல்.*

## 115. அலர் அறிவுறுத்தல்

*(காதலரை ஊரார் பழித்தல்)*

1. காதலரைப் பற்றி அலர் கூறுதல் நல்லதா?

**அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்**
**பலர்அறியார் பாக்கியத் தால்.** 1141

நான் செய்த பாக்கியத்தால் அலரெழுவதால் என் ஆருயிர் போகாமல் நிற்கின்றது அதனைப் பலர் அறியவில்லை.

*அலர் - பலரும் பழிதூற்றல்; எழ - எழுதல்;*
*பாக்கியம் - புண்ணியம்.*

2. இந்த ஊர் தந்தது என்ன?

**மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது**
**அலர்எமக்கு ஈந்ததுஇவ் வூர்** 1142

மலர் போன்ற கண்ணையுடையவளது அருமையை அறியாது, எமக்கு அலரைப் பரிசாக இவ்வூர் தந்தது.

*மலர்அன்ன - மலர் போன்ற; ஈந்தது - தந்தது.*

3. காதலியை விரைவாக அடைய வழி என்ன?

**உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்**
**பெறாஅது பெற்றன்ன நீர்த்து.** 1143

ஊரெல்லாம் தெரிய அலர் வரமாட்டாதா? அதனைப் பெறாமலே பெற்றது போன்ற இன்பம் ஏற்படுகின்றது.

*உறாதோ - வரமாட்டாதோ; கௌவை - அலர்.*

4. அலர் இல்லையாயின் காதல் என்னவாகும்?

**கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்**
**தவ்வெனும் தன்மை இழந்து.** 1144

ஊரார் அலர் தூற்றுவதால் காதல் மேன் மேலும் வளர்கின்றது. அது இல்லையாயின் தன் இயல்பை இழந்து காதல் சுருங்கிவிடும்.

*கவ்வை - அலர்; (பழிச்சொல்) கவ்விது - வளர்தல், தவ்வும் - சுருங்கும்.*

5. அலரைக் காதலர் ஏன் விருப்புவர் ?

**களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்**
**வெளிப்படுந் தோறும் இனிது.** 1145

கள்ளுண்டு மயங்க, மயங்க கள்ளை விரும்புவதுபோல காமமும் ஊராருக்கு வெளிப்படும் தோறும் இனிமையாக இருக்கும்.

*களி - மயக்கம்; வேட்டல் - விரும்புதல்.*

6. எத்தனை நாள் காதலரைப் பார்த்திருக்கின்றாய்?

**கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண்டற்று** 1146

காதலரைக் கண்டது ஒரு நாள்தான். அதனால் வந்த அலரோ கிரகணம் வந்ததுபோல ஊரெல்லாம் பரவிவிட்டது.

*அலர் - பழிதூற்றல்; திங்களைப்பாம்பு கொண்டது - கிரகணம்.*

7. காதல் நோய் எப்படி மிகவிரைவாக வளரும்?

**ஊரவர் கௌவை எருஆக அன்னைசொல்**
**நீராக நீளும்இந் நோய்** 1147

ஊராரின் அலர் தூற்றல் எருவாக, தாய் திட்டும் கடுஞ் சொற்களே நீராக, இந்தக்காதல் நோய் வளரும்.

*கௌவை - அலர்; நீளும் - வளரும்.*

8. காமத்தை அலரால் அணைக்க முடியாதா?

**நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல். 1148**

நெய்விட்டு நெருப்பை அணைப்போம் என்பது போன்றதே, அலரால் காமத்தை அணைப்போமென்று கூறுவதும்.

*நுதுப்பேம் - அணைப்போம்; கௌவை - அலர்.*

9. காதலரால் வரும் அலருக்காக ஏன் வெட்கப்படுவதில்லை?

**அலர்நாண ஒல்வதோ அஞ்சல்ஓம்பு என்றார்**
**பலர்நாண நீத்தக் கடை. 1149**

அஞ்ச வேண்டாமென்று கூறியவர் பலரும் நாணும்படியாக என்னைவிட்டுப் பிரிந்த பின் நான் மட்டும் அலருக்காக வெட்கப்பட முடியுமா?

*ஒல்வதோ - முடியுமே, ஓம்பு - தவிர்; நீத்தல் - பிரிதல்.*

10. அலரால் என்ன நடக்கப் போகின்றது?

**தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்**
**கௌவை எடுக்கும்இவ் ஊர். 1150**

நான் விரும்புகின்ற அலரை இந்த ஊர் எடுத்துப்பேசுகின்றது. எனவே தான் விரும்பினால் காதலர் என்னைத் திருமணம் செய்து கொள்வார்.

*வேண்டின் - விரும்பின்; வேண்டும் - விரும்பும்;*
*கௌைவ - அலர்; நல்குவார் - வரைந்து கொள்ளல் (திருமணம் செய்தல); எடுக்கும் - தூற்றல்.*

# 116. பிரிவு ஆற்றாமை

*(பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாத தன்மை)*

1. பிரிந்து செல்வதைச் சொல்லப்போகும் காதலருக்குக் காதலியென்ன சொல்வாள்?

**செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை.** 1151

பிரிந்து செல்லவில்லை என்றால் எனக்குச்சொல். திரும்பி விரைவில் வருவதைப்பற்றி, வரும்வரை உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பவருக்குச் சொல்.

*செல்லாமை - பிரிந்து செல்லாதிருத்தல்; வரவு - வருகை; உரை - சொல். வல்வரவு - விரைந்து வருதல்.*

2. ஏன் காதலருடன் கூடுவது இப்போது துன்பத்தைத் தருகின்றது?

**இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவுஅஞ்சும்**
**புன்கண் உடைத்தால் புணர்வு.** 1152

காதலனுடைய பார்வை முன்பு இன்பம் உடையதாக இருந்தது. அவர் பிரிவாரென்று பயப்படுவதால் அவருடன் கூடுவதும் துன்பமுடையதாக இருக்கின்றது.

*இன்கன் - இன்பம்; பார்வல் - பார்வை; புண்கன் - துன்பம்; பிரிவஞ்சும் - பிரிவுக்குப் பயப்படும்; புணர்வு - கூடுதல்.*

3. அறிவுடையாரைக் காதலித்தால் பிரிவு வரமாட்டாதே?

**அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்**
**பிரிவுஓர் இடத்துஉண்மை யான்.** 1153

அறிவுடைய காதலராக இருந்தாலும் பிரிவொரு நேரம் வருமென்பது உண்மையானதால் பிரியேனென்று அவர் சொல்லும் உறுதி மொழியையும் நம்புதல் அரிதாகும்.

*தேற்றம் - உறுதி (மொழி)*

4. அவருடய சொல்லை நம்பியது உன் தவறல்லவா ?

**அளித்துஅஞ்சல் என்றுஅவர் நீப்பின் தெளித்தசொல்**
**தேறியார்க்கு உண்டோ தவறு. 1154**

இரக்கத்துடன் அஞ்சாதேயென்றவர் பிரிந்து சென்றதில், அவர்கூறிய உறுதிமொழியை நம்பியவரின் மேல் தவறு உண்டோ ?

*அளித்து - இரங்கி; நீப்பின் - பிரியின்; தேறியார்க்கு - நம்பியவர்க்கு.*

5. எவரின் பிரிவுவராமல் காக்க வேண்டும்?

**ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றவர்**
**நீங்கின் அரிதால் புணர்வு. 1155**

பிரிவுவராமல் காப்பதாயின் காதலராகச் சேர்ந்தவரின் பிரிவுவராமல் காக்கவேண்டும். அவர் பிரிந்தால் மீண்டும் சேர்தல் அரிதாகும்.

*ஓப்பின் - காப்பதாயின்; அமைந்தார் - சேர்ந்தார்;*
*ஓம்பல் - காத்தல்; நீங்கின் - பிரிந்தால்; புணர்வு - சேர்தல்.*

6. எப்படிப்படடவர் மீண்டும் வந்து திருமணம் செய்யமாட்டார்?

**பிரிவுஉரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதுஅவர்**
**நல்குவர் என்னும் நசை. 1156**

பிரிந்து போவதைச்சொல்லும் அளவிற்கு வைரநெஞ்சம் இருக்குமானால் அவர் திரும்பி வந்து திருமணம் செய்வாரென்னும் ஆசை வீணானது.

*வன்கண்ணன் - வைரநெஞ்சினன்: நசை - ஆசை;*
*நல்குவர் - திருமணம்செய்வார்;*

7. காதலன் பிரிந்து சென்றது எப்படி ஊராருக்குத்தெரிய வந்தது?

**துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை**
**இறைஇறவா நின்ற வளை. 1157**

தலைவன் என்னைவிட்டுப் பிரிந்த செய்தியை முன்கை மூட்டிலிருந்து கழன்றுவிழும் வளையல்கள் ஊரறியத் தூற்றாதிருக்குமா?

*துறைவன் - தலைவன் (கடற்துறைத் தலைவன்);*
*துறந்தது - பிரிந்தது; இறை - மூட்டு.*

8. உறவினர் இல்லா ஊரில் வாழ்தலா காதலர் பிரிவா துன்பமானது?

**இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்**
**இன்னாது இனியார்ப் பிரிவு.** 1158

எமக்கு உறவு இல்லாதவர் வாழுமூரில் வாழ்தல் துன்பமானது. அதனிலும் துன்பமானது இனியகாதலரைப் பிரிதல்.

*இன்னாது - துன்பமானது; இனன் - உறவு.*

9. தீயைவிடப் பிரிவு சுடுமா?

**தொடின்சுடின் அல்லது காமநோய் போல**
**விடின்சுடல் ஆற்றுமோ தீ.** 1159

தீ தொட்டால் சுடுமே இல்லாமல் காமநோய் போல விட்டுப்பிரிந்த பின் தீயால் சுடமுடியுமோ?

*தொடின் - தொட்டால்; விடின் - விட்டால்.*

10. பிரிவுத் துன்பத்தைத் தாங்கி வாழ்பவரும் இருக்கிறார்களா?

**அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்**
**பின்இருந்து வாழ்வார் பலர்.** 1160

பிரிவதற்குச் சம்மதித்து, பிரிந்து சென்றதற்கும் வருந்தாது, பிரிவுத் துன்பத்தைப் பொறுத்திருந்து பின் சேர்ந்திருந்து வாழ்வோர் பலர் இருக்கிறார்கள்.

*அரிது ஆற்றி - சம்மதித்து; பிரிவு ஆற்றி - பிரிவைப் பொறுத்திருந்து.*

## 117. படர் மெலிந்து இரங்கல்

*(காதலனின் பிரிவை நினைத்து வருந்துதல்)*

1. பிரிவுத் துன்பத்தை மறைக்க முடியுமா?

**மறைப்பேன்மன் யான்இ∴தோ நோயை இறைப்பவர்க்கு**
**ஊற்றுநீர் போல மிகும்.** 1161

நான் காமநோயை மறைப்பேன். இதுவோ இறைக்கின்றவர்க்கு ஊற்று நீர்போல ஊறிக் கொண்டே இருக்கின்றது.

*இ∴தோ - இதுவோ; மிகும் - ஊறும்.*

2. இக்காமநோயைக் காதலருக்குச் சொன்னால் என்ன?

**கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு**
**உரைத்தலும் நாணுத் தரும்.** 1162

இந்த காமநோயை மறைக்கவும் முடியவில்லை. இந்நோயைக் கொடுத்தவர்க்குச் சொல்லவும் வெட்கமாக இருக்கிறது.

*கரத்தல் - மறைத்தல்; செய்தார்க்கு - கொடுத்தார்க்கு; நாணம் - வெட்கம்; உரைத்தல் - சொல்லல்.*

3. காமமும் நாணமும் எங்கிருக்கின்றன?

**காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்**
**நோனா உடம்பின் அகத்து.** 1163

பிரிவைத் தாங்கமுடியாத என் உடம்பினுக்குள்ளே உயிர் காவடித்தண்டாக, அதன் இருமுனையிலும் காமமும் நாணமும் தொங்குகின்றன.

*காவா - காத்தண்டு (காவடித்தண்டு) அகத்து - உள்ளே, நோனா - வருத்தத்தைத் தாங்கமுடியாத.*

4. காதலர் மேல் எவ்வளவு காமம் உண்டு?

**காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்**
**ஏமப் புணைமன்னும் இல். 1164**

காமம் கடல்போல இருக்கின்றது. ஆனால் அதை நீந்திக்கடக்க பாதுகாப்பான தோணிதான் இல்லை.

*ஏமம் - பாதுகாவல்; புணை - தோணி.*

5. காதலர் பிரிந்தாலும் நட்பாகத்தானே இருக்கிறார். அதற்கு ஏன் கவலை?

**துப்பின் எவன்ஆவர் மன்கொல் துயர்வரவு**
**நட்பினுள் ஆற்று பவர். 1165**

நட்பாக இருக்கும் போதே பிரிவால் துயரம்வரச் செய்கின்றவர், பகைவரானால் என்ன செய்வாரோ?

*துப்பு - பகை; துயர் வரவு - துயர் வருமாறு (துயரடைய).*

6. காமத்தால் வருந்துவது எவ்வளவு பெரிய துன்பம்?

**இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடும்கால்**
**துன்பம் அதனின் பெரிது. 1166**

காமத்தால் வருமின்பம் கடல்போன்றது. அது வருத்தும் போது வரும் துன்பம் கடலிலும் பெரியது.

*அடும் - வருத்தும்; கால் - போது.*

7. காமக்கடலை தனியே நீந்திக்கரைகாண முடியுமா?

**காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்**
**யாமத்தும் யானே உளேன். 1167**

நடுச்சாமத்திலும் நானே தனித்திருக்கின்றேன். எனவே காமமாகிய பெருவெள்ளத்தை நீந்திக்கரைகாண முடியவில்லை.

*கடும்புனல் - பெருவெள்ளம்; யாமம் - சாமம்(நள்ளிரவு).*

8. இரவுக்கு யார் துணை?

**மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்துஇரா**
**என்அல்லது இல்லை துணை.** 1168

இரக்கத்துக்குரிய இரவு உலகஉயிர்களை எல்லாம்உறங்கச் செய்துவிட்டு, என்னை இல்லாமல் வேறு துணையின்றி இருக்கின்றது.

*மன்னுயிர் - உலகத்தில் நிலைத்துள்ள உயிர்கள்; துயிற்றி - தூங்கச்செய்து;*

9. கொடியவரது கொடுமையிலும் கொடியது எது?

**கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்**
**நெடிய கழியும் இரா.** 1169

கொடியவராகிய காதலர் பிரிந்த கொடுமையைவிட, இப்பொழுதெல்லாம் நீண்டு கொண்டு போகின்ற இராக்காலம் தான் கொடியது.

*கொடியார் - கொடியவர்; கொடிய - கொடியது; நெடிய - நீண்ட; கழியும் - போகும்; இரா - இராக்காலம்.*

10. எது செல்வதுபோல் காதலர் இருக்கும் இடத்திற்குச்செல்ல வேண்டும்?

**உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
**நீந்தல மன்னோஎன் கண்.** 1170

காதலர் இருக்குமிடத்திற்கு என்மனதைப்போல விரைவாகச் செல்லமுடியுமானால், என் கண்கள் கண்ணீர் வெள்ளத்தில் நீந்த வேண்டியதில்லை.

*உள்ளம் - மனம்; உள்வழி - இருக்கின்ற இடம்;*
*வெள்ளநீர் - கண்ணீர் வெள்ளம*

# 118. கண் விதுப்பு அழிதல்

*(கணவரைக் காணக் கண் ஆசைப்படுவதால் மனம் வருந்துதல்)*

1. கண்கள் அழுவது சரியா?

**கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்**
**தாம்காட்ட யாம் கண்டது.** 1171

தணியாத இக்காமநோய் கண்கள் காதலரைக்காட்ட நாம் கண்டதால் தானே வந்தது. அப்படியிருக்க இப்போது எதற்காக இக்கண்கள் அழுகின்றன?

*கலுழும் - அழுவது; எவன்கொலோ - எதற்காகவோ;*
*தண்டா - தணியாத;*

2. கண்ணின் பிழை என்ன?

**தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துஉணராப்**
**பைதல் உழப்பது எவன்.** 1172

ஆராய்ந்தறியாது காதலரைப்பார்த்த என் மை தீட்டிய விழிகள், எப்படித்துன்பம் வந்ததென்று பகுத்துணராது வருந்துவது ஏன்?

*தெரிந்து - ஆராய்ந்து; நோக்கிய - பார்த்த; பரிந்து - பகுத்து;*
*பைதல் - துன்பம்; உழப்பது - வருந்துவது.*

3. கண்ணின் செயல் ஏன் சிரிக்கத் தகுந்தது?

**கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்**
**இதுநகத் தக்கது உடைத்து.** 1173

அன்று காதலரைத் தாமே விரைவாகச் சென்று பார்த்தகண்கள் இன்று தாமே அழுகின்றன. இச்செயல்சிரிக்கத் தகுந்ததாகும்.

*கதுமென - விரைவாக; கலுழும் - அழும்;*
*நகத்தக்கது - சிரிக்கத் தகுந்தது.*

4. எத்தகைய நோயைக் கண்களுண்டாக்கி உள்ளன?

**பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா**
**உய்வுஇல்நோய் என்கண் நிறுத்து.** 1174

எனது மை தீட்டிய விழிகள் தப்ப முடியாத தீராத காமநோயை என்னிடமுண்டாக்கி வைத்துவிட்டு, தாமும் அழமுடியாது நீர்வறண்டு போயிருக்கின்றன.

*ஆற்றா - முடியாத; உயல் - தப்புதல்; உய்வு இல்நோய் - தீராதநோய்; பெயல்ஆற்றா - அழமுடியாத; உண்கண் - மைதீட்டியவிழி.*

5. என்ன துன்பத்தால் கண்கள் வருந்துகின்றன?

**படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்**
**காமநோய் செய்தஎன் கண்.** 1175

கடலாலும் தாங்கமுடியாத அளவுக்கு எனக்குக் காமநோயை உண்டாக்கிய என்கண்கள், இன்று உறங்கமுடியாத துன்பத்தால் வருந்துகின்றன.

*படல் - உறக்கம்; ஆற்றா - முடியாது; பைதல் - துன்பம்; உழக்கும் - வருந்தும்; கடல்ஆற்றா - கடலும் தாங்கா.*

6. கண்கள் துன்பப்படுவது ஏன் இனிமையானது?

**ஓஓ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்**
**தாஅம் இதற்பட் டது.** 1176

எமக்கு இந்தக் காமநோயைத் தந்த கண்கள் தானும் இப்படிப் பட்ட துன்பம் அடைதல் மிகமிக இனிமையானதே!

*ஓஓ - மிகமிக; செய்த - உண்டாக்கிய; இதன்பட்டது - இத்தகைய.*

7. ஏன் கண்ணிலிருந்து கண்ணீரற்றுப் போக வேண்டும்?

**உழந்துஉழந்து உள்நீர் அறுக விழைந்துஇழைந்து**
**வேண்டி யவர்க்கண்ட கண்.** 1177

விரும்பி உள்ளம் நெகிழ்ந்து அவரைப் பார்த்த கண்ணே! இன்று நீ, உறங்காது துன்பத்திலழுந்தி உள்ள கண்ணீரெல்லாம் அற்றுப்போ!

*உழந்துஉழந்து - துன்பத்திலழுந்தி; அறுக - அற்றுப்போ; விழைந்து - விரும்பி; இழைந்து - உள்ளம் நெகிழ்ந்து.*

8. யாரைப் பார்க்காததால் கண்கள் அமைதியடையவில்லை ?

**பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றுஅவர்க்**
**காணாது அமைவில கண்.** 1178

மனதாரவிரும்பாது வார்த்தை அளவில் விரும்பியவர் ஒருவர் இருக்கிறார். அவரைக் காணாது கண்கள் அமைதி அடையவில்லை.

*பேணாது - விரும்பாது; பெட்டவர் - விரும்பியவர்; அமைவில - அமைதியடைவில்லை.*

9. எத்தகைய துன்பத்தை கண்கள் அடைகின்றன?

**வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை**
**ஆரஞர் உற்றன கண்.** 1179

என் கண்கள் காதலர் வரவில்லை என்றாலும் உறங்குவதில்லை. வந்தாலும் உறங்குவதில்லை. இவற்றிடையே அவை மிகத் துயரடைகின்றன.

*வாராக்கால் - வராவிட்டால்; துஞ்சா - உறங்காது; ஆயிடை - இவற்றிடை; ஆரஞர் - மிகத்துயர்.*

10. எப்படி ஊரார் இரகசியங்களை மிகஎளிதாக அறிகின்றனர்?

**மறைபெறல் ஊரார்க்கு அரிதுஅன்றால் எம்போல்**
**அறைபறை கண்ணா ரகத்து.** 1180

எம்மைப் போன்று துன்பத்தைப் பறைசாற்றும் கண்களை உடையவரிடம் இருந்து, இரகசியத்தை அறிதல் ஊரார்க்கு எளிதாகும்.

*மறை - இரகசியம்; அரிதன்று - எளிது; அறைபறை - பறைசாற்றுதல்.*

# 119. பசப்புறு பருவரல்

*(பிரிவை நினைத்து வருந்துவதால் உடலின் நிறம் வேறுபடுதல்)*

1. ஏன் உடல் வெளிறி மென்மஞ்சள் நிறமாகிறது?

**நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்**
**பண்பியார்க்கு உரைக்கோ பிற.** 1181

நான் இரக்கம் சிறிதுமில்லாது, என்னை விரும்பியவர் பிரிந்து செல்ல உடன்பட்டேன். அவர் பிரிவால் என்னுடல் மென்மஞ்சள் நிறமாக வெளிறும் தன்மையை யாரிடம் எடுத்துச்சொல்வேன்

*நயந்தார் - விரும்பியவர்; நல்காமை - இரக்கமில்லாது;*
*நேர்ந்தேன் - உடன்பட்டேன்; பண்பு - தன்மை;*
*பசலை - உடல் மென்மஞ்சள் நிறமாக வெளிறுதல்.*

2. உடல் முழுவதும் படர்வது என்ன?

**அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்**
**மேனிமேல் ஊரும் பசப்பு.** 1182

அவர் தந்தார் என்னும் மெருமிதத்தோடு என் உடல்முழுவதும் வெளிறிய மென்மஞ்சள் நிறம் (பசலை) ஊர்ந்து பரவி வருகின்றது.

*தகை - பெருமிதம்; இவர்தந்து - பரவி;*
*பசப்பு - வெளிறிய மென்மஞ்சள் நிறம்.*

3. காதலர் பிரிந்து செல்லும் போது எவற்றை எடுத்துக்கொண்டு, எவற்றைத் தந்துசென்றார்?

**சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையும் தந்து.** 1183

அவர் பிரிந்து செல்லும் போது எனது அழகையும் நாணத்தையும் எடுத்துக்கொண்டு, கைமாறாக காமநோயையும் பசலையையும் தந்து சென்றார்.

*சாயல் - அழகு; நோய் - காமநோய்;*
*பசலை - வெளிறிய மஞ்சள் நிறம்.*

4. பசலை படர்வதற்கு ஏன் கவலைப்பட வேண்டும்?

**உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்**
**கள்ளம் பிறவோ பசப்பு.** 1184

நான் அவரை நினைக்கிறேன். அவரின் திறமைகளையே சொல்கிறேன். அப்படியிருந்தும் பசலை வந்தது வஞ்சனையோ? அல்லது வேறு எந்தவிதமோ?

*உள்ளுவன் - நினைப்பன்; உரைப்பது - சொல்வது;*
*திறம் - திறமை; கள்ளம் - வஞ்சனை.*

5. எப்போது உடலில் பசலை வரும்?

**உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்**
**மேனி பசப்புஊர் வது.** 1185

உங்கபார் என் காதலர்பிரிந்து செல்கின்றார். இங்கபார் என்னுடலில் பசலை ஊர்வதை.

*உவக்காண் - உங்கபார்; இவக்காண் - இங்கபார்;*
*மேனி - உடல்; பசப்பு - பசலை.*

6. எந்தத் தருணத்தைப் பார்த்து பசப்புப்படரும்?

**விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்**
**முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு.** 1186

விளக்கு அணைவதைப் பார்த்திருந்து இருள்படர்வது போல பசப்பும் கணவனின் தழுவலின் முடிவைப் பார்த்திருக்கும்.

*அற்றம் - முடிவு (அணைதல்); கொண்கன் - கணவன்);*
*முயக்கு - தழுவல்.*

7. எவ்வளவு விரைவாகப் பசலை படரும்?

**புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்**
**அள்ளிக்கொள் வற்றே பசப்பு.** 1187

கணவனைத் தழுவிக் கிடந்தேன். சற்றே விலகினேன். அதற்கிடையே பசலை என்னுடலை எடுத்துக் கொண்டுவிட்டதே.

*புடை - சற்று; பெயர்ந்தேன் - விலகினேன்;*
*அவ்வளவில்- அதற்கிடையில்; அள்ளிக்கொள்வது - எடுத்துக் கொள்வது; புல்லி - தழுவி.*

8. ஊரார் என்ன சொல்கிறார்கள்?

**பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்**
**துறந்தார் அவர்என்பார் இல். 1188**

இவள் பசலை அடைந்தாளென்று சொல்கிறார்களே தவிர இவளைப் பிரிந்தார் அவரென்று சொல்வார் இல்லையே!

*துறந்தார் - பிரிந்தார்; இல் - இல்லை.*

9. எதற்காக உடம்பெல்லாம் பசலை படரவேண்டும்?

**பசக்கமன் பட்டாங்குஎன் மேனி நயப்பித்தார்**
**நல்நிலையர் ஆவர் எனின். 1189**

என்னைப் பிரிவுக்கு விரும்பவைத்தவர் நல்ல நிலையடைவார் என்றால் என்னுடைய உடல் முழுவதும் பசலையாகவே மாறட்டும்.

*பட்டாங்கு - மாறட்டும்; நயப்பித்தார் - விரும்பவைத்தவர்.*

10. ஏன் "பசப்பு" எனப்பெயர் எடுத்தல் நல்லது?

**பசப்புஎனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்**
**நல்காமை தூற்றார் எனின். 1190**

தனது பிரிவுக்கு என்னையுடன்பட வைத்தவரை இரக்கமில்லாதவரென்று ஊரார் தூற்ற மாட்டார்கள் என்றால் நான்"பசப்பு" எனப் பெயர் எடுத்தல் நல்லதே.

*நயப்பித்தல் - விரும்பவைத்தல் (உடன்படவைத்தல்);*
*நல்காமை - இரங்காத தன்மை.*

# 120. தனிப்படர் மிகுதி

*(தனிமைத்துன்பம்)*

1. காதற் கனியைப் பெற்றவர் யார்?

**தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
**காமத்துக் காழில் கனி.** 1191

தான்விரும்பும் காதலர் தன்னைவிரும்பும் பேறுபெற்றவர், காதலின் விதையற்ற கனியைப் பெற்றவர் ஆவார்.

*வீழ்வார் - விரும்புபவர்; காழில் - விதையற்ற.*

2. காதலர் செலுத்துகின்ற அன்பு எதைப்போன்றது?

**வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி.** 1192

தன்னை விரும்புவர்க்கு காதலர் செலுத்துமன்பு உயிர் வாழ்கின்றவர்க்கு மேகம் மழைபொழிந்து காப்பது போன்றதாகும்.

*வீழ்வார்க்கு - விரும்புபவர்க்கு; அளிக்கும் - செலுத்தும்; அளி - அன்பு.*

3. யாரிடம் இருக்கும் செருக்கு பொருத்தமானது?

**வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே**
**வாழுநம் என்னும் செருக்கு.** 1193

காதலர் திரும்பி வந்தபின் நாம் வாழ்வோம் என்னும் செருக்கு காதலரால் விரும்பப்படுபவர்க்குப் பொருத்தமானதேயாகும்.

*வீழுநர் - விரும்பினவர்; வீழப்படுபவர் - விரும்பப்படுபவர்; வாழுநம் - வாழுவோம்; அமையுமே - பொருந்துமே.*

4. காதலரால் விரும்பப்படாவிட்டால் என்ன நடக்கும்?

**வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்.** 1194

தாம்விரும்பும் காதலரால் விரும்பப்படாவிட்டால், விரும்பப்படுபவர் உறவற்றவராவார்.

*வீழப்படுவார் - விரும்பப்படுபவர்; கெழீஇ - உறவுகொண்ட; கெழீஇயிலர் - உறவற்றவர். வீழ்வார் - விரும்பும்*

5. நாம்மட்டும் காதல் கொண்டால் போதும்தானே?

**நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ**
**தாம்காதல் கொள்ளாக் கடை.** 1195

நாம் காதல் கொண்ட காதலர் தாமும் காதல் கொள்ளவில்லையானால் நமக்கு அவரென்ன செய்வார்?

*கொள்ளாக்கடை - கொள்ளவில்லையானால்.*

6. ஒருதலைக்காதல் எத்தகையது?

**ஒருதலையான் இன்னாது காமம்காப் போல**
**இருதலை யானும் இனிது.** 1196

ஒரு பக்கக்காதல் துன்பமானது. காவடிப் பாரம்போல காதலும் இருபக்கமும் ஒத்ததாக இருத்தலே இன்பமானது.

*ஒருதலை - ஒருபக்கம், கா - காவடி, இருதலை - இருபக்கம்.*

7. ஒருதலைக் காதல் தரும் துன்பத்தை எவனறியமாட்டான்?

**பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்**
**ஒருவர்கண் நின்றொழுகு வான்.** 1197

ஒருவரிடம் மட்டுமே நின்று காதலை வளாப்பதனால் மன்மதன் காதல் தரும் துன்பத்தையும், காமநோயையும் அறியமாட்டானோ?

*பருவரல் - துன்பம்; பைதல் - காமநோய்; காமன் - மன்மதன்; ஒழுகுவான் - வளர்ப்பான்.*

8. உலகத்தில் மிகக் கொடிய கல் நெஞ்சுடையவர் யார்?

**வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.** 1198

தான் விரும்புகின்ற பிரிந்துசென்ற காதலரிடமிருந்து இனிய சொல்லைப் பெறாது பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து வாழ்பவர் போல உலகத்தில் கல்நெஞ்சம் உடையவர்கள் யாருமே இல்லை.

*வீழ்வார் - விரும்பும்; வன்கணார் - கல் நெஞ்சர்.*

9. யாருடைய புகழைக் கேட்பதும் காதுக்கு இனிமையாக இருக்கின்றது?

**நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு**
**இசையும் இனிய செவிக்கு.** 1199

என்னால் விரும்பப்பட்ட காதலர் என்மேல் அன்புசெலுத்த மாட்டாரென்றாலும் அவரைப் பற்றிய புகழைக் கேட்பதும் காதுக்கு இனிமையாக இருக்கின்றது.

*நசைஇயார் - விரும்பப்பட்ட; நல்கார் - அன்புசெய்யார்; இசை - புகழ்.*

10. எதைவிட கடலைத் தூர்த்தல் எளிமையானது?

**உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு.** 1200

நெஞ்சே! நீ வாழ்வாயாக! உன்னிடம் அன்பில்லாதவரிடம் உனக்கு வந்த மிக்கதுயரத்தைச் சொல்கின்றாய்! அதைவிடக் கடலைத் தூர்த்தல் மிகஎளிதாகும்.

*உறார்க்கு - அன்பிலாதவர்க்கு; உறுநோய் - மிக்கதுயரம்.*
*செறாஅஅய் - தூர்த்தல்(நிரப்புதல்).*

## 121. நினைந்தவர் புலம்பல்

*(காதலின்பத்தை நினைந்து வருந்துதல்)*

1. எதைவிடக் காமம் இனிமையானது?

**உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்**
**கள்ளினும் காமம் இனிது.** 1201

நினைத்தாலும் தீராத பெரிய மகிழ்ச்சியைத் தருவதால் குடித்தால் மகிழ்வு தரும் கள்ளைவிடக் காமம் இனிமையானது.

*உள்ளினும் - நினைத்தாலும்; செய்தலால் - தருவதால்.*

2. காமம் ஏன் இனிமையானது?

**எனைத்துஒன்று இனிதேகாண் காமம் தாம்வீழ்வார்**
**நினைப்ப வருவதுஒன்று இல்.** 1202

தாம் விரும்பும் காதலரைப் பிரிவின்போது நினைத்தாலும் பிரிவால் வருந்துன்பம் இல்லாமற்போகின்றது. ஆதலால் காமம் எவ்வளவாயினும் இனிமையானதேயாகும்.

*எனைத்து - எவ்வளவு; வீழ்வார் - விரும்பும்; நினைப்ப - நினைக்க.*

3. எப்படி காதலர் நினைப்பதையும் நினையாதிருப்பதையும் அறியமுடியும்?

**நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்**
**சினைப்பது போன்று கெடும்** 1203

தும்மல் வருவதுபோலிருந்து வராமல் நின்றுவிடுகின்றதே. அதுபோல காதலரும் என்னை நினைப்பவர் போலிருந்து நினைக்கமாட்டாரோ?

*சினைப்பது - வருவது: கெடும் - வராது.*

4. யார் நெஞ்சில் யார் இருப்பார்?

**யாமும் உளேம்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து**
**ஓஒ உளரே அவர். 1204**

என் நெஞ்சில் அல்லவா என் காதலர் இருக்கின்றார். அவர் நெஞ்சினில் நானும் இருக்கின்றேனா?

*உளரே - இருக்கிறாரே; உளேம் - இருக்கிறோம்.*

5. காதலர் எதற்குக் காவல் போட்டு வைத்திருக்கிறார்?

**தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்**
**எம்நெஞ்சத்து ஓவா வரல். 1205**

தமது நெஞ்சினுள் என்னை வரவிடாது காவல் போட்டு வைத்திருக்கும் காதலர் என்னுடைய நெஞ்சில் ஓயாமல் வருவதற்கு நாணமடைய மாட்டாரோ?

*கடி - காவல்; ஓவா - ஓயாமல்; வரல் - வருதல்.*

6. எப்படிப் பிரிவை மறந்து உயிர் வாழ முடிகின்றது?

**மற்றுயான் என்உளேன் மன்னோ அவரொடுயான்**
**உற்றநாள் உள்ள உளேன். 1206**

அவரோடு நான் சேர்ந்திருந்த நாளை நினைத்துக் கொள்வதாலேயே உயிர்வாழ்கிறேன். வேறு எதை நினைத்து நான் வாழமுடியும்?

*உள்ள - நினைக்க; உளேன் - வாழ்கிறேன்.*

7. காதலரை நினையாது இருந்தால் என்ன?

**மறப்பின் எவன்ஆவன் மற்கொல் மறப்புஅறியேன்**
**உள்ளினும் உள்ளம் சுடும். 1207**

காதலரை என்றும் மறந்தறியேன். மறவாது நினைந்து கொண்டிருப்பினும் உள்ளம் சுடுகின்றது. மறந்துபோனால் என்னாவேனோ?

*மறப்பின் - மறந்தால்; எவன்ஆவன் - என்ன ஆவேனோ; மறப்பு - மறந்து; உள்ளினும் - நினைத்தாலும்.*

8. காதலர் தரும் வெகுமானம் என்ன?

**எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றோ**
**காதலர் செய்யும் சிறப்பு.** 1208

எவ்வளவுதான் நான் காதலரை நினைத்தாலும் அவர் என்மேல் கோபப்படமாட்டார். அதுவன்றோ காதலர் எனக்குத் தரும் வெகுமானம்.

*எனைத்து - எவ்வளவு; நினைப்பினும் - நினைத்தாலும்; காயார் - கோபப்படமாட்டார்; அனைத்து - அவ்வளவு; சிறப்பு - வெகுமானம்.*

9. ஏன் உயிர் போய்க் கொண்டிருக்கின்றது?

**விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்**
**அளிஇன்மை ஆற்ற நினைந்து.** 1209

'நாம் இருவரும் வேறு வேறு அல்ல' என்று சொன்னவர் இப்போது இரக்கமற்றவராய் இருக்குந்தன்மையை அதிகமாக நினைத்து எனது இனியஉயிர் போய்க்கொண்டிருக்கிறது.

*விளியும் - சாகும்; வேறல்லம் - வேறல்லர், அளிஇன்மை - இரக்கமற்றதன்மை; ஆற்ற - அதிகமாக.*

10. ஏன் சந்திரன் மறையாது இருக்க வேண்டும்?

**விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்**
**படாஅதி வாழி மதி.** 1210

சந்திரனே! நீ வாழ்வாயாக! பிரியாதிருந்து பின்னர் பிரிந்து சென்றவரை என் கண்களால் காண்பதற்காக மறையாது இருப்பாயாக!

*விடாது - பிரியாது; படாஅதி - மறையாது.*

# 122. கனவு நிலை உரைத்தல்

*(தலைவி தான் கண்ட கனவைத் தோழிக்குச் சொல்லல்)*

1. கனவிற்கு என்ன செய்யப் போகிறாய்?

**காதலர் தூதொடு வந்த கனவினுக்கு**
**யாதுசெய் வேன்கொல் விருந்து** 1211

காதலரின் தூதோடு வந்த கனவிற்கு என்ன விருந்து செய்யப் போகிறேனோ?

*யாது - என்ன.*

2. பிரிந்திருக்கும் காதலருக்கு எப்படி உன் துன்பத்தைச் சொல்ல முடியும்?

**கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு**
**உயல்உண்மை சாற்றுவேன் மன்.** 1212

எனது மை தீட்டிய கயல்விழிகள் நான் கெஞ்சிக் கேட்பதற்க்காகத் தூங்குமானால் என் உயிரோடு கலந்தவருக்கு நான் பிழைத்திருப்பதைச் சொல்லுவேன்.

*உண்கண் - மை தீட்டிய விழி; இரப்ப - கெஞ்ச; துஞ்சின் - தூங்கினால்; உயல் - பிழைத்திருக்கும்; சாற்றுவேன் - சொல்லுவேன்.*

3. உயிர் உடலைவிட்டு நீங்காது இருக்கக் காரணம் என்ன?

**நனவினால் நல்கா தவரை கனவினால்**
**காண்டலின் உண்டுஎன் உயிர்.** 1213

விழித்திருக்கும்போது வந்து அன்புசெய்யாதவரைக் கனவில் காண்பதனாலேயே என் உயிர் நீங்காதிருக்கின்றது.

*நனவு - விழிப்பு; நல்காதவர் - அன்புசெய்யாதவர்.*

4. கனவால் உண்டாகும் இன்பம் என்ன?

**கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு.** 1214

உண்மையாக வந்து அன்பு செலுத்தாதவரை, கனவு தேடியழைத்து காமஇன்பத்தை உண்டாகித்தருகின்றது.

*நனவு - உண்மையாக; நல்கார் - இரங்கார்; நாடி - தேடி.*

5. நனவுக்கும் கனவுக்கும் என்ன ஒற்றுமை?

**நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்**
**கண்ட பொழுதே இனிது.** 1215

நனவில் முன்பு கண்ட இன்பம் அப்பொழுது மட்டுமே இனிமையாக இருந்தது. கனவிலும் கண்டபொழுது மட்டுமேதான் இனிமையாக இருக்கின்றது.

6. ஏன் நனவு என்ற நிலை இருக்கக்கூடாது?

**நனவுஎன ஒன்றில்லை ஆயின் கனவினான்**
**காதலர் நீங்கலர் மன்.** 1216

நனவென்று ஒருநிலை இல்லாவிட்டால் கனவில்வந்த காதலர் என்னை விட்டு நீங்கமாட்டார் அல்லவா?

*நீங்கலர் - நீங்கமாட்டார்.*

7. எதற்காக காதலர் கனவில் வருகிறார்?

**நனவினான் நல்காக் கொடியார் கனவினான்**
**என்எம்மைப் பீழிப் பது.** 1217

நேரில் உண்மையாக வந்து அன்பு செலுத்தாத கொடியவர் கனவில் வந்து எம்மை வருத்துவதுமேனோ?

*நனவில் - உண்மையில்; நல்கா - அன்பு செலுத்தா; பீழிப்பது - வருத்துவது.*

8. தூங்கும்போது உன்னோடிருந்த காதலர் விழித்ததும் எங்கு செல்கிறார்?

**துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்**
**நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.** **1218**

தூங்கும் போது கனவில் வந்து என்தோள்மேல் சாய்ந்திருப்பவர் நான் விழிக்கும் போது விரைவாக என் நெஞ்சினுள்ளே சென்று தங்குகின்றார்.

*துஞ்சுதல் - தூங்குதல்.*

9. பிரிந்திருக்கும் காதலரை நொந்து கொள்பவர் யார்?

**நனவினான் நல்காரை நோவர் கனவினான்**
**காதலர் காண தவர்.** **1219**

கனவில் தம் காதலரைக் காணாதவரே நேரில்வந்து அன்பு செய்யாத தம் காதலரை நொந்து கொள்வார்.

*நல்கார் - அன்புசெய்யாதவர்; நோவர் - நொந்துகொள்வர்.*

10. காதலர் பிரிந்து விட்டார் என்று ஊரார் கூறக்காரணம் என்ன?

**நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்**
**காணார்கொல் இவ்ஊ ரவர்.** **1220**

உண்மையாகவே என்னை விட்டுக்காதலர் பிரிந்துவிட்டார் என்றுகூறும் இவ்ஊரவர்கள், கனவில் அவரைக் காண மாட்டார்களோ?

*நீத்தார் - பிரிந்தார்;*

# 123. பொழுதுகண்டு இரங்கல்

*(மாலை நேரத்தைப் பார்த்து வருந்துதல்)*

1. மாலைப் பொழுதாகிய நான் எப்படி இருக்கின்றேன்?

**மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.** 1221

பொழுதே! வாழ்வாயாக! நீ மாலை நேரமாக இல்லாது, காதலரைக் கூடிய மகளிரின் உயிரையுண்ணும் இறுதிக்காலமாக இருக்கின்றாய்.

*மணந்தார் - கூடியவர், வேலை - இறுதிக்காலம்*

2. மாலைப் பொழுதாகிய எனது காதலர் எப்படி இருப்பார்?

**புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை.** 1222

மயக்கும் மாலைப் பொழுதே! வாழ்வாயாக! நீயும் எம்மைப் போல் துன்பப்படுகின்றாய். உன் துணையும் எம் காதலர் போல் கல்நெஞ்சம் கொண்டதோ?

*புன்கண் - துன்பம்; மருள் - மயக்கும்; எம்கேள் - எம்காதலர்; வன்கண் - கல்நெஞ்சம்.*

3. மாலைப் பொழுது ஏன் வருகின்றது?

**பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்**
**துன்பம் வளர வரும்.** 1223

பனிதோன்றி குளிரை உண்டாகும் மாலைப்பொழுது, எனக்கு வெறுப்பை உண்டாக்கி துன்பத்தை வளர்க்கவே வருகின்றது.

*அரும்பி - தோன்றி; பைதல் - குளிர்; துனி - வெறுப்பு.*

4. காதலர் இல்லாதநேரம் வரும் மாலைப்பொழுது எதற்காக வருகின்றது?

**காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து**
**ஏதிலர் போல வரும்.** 1224

காதலர் இல்லாதபோது வரும் மாலைபொழுது கொலைக் களத்தில் கொலைஞர் வருவது போல என் உயிரையெடுக்கவே வருகின்றது.

*ஏதிலர் - பகைவர் (கொலைஞர்.)*

5. காலைக்கும் மாலைக்கும் நீ என்ன செய்தாய்?

**காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்**
**மாலைக்குச் செய்த பகை.** 1225

நான் காலைப் பொழுதிற்குச் செய்த நன்மை என்னவோ? மாலைப் பொழுதிற்குச் செய்த பகைமை தானென்னவோ?

*நன்று - நன்மை; பகை - பகைமை.*

6. காதலருடன் இருந்த போது எதனை நீ அறியவில்லை?

**மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத**
**காலை அறிந்தது இலேன்.** 1226

என்னைக்கூடிய காதலர் என்னுடன் நீங்காதிருந்த காலத்தில் மாலைப்பொழுது இப்படித்துன்பம் செய்யுமென்பதை நான் அறியவில்லை.

*நோய் - துன்பம்; மணந்தார் - கூடியகாதலர்; காலை - காலத்தில்; அகலாது - நீங்காது.*

7. காமநோய் எப்படி மலரும்?

**காலை அரும்பிப் பகல்எல்லாம் போதுஆகி**
**மாலை மலரும்இந் நோய்.** 1227

இந்தக் காமநோய் காலைநேரத்தில் அரும்பாய்த் தோன்றி, பகல் முழுவதும் வளர்ந்து மலரும் பருவத்து மொட்டாகி, மாலை நேரத்தில் மலராய் விரியும்.

*போது - மலரும் பருவத்து மொட்டு.*

8. உன்னை இடையனின் குழலோசை என்ன செய்கின்றது?

**அழல்போலும் மாலைக்குத் தூதுஆகி ஆயன்**
**குழல்போலும் கொல்லும் படை.** 1228

நெருப்புப்போல் என்னைச் சுடும் மாலைப்பொழுதிற்கு, இடையனின் புல்லாங்குழலோசை தூதாக வந்ததோடு என்னைக் கொல்லும் படையாகவும் இருக்கின்றது.

*அழல் - நெருப்பு, ஆயன் - இடையன்.*

9. மாலைப்பொழுது வரும் போது இவ்வூர் என்ன செய்யும்?

**பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு**
**மாலை படர்தரும் போழ்து.** 1229

அறிவை மயக்கும் மாலைப்பொழுது வந்து படரும்போது, இவ்ஊரும் மயங்கித் துன்பத்தில் அழுந்தும்.

*பதி - ஊர்; மருண்டு - மயங்கி; பைதல் - துன்பம்; உழக்கும் - அழுந்தும்.*

10. யாரை நினைந்து மாலைப்பொழுதில் உன்னுயிர் சாகின்றது?

**பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை**
**மாயும்என் மாயா உயிர்.** 1230

சாகாமல் நிற்கும் என்னுயிர், பொருள்தேடச் சென்ற என் கணவரை நினைத்து மயக்கும் மாலைப்பொழுதில் சாகின்றது.

*பொருள்மாலை - பொருளீட்டல்; மருள்மாலை - மயக்கும்மாலை; மாயும் - சாகும்; மாயாவுயிர் - சாகாத உயிர்.*

## 124. உறுப்புநலன் அழிதல்

*(உடலுறுப்புக்கள் அழகை இழத்தல்)*

1. கண்கள் மலர்களைப்பார்க்க வெட்கப்படுவதேன்?

**சிறுமை நமக்குஒழியச் சேண்சென்றார் உள்ளி**
**நறுமலர் நாணின கண். 1231**

பிரிவுத் துன்பத்தை நம்மிடம் விட்டுவிட்டு வெகுதொலைவில் உள்ள நாட்டிற்குச் சென்றவரை நினைத்து வருந்தியதால், கண்கள் அழகை இழந்து நறுமலர்களைப் பார்க்க வெட்கப்படுகின்றன.

*சிறுமை - துன்பம்; ஒழிய - விட்டு; சேண் - வெகுதொலைவு; உள்ளி - நினைந்து; நாணின - வெட்கப்பட்டன.*

2. கண்ணீர் சொரியும் கண்கள் எப்படிச் இருக்கின்றன?

**நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாரும் கண். 1232**

நான் விரும்பிய காதலர் எனக்கு இரங்கவில்லை எனச்சொல்வன போல பசலையடைந்து கண்ணீர் சொரியும் எனது கண்கள் இருக்கினறன.

*நயந்தவர் - விரும்பியவர்; நல்காமை - இரங்காமை; பனிவாரும் - கண்ணீர் சொரியும்.*

3. உன் தோள்கள் எதனை அறிவிக்கின்றன?

**தணந்தமை சால அறிவிப்ப போலும்**
**மணந்தநாள் வீங்கிய தோள். 1233**

காதலர் என்னை மணந்தநாளில் பூரித்திருந்த என் தோள்கள் இப்போது மெலிந்திருப்பது, அவரது பிரிவை நன்றாக அறிவிப்பன போலுள்ளன.

*தணந்தமை - பிரிந்தமை; சால - நன்றாக; வீங்கிய - பூரித்த.*

4. ஏன் தோள்களும் மெலிந்து தோள்வளைகளும் கழன்று விழுகின்றன?

**பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள். 1234**

துணைவர் என்னைவிட்டு நீங்கியதால் பழைய அழகுபோய் வாடியதோள்கள் தனது மூங்கில்தன்மையை இழந்து பசும் பொன்னாலான தோள்வளைகளும் கழன்று விழுகின்றன.

*பணை - மூங்கில்; தொல் - பழைய; கவின் - அழகு; பைந்தொடி- பசும்பொற்றோள்வளை.*

5. தோள் வளையல்கள் கழன்றதால் அழகிழந்த தோள்கள் எதைக் கூறுகின்றன?

**கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு**
**தொல்கவின் வாடிய தோள். 1235**

தோள் வளையல்கள் கழன்று பழைய அழகுமிழந்த தோள்கள், என்னைப் பிரிந்த கொடியவரின் கொடுமையை பிறருக்கு எடுத்துக்கூறுகின்றன.

*கொடியார்- கொடியவர்; உரைக்கும் - கூறும்; தொடி - தோள் வளையல்; தொல்கவின் - பழைய அழகு.*

6. ஏன் மனம் வருந்துகின்றாய்?

**தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்**
**கொடியர் எனக்கூறல் நொந்து. 1236**

தோள் வளையல்களும் கழன்று தோள்களும் மெலிவதனால் அவரைக் கொடியவறென்று பிறர்கூறுவதைக் கேட்கப் பொறுக்கமுடியாது வருந்துகின்றேன்.

*தொடி - தோள்வளையல்; நோவல் - வருந்துகிறேன்; நொந்து - பொறுக்கமுடியாது.*

7. மனமாகிய நான் உனது காதலருக்கு எதைச்சொல்லி பெருமையடைய வேண்டும்?

**பாடு பொறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்**
**வாடுதோள் பூசல் உரைத்து. 1237**

மனமே! கொடியவரான என் காதலருக்கு எனது வாடிய தோள்களின் ஆரவாரம்மிக்க துன்பத்தைச் சொல்லி பெருமை பெறுவாயோ?

*பாடு - பெருமை; நெஞ்சே - மனமே; உரைத்து - சொல்லி; பூசல் - ஆரவாரமான துன்பம் (எல்லோரும் அறிந்த துன்பம்).*

8. எப்படி காதலியின் நெற்றி பசலையடைந்தது?

**முயங்கி கைகளை ஊக்கப் பசந்தது**
**பைந்தொடிப் பேதை நுதல்.** 1238

தழுவியகைகளைக் கொஞ்சம் தளர்த்தினேன். தங்கவளையல் அணிந்த காதலியின் நெற்றி அந்தச் சிறுஅசைவிற்கே பசலையால் வெளிறிவிட்டது.

*முயங்கி - தழுவி; ஊக்க - தளர்த்த; நுதல் - நெற்றி.*

9. காதலியின் கண் வெளிறக் காரணம் என்ன?

**முயக்குஇடைத் தண்வளி போழப் பசப்புஉற்ற**
**பேதை பெருமழைக் கண்.** 1239

நான் தழுவிய தழுவலுக்கிடையே குளிர் காற்றுப் புகுந்ததால் காதலியின் பெரிய குளிர்ச்சியான கண்கள் பசலையால் வெளிறின.

*முயக்கு - தழுவல்; தண்வளி - குளிர்காற்று; போழ - புக; மழை - குளிர்ச்சி; பசப்பு - உடல் வெளிறி மென்மஞ்சள் நிறமாதல்.*

10. கண்ணில் உள்ள பசலைநிறம் துன்பமடையக் காரணம் என்ன?

**கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே**
**ஒண்ணுதல் செய்தது கண்டு.** 1240

தழுவலின் தளர்ச்சியால் காதலியின் அழகிய நெற்றி பசலையால் நிறம்மாறி வெளிறியதைக் கண்டு, கண்ணின் பசலையும் துன்பம் அடைந்ததே.

*பருவரல் - துன்பம்; எய்திற்றே - அடைந்ததே; ஒண்ணுதல் - அழகியநெற்றி.*

## 125. நெஞ்சோடு கிளத்தல்

*(மனதோடு பேசுதல்)*

1. எதனை நான் உனக்குச் சொல்ல வேண்டும்?

**நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்துஒன்றும்**
**எவ்வநோய் தீர்க்கும் மருந்து.** 1241

நெஞ்சே! காமநோயைத் தீர்க்கும் ஏதாவதொரு மருந்தை நினைத்துப் பார்த்துச் சொல்ல மாட்டாயோ?

*எனைத்து - ஏதாவது; எவ்வநோய் - காமநோய்.*

2. எது பேதைமை?

**காதல் அவர்இலர் ஆகநீ நோவது**
**பேதைமை வாழிஎன் நெஞ்சே.** 1242

என் நெஞ்சமே! வாழ்வாயாக! அவர் என்னிடம் காதலில்லாத வராக இருக்க நீ அவரை நினைத்து வருந்துவது பேதைமையாகும்.

*இலர்ஆக - இல்லாதவராக; நோவது - வருந்துவது; பேதைமை - அறியாமை; வாழி - வாழ்வாயாக.*

3. யாரிடம் என்னை நினைத்து இரங்கும் தன்மையில்லை?

**இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்**
**பைதல்நோய் செய்தார்கண் இல்.** 1243

நெஞ்சே! இந்தத் துன்பநோயை உண்டாக்கியவரிடம் எம்மை நினைத்திரங்கும் தன்மை இல்லையே! அப்படியிருக்க நீ இங்கிருந்து அவரை நினைத்து வருந்துவது ஏன்?

*உள்ளி - நினைத்து; பரிதல் - வருந்துவது; பரிந்து - இரங்கி.*

4. ஏன் உன் கண்கள் உன்னைத் தின்கின்றன?

**கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்**
**தின்னும் அவர்காணல் உற்று. 1244**

நெஞ்சே! நீ அவரிடம் செல்லும் போது கண்களையும் உன்னுடன் கொண்டு செல்வாயாக. ஏனென்றால், அவரைக் காட்டென்று இவை என்னைத் தின்கின்றன.

*கொளச்சேறி - கொண்டு செல்வாயாக; சேறி - செல்லுதல்.*

5. விரும்பாதவரை கைவிட்டுவிட வேண்டியதது தானே?

**செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்**
**உற்றால் உறாஅ தவர். 1245**

நெஞுசே! நாம் அவரை விரும்பினாலும் எம்மை அவர் விரும்பாதவராதலால் வெறுத்துவிட்டார் எனநினைத்து அவரைக் கைவிட்டுவிட முடியுமோ?

*செற்றார் - வெறுத்தார்; உற்றால் - விரும்பினால்;*
*உறாதவர் - விரும்பாதவர்.*

6. என்னை விரும்பாத காதலரை நினைத்து என்ன பயன்?

**கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்**
**பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. 1246**

என் நெஞ்சே! கூடிக்கலந்து இன்பமுணர்த்தும் காதலரைக் கண்டால் நீ வெறுத்து அறியமாட்டாயே! பொய்யாகக் கோபம் கொண்டு சீறுகின்றாய்.

*கலந்து - கூடிக்கலத்தல்; புலந்து - வெறுத்து;*
*உணராய் - அறியமாட்டாய்; பொய்க்காய்வு - பொய்க்கோபம்;*
*காய்தி - சீறுதல்.*

7. எந்த இரண்டையும் உன்னால் தாங்கமுடியாது?

**காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே**
**யானோ பொறேன்இவ் இரண்டு. 1247**

நல்ல நெஞ்சே! ஒன்றில் காமத்தை விட்டுவிடு அல்லது நாணத்தையாவது விட்டுவிடு. இந்த இரண்டையும் தாங்கிக் கொள்ள என்னால் முடியாது.

*நாண் - நாணம்; பொறேன் - தாங்கேன்.*

8. காதலர் பின் சென்றால் என்ன?

**பரிந்துஅவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சே.** 1248

என் நெஞ்சே! பிரிந்து சென்றவர் எம்மிடமிரங்கி அன்பு செலுத்துகிறாரில்லையே என ஏங்கி அவர் பின்னே அறிவில்லாமல் செல்கின்றாயே?

*பரிந்து - இரங்கி; நல்கார் - அன்புசெய்யார்;*
*பேதை - அறிவின்மை.*

9. நானுன் காதலரைத்தேடித் தானே செல்கின்றேன்?

**உள்ளத்தார் காத லவர்ஆக உள்ளிநீ**
**யாருழைச் சேறிஎன் நெஞ்சு.** 1249

என் நெஞ்சே! காதலர் உள்ளத்தில் இருக்கும்போது நீ யாரை நினைத்து தேடிச் செல்கின்றாய்.

*உள்ளத்தார் - உள்ளத்துள்ளர்; உள்ளி - நினைத்து;*
*யாருழை - யாரிடம் ; உழை - இடம்; சேறி - சென்றாய்.*

10. அப்படியானால் நீயுன் அழகை இழக்கக் காரணம் என்ன?

**துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா**
**இன்னும் இழத்தும் கவின்.** 1250

என்னோடு சேர்ந்திருக்காது கைவிட்டுச் சென்றவரை நெஞ்சில் வைத்திருக்க இன்னும் அழகை இழப்போம்.

*துன்னா - கூடாமல் (சேராமல்); துறந்தார் - சென்றார்;*
*இழத்தும் - இழப்போம்.*

# 126. நிறை அழிதல்

*(மனவுறுதி அழிதல்)*

1. மனவுறுதியை அழிப்பது எது?

**காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு.** 1251

வெட்கமென்ற தாழப்பாள் போட்டு பூட்டிய மனவுறுதியென்னும் கதவைக் காமமாகிய கோடாரி உடைத்து விடுகின்றது.

*கணிச்சி - கோடாரி; நிறை - மனவுறுதி;*
*நாணுத்தாழ் - நாணமாகிய தாழ்ப்பாள்.*

2. எப்போது காமம் ஆட்சி செய்கின்றது?

**காமம் எனஒன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை**
**யாமத்தும் ஆளும் தொழில்.** 1252

காமம் என்று சொல்லப்படுகின்ற இரக்கமற்ற ஒன்றே நள்ளிரவிலும் என் நெஞ்சத்தை ஏவி ஆட்சிசெய்கின்றது.

*கண்ணின்று - இரக்கமற்று; யாமத்தும் - நள்ளிரவிலும்;*
*ஆளும் - ஆட்சி செய்யும்; தொழில் - ஏவல்.*

3. காமத்தை மறைக்க முடியுமா?

**மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும்.** 1253

நானோ காமத்தை மறைப்பேன். அது அறிகுறிகாட்டாது தும்மல் போல் தோன்றிவிடுகின்றது.

*யானோ - நானோ; குறிப்பு - அறிகுறி.*

4. காமத்தை அடக்க உன்னிடம் மனவுறுதியில்லையா?

**நிறைஉடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்**
**மறைஇறந்து மன்று படும்.** 1254

நானோ மனவுறுதியுடையேன் என நினைத்திருந்தேன். என் காமமோ நான் மறைப்பதையும் மீறி அம்பலப்படுகின்றது.

*நிறை - மனவுறுதி; யானோ - நானோ; மறைஇறந்து - மறைப்பதை மீறி; மன்றுபடும் - அம்பலப்படும்.*

5. உன்னை வெறுத்து ஒதுக்கியவர் பின் செல்வது பெருமையா?

**செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்**
**உற்றார் அறிவதுஒன்று அன்று.** 1255

வெறுத்துச் சென்றவர் பின் செல்லாதிருக்கும் பெருமையை காமநோய் வந்தவர் அறிவதில்லை.

*செற்றார் - வெறுத்தவர்; பெருந்தகைமை - பெருமை; உற்றார் - வந்தவர்.*

6. உனக்கு வந்த காமநோய் எப்படிப்பட்டது?

**செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ**
**ஏற்றுஎன்னை உற்ற துயர்.** 1256

வெறுத்துச் சென்றவர் பின் செல்ல நான் விரும்புவதால், எனக்கு வந்த காமநோய் எத்தன்மையானது? இரக்கத்திற்குரியதன்றோ!

*எற்று - எத்தன்மையானது; செற்றவர் - வெறுத்தவர்; சேறல் - செல்லல்; வேண்டி - விரும்பி; அளித்தரோ - இரக்கத்திதற்குரியதன்றோ.*

7. காதலர் என்ன செய்வாரானால் நீ நாணத்தை அறிந்திருக்க மாட்டாய்?

**நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்**
**பேணியார் பெட்ப செயின்.** 1257

என்னால் விரும்பப்பட்டவர் நான் காமத்தால் விரும்பியவற்றைச் செய்வாரானால் நாணம் என்றொன்று இருப்பதையே நான் அறிந்திருக்கமாட்டேன்.

*நாண் - நாணம்; அறியலம் - அறியமாட்டோம்; பேணியார் - விரும்பப்பட்டவர்; பெட்ப - விரும்பியதை.*

8. உன் பெண்மையைத் உடைக்கும் படை எது?

**பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்**
**பெண்மை உடைக்கும் படை. 1258**

என் பெண்மை என்னும் மனஉறுதியை உடைக்கும் படையாக இருப்பது, பல பொய்புரட்டுக்களில் வல்லவனான என் காதலனின் பணிவான மொழியன்றோ?

*மாயம் - பொய்புரட்டு.*

9. ஏன் கணவனுடன் ஊடல் கொள்ள முடியவில்லை?

**புலம்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்**
**கலத்தல் உறுவது கண்டு. 1259**

ஊடல் கொள்ளவெனச் சென்றேன். ஆனால் என் நெஞ்சம் என்னையறியாமல் அவரைச்சென்று கூடுவதைக் கண்டு நானும் அவரைத் தழுவினேன்.

*புலம்பல் - ஊடுவேன்; புல்லினேன் - தழுவினேன்; கலத்தல் - கூடுதல்; கலத்தவுறுவது - சென்று கூடுதல்.*

10. யாரால் ஊடல் கொள்ள முடியாது?

**நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ**
**புணர்ந்துஊடி நிற்பேம் எனல். 1260**

கொழுப்பைத் தீயில் இட்டாற்போன்று உறுதியற்று உருகும் நெஞ்சை உடையவர்களுக்கு கூடி பின் ஊடி நிற்கும் உறுதி உண்டோ?

*நிணம் - கொழுப்பு; புணர்நது - கூடி.*

# 127. அவர்வயின் விதும்பல்

*(காதலர் ஒருவரையொருவர் காண ஆசைப்படல்)*

1. காதலர் வரவு பார்த்த கண்ணுக்கு என்ன நடந்தது?

**வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**
**நாள்ஒற்றித் தேய்ந்த விரல்.** 1261

அவர் வருவார் வருவாரெனப் பார்த்துப் பார்த்து கண்களும் ஒளியிழந்து சோர்ந்தன. அவர் சென்ற நாட்களை தொட்டுத் தொட்டு எண்ணி விரல்களும் தேய்ந்தன.

*புற்கென்ற - சோர்ந்த; ஒற்றி - தொட்டு; வாள் - ஒளி; வாள்அற்று - ஒளியிழந்து.*

2. நீ ஏன் காதலரை மறவாதிருக்கின்றாய்?

**இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்**
**கலம்கழியும் காரிகை நீத்து.** 1262

ஒளிமிக்க ஆபரணங்களை அணிந்தவளே! இன்று நான் காதலரை மறந்தால் என் தோள் மேலிருக்கும் அணிகலன்களும் கழன்றுவிழ நானும் அழகில்லாமல் போவேன்.

*இலங்கிழாய் - ஒளிமிக்க ஆபரணங்களையுடையாய்; கலம் - அணிகலம்; கழியும் - கழரும்; காரிகை - அழகு.*

3. ஏன் உன்னை மறந்தவரை விரும்பிக் கொண்டிருக்கின்றாய்?

**உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்**
**வரல்நசைஇ இன்னும் உளேன்.** 1263

அறிவை விரும்பி ஊக்கமே துணையாக வெளிநாடுசென்ற காதலர் வருவதைப் பார்க்க ஆசைப்பட்டே இன்னும் உயிரோடு இருக்கின்றேன்.

*உரன் - அறிவு; நசைஇ - விரும்பி; உள்ளம் - ஊக்கம்; உளேன் - இருக்கிறேன்.*

4. உன் காதலர் வரவை உனது நெஞ்சம் எங்கெல்லாம் ஏறிப்பார்க்கின்றது?

**கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்**
**கோடுகொடு ஏறும்என் நெஞ்சு. 1264**

கூடிக் களித்திருந்த காதலை விட்டுவிட்டு பிரிந்துசென்றவர் வரவை நினைந்து என் நெஞ்சம் வளைந்தமரக் கொப்புகளின் மேலெல்லாம் ஏறிப் பார்க்கின்றது.

*உள்ளி - நினைந்து; கோடு - மரக்கொப்பு; கொடு - வளைந்த.*

5. எப்போது உன் வெளிறியநிறமான பசலை நீங்கும்?

**காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்**
**நீங்கும்என் மென்தோள் பசப்பு. 1265**

என் கணவனைக் கண்ணாரக் காண்பேனாக. கண்டபின்னரே எனது மெல்லிய தோளில் உள்ள பசலைநிறம் நீங்கும்.

*கொண்கன் - கணவன்; மென்தோள் - மெல்லிய தோள்;*

6. எப்பொழுது உன் துன்பமெல்லாம் கெட்டழியும்?

**வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்**
**பைதல்நோய் எல்லாம் கெட. 1266**

என் கணவர் ஒரு நாள் வருவார். அதன்பின்னர் என் துன்பநோய் எல்லாம் கெட்டழிய நான் இன்பத்தைப் பருகுவேன்.

*கொண்கன் - கணவன்; பருகுவன் - குடிப்பேன்;*
*பைதல் - துன்பம்; பைதல் நோய் - துன்பநோய் (காமம்)*

7. கணவன் வந்தால் என்ன செய்வாய்?

**புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்அன்ன கேளிர் வரின். 1267**

என் கண்போன்ற கணவர் வந்தால் அவரோடு ஊடல்கொள்வேனோ? அவரைத் தழுவுவேனோ? அவரோடு கூடிக் கலப்பேனோ?

*புலத்தல் - ஊடல்; புல்லுதல் - தழுவுதல்; கேளிர் - கணவன்.*

8. எப்போது உன் மனைவியுடனிருந்து விருந்துண்ணப் போகின்றாய்?

**வினைகலந்து வென்றுஈக வேந்தன் மனைகலந்து**
**மாலை அயர்கம் விருந்து. 1268**

தலைவன் செய்யும் செயலைச்செய்து வெற்றி பெறுவானாக. அதன் பின்னர் மனைவியுடன் கூடியிருந்து மாலைப்பொழுதிற்கு விருந்து செய்வோம்.

*வினைகலந்து - செயலைச் செய்து அயர்கம் - செய்வோம், மனைகலந்து - மனைவியுடன் கூடி.*

9. பிரிந்து சென்றவரின் வரவைப் பார்த்து இருப்பவர்க்கு ஒருநாள் எத்தனை நாள் போலச் செல்லும்?

**ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேண்சென்றார்**
**வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. 1269**

வெகுதொலை துாரத்திலுள்ள வெளிநாட்டிற்கு சென்றவர் திரும்பிவரும் நாளைக் குறித்து வைத்து கணக்குப பார்த்து ஏங்குபவர்க்கு ஒருநாள் ஏழுநாள் போல் நீண்டுசெல்லும்.

*சேண் - தொலைதுாரம்; வருநாள் - திரும்பிவரும் நாள்.*

10. திரும்பிவரும் நாளை எதிர்பார்த்து துன்பத்தால் மனமுடைந்து போனால் என்னாகும்?

**பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்**
**உள்ளம் உடைந்துஉக்கக் கால். 1270**

துன்பத்தால் மனமுடைந்து சிதைந்துபோன பின்னர் எம்மைப் பெறுவதால் என்ன? பெற்று விட்டால் என்ன? கூடிக் கலந்தால் என்ன? பயன் கிடைக்கும்?

*உறின் - சேர்தல் (பொருந்துதல்).*

# 128. குறிப்பு அறிவுறுத்தல்

*(மனக்கருத்தை செய்கைகளால் அறிதல்)*

1. ஒன்றைச் சொல்லாமல் மறைத்தால் மற்றவர்க்குத் தெரியுமா?

**கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்**
**உரைக்கல் உறுவதுஒன்று உண்டு.** 1271

நீ சொல்லாமல் மறைத்தாலும் உன்னையும் கடந்து உன் மையிட்ட விழிகள் சொல்லக்கூடிய செய்தி ஒன்றுண்டு.

*கரப்பினும் - மறைத்தாலும்; கையிகந்து - கடந்து;*
*உண்கண் - மையிட்டவிழி; உரைத்தல் - சொல்லல்.*

2. மனையிடம் பெண்தன்மை இருக்கின்றதா?

**கண்நிறைந்த காரிகைக் காம்புஏர்தோள் பேதைக்குப்**
**பெண்நிறைந்த நீர்மை பெரிது.** 1272

என் கண்நிறைந்த அழகிக்கு மூங்கில் போன்ற தோள்கள். அப்பேதைப் பருவத்தாளுக்கு பெண்தன்மை மிகுதியாகவே நிறைந்திருக்கின்றது.

*காரிகை - அழகி; காம்பு - மூங்கில்; ஏர் - போன்ற;*
*நீர்மை - தன்மை; பெரிது - மிகுதி.*

3. மனைவியின் அழகு காட்டும் குறிப்பு எது போன்றது?

**மணியில் திகழ்தரு நூல்போல மடந்தை**
**அணியில் திகழ்வதுஒன்று உண்டு.** 1273

மணிமாலையினுள் தெரியும் நூல் போல அவளின் அழகினுள்ளே ஏதோ ஒரு குறிப்பு உள்ளடங்கி இருக்கின்றது.

*திகழ்தரு - தெரியும்; அணியில் - அழகில்;*
*திகழ்தல் - உள்ளடங்கியுள்ளது.*

4. சிரிப்பிலுள்ள குறிப்பு எது போன்றது?

**முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை**
**நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு.** 1274

அரும்பான பூமொட்டுக்குள் மணம் உள்ளது போல பேதையான அவளின் புன்னகை மொட்டுக்குள் குறிப்பொன்று அடங்கியுள்ளது.

*முகை - அரும்பு; நாற்றம் - மணம்; நகை - புன்னகை.*

5. காதலி கள்ளப்பார்வையால் காட்டிய குறிப்பு எத்தகையது?

**செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்**
**தீர்க்கும் மருந்துஒன்று உடைத்து.** 1275

நெருங்கிய வளையலணிந்த என் காதலி என்னைப் பார்த்து காட்டிச்சென்ற கள்ளத்தனமான குறிப்பு எனது பெருந் துயரத்தைத் தீர்க்கும் மருந்தொன்றையுடையது.

*செறிநொடி - நெருங்கிய வளையல்; உறுதுயர் - பெரும்துயர்; செய்திறந்த - செய்து சென்ற.*

6. பிரிந்துசென்றவர் மீண்டும் வந்து பெரிதாக அன்பு செலுத்துவது எதனைக்காட்டும்?

**பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி**
**அன்புஇன்மை சூழ்வது உடைத்து.** 1276

பெரிதாக ஆறுதல் வார்த்தைகள் கூறி அதிகம் மகிழுமாறு கூடுதல், மீண்டும் அரிய பிரிவால் அன்பில்லாமல் கைவிட்டுச்செல்ல எண்ணுகின்ற குறிப்பையுடையது.

*பெட்ப - அதிகம் மகிழுமாறு; சூழ்வது - எண்ணுகின்ற.*

7. எவை காதலன் பிரிய நினைத்ததை உனக்கு முன்னரே அறிந்துகொண்டன?

**தண்அம் துறைவன் தணந்தமை நம்மினும்**
**முன்னம் உணர்ந்த வளை.** 1277

குளிர்ந்த அழகிய துறையை உடைய காதலன் என்னைக் கூடியிருக்கும் போதே பிரிய நினைத்ததை எனக்கு முன்பே என் வளையல்கள் உணர்ந்து கழன்றுவிட்டன.

*தண் - குளிர்ந்த; அம் - அழகிய; தணந்தமை - பிரிய நினைத்தமை.*

8. ஏன் உடல் இப்படி வெளிறியிருக்கின்றது?

**நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்**
**எழுநாளேம் மேனி பசந்து.** **1278**

என் காதலர் நேற்றுத்தான் பிரிந்து சென்றார். ஆனால் ஏழுநாள் ஆகியது போல என்னுடலில் பசலை படர்ந்து இருக்கின்றது.

*நெருநற்று - நேற்று; பசந்தல் - வெளிறிய நிறமாதல்; மேனி - உடல்.*

9. காதலி என்ன குறிப்புக் காட்டினாள்?

**தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃதுஆண்டு அவள்செய் தது** **1279**

தனது வளையல்களைப் பார்த்து, மெல்லிய தோள்களையும் பார்த்து, தன் பாதங்களையும் பார்த்து அவள் செய்தகுறிப்பு என்னுடன் வரப்போவதையே சொல்லியது.

*தொடி - வளையல்.*

10. பிரியாதே எனப் பெண்கள் கண்களால் கெஞ்சுவது எத்தன்மையது?

**பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு.** **1280**

கண்ணினால் காமநோயைச் சொல்லி பிரியாதேயெனக் கெஞ்சுதல் பெண்மைக்கு மேலும் பெண்மையைச் சேர்த்தது போல் ஆகும் என்பர்.

*இரவு - இரத்தல்; கெஞ்சுதல் - யாசித்தல்.*

# 129. புணர்ச்சி விதும்பல்

*(இன்ப முயக்கத்திற்கு ஆசைப்படல்)*

1. ஏன் கள்ளிலும் காமம் சிறந்ததென்கிறார்கள்?

**உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு.** 1281

நினைத்து மகிழ்வதும் கண்டு மகிழ்வதும் கள்ளுக்கில்லை. காமத்திற்குண்டு.

*உள்ள - நினைக்க; களித்தல் - மகிழ்தல்; இல் - இல்லை.*

2. எப்போது ஊடல் கொள்ளாதிருக்க வேண்டும்?

**தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்.** 1282

காமம் நிறைய பனையளவு வருமாக இருந்தால் தினையளவும் ஊடல் கொள்ளாதிருக்க வேண்டும்.

*தினைத்துணை - தினையளவு; பனைத்துணை - பனையளவு.*

3. யாரைக் காணாது கண்கள் அமைதியடைவதில்லை?

**பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்**
**காணாது அமையல கண்.** 1283

என்னை அவமதித்து தனக்கு விருப்பமானதையே செய்தாலும் என் கணவனைக் காணாது கண்கள் அமைதி அடைவதில்லை.

*பேணாது - அவமதித்து; பேட்பவே - விரும்பியதை;*
*கொண்கன் - கணவன்.*

4. நெஞ்சம் செய்த வஞ்சம் என்ன?

**ஊடல்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து**
**கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. 1284**

தோழி நான் காதலரோடு ஊடுவதற்காகச் சென்றேன். நான் போன செயலை நெஞ்சம் மறந்து அவருடன் கூடுவதற்காகச் சென்றுவிட்டது.

5. எப்படிக் கணவனோடு கூடமுடிகின்றது? அவர் செய்தபழிகள் ஞாபகமில்லையா?,

**எழுதும்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்**
**பழிகாணேன் கண்ட இடத்து. 1285**

கண்களுக்கு மைதீட்டும் போது மைதீட்டும் கோலைக்காணாத கண்கள் போல கணவனின் குற்றங்கள் அவரைக் கண்டதும் எனக்குத் தெரிவதில்லை.

*எழுதும் கால் - மைதீட்டும் போது; கொண்கன் - கணவன்; எழுதும்கோல் - கண்ணுக்கும் மைதீட்டும் கோல்.*

6. அவர் செய்த குற்றங்களை நீதானே சொல்லியழுதாய் இப்போது எப்படி மாறினாய்?

**காணும்கால் காணேன் தவறாய காணாக்கால்**
**காணேன் தவறல் லவை. 1286**

அவரைப் பார்க்கும் பொழுது அவரது குற்றங்கள் எனக்குத் தெரிவதில்லை. அவரைக் காணாத பொழுது அவரின் நன்மைகள் எனக்குத் தெரிவதில்லை.

*காணும் - பார்த்தல்; காணாக்கால் - காணாத பொழுது; காணேன் - தெரிவதில்லை; தவறல்லவை - நல்லவை.*

7. ஊடல் கொள்வதற்குக் காரணம் என்ன?

**உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்**
**பொய்த்தல் அறிந்துஎன் புலந்து. 1287**

ஆற்று வெள்ளம் இழுத்துச் செல்லும் என்பதை அறிந்திருந்தும் ஓடும் நீரில் பாய்பவர் போல் ஊடலால் எதுவும் நடக்காது என அறிந்தும் ஊடல் கொள்வதால் என்ன பயன்?

*உய்த்தல் - இழுத்தல்; பொய்த்தல் - நடக்காது; புனல் - நீர்; புலந்து - ஊடி;*

8. என் மார்பு எது போன்றது?

**இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்கு**
**கள்ளற்றே கள்வநின் மார்பு.** 1288

கள்வனே! இழிவு தரக்கூடிய துன்பங்களை நீ செய்தாலும் கள்ளுண்டு மயங்குபவர்க்குத் திரும்பத்திரும்பக் குடிக்கச் செய்யும் கள்ளைப்போன்றே உன் மார்பும் இருக்கின்றது.

*களித்தார் - மயங்குபவர்; கள்ளற்றே - கள்போன்றதே.*

9. காமம் எத்தகையது? அதன் தன்மையை அறிந்தவர்கள் எத்தனை பேர்?

**மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்**
**செவ்வி தலைப்படு வார்.** 1289

மலரைவிடக் காமம் மென்மையானதாகும். ஒரு சிலரே அதன் புதுமையை அறிந்து அதனை அனுபவிக்க வல்லவர்கள்.

*மெல்லிது - மென்மையானது; செவ்வி - புதுமை;*
*தலைப்படுவார் - அனுபவிப்பார்.*

10. உன் மனைவி உன்னோடு ஊடல் கொண்டாளா?

**கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்**
**என்னினும் தான்விதுப் புற்று.** 1290

கண்ணில் ஊடல் இருந்தும் என்னைவிட அவள் ஆசையுடன் விரைவாகக் கூடி மயங்கினாள்.

*துனி - ஊடல்; கலங்கினாள் - மயங்கினாள்;*
*விதுப்பு - ஆசையோடு விரைதல்.*

## 130. நெஞ்சோடு புலத்தல்

*(மனதுடன் ஊடல் கொள்ளுதல்)*

1. அவருடைய நெஞ்சு யாருக்கு துணையாகின்றது?

**அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே**
**நீஎமக்கு ஆகா தது.** 1291

நெஞ்சே! என்னை அவர் நினையாதிருக்க, அவருடைய நெஞ்சு அவருக்குத் துணையாவதைக் கண்டும் நீ எனக்குத் துணையாகாதது ஏன்?

*எவன் - ஏன்.*

2. நான் அவரிடம் சென்றாலென்ன?

**உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்**
**செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு.** 1292

என் நெஞ்சே! அவர் என்னை நினையாதவர் என அறிந்தபோதும், வெறுக்கமாட்டாரென அவரிடம் செல்கின்றாயே!

*உறாதவர் - நினையாதவர்; கண்ட - அறிந்த;*
*செறார் - வெறுக்கார்; சேறி - செல்லுதல்.*

3. நான் அவர் பின் செல்லும் காரணத்தை அறிவாயோ?

**கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ**
**பெட்டாங்கு அவர்பின் செலல்.** 1293

நெஞ்சே! கெட்டழிந்து போனவர்க்கு நண்பர்கள் இல்லை என்பதனாலோ நீ உன் விருப்பப்படி அவர் பின் செல்கின்றாய்?

*நட்டார் - நண்பர்கள்; என்பதோ - என்பதனாலோ; பெட்டாங்கு - விருப்பப்படி.*

4. ஏன் ஊடலைப்பற்றி என்னோடு ஆலோசிப்பதை விட்டுவிட்டாய்?

**இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே**
**துனிசெய்து துவ்வாய்காண் மற்று.** 1294

நெஞ்சே நீ ஊடல் செய்து அதனை அனுபவித்து உணரமாட்டாய். ஆதலால் இனி அது போன்றவற்றை உன்னோடு ஆலோசிப்பவர் யார்?

*அன்ன - அதுபோன்ற; நின்னொடு - உன்னோடு;*
*சூழ்வார் - ஆலோசிப்பர்; துனி - ஊடல்;*
*துவ்வாய் - அனுபவியாய்; காண் - உணர்.*

5. நெஞ்சம் படுகின்ற துன்பத்தை அறிவாயா?

**பெறாஅமை அஞ்சும பெறின்பிரிவு அஞ்சும்**
**அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.** 1295

என் நெஞ்சம் காதலரை அடையவில்லையே என்று பயப்படும். அவரை அடைந்தால் பிரிவை நினைத்துப் பயப்படும். அதனால் அது தீராத துன்பத்தை அடைகின்றது.

*பெறாமை - அடையவில்லை; அஞ்சும் - பயப்படும்;*
*பெறின் - அடைதல்; அறாஅ - தீராத; இடும்பை - துன்பம்.*

6. காதலரை நினைத்தபோது நெஞ்சம் என்ன செய்தது?

**தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்**
**தினிய இருந்ததுஎன் நெஞ்சு.** 1296

தனியே இருந்து அவரை நினைத்துப்பார்த்த போது என் நெஞ்சம் என்னைத் தின்பது போல் இருந்தது.

*தினிய- தின்பது.*

7. நெஞ்சோடு சேர்ந்து எதை மறந்தாய்?

**நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்**
**மாணா மடநெஞ்சில் பட்டு.** 1297

அவரை மறக்கமுடியாது தவிக்கும் எனது பெருமையற்ற மடநெஞ்சுடன் சேர்ந்து நாணமாகிய வெட்கத்தையும் நான் மறந்து விட்டேன்.

*நாணும் - நாணத்தையும்; மாணா - பெருமையற்ற.*

8. நெஞ்சம் ஏன் அவருடைய திறமைகளை நினைக்கின்றது?

**எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்**
**உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298**

காதலரை இகழ்ந்து சிரித்தால் தனக்கு இழிவாகுமென்று எண்ணி அவருடைய திறமைகளையே என் உயிர்க்காதல் நெஞ்சம் நினைக்கின்றது.

*எள்ளின் - இகழ்தல்; இளிவாம் - இழிவாகும்; திறம் - திறமை; உள்ளும் - நினைக்கும்.*

9. துன்பம் வந்தபோது அதனைச் சுமக்க வேண்டியவர் யார்?

**துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய**
**நெஞ்சம் துணையல் வழி. 1299**

துன்பம் வந்த போது அதனைச் சுமக்க வேண்டிய எமது நெஞ்சமே துணை செய்யாதபோது வேறு யார் துணையாவார்?

*துணையல் வழி - துணையாகாத இடத்து*

10. எமது நெஞ்சமே எம்மோடு உறவு கொள்ளாதபோது அயலவர் எப்படியிருப்பர்?

**தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய**
**நெஞ்சம் தமர்அல் வழி. 1300**

எமது நெஞ்சமே எம்மோடு உறவில்லாத போது அயலார் அருளில்லாதிருத்தல் மிக எளிதாகும்.

*தஞ்சம் - எளிது; தமரல்லார் - அயலார்;*
*எதிலார் - அருளில்லாதவர்; தமரல் - உறவில்லாத.*

# 131. புலவி

*(சிறு ஊடல் அல்லது சிறுபிணக்கு)*

1. எதைப் பார்ப்பதற்க்காக ஊடவேண்டும்?

**புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்**
**அல்லல்நோய் காண்கம் சிறிது.** 1301

அவர் காமத்தால் அடையும் துன்பத்தைக் கொஞ்சம் பார்ப்போம். ஆதலால் அவரைத் தழுவாமல் இருந்து கொஞ்சம் ஊட வேண்டும்.

*புல்லாது - தழுவாது; புலத்தை - பிணக்கை(ஊடலை) அல்லல்நோய் - காமத்துன்பம்; காண்கம் - காண்போம்(பார்ப்போம்).*

2. ஊடல் எது போன்று இருக்க வேண்டும்?

**உப்புஅமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்.** 1302

உணவில் உப்பிருப்பது போல அளவாக ஊடல் இருக்க வேண்டும். ஊடலை நீடிப்பது அந்த உப்பு சிறிது கூடியது போலிருக்கும்.

*புலவி - ஊடல்; மிக்கற்றால் - கூடுதலாகப் போடுதல்; நீளவிடல் - நீடிப்பது.*

3. தம்மோடு ஊடியவரைத் தழுவாது விடுதல் எது போன்றது?

**அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்.** 1303

தம்மோடு ஊடல் கொண்டவரை ஊடல் நீங்கத்தழுவாது விடுதல் துன்பத்தால் வருந்துபவர்ககு மேலும் துன்பநோய் கொடுத்தது போலாகும்.

*அலந்தார் - துன்பப்படுவர்; அல்லல் - துன்பம்; அல்லல்நோய் - காமம்(துன்பநோய்); புலந்தார் - ஊடியவர்; புல்லல் - தழுவல்; புல்லாவிடல் - தழுவாதுவிடல்;*

4. ஊடலின் காரணத்தை உணராதிருப்பது எது போன்றது?

**ஊடி யவரை உணராமை வாடிய**
**வள்ளி முதல்அரிந் தற்று.** 1304

ஊடியவர் ஏன் ஊடினாரென்ற காரணத்தை உணராது நாமும் ஊடியிருப்பது முன்பே வாடியுள்ள கொடியை அதன் அடியில் வெட்டுவது போன்றதாகும்.

*வள்ளி - கொடி; முதல் - அடி; அரிதல் - வெட்டுதல்.*

5. நலன்கள் பொருந்திய உத்தமர்களுக்கு எது அழகாகும்?

**நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை**
**பூஅன்ன கண்ணார் அகத்து.** 1305

பூப்போன்ற கண்களையுடைய பெண்களின் மனதில் உண்டாகும் ஊடற்சிறப்பே நலன்கள் பொருந்திய உத்தமர்களுக்கு அழகாகும்.

*நலத்தகை - நலன்கள் பொருந்தியர்; நல்லவர் - உத்தமர்; ஏஎர் - அழகு; புலத்தகை - ஊடலின் சிறப்பு; அகம் - மனம்.*

6. ஊடலின் இருநிலையாகிய பெரும்பிணக்கும் சிறுபிணக்கும் இல்லையாயின் காமத்தின் நிலையெப்படி இருக்கும்?

**துனியும் புலவியும் இல்லாயின் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று.** 1306

பெரும்பிணக்கும், சிறுபிணக்கும் இல்லையெனின் காமம் நன்றாகக் கனிந்த கனிபோலவும் பிஞ்சு போலவும் பயனற்றதாகும்.

*துனி - பெரும்பிணக்கு (பேர் ஊடல்); கனி - முதிர்ந்த பழம்; கருக்காய் - பிஞ்சு; புலவி - சிறு பிணக்கு (சிறு ஊடல்).*

7. ஊடலில் ஏற்படும் துன்பம் என்ன?

**ஊடலின் உண்டுஆங்குஓர் துன்பம் புணர்வது**
**நீடுவது அன்றுகொல் என்று.** 1307

நாம் கூடுவது இனித் தொடருமா, தொடராதா என்று நினைப்பதால் ஊடலிலும் ஒருவகைத் துன்பம் உண்டு.

*புணர்வது - கூடுவது; நீடுவது - தொடர்வது.*

8. அன்பில்லாத காதலர்க்காக வருந்துவது சரியா?

**நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃதுஅறியும்**
**காதலர் இல்லா வழி.** 1308

எனக்காக இவர் வருந்தினாரென்று அந்த வருத்தத்தை அறியும் காதலர் இல்லாத போது வருந்திப்பயன் என்ன?

*நோதல் - வருந்துதல்; நொந்தார் - வருந்தினார்.*

9. யாரிடத்தில் ஊடல் கொள்வது இன்பம் தரும்?

**நீரும் நிழலது இனிதே புலவியும்**
**வீழுநர் கண்ணே இனிது.** 1309

நீரும் நிழலுக்குக் கீழே குளிருடன் இனிதாக இருக்கும். அது போல அன்பு செலுத்துபவர் இடத்தில் ஊடல்கொள்வதே இன்பமானது.

*இனிதே - குளிர்மையானது; புலவி - சிறு ஊடல்;*
*வீழுநர் - அன்பு செய்பவர்.*

10. ஊடலை உணராதவரையும் கூடுவோமென நினைப்பது ஏன்?

**ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்**
**கூடுவேம் என்பது அவா.** 1310

ஊடலின் காரணத்தை அறிந்து அதனைத் தீர்க்காது வாடவிடுவாரோடு கூடி இருப்போம் என்று என் நெஞ்சம் கூறுவது ஆசையேயாகும்.

*உணக்குதல் - காயவைத்தல்.*

## 132. புலவி நுணுக்கம்

*(சிறு ஊடலின் மிகநுட்பமான தன்மைகள்)*

1. என் மார்பை நெருங்காததிற்குக் காரணம் என்ன?

**பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.** 1311

பொதுமகளிரிடம் செல்பவனே! பெண்தன்மை கொண்ட அனைவருமே பொதுப்பொருளாக நினைத்து உன்னை இரசிக்கின்றனர். ஆதலால் உன் மார்பை நெருங்கமாட்டேன்.

*இயல் - தன்மை; கண்ணின் - கண்ணால்;*
*நண்ணேன் - நெருங்கேன்; உண்பர் - இரசிப்பர்.*

2. நீ ஊடல் கொண்டிருந்த போது அவர் எதற்காகத் தும்மினார்?

**ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை**
**நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.** 1312

நாம் இருவரும் ஊடல் கொண்டிருந்த போது அவர் தும்மினார். நான் 'நீடு வாழ்க' என்று வாழ்த்துவேன் என்பதை அறிந்தே அவர் அப்படிச் செய்தார்

*யாம் - நான்; தம்மை - அவரை.*

3. கோட்டுப்பூமாலை அணிந்திருந்தாயே அது எங்கே போயிற்று?

**கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்**
**காட்டிய சூடினீர் என்று.** 1313

மரங்களில் மலர்ந்த மலர்களின் மாலையை நான் அணிந்தாலும் அவள், 'நீர் யாரோ ஒருத்திக்குக் காட்டுவதற்காகவே போட்டிருந்தீர்' என்று என்னோடு கோபப்படுகின்றாள்.

*கோட்டுப்பூ - மரப்பு; சூடினும் - அணிந்தாலும்; காயும் - கோபிக்கும்;*
*காட்டிய - காட்டவே; சூடினீர் - அணிந்தீர் (போட்டீர்).*

4. யாரையும்விட உன்னிடந்தான் எனக்குக்காதல் என்று சொல்ல என்ன செய்தாள்?

**யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று.** 1314

யாரையும் விட உன்னிடமே எனக்கு மிகுந்த காதல் என்று சொன்னவுடனே 'யாரைவிட? யாரைவிட? எனக்கேட்டு ஊடல் கொண்டாள்.

*யாரினும் - யாரைவிட; காதலம் - மிகுந்த காதல்.*

5. ஏன் கண் கலங்கினாள்?

**இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்**
**கண்நிறை நீர்கொண் டனள்.** 1315

இந்தப் பிறவியில் உன்னைப் பிரியமாட்டேன் என்று சொல்ல, உடனே வரப்போகின்ற பிறப்புகளில் தன்னைப் பிரியப்போவதாக நினைத்துக் கண்கலங்கினாள்.

*இம்மை - இப்பிறப்பு; பிரியலம் - பிரியடமாட்டோம்; கண்நிறை நீர் - கண் கலங்கல்.*

6. 'நினைத்தேன்' என்று சொன்னதற்கு என்ன செய்தாள்?

**உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்**
**புல்லாள் புலத்தக் கனள்.** 1316

'உன்னை நினைத்தேன்' என என் மனைவியிடம் சொன்னேன். உடனே என்னை மறந்தபடியால் தானே நினைத்தீர் ஏன் மறந்தீர் என்றென்னைத் தழுவாது ஊடினாள்.

*உள்ளினேன் - நினைத்தேன்; என் மறந்தீர் - ஏன் மறந்தீர்; புல்லாள் - தழுவாள்; புலத்தல் - சிறு ஊடல் கொள்ளல்.*

7. தும்மியதற்கு என்ன செய்தாள்?

**வழுத்தினாள் தும்மினே னாக அழித்துஅழுதாள்**
**யார்உள்ளித் தும்மினீர் என்று.** 1317

நான் தும்மினேன். அதற்கு அவளென்னை வாழ்த்தினாள். பின்னர் யார் நினைத்ததால் நீர் தும்மினீர் எனக்கேட்டு அழுதாள்.

*வழுத்தினாள் - வாழ்த்தினாள்; அழித்து - பின்னர்; உள்ளி - நினைத்து.*

8. தும்மல் வராமல் அடக்கியதற்கு என்ன செய்தாள்?

**தும்மச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்**
**எம்மை மறைத்திரோ என்று.** 1318

அவளின் ஊடலுக்குப் பயந்து வந்த தும்மலை நான் அடக்கினேன். அதற்கு 'உம்முடையவர் உம்மை நினைப்பதை எனக்குத் தெரியாமல் மறைக்கிறீரோ' என்று அழுதாள்.

*செறுப்ப - அடக்க; நுமர் - உம்முடையவர்;*
*உள்ளல் - நினைத்தல்; எம்மை - எமக்கு.*

9. அவளின் ஊடலை போக்கியதற்கு என்ன செய்கிறாள்?

**தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்**
**இந்நீரர் ஆகுதிர் என்று.** 1319

அவளின் ஊடலுக்கான காரணம் பிழையென உணர்த்தி மகிழ்வித்தாலும் மற்றவர்க்கும் நீர் இப்படித்தான் செய்வீரோ என்று கோபப்படுகிறாள்.

*காயும் - கோபப்படும்; இந்நீரர் - இத்தன்மையர்; ஆகுதிர் - செய்வீர்.*

10. அவள் அழகைப்பார்த்து இரசித்துக்கொண்டிருந்தால் என்ன செய்கிறாள்?

**நினைத்துஇருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்**
**யார்உள்ளி நோக்கினீர் என்று.** 1320

அவளது அழகை நினைத்து அவளைப்பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாலும் யாரை நினைத்து என்னை ஒப்பிட்டுப் பார்க்கிறீர் என்று கோபப்படுகிறாள்.

*நோக்கி - பார்க்கினும்; காயும் - கோபப்படும்;*
*உள்ளி - நினைத்து; நோக்கினீர் - பார்த்தீர்.*

# 133. ஊடல் உவகை

*(ஊடலால் வரும் இன்பம்)*

1. ஊடல் அன்பை வளர்க்குமா?

**இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லதுஅவர் அளிக்கு மாறு.** 1321

அவரிடத்தில் ஒரு தவறும் இல்லை ஆயினும் அவரோடு ஊடுதல் என்மேல் மிகுந்த அன்பை அவருக்கு உண்டாக்க வல்லதாகும்.

*அளித்தல் - அன்புசெலுத்துதல்;*

2. ஊடலால் அன்பு குறையாதா?

**ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி**
**வாடினும் பாடு பெறும்.** 1322

ஊடலில் உண்டாகும் சிறுகோபம் கணவன் மனைவியிடையே உள்ள நல்லஅன்பு வாடக் காரணமாயினும் அதுவே பெருமை உடையது.

*துனி - கோபம்; நல்அளி - நல்லஅன்பு; பாடு - பெருமை.*

3. ஊடுவதால் இன்பம் கிடைக்குமா?

**புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு**
**நீர்இயைந் தன்னார் அகத்து.** 1323

நிலத்துக்குள் இருந்து நீர் ஊறிவருதல் போல அன்பு நீர் பெருகிப்பாய்பவரின் மனதில் உண்டாகும் ஊடலைவிட வேறு புதுமையான நாடு இருக்கின்றதோ?

*புலத்தல் - ஊடல்; புத்தேள் - புதுமை; அகத்து - மனத்து.*

4. உன் மனத்திடத்தை உடைக்கும் படை எதிலிருந்து உண்டாகின்றது?

**புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்**
**உள்ளம் உடைக்கும் படை.** 1324

கணவருடன் தொடர்ந்து கூடி இருப்பதற்குக் காரணமான ஊடலில் தான் என் மனத்திடத்தை உடைக்கும் படை உண்டாகின்றது.

*புல்லி - கூடி; புலவி - ஊடல்; உள்ளம் - மனத்திடம்.*

5. நாம் விரும்புபவரிடம் ஊடுவதால் என்ன கிடைக்கும்?

**தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்**
**அகறலின் ஆங்குஒன்று உடைத்து.** 1325

தவறு இல்லாதவர் ஆனாலும் நாம் விரும்பும் பெண்ணின் மெல்லிய தோள்களை நீங்கியிருப்பதிலும் ஓர் இன்பம் இருக்கின்றது.

*வீழ்வார் - விரும்பப்படுபவர்; அகறல் - நீங்கல்.*

6. காமத்தில் ஊடலா கூடலா இன்பமானது?

**உணலினும் உண்டது அறல்இனிது காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.** 1326

உண்பதிலும் முன்பு உண்ட உணவு சீரணிப்பதே இன்பமானது. அது போல காமத்தில் கூடுவதை விட ஊடுவதே இன்பமானது.

*உணல் - உண்பது; அறல் - சீரணித்தல்; புணர்தல் - கூடுதல்.*

7. யார் ஊடலில் வெற்றி அடைவார்?

**ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**
**கூடலில் காணப் படும்.** 1327

ஊடலில் தோற்றவரே வெற்றி அடைந்தவராவார். அதனைக் கூடலின் போது கண்டு கொள்ளலாம்.

8. எதனை ஊடலால் பெறமுடியும்?

**ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றிய உப்பு.** 1328

மனைவியின் நெற்றியில் வியர்வை உண்டாகும்படி கூடிப்பெறும் இனிமையை ஊடினால் தானே இனியும் பெறுவோம்?

*பெறுகுவம் - பெறுவோம்; நுதல் - வெற்றி; உப்பு - இனிமை.*

9. இரவு ஏன் நீளவேண்டும்?

**ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா.** 1329

ஒளி பொருந்திய அணிகலன் அணிந்த என் மனைவி ஊடுவாளாக. நான் அவளிடம் கெஞ்சுவதற்காக இந்த இராக்காலம் இன்னும் நீண்டு கொண்டே போகட்டும்.

*இழை - அணிகலன்; இரப்ப - கெஞ்ச; நீடுக - நீளட்டும்.*

10. கூடுவது எதற்கு இன்பத்தைக் கொடுக்கும்?

**ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்**
**கூடி முயங்கப் பெறின்.** 1330

காமத்திற்கு இன்பத்தை தருவது ஊடுவதேயாகும். அந்த ஊடலுக்கு இன்பத்தைக் கொடுப்பது ஒருவரை ஒருவர் கூடிக்கலந்து பெறும் இன்பமேயாகும்.

*முயங்கல் - கலத்தல் (புணர்தல்).*

# திருக்குறள்
# முதற்குறிப்பு அகராதி

அ.்.காமை ........ 178
அ.்.கி அகன்ற ........ 175
அகடு ஆரார் ........ 936
அகப்பட்டி ........ 1074
அகரமுதல ........ 1
அகலாது ........ 691
அகழ்வாரை ........ 151
அகன் அமர்ந்து ஈத ........ 92
அகன் அமர்ந்து செய் ........ 84
அங்கணத்துள் ........ 720
அசை இயற்கு ........ 1098
அச்சமே ........ 1075
அச்சம் ........ 534
அஞ்சாமை அல் ........ 497
அஞ்சாமை ஈகை ........ 382
அஞ்சும் ........ 863
அஞ்சுவது அஞ்சா ........ 428
அஞ்சுவது ஓரும் ........ 366
அடக்கம் ........ 121
அடல்தகையும் ........ 768
அடல்வேண்டும் ........ 343
அடுக்கிய கோடி ........ 954
அடுக்கி வரினும் ........ 625
அடுத்தது ........ 706
அணங்குகொல் ........ 1081
அணி அன்றோ ........ 1014
அந்தணர் என் ........ 30
அந்தணர் நூற் ........ 543
அமர் அகத்து ஆற் ........ 814
அமர் அகத்து வன் ........ 1027
அமிழ்தினும் ........ 64
அமைத்து ஆங் ........ 474
அரங்கு இன்றி ........ 401
அரம் பொருத ........ 888
அரம்போலும் ........ 997
அரிது அரோ ........ 1153
அரிது ஆற்றி ........ 1160
அரிய என்று ........ 537
அரிய கற்று ........ 503
அரியவற்றுள் ........ 443
அருங்கேடன் ........ 210
அருஞ்செவ்வி ........ 565
அருட்செல்வம் ........ 241
அருமறை சோரும் ........ 847
அருமை உடைத்து ........ 611
அரும்பய ........ 198
அருவினை என்ப ........ 483
அருளொடும் ........ 755
அருள் அல்ல ........ 254
அருள் இல்லா ........ 247
அருள் என் ........ 757
அருள் கருதி ........ 285
அருள் சேர்ந்த ........ 243
அருள் வெ.்.கி ........ 176
அலந்தாரை ........ 1303
அலர் ஏழ ........ 1141
அலர் நாண ........ 1149
அல்லல் அரு ........ 245
அல்லல்பட்டு ........ 555
அல்லவை தேய ........ 96
அவர் தந்தார் ........ 1182
அவர் நெஞ்சு ........ 1291
அவாஇல் ........ 368
அவாஎன்ப ........ 361
அவாவினை ........ 367
அவிசொரிந் ........ 259
அவை அறிந்து ........ 711
அவை அறியார் ........ 713
அவ்வித்து அழுக்காறு ........ 167
அவ்விய நெஞ்ச ........ 169
அழக்கொண்ட ........ 659
அழச்சொல்லி ........ 795
அழல்போலும் ........ 1228
அழிதூஉம் ........ 461
அழிவந்த ........ 807
அழிவின் ........ 787
அழிவு இன்று ........ 764
அழுக்கற்று ........ 170
அழுக்காறு அவா ........ 35
அழுக்காறு உடையார் ........ 165
அழுக்காறு உடையான் ........ 135
அழுக்காறு என ........ 168
அழுக்காற்றின் ........ 164
அளவளாவு ........ 523
அளவின் கண் ........ 286
அளவு அல்ல ........ 289
அளவு அறிந்தார் ........ 288
அளவு அறிந்து ........ 479
அளித்து அஞ்சல் ........ 1154
அறத்தாறு ........ 37
அறத்தாற்றின் ........ 46
அறத்தான் ........ 39
அறத்திற்கே ........ 76
அறத்தின் ஊங்கு ........ 32

அறம் கூறான் .......... 181
அறம் சாரா .......... 1047
அறம் சொல்லும் .......... 185
அறம் பொருள் .......... 501
அறவாழி .......... 8
அறவினையாது .......... 321
அறவினையும் .......... 909
அறம் அழீஇ .......... 182
அறன் அறிந்து ஆன் .......... 635
அறன் அறிந்து மூத் .......... 441
அறன் அறிந்துவே .......... 179
அறன் ஆக்கம் .......... 163
அறன் இயலான் .......... 147
அறன் இழுக்காது .......... 384
அறன் ஈனும் .......... 754
அறன் என .......... 49
அறன் கடை .......... 142
அறன் நோக்கி .......... 189
அறன் வரை .......... 150
அறிகலார் .......... 1139
அறிகொன்று .......... 638
அறிதொறு .......... 1110
அறிந்து ஆற்றி .......... 515
அறிவினான் .......... 315
அறிவினுள் .......... 203
அறிவு அற்றம் .......... 421
அறிவு இலார் .......... 843
அறிவு இலான் .......... 842
அறிவு இன்மை .......... 841
அறிவு உடையார் ஆ .......... 427
அறிவு உடையாா ஏ .......... 430
அறிவு உருவு .......... 684
அறுவாய் .......... 1117
அறைபறை .......... 1076
அற்கா .......... 333
அற்றது .......... 944
அற்றம் மறைக்கும் .......... 980
அற்றம் மறைத்த .......... 846
அற்றவர் .......... 365
அற்றார் .......... 226
அற்றாரை .......... 506
அற்றார்க்கு .......... 1007
அற்றால் அளவு .......... 943
அற்றேம் .......... 626
அனிச்சப்பூ .......... 1115
அனிச்சமும் .......... 1120
அன்பிற்கும் .......... 71

அகராதி............ (எண் - குறள் எண்)

அன்பின் வழி .......... 80
அன்பின் விதை .......... 911
அன்பு அகத்து .......... 78
அன்பு அறிவு ஆ .......... 682
அன்பு அறிவு தே .......... 513
அன்பு இலன் .......... 862
அன்பு இலார் .......... 72
அன்பு ஈனும் .......... 74
அன்பு உடைமை இ .......... 992
அன்பு உடைமை வே .......... 681
அன்பு உற்று .......... 75
அன்பு ஓரீஇ .......... 1009
அன்பு நாண் .......... 983
அன்பும் .......... 45
அன்பொடு .......... 73
அன்று அறி .......... 36
ஆகாறு அளவு .......... 478
ஆகு ஊழால் .......... 371
ஆக்கம் அதர் .......... 594
ஆக்கம் இழந் .......... 593
ஆக்கம் கருதி .......... 463
ஆக்கமும் கேடும் .......... 642
ஆங்கு அமைவு .......... 740
ஆபயன் குன்றும் .......... 560
ஆயும் அறிவினர் .......... 918
ஆய்ந்து ஆய்ந்து .......... 792
ஆர இயற்கை .......... 370
ஆவிற்கு நீர் .......... 1066
ஆள்வினையும் .......... 1022
ஆற்றாரும் ஆற்றி .......... 493
ஆற்றின் அளவு - ஈக .......... 477
ஆற்றின் அளவு - கற்க .......... 725
ஆற்றின் ஒழுகி .......... 48
ஆற்றின் நிலை தளர் .......... 716
ஆற்றின் வருந்தா .......... 468
ஆற்றுபவர்க்கும் .......... 741
ஆற்றுவார் - இக .......... 891
ஆற்றுவார் - பசி .......... 225
ஆற்றுவார் - பணி .......... 985
இகலான் ஆம் .......... 860
இகலிற்கு எதிர் .......... 858
இகலின் மிக .......... 856
இகல் எதிர் .......... 855
இகல் என்ப .......... 851
இகல் என்னும் .......... 853
இகல் காணான் .......... 859
இகழ்ச்சியின் .......... 539

இகழ்ந்து எள்ளா ........ 1057
இடம் எல்லாம் ........ 1064
இடன் இல் பரு ........ 218
இடிக்கும் துணை ........ 447
இடி புரிந்து ........ 607
இடிப்பாரை இல் ........ 448
இடுக்கண் கால் ........ 1030
இடுக்கண் படினு ........ 654
இடுக்கண் வருங் ........ 621
இடும்பைக்கு ........ 623
இடும்பைக்கே ........ 1029
இடை தெரிந்து ........ 712
இணர் ஊழ்த்தும் ........ 650
இணர் எரிதோய் ........ 308
இதனை இதனான் ........ 517
இமைப்பின் ........ 1129
இமையாரின் ........ 906
இம்மைப் பிறப் ........ 1315
இயல்பாகும் ........ 344
இயல்பினான் ........ 47
இயல்புளி ........ 545
இயற்றலும் ........ 385
இரக்க ........ 1051
இரத்தலின் ........ 229
இரத்தலும் ஈத ........ 1054
இரந்தும் உயிர் ........ 1062
இரப்பன் ........ 1067
இரப்பாரை ........ 1058
இரப்பான் வெகுளி ........ 1060
இரவார் ........ 1035
இரவு உள்ள ........ 1069
இரவு என்னும் ........ 1068
இரு நோக்கு ........ 1091
இருந்து உள்ளி ........ 1243
இருந்து ஓம்பி ........ 81
இருபுனலும் ........ 737
இருமனப் ........ 920
இருமை வகை ........ 23
இருவேறு உலகத்து ........ 374
இருள்சேர் இரு ........ 5
இருள்நீங்கி ........ 352
இலக்கம் ........ 627
இலங்கிழாய் ........ 1262
இலன் என்று அசை ........ 1040
இலன் என்று வெ.். ........ 174
இலர் பலர் ஆகிய ........ 270
இலன் என்று ........ 205


அகராதி............ (எண் - குறள் எண்)


இலன் என்னும் ........ 223
இல்பிறந் - கண் அல் ........ 951
இல்பிறந் - கண்ணே ........ 1044
இல்லது என் ........ 53
இல்லாரை ........ 752
இல்லாளை ........ 905
இல்லாள் கண் ........ 903
இல்லை ........ 1321
இல்வாழ்வான் ........ 41
இவறலும் ........ 432
இழத் தொறூஉம் ........ 940
இழிவறிந்து ........ 946
இழுக்கல் உடையுழி ........ 415
இழுக்காமை ........ 536
இழைத்தது ........ 779
இளித்தக்க ........ 1288
இளிவரின் ........ 970
இளைதாக ........ 879
இளையர் ........ 698
இறந்த வெகுளி ........ 531
இறந்தார் ........ 310
இறந்து அமைத்த ........ 900
இறப்பே புரிந்த ........ 977
இறல் ஈனும் ........ 180
இறுதி பயப்பினு ........ 690
இறை கடியன் ........ 564
இறை காக்கும் ........ 547
இனத்து ஆற்றி ........ 568
இனம் போன்று ........ 822
இனி அன்ன ........ 1294
இனிய உளவாக ........ 100
இனைத் துணைத்து ........ 87
இனையர் இவர் ........ 790
இன்கண் ........ 1152
இன்சொலால் ஈத்து ........ 387
இன்சொலால் ஈரம் ........ 91
இன்சொல் இனிது ........ 99
இன்பத்துள் - பய ........ 854
இன்பத்துள் - விழை ........ 629
இன்பம் இடை ........ 369
இன்பம் ஒருவற்கு ........ 1052
இன்பம் கடல் ........ 1166
இன்பம் விழை - இடு ........ 628
இன்பம் விழை - வினை ........ 615
இன்மை இடும்பை ........ 1063
இன்மை என ........ 1042
இன்மை ஒருவ ........ 988

இன்மையின் இன்னாத ........ 1041
இன்மையின் இன்னாது ........ 558
இன்மையுள் ........ 153
இன்றி அமையா ........ 961
இன்றும் வருவது ........ 1048
இன்னா என ........ 316
இன்னா செ-ரை ........ 314
இன்னாசெ-ர் ........ 987
இன்னாது இரக்கப் ........ 224
இன்னாது இன ........ 1158
இன்னாமை ........ 630
ஈட்டம் இன்றி ........ 1003
ஈதல் இசைபட ........ 231
ஈத்துஉவக்கும் ........ 228
ஈர்ங்கை விதிரார் ........ 1077
ஈவார் கண் என் ........ 1059
ஈன்ற பொழுதின் ........ 69
ஈன்றாள் பசிகாண் ........ 656
ஈன்றாள் முகத்தே ........ 923
உடம்பாடு இலா ........ 890
உடம்பொடு உயிர் ........ 1122
உடுக்கை இழந்தவன் ........ 788
உடுப்பதூஉம் ........ 1079
உடை செல்வம் ........ 939
உடைத்தம் வலி ........ 473
உடைமை ........ 89
உடையர் என ........ 591
உடையார் முன் ........ 395
உட்கப்படா அர் ........ 921
உட்பகை அஞ்சி ........ 883
உணர்வது உடை ........ 718
உணலினும் ........ 1326
உண்டார் கண் ........ 1090
உண்ணற்க ........ 922
உண்ணாது ........ 160
உண்ணாமை உள்ள ........ 255
உண்ணாமை வேண்டும் ........ 257
உதவி வரைத்து ........ 105
உப்பு அமைந் ........ 1302
உயர்வு அகலம் ........ 743
உயிர் உடம்பின் ........ 330
உயிர்ப்ப ........ 880
உய்தல் ........ 1287
உரம் ஒருவர்க்கு ........ 600
உரன் என்னும் ........ 24
உரன் நசை இ ........ 1263
உருவு கண்டு ........ 667



உருள் ஆயம் ........ 933
உரைப்பார் ........ 232
உலகத்தார் ........ 850
உலகத்தோடு ........ 140
உலகம் தழீஇயது ........ 425
உலைவிடத்து ........ 762
உவக் காண் ........ 1185
உவந்து ........ 1130
உவப்ப ........ 394
உழந்து ........ 1177
உழவினார் ........ 1036
உழுதுண்டு ........ 1033
உழுவார் ........ 1032
உழைப்பிரிந்து ........ 530
உளபோல் ........ 574
உளர் எனினும் ........ 730
உளர் என்னும் ........ 406
உளவரை ........ 480
உள்ஒற்றி ........ 927
உள்ளக்களித்தலும் ........ 1281
உள்ளத்தால் ........ 294
உள்ளத்தார் ........ 1249
உள்ளத்தால் ........ 282
உள்ளம் இலாதவர் ........ 598
உள்ளம் உடைமை ........ 592
உள்ளம் போன்று ........ 1170
உள்ளற்க ........ 798
உள்ளிய எல் ........ 309
உள்ளியது எய்தல் ........ 540
உள்ளினும் தீரா ........ 1201
உள்ளினேன் ........ 1316
உள்ளுவது ........ 596
உள்ளுவல் மன் ........ 1125
உள்ளுவன் மன் ........ 1184
உறங்குவது ........ 339
உறல் முறை ........ 885
உறா அதவர்க் ........ 1292
உறா அதவர் போல் ........ 1096
உறா அதோ ........ 1143
உறா அர்க்கு ........ 1200
உறின் உயிர் ........ 778
உறின் நட்டு ........ 811
உறுதொறு ........ 1106
உறுபசி ........ 734
உறு பொருளும் ........ 756
உறுப்பு அமைந்து ........ 761
உறுப்பு ஒத்தல் ........ 993

உறுவது சீர் ............ 813
உறை சிறியார் ............ 680
உற்ற நோய் நீக்கி ............ 442
உற்ற நோய் நோன் ............ 261
உற்றவன் ............ 950
உற்றான் ............ 949
ஊக்கம் ............ 486
ஊடலின் உண்டு ............ 1307
ஊடலின் தோற்ற ............ 1327
ஊடலின் தோன்று ............ 1322
ஊடல் உணங்க ............ 1310
ஊடல் உணர்தல் ............ 1109
ஊடற்கண் ............ 1284
ஊடியிருந்தேமா ............ 1312
ஊடிப் பெருகுவம் ............ 1328
ஊடியவரை ............ 1304
ஊடுக மன்னோ ............ 1329
ஊடுதல் காம ............ 1330
ஊண் உடை ............ 1012
ஊதியம் ............ 797
ஊரவர் கௌவை ............ 1147
ஊருணி நீர் ............ 215
ஊழி பெயரினும் ............ 989
ஊழின் பெருவலி ............ 380
ஊழையும் உப்பக்கம் ............ 620
ஊறு ஒரால் ............ 662
ஊனைக்குறித்த ............ 1013
எச்சம் என்று ............ 1004
எண் என்ப ............ 392
எண் சேர்ந்த ............ 910
எண்ணித் துணிக ............ 467
எண்ணிய எண் ............ 666
எண்ணியார் எண் ............ 494
எண்பதத்தால் ............ 991
எண்பதத்தான் ............ 548
எண்பொருள் ............ 424
ஏதிரதா ............ 429
என் நன்றி ............ 110
எப்பொருளும் ............ 695
எப்பொருள் எத் ............ 355
எப்பொருள் யார் ............ 423
எய்தற்கு ............ 489
எரியால் ............ 896
எல்லாப் பொருள் ............ 746
எல்லார்க்கும் எல் ............ 582
எல்லார்க்கும் நன் ............ 125
எல்லா விளக்கும் ............ 299
எல்லைக் கண் ............ 806
எவ்வது உறைவது ............ 426
எழுதுங்கால் ............ 1285
எழுபிறப்பும் ............ 62
எழுமை எழு ............ 107
எளிது என ............ 145
எள்பகவு அன்ன ............ 889
எள்ளாத எண்ணி ............ 470
எள்ளாமை ............ 281
எள்ளின் இனி ............ 1298
எற்றிற்கு உரியர் ............ 1098
எற்று என்று ............ 655
எனைத்தானும் எங் ............ 317
எனைத்தானும் நல் ............ 416
எனைத்திட்பம் ............ 670
எனைத்து ஒன்று ............ 1202
எனைத்துணையர் ............ 144
எனைத்து நினைப்பு ............ 1208
எனைத்தும் குறுகு ............ 820
எனைப்பகை ............ 207
எனைமாட்சி ............ 750
எனைவகையான் ............ 514
என் ஐ முன் ............ 771
என்பு இலதனை ............ 77
என்றும் ஒருவு ............ 652
ஏதம் பெருஞ் ............ 1006
ஏதிலார் ஆர ............ 837
ஏதிலார் குற்றம் ............ 190
ஏதிலார் போல ............ 1099
ஏந்திய கொள்கை ............ 899
ஏமுற்றவரினும் ............ 873
ஏரினும் நன்றால் ............ 1038
ஏரின் உழா அர் ............ 14
ஏவவும் செய்கலான் ............ 848
ஐந்து அவித்தான் ............ 25
ஐயத்தின் ............ 353
ஐயப்படா அ ............ 702
ஐயுணர்வு ............ 354
ஒட்டார் பின் ............ 967
ஒண்நுதற்கு ............ 1038
ஒண்பொருள் ............ 760
ஒத்தது அறிவான் ............ 214
ஒப்புரவினால் ............ 220
ஒரு தலையான் ............ 1196
ஒருநாள் ............ 1269
ஒருபொழுது ............ 337
ஒருமைக் கண் ............ 398

ஒருமைச் செயல் .......... 835
ஒருமை மகளிரே .......... 974
ஒருமையுள் ஆமை .......... 126
ஒலித்தக்கால் .......... 763
ஒல்லும் கருமம் .......... 818
ஒல்லும் வகையான் .......... 33
ஒல்லும் வாய் .......... 673
ஒல்வது அறிவது .......... 472
ஒழுக்கத்தின் எய் .......... 137
ஒழுக்கத்தின் ஒல் .......... 136
ஒழுக்கத்து நீத்தார் .......... 21
ஒழுக்கமும் .......... 952
ஒழுக்கம் உடைமை .......... 133
ஒழுக்கம் உடையவர் .......... 139
ஒழுக்கம் விழுப்பம் .......... 131
ஒழுக்கு ஆறா .......... 161
ஒளி ஒருவர்க்கு .......... 971
ஒளியார்முன் .......... 714
ஒறுத்தாரை .......... 155
ஒறுத்தார்க்கு .......... 156
ஒறுத்து ஆற்றும் .......... 579
ஒற்றினான் ஒற்றி .......... 583
ஒற்று ஒற்றி .......... 588
ஒற்று ஒற்று .......... 589
ஒன்றும் உரை .......... 581
ஒன்றா உலக .......... 233
ஒன்றாக நல்வது .......... 323
ஒன்றாமை .......... 886
ஒன்றானும் .......... 128
ஒன்று எய்தி .......... 932
ஒன்னார் .......... 264
ஓ ஓ இனிதே .......... 1176
ஓ ஒதல் வேண்டும் .......... 653
ஓதி உணர்ந்தும் .......... 834
ஓம்பின் .......... 1155
ஓர்த்து உள்ளம் .......... 357
ஓர்ந்து கண் .......... 541
கடல் அன்ன .......... 1137
கடல் ஓடா .......... 496
கடன் அறிந்து .......... 687
கடன் என்ப .......... 981
கடா உரு .......... 585
கடா அக்களிற் .......... 1087
கடிது ஓச்சி .......... 562
கடிந்த கடிந்து .......... 658
கடுஞ்சொல்லன் .......... 566
கடுமொழியும் .......... 567
கடைக் கொட்க .......... 663
கணை கொடிது .......... 279
கண் உடையர் .......... 393
கண் உள்ளார் .......... 1127
கண் உள்ளின் .......... 1126
கண் களவு .......... 1092
கண்டது மன் .......... 1146
கண்டார் உயிர் .......... 1084
கண்டு கேட்டு .......... 1101
கண்ணிற்கு அணி .......... 575
கண்ணின் துளி .......... 1290
கண்ணின் பசப் .......... 1240
கண்ணின்று .......... 184
கண்ணும் கொள .......... 1244
கண்ணொடு கண் .......... 1100
கண்ணோட்டத்து .......... 572
கண்ணோட்டம் இல் .......... 577
கண்ணோட்டம் என் .......... 571
கண் தாம் .......... 1171
கண் நிறைந்த .......... 1272
கதம் காத்து .......... 130
கதுமென .......... 1173
கயல் உண்கண் .......... 1212
கரத்தலும் .......... 1162
கரப்பவர்க்கு .......... 1070
கரப்பினும் .......... 1271
கரப்பு இடும்பை .......... 1056
கரப்பு இலாநெஞ் .......... 1053
கரப்பு இலார் .......... 1055
கரவாது உவந்து .......... 1061
கருமணியின் .......... 1123
கருமத்தான் .......... 1011
கருமம் சிதை .......... 579
கருமம் செய .......... 1021
கருவியும் கால .......... 631
கலங்காது கண்ட .......... 668
கலந்து .......... 1246
கல்லா ஒருவன் .......... 405
கல்லாத மேல் .......... 845
கல்லாதவரின் .......... 729
கல்லாதவரும் .......... 403
கல்லாதான் ஒட்பம் .......... 404
கல்லாதான் சொல் .......... 402
கல்லார்ப் பிணிக்கும் .......... 570
கல்லான் வெகு .......... 870
கவறும் .......... 935
கவ்வையான் .......... 1144

கழா அக்கால்........................ 840
களவினான்........................ 283
களவின் கண்........................ 284
களவு என்னும்........................ 287
களித்தானை........................ 929
களித்து அறியேன்........................ 928
களித்தொறும்........................ 1145
கள் உண்ணா........................ 930
கள்வார்க்கு........................ 290
கறுத்து இன்னா........................ 312
கற்க கசடற........................ 391
கற்றதனால் ஆய........................ 2
கற்றருள் கற்றார்........................ 722
கற்றார் முன்........................ 724
கற்றிலன் ஆயினும்........................ 414
கற்று அறிந்தார்........................ 717
கற்று ஈண்டு........................ 356
கற்றுக் கண்........................ 686
கனவினான் உண்........................ 1214
கனவினும் இன்........................ 819
காக்க பொருளா........................ 122
காக்கை கரவா........................ 527
காட்சிக்கு........................ 386
காணாச் சினத்தான்........................ 866
காணாதான்........................ 849
காணின் குவளை........................ 1114
காணுங்கால்........................ 1286
காண்க மன்........................ 1265
காதல காதல்........................ 440
காதலர் இல்........................ 1224
காதலர் தூதொடு........................ 1211
காதல் அவரிலர்........................ 1242
காதன்மை........................ 507
காமக் கடல்........................ 1164
காமக் கடும்புனல் உய்........................ 1134
காமக் கடும்புனல் நீந்........................ 1167
காமத் கணிச்சி........................ 1251
காமும் நாணும்........................ 1163
காமம் உழந்து........................ 1131
காமம் என........................ 1262
காமம் விடு........................ 1247
காமம் வெகுளி........................ 360
காலத்தினால்........................ 102
காலம் கருதி........................ 485
காலை அரும்பி........................ 1227
காலைக்குச் செய்த........................ 1225
கால் ஆழ் களரின்........................ 500

அகராதி............(எண் - குறள் எண்)

கான முயல்........................ 772
குடம்பை........................ 338
குடி ஆண்மை........................ 609
குடி என்னும்........................ 601
குடி செய்வல்........................ 1023
குடி செய்வார்........................ 1028
குடி தழீஇ........................ 544
குடி புறம்........................ 549
குடிப் பிறந்தார்........................ 957
குடிப் பிறந்து குற்........................ 502
குடிப் பிறந்து தன்........................ 794
குடி மடிந்து........................ 604
குண நலம்........................ 982
குணம் என்னும்........................ 29
குணம் நாடி........................ 504
குணனும் குடிமை........................ 793
குணன் இலனாய்........................ 868
குலம் சுடும்........................ 1019
குழல் இனிது........................ 66
குறிக்கொண்டு........................ 1095
குறித்தது........................ 704
குறிப்பின் குறிப்பு உணரா........................ 705
குறிப்பின் குறிப்பு உணர்........................ 703
குறிப்பு அறிந்து........................ 696
குற்றம் இலனாய்........................ 1025
குற்றமே காக்க........................ 434
குன்றின் அனையா........................ 965
குன்று அன்னார்........................ 898
குன்று ஏறி........................ 758
கூடிய காமம்........................ 1264
கூத்தாட்டு........................ 332
கூழும் குடியும்........................ 554
கூறாமை நோக்கி........................ 701
கூற்றத்தை........................ 894
கூற்றம் குதித்தலும்........................ 269
கூற்றமோ........................ 1085
கூற்று உடன்று........................ 765
கெடல் வேண்டின்........................ 893
கெடாஅ வழி வந்த........................ 809
கெடுங்காலை........................ 799
கெடுப்பதூஉம்........................ 15
கெடுவல் யான்........................ 116
கெடுவாக........................ 117
கெட்டார்க்கு........................ 1293
கேடு அறியாக்........................ 736
கேடு இல்........................ 400
கேடும் பெருக்கமும்........................ 115

கேட்டார் பிணிக்கும் ........ 643
கேட்டினும் உண்டு ........ 796
கேட்பினும் ........ 418
கேள் இழுக்கம் ........ 808
கை அறியாமை ........ 925
கைம்மாறு ........ 211
கைவேல் ........ 774
கொக்கு ஒக்க ........ 490
கொடியார் - கொடுமை ........ 1235
கொடியார் கொடுமையின் ........ 1169
கொடுத்தலும் ........ 525
கொடுத்தும் ........ 867
கொடுப்பது அழுக்கு ........ 166
கொடுப்பதூஉம் ........ 1005
கொடும் புருவம் ........ 1086
கொடை அளி ........ 390
கொலை மேற் ........ 551
கொலையின் கொடி ........ 550
கொலை வினையர் ........ 329
கொல்லா நல ........ 984
கொல்லாமை ........ 326
கொல்லான் ........ 260
கொளப் பட்டேம் ........ 699
கொளற்கு அரி ........ 745
கொன்று அன்ன ........ 109
கோட்டுப் பூ ........ 1313
கோள் இல் பொறி ........ 9
சமன் செய்து ........ 118
சலத்தால் பொரு ........ 660
சலம் பற்றி ........ 956
சாதலின் இன்னாத ........ 230
சாயலும் நாணும் ........ 1183
சார்பு உணர்ந்து ........ 359
சால்பிற்குக் ........ 986
சான்றவர் ........ 990
சிதைவிடத்து ........ 597
சிறப்பு அறிய ........ 590
சிறப்பு ஈனும் செல்வமு ........ 31
சிறப்பு ஈனும் செல்வம் ........ 311
சிறப் பொடு பூசனை ........ 8
சிறியார் உணர்ச்சி ........ 976
சிறுகாப்பின் ........ 744
சிறுபடையான் ........ 498
சிறுமை நமக்கு ........ 1231
சிறுமை பல ........ 934
சிறுமையும் ........ 769
சிறுமையுள் ........ 98
சிறைகாக்கும் ........ 57
சிறை நலனும் ........ 499
சிற்றினம் அஞ் ........ 451
சிற்றின்பம் ........ 173
சினத்தைப் ........ 307
சினம் என்னும் ........ 306
சீர் இடம் காணின் ........ 821
சீர் உடைச் செல்வர் ........ 1010
சீரினும் சீர் ........ 962
சீர்மை சிற ........ 195
சுடச்சுடரும் ........ 267
சுவை ஒளி ........ 27
சுழலும் இசை ........ 777
சுழன்றும் ஏர்ப் ........ 1031
சுற்றத்தான் ........ 524
சூழாமல் தானே ........ 1024
சூழ்ச்சி முடி ........ 671
சூழ்வார் கண் ........ 445
செப்பம் உடை ........ 112
செப்பின் புணர்ச்சி ........ 887
செயற்கு அரிய செய் ........ 26
செயற்கு அரிய யா ........ 781
செயற்கை அறி ........ 637
செயற்பால செய் ........ 437
செயற்பாலது ........ 40
செயிரின் தலைப் ........ 258
செய்க பொருளை ........ 759
செய்தக்க அல்ல ........ 466
செய்து ஏமம் ........ 815
செய்யாமல் செய்த ........ 101
செய்யாமல் செற ........ 313
செய்வானை ........ 516
செய்வினை ........ 677
செருக்கும் ........ 431
செருவந்த ........ 569
செல் இடத்துக் ........ 301
செல்லா இட ........ 302
செல்லாமை ........ 1151
செல்லான் ........ 1039
செல்வத்துள் ........ 411
செல்விருந்து ........ 86
செவி உணவின் ........ 413
செவி கைப்பச் ........ 389
செவிக்கு உணவு ........ 412
செவிச் சொல்லும் ........ 694
செவியில் சுவை ........ 420
செறா அச்சிறு ........ 1097

செறி தொடி ........ 1275
செறிவு அறிந்து ........ 123
செறுநரை ........ 488
செறுவார்க்குச் ........ 869
செற்றவர் பின் ........ 1256
செற்றார் என ........ 1245
செற்றார் பின் ........ 1255
சென்ற இடத் ........ 422
சொலல் வல்லன் ........ 647
சொல்லப்பயன் ........ 1078
சொல்லுக சொல்லின் ........ 200
சொல்லுக சொல்லை ........ 645
சொல்லுதல் ........ 664
சொல்கோட்டம் ........ 119
சொல் வணக்கம் ........ 827
ஞாலம் கருதினும் ........ 484
தகுதி என ஒன் ........ 111
தக்காங்கு ........ 561
தக்கார் இனத்த ........ 446
தக்கார் தகவிலார் ........ 114
தஞ்சம் தமர் ........ 1300
தணந்தமை ........ 1233
தண்ணம் துறை ........ 1277
தந்தை மகற்கு ........ 67
தந்நலம் ........ 916
தமர் ஆகி ........ 529
தம் நெஞ்சத் ........ 1205
தம்பொருள் ........ 63
தம்மில் இருந்து ........ 1107
தம்மின் பெரியார் ........ 444
தம்மின் தம் ........ 68
தலைப்பட்டார் ........ 348
தலையின் இழிந்த ........ 964
தவமும் ........ 262
தவம் செய்வார் ........ 266
தவம் மறைந்து ........ 274
தவறு இலர் ........ 1325
தள்ளா ........ 731
தற்காத்து ........ 56
தனக்கு உவமை ........ 7
தனியே ........ 1296
தன் உயிர்க்கு ........ 318
தன் உயிர் தான் ........ 268
தன் உயிர் நீப் ........ 327
தன் ஊன் ........ 251
தன் குற்றம் ........ 436
தன் துணை ........ 875
தன் நெஞ்சு ........ 293
தன்னை உணர்த் ........ 1319
தன்னைத்தான் காக் ........ 305
தன்னைத்தான் காத ........ 209
தாம் இன்புறுவது ........ 399
தாம் வீழ்வார் தம் ........ 1191
தாம் வீழ்வார் மென் ........ 1103
தாம் வேண்டின் ........ 1150
தார் தாங்கி ........ 767
தாளாண்மை இல் ........ 614
தாளாண்மை என் ........ 613
தாள் ஆற்றி ........ 212
தானம் தவம் ........ 19
திறன் அல்ல ........ 157
திறன் அறிந்து ........ 644
தினல் பொருட்டால் ........ 256
தினைத் துணை நன்றி ........ 104
தினைத் துணையாம் ........ 433
தினைத் துணையும் ........ 1282
தீ அளவு ........ 947
தீப்பால ........ 206
தீயவை செய்தார் ........ 208
தீயவை தீய ........ 202
தீயினால் சுட்ட ........ 129
தீவினையார் ........ 201
துஞ்சினார் ........ 926
துஞ்சுங்கால் ........ 1218
துணை நலம் ........ 651
துப்பார்க்குத் ........ 12
துப்பின் எவன் ........ 1165
துப்புரவு இல் ........ 1050
தும்முச் ........ 1318
துளியின்மை ........ 557
துறந்தாரின் ........ 159
துறந்தார்க்குத் ........ 263
துறந்தார்க்கும் ........ 42
துறந்தார் படிவ ........ 586
துறந்தார் பெருமை ........ 22
துறப்பார் ........ 378
துறைவன் ........ 1157
துனியும் ........ 1306
துன்பத்திற்கு ........ 1299
துன்பம் உற ........ 669
துன்பு உறூஉம் ........ 94
துன்னாத் ........ 1250
துன்னியார் ........ 188
தூஉய்மை என்பது ........ 364

தூங்காமை ........ 383
தூங்குக ........ 672
தூய்மை ........ 688
தெண்ணீர் ........ 1065
தெய்வத்தான் ........ 619
தெய்வந் ........ 55
தெரிதலும் ........ 634
தெரிந்த ........ 462
தெரிந்து ........ 1172
தெருளாதான் ........ 249
தெளிவில் அதனை ........ 464
தென்புலத்தார் ........ 43
தேரான் தெளிவும் ........ 510
தேரான் பிறனை ........ 508
தேவர் அனையர் ........ 1073
தேறற்க ........ 509
தேறினும் ........ 876
தொகச் சொல்லி ........ 685
தொடங்கற் ........ 491
தொடலைக் ........ 1136
தொடி நோக்கி ........ 1279
தொடிப் புழுதி ........ 1037
தொடியொடு ........ 1236
தொடின் சுடின் ........ 1159
தொட்டனைத்து ........ 396
தொல்வரவும் ........ 1043
தொழுதகை ........ 828
தோன்றின் ........ 236
நகல் வல்லர் ........ 999
நகுதல் பொருட்டு ........ 784
நகை ஈகை ........ 953
நகையும் ........ 304
நகையுள்ளும் ........ 995
நகை வகையர் ........ 1199
நச்சப் ........ 1008
நடுவு இன்றி ........ 171
நட்டார் குறை ........ 908
நட்டார்க்கு நல்ல ........ 679
நட்டார் போல் ........ 826
நட்பிற்கு உறுப்பு ........ 802
நட்பிற்கு வீற்றி ........ 789
நண்பு ஆற்றார் ........ 998
நத்தம் போல் ........ 235
நயந்தவர்க்கு ........ 1181
நயந்தவர் நல் ........ 1232
நயனொடு ........ 994
நயன் இல சொல் ........ 197
நயன் இலன் ........ 193
நயன் ஈன்று ........ 97
நயன் உடை ........ 219
நயன் சாரா ........ 194
நலக்கு உரியார் ........ 149
நலத்தகை ........ 1305
நலத்தின் கண் ........ 958
நலம் வேண்டின் ........ 960
நல் ஆண்மை ........ 1026
நல் ஆறு என ........ 324
நல் ஆறு எனினும் ........ 222
நல் ஆற்றான் ........ 242
நல் இனத்தின் ........ 460
நல் குரவு ........ 1045
நல் நீரை ........ 1111
நல்லவை ........ 375
நல்லார் கண் ........ 408
நவில்தொறும் ........ 783
நற்பொருள் ........ 1046
நனவினான் கண்ட ........ 1215
நனவினான் நம் நீத் ........ 1220
நனவினான் நல்காக் ........ 1217
நனவினான் நல்காத ........ 1213
நனவினான் நல்காரை ........ 1219
நனவு என ........ 1216
நன்மையும் ........ 511
நன்று அறி ........ 1072
நன்று ஆகும் ........ 328
நன்று ஆங்கால் ........ 379
நன்று ஆற்றல் ........ 469
நன்றிக்கு வித்து ........ 138
நன்றி மறப்பது ........ 108
நன்று என்ற ........ 715
நன்றே தரினும் ........ 113
நாச்செற்று ........ 335
நாடாது நட்டலின் ........ 791
நாடு என்ப ........ 739
நாம் காதல் ........ 1195
நாள்தொறும் நாடி ........ 553
நாள்தோறும் நாடுக ........ 520
நாணாமை ........ 833
நாணான் உயிரை ........ 1017
நாணும் மறந் ........ 1297
நாணொடு ........ 1133
நாண் அகத்து ........ 1020
நாண் என ஒன் ........ 1257
நாண் என்னும் ........ 924

நாண் வேலி ............ 1016
நாநலம் என்னும் ............ 641
நாள் என ஒன்று ............ 334
நிணம் தீயில் ............ 1260
நிலத்து இயல்பான் ............ 452
நிலத்தின் கிடந் ............ 959
நிலவரை நீள் புகழ் ............ 234
நிலை அஞ்சி ............ 325
நிலை மக்கள் சால ............ 770
நிலையின் திரியா ............ 124
நில்லாதவற்றை ............ 331
நிழல் நீரும் ............ 881
நிறை அரியர் ............ 1138
நிறை உடைமை ............ 154
நிறை உடையேன் ............ 1254
நிறை நீர ............ 782
நிறை நெஞ்சம் ............ 917
நிறை மொழி ............ 28
நினைத்து இருந்து ............ 1320
நினைத்து ஒன்று ............ 1241
நினைப்பவர் ............ 1203
நீங்கான் வெகுளி ............ 864
நீங்கின் தெறுஉம் ............ 1104
நீரும் நிழலது ............ 1309
நீர் இன்று அமையாது ............ 20
நுணங்கிய கேள்வி ............ 419
நுண்ணிய நூல் பல ............ 373
நுண்ணியம் ............ 710
நுண்மான் நுழை ............ 407
நுனிக் கொம்பர் ............ 476
நூலாருள் ............ 683
நெஞ்சத்தார் ............ 1128
நெஞ்சின் துறவார் ............ 276
நெடுங்கடலும் ............ 17
நெடுநீர் மறவி ............ 605
நெடும் புனலுள் ............ 495
நெய்யால் எரி ............ 1148
நெருநல் உளன் ............ 336
நெருநற்றுச் ............ 1278
நெருப்பினுள் ............ 1049
நோக்கினாள் நோக்கி ............ 1093
நோக்கினாள் நோக்கு ............ 1082
நோதல் எவன் ............ 1308
நோயெல்லாம் ............ 320
நோய் நாடி ............ 948
நோவற்க ............ 877
நோனா உடம்பும் ............ 1132
பகச் சொல்லி ............ 187
பகல் கருதிப் பற்று ............ 852
பகல் வெல்லும் ............ 481
பகுத்து உண்டு ............ 322
பகை அகத்துச் ............ 723
பகை அகத்துப் ............ 727
பகை என்னும் ............ 871
பகை நட்பாக் ............ 874
பகை நட்பாம் ............ 830
பகை பாவம் ............ 146
பகைமையும் ............ 709
பசக்கமன் ............ 1189
பசந்தாள் ............ 1188
பசப்பு என ............ 1190
படல் ஆற்றா ............ 1175
படி உடையார் ............ 606
படுபயன் வெ.்.கி ............ 172
படைகுடி கூழ் ............ 381
படைகொண்டார் ............ 253
பணியுமாம் என் ............ 978
பணிவு உடையன் ............ 95
பணை நீங்கிப் பைந் ............ 1234
பண் என்னும் ............ 573
பண்டு அறியேன் ............ 1083
பண்பு இலான் பெற் ............ 1000
பண்பு உடையார்ப் ............ 996
பதிமருண்டு ............ 1229
பயன் இல பல்லார் ............ 192
பயன் இல் சொல் ............ 196
பயன் தூக்கார் ............ 103
பயன் தூக்கி ............ 912
பயன்மரம் உள் ............ 216
பரிந்து அவர் நல் ............ 1248
பரிந்து ஓம்பிக் ............ 132
பரிந்து ஓம்பிப் ............ 88
பரியது கூர்ங்கோட் ............ 599
பரியினும் ஆகா ............ 376
பருகுவார் போலி ............ 811
பருவத்தோடு ஒட் ............ 482
பருவரலும் ............ 1197
பலகுடை நீழலும் ............ 1034
பல சொல்லக் கா ............ 649
பல நல்ல கற்றக் ............ 823
பல்குழுவும் ............ 735
பல்லவை கற்றும் ............ 728
பல்லார் பகை கொ ............ 450
பல்லார் முனியப் ............ 191

பழகிய செல்வமும் .................. 937
பழகிய நட்பு எவன் .................. 803
பழைமை எனப் .................. 801
பழிமலைந்து எய்தி .................. 657
பழியஞ்சியப் பாத் .................. 44
பழுது எண்ணும் .................. 639
பழையம் எனக் .................. 700
பற்றற்ற கண்ணும் .................. 521
பற்றற்ற கண்ணே .................. 349
பற்றற்றேம் என் .................. 275
பற்றிவிடா அ .................. 347
பற்று உள்ளம் என் .................. 438
பற்றுக பற்று அற்றா .................. 350
பனி அரும்பி .................. 1223
பன்மாயக் .................. 1258
பாடு பெறுதியோ .................. 1237
பாத்துஊண் .................. 227
பாலொடு தேன் .................. 1121
பிணி இன்மை .................. 738
பிணிக்கு மருந்து .................. 1102
பிணை ஏர் மட .................. 1089
பிரித்தலும் .................. 633
பிரிவு உரைக்கும் .................. 1156
பிழைத்து உணர்ந் .................. 417
பிறப்பு என்னும் .................. 358
பிறப்பு ஒக்கும் .................. 972
பிறர்க்கு இன்னா .................. 319
பிறர் நாணத்தக் .................. 1018
பிறர் பழியும் தம் .................. 1015
பிறவிப் பெருங்க .................. 10
பிறன் பழி .................. 186
பிறன் பொருளாள் .................. 141
பிறன் மனை .................. 148
பீலிபெய் சாகாடும் .................. 475
புகழ் இன்றால் .................. 966
புகழ்ந்தவை .................. 538
புகழ்பட .................. 237
புகழ்புரிந் .................. 59
புக்கில் .................. 340
புணர்ச்சி .................. 785
புத்தேன் .................. 213
புரந்தார் .................. 780
புலத்தலின் .................. 1323
புலப்பல் .................. 1259
புலப்பேன் கொல் .................. 1267
புல்லவை .................. 719
புல்லாது .................. 1301
புல்லிக் கிடந்தேன் .................. 1187
புல்லிவிடா .................. 1324
புறம்குன்றி .................. 277
புறம் கூறி .................. 183
புறத்து உறுப்பு .................. 79
புறம் தூய்மை .................. 298
புன் கண்ணை .................. 1222
பெண் இயலார் .................. 1311
பெண் ஏவல் .................. 907
பெண்ணின் பெருந் .................. 54
பெண்ணினான் .................. 1280
பெயக்கண்டும் .................. 580
பெயல் ஆற்றா .................. 1174
பெரிது ஆற்றி .................. 1276
பெரிது இனிது .................. 839
பெரியாரைப் பேணா .................. 892
பெருக்கத்து .................. 963
பெருங்கொடை .................. 526
பெருமை உடைய .................. 975
பெருமைக்கும் .................. 505
பெருமை பெருமி .................. 979
பெரும் பொருளால் .................. 732
பெறாஅமை .................. 1295
பெறின் என்னாம் .................. 1270
பெறும் அவற்றுள் .................. 61
பெற்றான் பெறின் .................. 58
பேணாது பெட்டார் .................. 1178
பேணாது பெட்பவே .................. 1283
பேணாது பெண் .................. 902
பேதை பெருங் .................. 816
பேதைப் படுக்கும் .................. 372
பேதைமை என் .................. 831
பேதைமை ஒன்றோ .................. 805
பேதைமையுள் .................. 832
பேராண்மை .................. 773
பொச்சாப்பார்க்கு .................. 533
பொச்சாப்புக் .................. 532
பொது நலத்தார் .................. 915
பொது நோக்கான் .................. 528
பொய்படும் ஒன் .................. 836
பொய்ம்மையும் .................. 292
பொய்யாமை அன்ன .................. 296
பொய்யாமை பொய் .................. 297
பொருளான் ஆம் .................. 1002
பொருள் என் .................. 753
பொருள் கருவி .................. 675
பொருள் கெடுத்து .................. 938

பொருள் அல்லவரை ............................ 751
பொருள் அல்லவற் ............................ 351
பொருள் அற்றார் ............................ 248
பொருள் ஆட்சி ............................ 252
பொருள் தீர்ந்த ............................ 199
பொருள் பெண்டிர் ............................ 913
பொருள் பொருளா ............................ 914
பொருள் நீங்கி ............................ 246
பொருள் மாலை ............................ 1230
பொள்ளென ............................ 487
பொறியின்மை ............................ 618
பொறிவாயில் ............................ 6
பொறுத்த ............................ 152
பொறை ஒருங் ............................ 733
போற்றின் ஆரிய ............................ 693
மகன் தந்தைக்கு ............................ 70
மக்கள் மெய் ............................ 65
மக்களே போல்வர் ............................ 1071
மங்கலம் என்ப ............................ 60
மடல் ஊர்தல் ............................ 1136
மடிமடி ............................ 603
மடிமைக் ............................ 608
மடியிலா ............................ 610
மடியுளான் ............................ 617
மடியை மடியா ............................ 602
மடுத்தவாய் ............................ 624
மணி நீரும் ............................ 742
மணியில் திகழ் ............................ 1273
மண்ணோடு ............................ 576
மதிநுட்பம் ............................ 636
மதியும் மடந்தை ............................ 1116
மயிர்நீப்பின் ............................ 969
மருந்தாகி ............................ 217
மருந்து என ............................ 942
மருந்தோமற்று ............................ 968
மருவுக மாசு ............................ 800
மலரன்ன - அரு ............................ 1142
மலரன்ன - முக ............................ 1119
மலரினும் மெல் ............................ 1289
மலர்காணின் ............................ 1112
மலர்மிசை ஏகினான் ............................ 3
மழித்தலும் ............................ 280
மறத்தல் வெகுளி ............................ 303
மறந்தும் பிறன் ............................ 204
மறப்பினும் ஒத்து ............................ 134
மறப்பின் எவன் ............................ 1207
மறம் மானம் ............................ 766

அகராதி............ (எண் - குறள் எண்)

மறவற்க ............................ 106
மறைந்தவை ............................ 587
மறைபெறல் ............................ 1180
மறைப்பேன் மன்கா ............................ 1253
மறைப்பேன் மன்யா ............................ 1161
மற்றுயான் ............................ 1206
மற்றும் தொட ............................ 345
மனத்தது ............................ 278
மனத்தான் ஆம் ............................ 453
மனத்தின் அமை ............................ 825
மனத்து உளது ............................ 454
மனத்துக் கண் ............................ 34
மனத்தொடு ............................ 295
மனநலத்தின் ............................ 459
மனநலம் நன்கு ............................ 458
மனநலம் மன்உயிர் ............................ 457
மனம் துயார் ............................ 456
மனம் தூய்மை ............................ 455
மனம்மாணா ............................ 884
மனைத்தக்க ............................ 51
மனைமாட்சி ............................ 52
மனையாளை ............................ 904
மனைவிழைவார் ............................ 901
மன்னர்க்கு ............................ 556
மன்னர் விழைப ............................ 692
மன்னுயிர் எல் ............................ 1168
மன்னுயிர் ஓம்பி ............................ 244
மாதர்முகம் போல ............................ 1118
மாலைநோய் ............................ 1226
மாலையோ அல்லை ............................ 1221
மாறுபாடு இல்லா ............................ 945
மிகச் செய்து ............................ 829
மிகல்மேவல் ............................ 857
மிகினும் குறையினும் ............................ 941
மிகுதியான் ............................ 158
முகத்தான் ............................ 93
முகத்தின் இனிய ............................ 824
முகத்தின் முதுக் ............................ 707
முகம் நக நட்பது ............................ 786
முகம் நோக்கி ............................ 708
முகை மொக்குள் ............................ 1274
முடிவும் ............................ 676
முதல் இலார்க்கு ............................ 449
முயக்கு இடைத் ............................ 1239
முயங்கிய கை ............................ 1238
முயற்சி திருவினை ............................ 616
முரண் சேர்ந்த ............................ 492

முறிமேனி ........ 1113
முறைகோடி ........ 559
முறைசெய்து ........ 388
முறைப்பட்ட ........ 640
முற்றியும் முற்றா ........ 747
முற்று முற்றி ........ 748
முனை முகத்து ........ 749
முன் உறக்காவா ........ 535
மேலிருந்தும் ........ 973
மேற்பிறந்தார் ........ 409
மையல் ஒருவன் ........ 838
மோப்பக் குழையும் ........ 90
யாகாவார் ........ 127
யாண்டுச் சென்று ........ 895
யாதனின் ........ 341
யாதானும் ........ 397
யாமும் உளேம் ........ 1204
யாம் கண்ணின் ........ 1140
யாம் மெய்யாக் கண் ........ 300
யாரினும் காதலம் ........ 1314
யான் எனது ........ 346
யான் நோக்கும் ........ 1094
வகுத்தான் ........ 377
வகை அறிந்து தன் ........ 878
வகை அறிந்துவல் ........ 721
வகை மாண்ட ........ 897
வகையறச் சூழாது. ........ 465
வசை இலா வண் ........ 239
வசை என்ப ........ 238
வசை ஒழிய வாழ் ........ 240
வஞ்ச மனத்தான் ........ 271
வருகமன் ........ 1266
வரு முன்னர்க் ........ 435
வருவிருந்து ........ 83
வரைவிலா மாண் ........ 919
வலியார்க்கு மாறு ........ 861
வலியார் முன் ........ 250
வலியில் நிலைமை ........ 273
வழங்குவது ........ 955
வழிநோக்கான் ........ 865
வழுத்தினாள் ........ 1317
வறியார்க்கு ........ 221
வன்கண் குடி ........ 632
வாணிகம் செய் ........ 120
வாய்மை எனப் ........ 291
வாராக்கால் ........ 1179
வாரி பெருக்கி ........ 512

அகராதி............. (எண் - குறள் எண்)

வாழ்தல் உயிர்க் ........ 1124
வாழ்வார்க்கு ........ 1192
வாளொடு என் ........ 726
வாள் அற்றுப் ........ 1261
வாள்போல் பகை ........ 882
வானுயர் தோற்றம் ........ 272
வான்நின்று ........ 11
வான் நோக்கி ........ 542
விசும்பின் துளி ........ 16
விடா அது சென் ........ 1210
விடுமாற்றம் ........ 689
விண் நின்று ........ 13
வித்தும் இடல் ........ 85
வியவற்க எஞ் ........ 439
விருந்து புறத்ததா ........ 82
விருப்பு அறாச் ........ 522
விரைந்து தொழில் ........ 648
விலங்கொடு ........ 410
வில்லேர் உழவர் ........ 872
விழித்த கண் ........ 775
விழுப்புண் படாத ........ 776
விழுப்பேற்றின் ........ 162
விழைதகை ........ 804
விழையார் ........ 810
விளக்கு அற்றம் ........ 1186
விளிந்தாரின் ........ 143
விளியும் என் ........ 1209
வினை கலந்து ........ 1268
வினைக்கண் வினை ........ 612
வினைக்கண் வினையு ........ 519
வினைக்குரிமை ........ 518
வினை செய்வார் ........ 584
வினைத் திட்பம் ........ 661
வினை பகை ........ 674
வினையான் வினை ........ 678
வினை வலியும் ........ 471
வீழப்படுவார் ........ 1194
வீழுநர் வீழப் ........ 1193
வீழும் இருவர்க் ........ 1108
வீழ்நாள் படா ........ 38
விழ்வாரின் ........ 1198
வீறு எய்தி ........ 665
வெண்மை எனப் ........ 844
வெருவந்த செய்து ........ 563
வெள்ளத்து அனையஇ ........ 622
வெள்ளத்து அனைய ம ........ 595
வேட்ட பொழுதின் ........ 1105

வேட்பத்தாம் .......................................... 646
வேட்பன சொல்லி .................................. 697
வேண்டற்க வெ.·.கி ................................ 177
வேண்டற்க வென் .................................. 931
வேண்டாமை அன்ன ............................... 363
வேண்டிய வேண்டியாங்கு ...................... 265
வேண்டின் உண் ...................................... 342
வேண்டுங்கால் ........................................ 362
வேண்டுதல் வேண் ..................................... 4
வேலன்று வென்றி .................................. 546
வேலொடு நின்றா .................................. 552
வைத்தான் வாய் .................................. 1001
வையத்துள் வாழ் ..................................... 50



திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம் ஈழத்தில் புங்குடுதீவைச் சேர்ந்தவர். 'சாலினி' என்ற பெயரில் சிறுவயதிலேயே எழுதத்தொடங்கிய இவர், அவரது பதினைந்தாவது வயதில் 'திருவாசகத்தில் பெண்கள்' என்ற தலைப்பில் எழுதிய ஆய்வுக்கட்டுரை ஈழத்து அறிஞர்களால் அன்று பாராட்டப்பட்டது.

உலகநாடுகளில் வெளிவரும் இதழ்களில் பல புனைபெயர்களில் எழுதி வருகின்றார். சங்கத்தமிழ், ஈழவரலாறு, சமயம், இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம் பற்றிய நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் தமது எழுத்தில் பெண்கள், குழந்தைகள், மனிதநேயம், மனித உரிமை, தமிழர் பண்பாடு, கலைகள், மொழியியல் போன்றவற்றை பதிவு செய்கின்றார்.

தாயகப்பற்றும், மொழிப்பற்றுமிக்க தமிழ்ப்பண்படிதையான இவர் பல கவிதைகள், எழுச்சிப்பாடல்கள், பக்திப்பாடல்கள், நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார்